தஞ்சாவூர் சுவிசேட கவிராய

# வேதநாயக சாஸ்திரியாரின்

சுருக்கமான சரித்திரம்

# THE VENERABLE VETHANAYAGA SASTRIAR

## THE TAMIL CHRISTIAN POET OF TANJORE


BY

RAO SAHIB DR. D. W. DEVANESEN, M.A., D.I.C., Ph.D. (LOND.)

*Retired Assistant Director of Fisheries (Biology), Palamcottah*



THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
Madras Bangalore Mysore Bezwada Colombo
1947



*Copy Right Registered*]

*First Edition 1947*

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS (P.I.C. NO. Q.H. MS. 5)
FOR THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA (P.I.C. NO. MS. 70)—
10-10-1947—1,500 copies. B 2988.

## PUBLISHER'S NOTE

Pages 1–176 of this book had been printed off by another firm before the book was put into the hands of the C.L.S., who then undertook the printing of the remaining pages (i – xxxiv and 177–200) and the publication of the whole.

# PREFACE

In his reminiscences written about sixty years ago, Bishop Caldwell has said: "In the year 1841 I met in Tanjore the celebrated 'Tanjore Poet', a native of much ability and great poetical power, the author of a prodigious number of lyrics many of which will probably always hold their place in the public and private use of the Christians of the Tamil country. The good done by his writings survives"

Aye, these writings still live on, and the estimate which the Bishop had formed so long ago about the quality and extent of the influence of the lyrical compositions of the venerable poet Vedanayaka Sastriar has never been challenged. It is therefore the duty of all Tamil Christians to keep ever green the memory of his name. One method of doing this is to transmit to posterity incidents from the life of Sastriar which are inspiring and elevating and which mark out the greatness of the man. Dr. D. W. Devanesan has done this task in a most able and efficient way, and has laid the Christian community under a deep debt of gratitude to him. His readers are introduced in this work to several happenings in the career of Sastriar which they might not have heard of before. I fervently pray that the Lord's blessings may abundantly rest on this venture, and that this book may run into several editions for the glory of His Kingdom.

'Grace Lodge', Vepery, Madras, 5—3—1947. S. BALASINGAM SATYA, M.A., M.L., LL.B.

# முன்னுரை

சங். வேதநாயக சாஸ்திரியாரின் அரிய பெரிய நூல்களை வாசித்தறிந்து அவைகளில் அமைந்துள்ள அதிமதுர இன்பச் சுவை தரும் பும் பண்களை பல்லாண்டுகளாகப் பாடியும், பாடக்கேட்டு பரவசமுமடைந்து வரும் செந்தமிழ்க் கிறிஸ்தவ திருச்சபையோர்களே!

வேதநாயக சாஸ்திரியின் பிரபௌத்திரன் ஆனபடியினாலும், தஞ்சை சபையார் அக்காலத்தில் அவருடன் செய்த உடன்படிக்கையின் பிரகாரம் வம்சபரம்பரையாக சூடிவரும் "சாஸ்திரியார் பட்டம்" அளிக்க அவருடைய ஊழியத்தை சுதந்தரத்துவமாகப் பெற்று பணி செய்து வருகிறபடியினாலும், என் பந்துவாகிய ஸ்ரீ D. W. தேவநேசன் அவர்கள் பெரு முயற்சியுடன் ஆராய்ச்சி செய்து வெளியிடும் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரத்திற்கு முன்னுரை எழுதவேண்டுமென்று என்னை விரும்பி கேட்டுக்கொண்டபடியினாலும், இவ்வரிய நூலுக்கு ஓர் முன்னுரை எழுத நான் துணிந்தேன்.

தமிழ்நாட்டுக் கிறிஸ்தவ சபைகள் சங். வேதநாயக சாஸ்திரியாரை நன்கு அறிவதற்குக் காரணம் அவர்கள் இயற்றி யிருக்கும் எண்ணிறந்த கீர்த்தனைகள் மட்டுமல்ல. செபமாலை, பராபரன்மாலை ஞானவுலா, தியானப்புலம்பல், பேரின்பக் காதல் முதலிய பல விசேஷமான பக்தி விர்த்திக்குரிய நூல்களுமேயாம்.

நிலைபெற்றோங்கும் கலைகளே அவர்கள் ஞாபகத்தை ஸ்தாபித்தது வென்று கூறுவது மிகையாது. உரோமன் கத்தோலிக் கிறிஸ்து மார்க்கத்திற் சிறந்து விளங்கிய Robert de Nobili (தத்துவ போதகர்) Father Beschi (வீரமாமுனிவர்), Abbe J. A. Dubois முதலிய ஐரோப்பிய குருக்களின் முயற்சியால் அக்காலத்தில் தமிழ்க் கத்தோலிக் சபைகள் நன்கு பலத்திருந்தது. அந்தக் குருக்கள் தங்கள் மார்க்கத்திற் கேற்ற நூல்களையும் தங்கள் கோவில்களின் ஆராதனைகளுக்கு வேண்டிய பாவினங்கள் பலவற்றையும் இயற்றிக்கொடுத்தார்கள். சீர் திருத்தலடைந்த ஏனைய கிறிஸ்தவ சபைகளுக்கு கனம் Fabricius ஐயர் மொழிபெயர்த்த ஞானப்பாட்டுகள் தவிர, தேசாசாரத்தை யொட்டி ஆராதனைக்குரிய பாடல்கள் வேறு ஒன்றும் இருந்ததில்லை. அந்த ஞானப்பாட்டுகளும் ஐரோப்பிய பிரமுகர்கள் முக்கியமாக ஜர்மானிய பக்தர்களால் உண்டுபண்ணினதேயாகும். நம் நாட்டு

பக்திவிநயத்தையும் ஆசார ஒழுக்க வியல்புகளையும் ஒட்டி செபமாலை, பிராபரன்மாலை, ஞானபத கீர்த்தனங்கள் முதலானவைகளை தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு ஆராதனைகளிலுபயோகிக்க முதல் முதலாக அருளினது சங். வேதநாயக சாஸ்திரியார் அவர்களே.

ஆதலால், அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தை ஒருவாறு அறிந்து கொள்வது நமது கடமையாகும். முதன் முதலில் சாஸ்திரியாரின் சரித்திர வரலாற்றை எழுதினவர் ஆங்கிலேய குருவாகிய Dr. Henry Bower ஐயர் அவர்கள். அவர் தஞ்சாவூருக்கடுத்த வேதியர்புரத்தில் (அம்மன்பேட்டை) 1844–1858-ம் வருஷம் வரையில் அங்கிருந்த ஒரு வேதசாஸ்திர பள்ளிக்கூடத்தை நடத்தினவர். வேதநாயக சாஸ்திரியாரை முகமுகமாய் அறிந்தவரானபடியினாலும், முதலாவதாக சாஸ்திரியாரின் சரித்திரத்தை சுருக்கமாக அமைத்தவரானபடியினாலும், அவருடைய வரலாற்றுக்கு விசேஷ மதிப்புண்டு. ஆனாலும் ஆங்கிலேயரான அவர் ஹிந்து ஆசாரங்களையும் மனப்பான்மையையும் விளங்கிக்கொண்டு அவைகளை அங்கீகரிப்பது கூடாத காரியமாகும். எனவே, சாஸ்திரியாரின் நூல்கள் அவருக்குப் பெரும்பாலும் விளங்கியிருக்காது என்பது திண்ணம். ஆகையால் அவர் அமைத்த சாஸ்திரியாரின் ஜீவிய வரலாற்றில் அவரின் நூல்களின் கீர்த்தியைக்குறித்து பாராமுகமாய் யிருந்தாரெனத் தோன்றுகிறது.

இதன் பொருட்டு என் பாட்டனார் சங். நோவா ஞானதிக்கம் சாஸ்திரியார் 100 பக்கங்கள்கொண்ட சாஸ்திரியாரின் சரித்திர புஸ்தகமொன்று எழுதி பிரசுரப்படுத்தினார்கள். இப்போதும் ஸ்ரீ D. W. தேவநேசன் அவர்கள் சாஸ்திரியார்பேரில் நல் அபிமானமுடையவர்களாகையால் அவர்களுடைய சரித்திர சம்பந்தமான சம்பவங்களை தகுந்த விதமாய் ஆராய்ச்சி செய்ததுமன்றி, நூல்களின் பேரில் வியாக்கியானமும் எழுதி இந்தப் புஸ்தகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இதற்கு நான் சாஸ்திரியாரின் குடும்பத்தார் சார்பாகவும் தமிழ்த் திருச்சபையோர் நிமித்தமாகவும் எங்கள் மனப்பூர்வமான நன்றியுணர்வை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர்,
25—3—1945.

வே. சேம். வேதநாயக சாஸ்திரி.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கங்கள் |
|---|---|---|
| | Preface by Mr. Balasingam Satya Nadar | iv |
| | முன்னுரை ... ... ... | v |
| | பாயிரம் ... ... ... | ix |
| 1. | பிறப்பும் வளர்ப்பும் ... ... ... | 1—5 |
| 2. | தகப்பன் தேவசகாயம் பிள்ளை சுவார்ச்சு ஐயரிடத்தில் (Christian Frederick Schwartz of Tanjore) தன் மகனை ஒப்புவித்தது ... | 6—12 |
| 3. | தரங்கம்பாடி பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கப்பட்டதும் உபாத்தியாயர் உத்தியோகம் பார்த்ததும் | 13—15 |
| 4. | சங். பிரதரிக்கு சுவார்ச்சு ஐயர்பேரில் வேதநாயகம் கொண்ட பேரன்பும் சிஷ்ய பக்தியும் ... | 15—24 |
| 5. | கிறிஸ்தவ சபையார் கொடுத்த பட்டபெயர்களும் அந்தந்தச் சபையாரால் நடந்த மரியாதையும் ... | 24—56 |
| 6. | இயாழ்ப்பாணத்திற்குப் போனது ... ... | 57—59 |
| 7. | His Highness சரபோஜி மகாராஜாவுக்கும் வேதநாயக சாஸ்திரியாருக்கும் இருந்த இணக்கமும் பின் ஏற்பட்ட மனஸ்தாபமும் ... ... | 60—66 |
| 8. | வேதநாயக சாஸ்திரியார் நடத்தின உத்தியோகங்களும், வீட்டுக்கடுத்த ஒழுங்குகளும், ஆராதனைத் திட்டங்களும், கடவுள் அவர்பேரில் வைத்த கிருபையும் ... ... ... | 66—80 |
| 9. | வேதநாயக சாஸ்திரியாரின் ஆசீர்வாதம், அவர் நித்திய ராஜ்யத்தில் பிரவேசித்தது ... ... | 80—92 |
| 10. | நூல்களின்பேரில் மதிப்புரை ... ... | 92-153 |
| 11. | வேதநாயக சாஸ்திரியின் பின்சந்ததியார் ... | 154-169 |
| 12. | கிறிஸ்து மார்க்கம் இந்தியா தேசத்தில் பரவும்படி வேதநாயக சாஸ்திரியார் செய்த ஊழியம் ... | 169-174 |
| 13. | வேதநாயக சாஸ்திரியாரும் ஜாதி பேதமும் ... | 174-187 |
| 14. | உபகதைகள் ... ... ... | 188-197 |
| | உடன் கலந்து வாசித்த புஸ்தகங்கள் ... | 198-200 |

# சித்திரப் படங்களின் அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| I. | சங். வேதநாயக சாஸ்திரியார் ... ... | 1 |
| II. | சங். C. F. சுவார்ச்சு ஐயர் ... ... | 6 |
| III. | வேதநாயக சாஸ்திரியும், சுவார்ச்சு ஐயரும் அடங்கிய ஓர் கற்சித்திரம் (Lithograph) ... ... | 20 |
| IV. | H. H. சரபோஜி மகாராஜா ... ... | 60 |
| V. | ஷை மகாராஜாவின் ஸ்படிக சிலை ... ... | 66 |
| VI. | வேதநாயக சாஸ்திரியாரின் சமாதி ... ... | 92 |
| VII. | சுவிசேஷ பிரபல்லிய மண்டபம், தஞ்சாவூர் ... | 159 |
| VIII. | நோவா ஞானதிக்க சாஸ்திரியார் ... ... | 164 |
| IX. | எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் ... ... | 165 |

# பாயிரம்

## I

"தோன்றிற் புகழொடு தோன்றுக." இந்தத் திருக்குறள் நீதிமொழிக்கு இசைவாகத் தோன்றின சங். வேதநாயக சாஸ்திரியார், ஒரு தெய்வப்புலமை வாய்ந்த கவிபக்தாவென்பதை ரூபிப்பதே இந்தப் பிரபந்தத்தின் பிரதானமான நோக்கம். கவிகட்டும் வல்லமை ஓர் பரம கொடை. செய்யுள்களை, கற்றோர் யாவரும் வாசித்து ஆனந்தம் அடையலாம். ஆனால், அவைகளை யுண்டாக்குவது சிலருக்குத்தான் சாக்ஷாத் கடவுள் அருளிய சிறந்த சக்தி. பொதுவாக, ஆங்கிலேய செய்யுள்களானாலும், தமிழ்ச் செய்யுள்களானாலும், அவைகள் இன்பம் பயக்கும் காரணம் யாதெனில் நூதனமான பொருள்கள் அவைகளுக்குள் விநோதமாக அடங்கியிருப்பதுமன்றி தொடர்ச்சியாக அடுக்கப்பட்டிருக்கும் மதுரநாதமுள்ள பதங்கள் வாசிப்போரின் உள்ளத்தை செவியின் மார்க்கமாய் மயக்கி வசப்படுத்துவதே! எவ்விதம் கவிராயர்கள் இந்த வித்தையில் சித்தி அடைகிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்வது அசாத்தியம். இஃது அவர்களையொட்டிய ஓர் மர்மம். அவர்களுடைய வித்தையின் பலனை வகுத்துப்பார்த்து "இதில் பொருள்சுவை யமைந்திருக்கிறது, அதில் சொற்சுவை பொருந்தியுளது" என நிர்ணயிக்க முடியுமேயொழிய, வாசிக்கும் கற்றறிவாளர் அம்மாதிரி செய்யுள்களை யுண்டாக்க வெத்தனிப்பது வியர்த்தமாகும்.

யாப்பிலக்கணத்தின் நியமங்களினாலும், எதுகை, மோனை, சந்தம், ஓசைநயம் முதலிய இன்பம் விளைக்கும் உபகரணங்களின் பிரமாணங்களைக்கொண்டும் வேதநாயக

சாஸ்திரியின் நூல்களைப் பரிசோதித்து விலைமதித்தால், இவர் ஒரு தெய்வத்தன்மை வாய்ந்த கவிபக்தன் என்பதற்குச் சந்தேகமில்லை.* ஒரு மந்திரவாதி தன் சொல்லுக்கு அடங்கிய கூளிகளைக் கூப்பிட்டு பல அலுவல்களைக் கட்டளையிட அவைகள் பணிவாய்க் கீழ்ப்படியுமாப்போல், சாஸ்திரியார் பரமார்த்த ஞானம் பொருந்திய பதங்களையும் ஆத்மஞானம் அடங்கிய பொருள்களையும் அழைக்க, அவைகள் முறைப்படியே வந்து ஊடும் (woof), நெசவு பாவுமாக (warp) இவர் நெய்த "நூல்"களில் ஆங்காங்கு அமைந்து, கேட்போர் வாசிப்போர் உள்ளத்தை சூக்ஷமாய்க் கவர்ந்து கொள்ளைகொண்டு போகின்றன. இந்த வரம் அளவுக்கு மிதமாக இவர் தஞ்சமாக அடைந்த கிறிஸ்து மார்க்கத்தின் கடவுள் அரிய கொடையாக இவருக்கு அருளி ஆசீர்வதித்தார் என்பது தமிழ்க் கல்விக்கடுத்த நூல்களில் பாண்டித்தியம் பெற்ற கற்றறிவாளர்க்கு எளிதில் புலப்படும்.

பிரதானமாக, சாஸ்திரியார் சுவிசேஷ கிறிஸ்து மார்க்க (Protestant Christianity) கொள்கைகளையும் தத்வஞான விஷயங்களையும் தம்முடைய சதுர் பிரசங்கங்களிலும், வேத விஸ்தரிப்பிலும், தாமியற்றிய கீர்த்தனைகள் நூல்களிலும், நன்கு பரப்புவோராக விளங்கினர். இந்த நோக்கத்தில் சித்தியடைய வேண்டு

---

* சாஸ்திரியாரின் ஏககால வாசிகளாயிருந்து அவரைப்பார்த்து அறிந்த Dr. Henry Bower, Bishop Herbert Spencer முதலியோர் அவரை "The Tanjore Poet" என்றே அழைத்தார்கள். தற்காலத்து Rev. H. A. Popley இவரை "கிறிஸ்தவ காயகஸ்தர்" (composer) என அழைத்தது சாஸ்திரியாரின் கலைஞானத்தை நன்கு ஆராய்ந்து அறியாத காரணத்தினல்தான்.—கிறிஸ்தவ கீதங்கள், 1937, முன்முகம் பார்க்க (19).

மென்றுதானே, ஆரம்பத்தில் கீர்த்தனைகளை யுண்டு பண்ணினது. சாஸ்திரியாரின் ஜீவாதாரத் தொழில், இம்மானுவேலாகிய இயேசு பெருமானை வழிபடுவதே* என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்த அன்றாடக ஜீவியம் பக்தர்கள் செய்யக்கூடியதே யன்றி, மற்றவர்களால் நடத்த முடியாது. ஆனால் மனதுக்கடுத்த காட்சி (idealism) லோகசஞ்சாரத்திற்கு உதவுமா? சாஸ்திரியாருக்கும் அவர் குடும்பத்தார், பாடகர் முதலியவருக்கும் காலா காலங்களில், சபையின் அங்கத்தினர், புறச்சமயத்தார், மிஷனெரிமார் முதலியோர் விரும்பித் தர்மமாகக் கொடுக்கும் தானம் அவர்கள் சரீர ஆத்ம சம்ரக்ஷணைக்கு தகுந்த சாதனம் ஆகுமா? இதை விளக்கும்படி "உபகதைகள்" என்ற அத்தியாயத்தில் சில சம்பவங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. இதனால் ஏற்பட்ட துர்ப்பலன் என்னவென்று கேட்டால், சாஸ்திரியாருக்கு நேரிட்ட உயர்வும் தாழ்வும் அவருடைய பின்னடியார் அனுபவிக்கும் வறுமையும் சிறுமையுமே. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியினிடம் மானியமாகக் கிடைக்கக் கூடிய நெல்வேலி, நிலம் முதலான லௌகிக சகாயத்தை (endowments) இவர் பற்றிக்கொள்ளவில்லை. இந்த தவிர்ப்பினால், தான் கஷ்டம் அனுபவித்தது மல்லாமல், தன் பின் சந்ததியாரையும் எளிமைக்குட்படுத்தினார். தான் விசுவாச ஜீவியம் செய்ததுபோல், பின்னடியாரும் நடத்தவேண்டுமென்று கட்டுப்பாடுபண்ணினது மனதுக்கடுத்த காட்சியின் பலன். இந்தத் தவறான நோக்கத்தினால் தானே முதிர்ந்த 74-ம் வயதில் ஓர் விண்ணப்பப்

---

* "மானுவேலை வேலையாகக் கும்பிடுகிறேன்" என்ற வரியை, செபமாலையில் இரண்டாம் தேதி 'தேவதோத்திரம்' என்ற பகுதியில் காண்க.

புஸ்தகத்தை (Donation book) ஆங்கிலத்திலேயும் தமிழிலேயும் எழுதித் தன்னை மிஷனெரிமார் கைவிட்ட விதத்தையும் எடுத்துக்கூறி கனவான்களையும் தனவான்களையும் தர்ம உதவிசெய்ய, வேண்டிக்கொள்ளும் நிலைமைக்குள் வந்தார். கவிபக்தாக்கள் லோகசஞ்சாரம் இன்ன விதமென்றறியும் சக்தியிலாதார். துகாராம் (Tukaram) சரித்திரத்திலும் (13)* தியாகராஜா சரித்திரத்திலும் (9)* இந்த மாயத்தைக் காணலாம்.

## II

சாஸ்திரியார் தோன்றி வசித்தது கிறிஸ்தாப்தம் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றுண்டுகள். அக்காலத்தில் சீர்திருத்தமடைந்த கிறிஸ்து மார்க்கத்தின் (Protestantism) பரவுதல் டேன்மார்க்கு (Denmark) ராஜாவின் கொடையினாலும், இங்கிலாந்தில் S. P. C. K. சங்கத்தாரின் பண வுதவியினாலும் உத்தியோகம் பெற்ற ஜர்மானிய (German) மிஷனெரிமார்கள் கைவசமிருந்தது. ஆகையால் வேதநாயக சாஸ்திரியார் அறிந்து பழகின மிஷனரிமார்கள் பெரும்பாலும் ஜர்மானியர். இவர்கள் மூலமாய் ஆதித்தமிழ்க் கிறிஸ்தவர்கள் பெற்ற உபதேசம் லூத்தர் (Martin Luther) போதகத்தையும் கொள்கைகளையும் சார்ந்தது. சாஸ்திரியாரும் லூத்தர் போதகத்தினால் தோன்றின வேதாகம சாஸ்திரத்தை (Theology) நன்கு கற்றறிந்தவரானபடியால், பிற்காலத்தில் வந்த

---

* இப்படி அடைப்புக்குறிகளுக்குள் இலக்கம் வந்தால் அது கடைசியாக சேர்ந்திருக்கும் உடன்கலந்து வாசித்த நூல்களின் அட்டவணையிலுள்ள இலக்கம் என்று வாசிப்போர் அறிந்துகொள்ளவும். அந்த இலக்கத்துக்கு எதிராக விருக்கும் நூலில், குறிக்கப்பட்ட விஷயம் அடங்கியிருக்கிறது என்று அர்த்தம்.

ஆங்கிலேய குருக்களுடன் இவருக்குத் தகுந்த அந்நியோந்நியம் ஏற்படவில்லை.

மேலும் இவர் பெப்ரிசியூஸ் (Fabricius) ஐயர் மொழிபெயர்த்த வேதாகம புஸ்தகத்தை குடும்ப ஆராதனையிலும், தனி ஜெபத்திலும் நெடுநாள் உபயோகித்தவர். இதில் கடவுளுக்குப் பிரயோகித்திருக்கும் பதம் "பராபரன்". 1835-ம் வருஷத்தில் Dr. Henry Bower இந்த மொழிபெயர்ப்பில் பழுதுகள் உண்டென்று வேறொரு மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்தபொழுது, அது லுத்தரன் சபையாருக்கும் சாஸ்திரியாருக்கும் சம்மதமில்லை. இதற்கு விரோதமாக "புது திருத்துதலின் கூக்குரல்" என்ற பிரபந்தத்தை வெளிப்படுத்தினார். இவரது செய்கைகள் பல அக்காலத்து ஆங்கிலேய மிஷனரிமார்களுக்கு விகற்பமாகத் தோன்றின.

வேதநாயக சாஸ்திரியார் உபயோகித்த மூன்று புஸ்தகங்கள் தஞ்சாவூரில் அவர் பேரன் ஸ்ரீ E. ஞானேந்திரம் பிள்ளையினிடம் இருக்கிறது. அவையாவன:—

1. பழைய ஏற்பாடு புஸ்தகம் 1831-ம் வருஷம். Fourth Edition, Printed at the Vepery Mission Press.

2. புதிய ஏற்பாடு புஸ்தகம், 1837-ம் வருஷம். Fourth Edition, Printed at the Vepery Mission Press.

3. ஞானபரணப்பெட்டி. 1800-ம் வருஷம். (Bogatzky's Golden Treasury) Printed at the Vepery Mission Press.

வேதநாயக சாஸ்திரியார் ஹிந்துக்களின் வேதநூல்களையும் மற்ற நூல்களையும் தம்முடைய புஸ்தக சாலையில் வைத்துக்கொண்டு படிப்பது வழக்கமாம். ஆராய்ச்சிக்

கும் கலையின் விர்த்திக்கும் இந்த அப்பியாசம் அத்தியந்த அவசியம். அச்சில் பதித்த புஸ்தகங்கள் அக்காலத்தில் அபூர்வமானபடியினால், இவைகள் பெரும்பாலும் சுவடிகளாய்த்தான் (palm leaves) இருந்தன. குருத்தோலையில் எழுத்தாணிகொண்டு சாஸ்திரியார் எழுதக்கூடியவர். கலைஞான விர்த்திக்கு தற்காலத்தில் அனுகூலமாகவிருக்கும் வசதிகள் அவருக்குக் கிடைத்ததில்லை. தாம் உண்டுபண்ணின பிரபந்தங்களை அச்சிடுவதற்கு சாதனமில்லை. மிஷனெரிமார்களின் தயவினாலும் சிபாரிசினாலும் S. P. C. K. Tract Society* முதலிய சங்கங்கள் இவருடைய பிரபந்தங்களைப் பரோபகாரமாக அச்சிட்டு வெளியிட்டன. மேலும் குமஸ்தாக்களைக்கொண்டு கையெழுத்தாலும் சில நூல்களின் பிரதிகளை ஆயத்தப்படுத்தி விலைக்குக் கொடுத்ததுண்டு.

சாஸ்திரியார் காலத்தில், தஞ்சாவூரும் அதையடுத்த நாடும் மகாராஷ்டிர ராஜவம்சத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தது. மைசூர் ராஜ்யம் டிப்புசுல்தான் (Tippu Sultan) ஆளுகைக்குட்பட்டிருந்தது. ஆங்கிலேய கிழக்கு இந்தியா கம்பேனியார் (The English East India Company) இந்து தேசத்துடன் வர்த்தகம்செய்து வந்தார்கள். அக்காலத்தில் நடந்த பிரதானமான சம்பவங்களாவன:—

1. உடன்கட்டை யேறுதல். இந்தக் கொடூரமான ஆசாரம் 1828-ம் வருஷம் Lord William Bentick உடைய முயற்சியால் ஒழிக்கப்பட்டது. J. A. உடுபாயி (Abbe J. A. Dubois) என்ற கத்தோலிக் மிஷனரி தான் எழுதின "Hindu Manners, Customs and Ceremonies" என்ற புஸ்தகத்தின் 361–367-ம் பக்கங்களில் தென் இந்தியாவில் நடந்த இரண்டு திருஷ்டாந்தங்களை

* The Present Diocesan Press, Vepery, Madras.

விஸ்தரித்திருக்கிறார். அதில் ஒன்று தஞ்சாவூர் மகாராஜா Ameer Sing 1801-ம் வருஷம் மரணமடைந்தபோது பிராமண புரோகிதர்கள் அவருடைய நான்கு இராணிகளில் இரண்டுபேரைத் தெரிந்தெடுத்து மகாராஜாவின் பிரேதத்தோடும் உடன்கட்டை ஏற்றுவித்ததாக சகல விவரணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது (4). சாஸ்திரியாரின் பிரபந்தங்களில் உடன்கட்டை ஏறுதலைப்பற்றி குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

2. மைசூர் யுத்தம். ஹைதர் ஆலி (Hyder Ali) 1782-ம் வருஷம் மரித்தார். பின்பு அவர் குமாரர் டிப்புசுல்தான் ஆங்கிலேய கிழக்கு இந்தியா கம்பேனியாருடன் யுத்தஞ்செய்து தன்னுடைய ராஜ்யத்தை இழந்தார்.

3. வேலூர் பட்டாளக் கலகம். இது 1806-ம் வருஷம் நடந்தது. டிப்புசுல்தானுடய குமாரர்களை கம்பேனியார் வேலூரில் சிறையில் வைத்திருந்தார்கள். இவர்களினுவதலால் கம்பேனியாருடைய சிப்பாய்கள் கலகம் பண்ணினார்கள். இது சீக்கிரத்தில் அடக்கப்பட்டு முடிவுக்கு வந்தது.

4. இந்து மகா பட்டாளக் கலகம். இது 1857-ம் வருஷம் வட இந்தியாவில் நடந்தது.

5. 1858-ம் வருஷம் இந்து தேசம் கம்பேனியார் ஆதீனத்திலிருந்து இங்கிலாந்து மகாராணியான "விக்டோரியா" (Queen Victoria) சக்கரவர்த்தினியின் ஆளுகைக்குட்பட்டது. வேதநாயக சாஸ்திரியாரின் ஆயுசு காலத்தில் கடைசி 6 வருஷங்கள் மாத்திரம் விக்டோரியா சக்கரவர்த்தினியின் ஆட்சியில் பங்கு பெற்றது.

மேற்கூறிய விஷயங்களால் ஏற்படுகிறதென்னவென்றால், சாஸ்திரியார் வசித்த உலகம் தற்காலத்து ஜனங்

களுக்கு எளிதில் விளங்காது. தஞ்சாவூர் மராட்டிய இராஜாவின் அதிகாரத்திற்குட்பட்டு, ஜர்மானிய குருக்களின் லூத்தரன் கொள்கைகளையும் உபதேசங்களையும் அறிந்துகொண்டு, *விசுவாச பலத்தினுல் அவைகளைக் கொண்டாடியும், கிறிஸ்து மார்க்க சத்தியங்களையே புகழ்ந்து போற்றியும், ஹிந்து மார்க்கத்தின் விபரீதங்களை யிகழ்ந்து தூற்றியும், சாஸ்திரியார் நெடுநாள் வாழ்ந்தார். இவ்விதமாக அவர் ஆத்மசரீர வைதிக லௌகிக கஷ்டநஷ்டங்களிலும், தம் பக்திக்கு குறைவு ஏற்படாமல், தமக்கு நேரிட்ட இடையூறுகளையெல்லாம் வென்று, வந்த துன்பங்களை யறச் சகித்து, தம் விசுவாச ஜீவியத்தை நிறைவேற்றிவந்ததும் முடித்ததும் ஓர் அற்புதம் அல்லது தேவாதீன சம்பவம் என்றே நாம் உணரற்பாலது.

## III

சாஸ்திரியார் காலத்தில் (1774–1864) புறதேசங்களிலிருந்து இந்து தேசத்திற்கு வந்தவரும், இந்து தேசத்தில் தோன்றினவருமான சில மகாத்மாக்களை இங்கே கவனிக்கலாம்.

1. Father C. F. Schwartz (1726–1798). இவருடைய சரித்திரம் 1921-ம் வருஷம், Jesse Page, F. R. G. S., ஆசிரியரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. இவர்தான் வேதநாயக சாஸ்திரியாரை 12 வயதில் திருநெல்வேலியிலிருந்து தஞ்சாவூருக்கு கொண்டுவந்து தன்னுடைய சுவீகார புத்திரனைப்போல் வளர்த்து தேவபக்தியையும் கல்வியையும் அவருக்கு நன்கு புகட்டினவர். இவர் இந்தியாவில் மிஷனரி ஊழியம் நிறைவேற்றின காலம் 48 வருஷங்கள் (1750–1798). இதில் 25 வருஷங்கள் தஞ்சாவூரில் கழித்து அங்கே பரகதி அடைந்தார்.

2. ஸ்ரீ தியாகராஜா (1759–1847). இந்த கீர்த்தி பெற்ற சங்கீத வித்வான் சாஸ்திரியாரின் ஏககால வாசி. இவரைப் புஸ்தகத்தின் சில அத்தியாயங்களில் குறிப் பிட்டிருக்கிறது.

3. William Carey (1761–1834). இவர் தாம் இந்தி யாவுக்கு வந்த முதல் ஆங்கிலேய மிஷனரி, 41 வருஷம் வங்காள ராஜதானியில் கிறிஸ்தவ ஊழியம் செய்தவர். வேதாகம புஸ்தகத்தை வங்காள பாஷையில் மொழி பெயர்த்தார். சாஸ்திரியாரைப்போல் கடவுளை விடாப் பிடியாய் ஜெபத்திலும் விசுவாசத்திலும்பற்றி நெடு நாள் வாழ்ந்தவர்.

4. The Abbe J. A. Dubois (1765–1848). இவர் ஒரு பிரெஞ்சு (French) கத்தோலிக் மிஷனெரி. 1792-ம் வருஷம் முதல் 1823-ம் வருஷம் வரையில் விசேஷமாக மைசூர் இராஜ்யத்தில் கிறிஸ்து மார்க்கத்திற்கு ஹிந்து ஜனங்களை சேர்க்க ஹிந்து உடையை உடுத்திக்கொண்டு வெகு முயற்சி எடுத்தவர். அக்காலத்தில் நடைபெற்ற ஹிந்து மத ஆசாரங்களையும் சடங்குகளையும்பற்றி ஒரு சவிஸ்தாரமான நூல் எழுதினவர். அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்கள் (4).

5. Rajah Ram Mohan Roy (1774–1833). சாஸ் திரியார் பிறந்த வருஷத்திலேயே இவரும் வங்காள ராஜ தானியிற் பிறந்து ஹிந்து மார்க்கத்தின் ஆசாரங்கள் கொள்கைகள் பலவற்றை விகற்பமானவைகள் என்று பிரசங்கித்து ஹிந்து மார்க்கத்தை சீர்திருத்த பெரும் பிரயாசை எடுத்தவர். பிரதானமாக "உடன்கட்டை யேறுதல்" ஹிந்து சாஸ்திரத்திற்கு விரோதமான சடங்குச் செயல் என வாதித்து அதை நிறுத்துவதற்கு முயற்சி எடுத்து இங்கிலாந்துவரை சென்று அங்கே மரண மடைந்தார்.

6. Henry Martin (1781–1812). இவர் வங்காள தேசத்தில் கொஞ்சகாலம் வேலை செய்து பாரசீக பாஷையையும் (Persian) அரபி பாஷையையும் (Arabic) நன்கு கற்ற பிறகு புதிய ஏற்பாட்டை இப்பாஷைகளில் மொழி பெயர்த்தார். பிற்பாடு தானே பாரசீகம் சென்று Teheran நகரத்திலுள்ள பாரசீக அரசனுக்கு பாரசீக புதிய ஏற்பாட்டின் பிரதி ஒன்றை பிரதம மந்திரியின் மூலமாய்க் கொடுத்தனுப்பினார். பாரசீகத்திலேயே Tokat என்ற ஓர் நகரத்தில் மரித்து அர்மீனிய கிறிஸ்தவர்களால் அடக்கம் பண்ணப்பட்டார்.

7. ஸ்ரீ S. வேதநாயகம் பிள்ளை, District Munsiff, Mayavaram (1823–1889). தமிழ்க் கீர்த்தனைகளும், கவிகளும், விநோத கதைகளும் இயற்றிய கத்தோலிக் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்.

8. ஸ்ரீ H. A. கிருஷ்ண பிள்ளை (1827–1900). இவர் சாஸ்திரியார் உதித்த திருநெல்வேலி நாட்டை சேர்ந்தவர். "இரக்ஷணிய யாத்திரிகம்", "இரக்ஷணிய சரிதம்" முதலிய சிறந்த காவியங்களை இயற்றி "கிறிஸ்தவ கம்பர்" என்ற கீர்த்திப் பெயர் பெற்றவர். சாஸ்திரியார் மரித்தபோது கிருஷ்ண பிள்ளைக்கு 37 வயது. விவேகமடைந்த வயதானபடியினாலும் வேளாள குலமானதினாலும் சாஸ்திரியாரைப்பற்றி கேள்வியுற்றிருப்பார்.

9. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சா (1836–1885). இவர் வங்காளத்தில் தோன்றின ஓர் ஹிந்து பக்தர். ஹிந்து, கிறிஸ்து, மகம்மது மார்க்கங்களின் கொள்கைகளையெல்லாமொன்று திரட்டி, எல்லா மதங்களும் ஒரே கடவுளைத்தான் காண்பிக்கிறதென்றும் மார்க்கபேதங்களால் ஆத்மாவுக்கு பிரயோஜனமில்லையென்றும் சாதித்தவர்.

10. Rev. G. U. Pope. இவர் 1837-ம் வருஷம் தென் இந்தியாவுக்கு உவெஸ்லியன் மிஷனெரியாக வந்து 1843-ம் வருஷம் இங்கிலாந்து சபையைச் சேர்ந்து 1882-ம் வருஷம் வரையில் சுவிசேஷ ஊழியத்தை சென்னை ராஜதானியில் நடத்தினவர் (17). தஞ்சாவூரிலே எட்டு வருஷ காலமாக (1850–1858) மிஷனெரியாக வேலை பார்த்தார். வேதநாயக சாஸ்திரியாருக்கும் இவருக்கும் ஒற்றுமையில்லாமல் அநேக மனஸ்தாபங்கள் நேரிட்டன. அவைகளை வேதநாயக சாஸ்திரியார் எழுதின "உபத்திரா பத்திரத்தில்"* வாசிக்கலாம். G. U. Pope ஐயர் தமிழ் நூல்களில் பாண்டித்தியம் பெற்றவராதலால் சாஸ்திரியாரை மதித்து நேசித்திருப்பார் என்று நாம் இயற்கையாக நினைக்கக்கூடியதற்கு நேர்விரோதமாக சம்பவங்கள் நடந்தன. இதற்கு முக்கியமான காரணங்கள்:—

(i) வேதநாயக சாஸ்திரியார் பாராட்டின ஜாதி வித்தியாசம்.

(ii) கோவிலில் சாஸ்திரியார் தன் பாடல்களை பாடவேண்டியதில்லையென்று போப் ஐயர் தீர்த்தது.

(iii) மேலும் இவர் பாடல்களின் கடைசி செய்யுள்களில் தன் பெயரை ஸ்தாபித்திருக்கிறபடியால், அவைகளையெல்லாம் நீக்கி அவைகளை சபையார் பாடக்கூடாதென்று போப் ஐயர் சட்டம் ஏற்படுத்தினது.

---

* இந்த பிரபந்தம் இன்னும் அச்சிடப்படவில்லை.

இப்படியாக சாஸ்திரியார் தன் கடைசி காலத்தில் G. U. போப் ஐயரின் உபேக்ஷையினால் வாதிக்கப்பட்டார். G. U. போப் ஐயர் 1882-ம் வருஷம் இங்கிலாந்திற்கு சென்று 1903-ம் வருஷம் அங்கே மரித்தார்.

C. F. சுவார்ச்சு ஐயர் 1798-ம் வருஷம் மரித்தபின் J. C. Kohlhoff ஐயர் தஞ்சாவூர் சபையை தான் மரிக்கும் பரியந்தம் (1844-ம் வருஷம்) கண்காணித்து வந்தார். இவருக்குபின் வந்த மிஷனெரிமார் Schmitz, Brotherton, G. U. Pope, Perceval, Guest, Kearns, Dr. Henry Bower முதலியவர்கள். J. C. கோலப் ஐயர் பரகதியடைந்து 20 வருஷங்களுக்குப்பின் வேதநாயக சாஸ்திரியார் முக்தியடைந்தினாலே இவருடைய ஜீவிய காலத்தில் இவர் மனதைக் கவர்ந்துகொண்டு இவருக்குள் கிரியை செய்த ஐரோப்பிய மிஷனெரிமார் C. F. சுவார்ச்சு ஐயரும், J. C. Kohlhoff ஐயருமாகிய இருவருமே.

மேற்கூறிய ஏககால வாசிகளில் ஒருவராவது சாஸ்திரியார் ஆயுசுக்கு (91 வயது) ஜீவித்ததில்லை. தியாகராஜா 88 வயதில் மரித்தார். William Carey மரித்தபோது வயது 73. சங். C. F. சுவார்ச்சையர் மரணம் 72-ம் வயதில். நீடிய ஆயுசு காலத்தில் இவருடைய அன்றுடக போஜனத்திற்கு யாதொரு குறைவுமில்லாமல் சரபோஜி ராஜா, சிவாஜி ராஜா முதலியவர்கள் கைவிட்டாலும், இவர் குலதெய்வமாக வேற்றுக்கொண்ட "ஏசு ராஜா" இவரை அற்புதமாகக் காப்பாற்றி வந்தார்.

## IV

1864-ம் வருஷம் சங். பாக்கியநாட்டையர் குமாரன் தேவசகாயம் பிள்ளை வேதநாயக சாஸ்திரியாரின்பேரில் பாடின சரம கவியின் முதல் 21 வரிகளாலும் பின்னும் மற்ற தஸ்தாவேஜுகளாலும் வேதநாயக சாஸ்திரியார்

திருநெல்வேலியிலிருந்து தஞ்சாவூருக்கு 12 வயதிலே சங். C. F. சுவார்ச்சையராலே கொண்டுவரப்பட்டு அவர் ஆதீனத்தில் வளர்ந்தார் என்பது துலாம்பரமாக விளங்குகின்றது.

இப்படியிருந்தும் ஆசிரியர்கள் எழுதும் C. F. சுவார்ச்சு பாதிரியாரின் ஜீவிய சரித்திரத்தில் அவருடைய சிஷ்யன் வேதநாயகத்தைக் குறித்து ஒரு வரியாவது காண்பதரிது. இத்தவிர்ப்பு ஒரு பழுதென்றே சொல்லவேணும். ஏனென்றால் இது வேதநாயக சாஸ்திரியின் பிரசித்திக்கு குறை வுண்டாக்குகிறதுமல்லாமல், குரு சுவார்ச்சு ஐயருடைய ஊழியத்தின் பூரண பலனை மறைக்கிறது. ஒரு கவிச் சக்கரவர்த்தியென்று புகழப்பட்ட இந்திய கிறிஸ்தவர், ஐயர் இஷ்டப்பட்டு தெரிந்தெடுத்ததினாலும் கல்வி பயிற்றுவித்ததினாலும் அவர் வெகுநாள் உழைத்த தஞ்சாவூர் வட்டத்திலேயே முதலாவது கடவுளுக்கு மகிமையாகவும் இரண்டாவது அவருக்கே கௌரவமாகவும் தோன்றி பிரகாசித்த விஷயத்தை சுவார்ச்சு ஐயர் சரித்திரத்தில் ஒரு வரியிலாவது காண்பிக்காமற்போனது அந்நூல்களை இயற்றியவர்களின் ஆராய்ச்சியில் காணப்படும் பழுதுங்குற்றமுமென்றே நான் சொல்லத் துணிவேன்.

தஞ்சாவூர் மிஷனுக்கும் பாளையங்கோட்டை மிஷனுக்கும் C. F. சுவார்ச்சையர் தம் மரண சாசனத்தின் மூலமாய்ப் பொருளுதவி செய்தார் (1). ஆனால் தாம் படித்துக் கொடுத்து தம் உபதேசம் கேட்டு உயர்ந்த வேதநாயக சாஸ்திரியின் மூலமாக தமிழ்க் கிறிஸ்து சபைக்கு என்றுமழியாத அருளுதவி செய்தார். ஆண்டவரை நம்முடைய சுயபாஷையில் நமக்குச் சுயமாய் ஏற்பட்ட நடையிலும் இராகத்திலும் போற்ற முதலில்

வழிகாட்டினவர் C. F. சுவார்ச்சு ஐயரின் சீஷனான வேதநாயக சாஸ்திரியாரே.

## V

வேதநாயக சாஸ்திரியார் கீர்த்தனங்களை யுண்டாக்கி பிரசித்திபெற்றவரானாலும், Fabricius ஐயர் மொழி பெயர்த்த ஞானப் பாட்டுகளின்பேரில் அவருக்கு நிரம்ப விருப்பம் இருந்ததாகத் தெரியவருகிறது. தற்காலத்தில் ஞானப்பாட்டுகள் (Hymns) ஐரோப்பியருக்குரிய தென்றும், தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கேற்றதல்ல வென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். திருஷ்டாந்தமாக:—

Dr. S. ஏசுதாசன் பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள்:—"கிறிஸ்தவ கோவில்களில் மேல்நாட்டுப் பாடல்களை, இந்திய ராகங்கள், யாப்பிலக்கிய போக்குகள் முதலியனவற்றை அறவே அசட்டை செய்து, விகார முறைமையாய் மொழிபெயர்த்துப் பாடும் "ஞானப் பாட்டுகள்," "சுவிசேஷ கீதங்கள்" என்னும் பலவகைப் பாட்டுகள் பால்யபிராயமுதல் அவைகளில் பழகிவிட்ட கிறிஸ்தவர்களுக்கு இன்பமாய் போய்விட்டாலும், நமது தேசத்தினருக்கு கோர சப்தமாகவே தொனிக்கும். நமது தேசத்தில் மெய்யாக கிறிஸ்து பகவான் அந்நியரல்லர். சொந்தமானவரேயென்று சாக்ஷி பகர்வது கிறிஸ்தவர்களின் பிரதான வாஞ்சை யென்றால் இப்படி செய்வது தகுதியோ? நமக்கு எழுப்புதலாயிருந்துவிட்டாலும்கூட மற்றவர்களுக்கு இடையூறு யிருக்கும் முறைப்படி செய்வது ஆத்மீக தன்னயமாகிவிடுமல்லவோ? நமது ஆராதனைப் போக்குகள் நமது தேசத்தினர்க்கு "அந்நிய பாஷை" போலாகிவிட்டதல்லவோ."*

---

* For a full discussion of the point of view of Dr. Jesudasan, the reader should refer to the Preface of ஆசிரம பாமாலை, 1937 Edition.

தமிழ் இராகங்களில் இங்கிலீஷ் பதங்கள் உபயோகித்துப் பாடினுல் விகற்பமா யிருக்குமென்று நினைப்பது சரியாவென்று ஆராய்ந்ததில் சில விசேஷமான கருத்துகள் அகப்பட்டன.

"ராஜ ராஜ பிதா மு", "மைந்தன் பதத்தைத் துதிக்கிறோம் மு" என்ற இரண்டு கிறிஸ்து பிறப்பின் கீர்த்தனங்களும் English band tunes-இல் அமைத்து வேதநாயக சாஸ்திரியார் பாடியிருக்கிறதாகத் தெரிகிறது. இரண்டாவது கீர்த்தனத்தின் ராகத்தை band* மூலமாகத் தொனிக்கிற சப்தத்தை ஒட்டி 1832-ம் வருஷம் எழுதின சரணம் பின்வருமாறு:

4 தரம் { டம் டம் டடிற்றி டடிற்றி டாம்
டடிற்றி டடிற்றி டடிற்றி டடிற்றி.

2 தரம் { டம்டம் டாம் டடிற்றி டம்டம்
டடிற்றி டடிற்றி டடிற்றி டடிற்றி.

இவைகள் தமிழ் யாப்பிலக்கணத்திற்கு இசைவாக அமைக்கப்படவில்லையோ? † தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு அறிமுகமான "ஆதிதேவ பாலகா நமோ மு" என்ற கிறிஸ்மஸ் கீர்த்தனையும், ‡

"There were three crows that sat on a tree
Billy magee magaw"

என்ற பகடியான இங்கிலீஷ் பாட்டின் இராகத்தில் இயற்றப்பட்டிருக்கிறது. தமிழ்க் கீர்த்தனையைத்தான் நான் சிறு வயதில் முதலாவது கேட்டு பாடினது

---

* இங்கிலீஷ் வாத்தியத்தைக் குறித்து, ஓர் ஹிந்து வித்வான் மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கும் வியாசத்தை விநோதரசமஞ்சரி, பக்கம் 31-40-ல் காண்க.

† இது ஆங்கிலமுமல்ல, தமிழுமல்ல.

‡ இதை இயற்றிய காயகஸ்தர் இன்னுர் என்று எனக்குத் தெரியவில்லை.

பிற்பாடுதான் ஓர் இங்கிலீஷ் பாட்டு அதே இராகத்தி லுண்டென்று தெரியவந்தது. இராகம் இங்கிலீஷாக விருக்க தமிழ்ப் பதங்களையாவது ஆங்கிலேய பதங்களை யாவது உபயோகிக்கலாம். Dr. S. ஏசுதாசன் அவர் களின் வழக்கு இந்த உதாரணங்களால் அற்றுப் போகிறது. ஞானப்பாட்டுகளை (Hymns) தமிழில் இங்கிலீஷ் இராகத்திற்கு இசைவாகப் பாடப்பட்டவை களென்று நாம் அங்கீகரிக்கலாம். Dr. S. ஏசுதாசன் அவர்களுடைய ஆலோசனைக்கு இசைவாகத்தான் வேத நாயக சாஸ்திரியார் 35-ம் ஞானப்பாட்டை* "இம்மட்டும் ஜீவன் தந்த மு" என்ற கீர்த்தனை ரூபமாக சமர்ப்பித் தார் (106–109-ம் பக்கங்கள் பார்க்க). இவ்வாறு ஒவ் வொரு ஞானப் பாட்டையும் கீர்த்தனையாக மாற்ற வரம் வேண்டும். மேலும் இது அத்தியந்த அவசியமா? வரம் பெற்றோர் சுயமாய் பாடித் துதிப்பது இவ்வித முயற்சி களினால் குறைவுபடுமல்லவா? வேதநாயக சாஸ்திரியார் மேற்கூறிய அப்பியாசத்தை பின் தொடரவில்லை.

ஞானப்பாட்டுகளின் இராகம் தமிழர் காதுக்கு விகற்பமாகத் தொனிக்குமென்றால், கீர்த்தனைகளை யியற் றினவரான சாஸ்திரியாருக்கு அவைகள்மேல் வாஞ்சை யும் பிரீதியும் ஏற்பட்டதென்ன காரணத்தினாலென்று கூறமுடியுமா? எனக்குத் தோன்றியபடி எந்த கீதவாத் தியமானாலும் சப்த சுரங்களுக்குள் அடங்கும் குணமே அதற்கு முகாந்தரம் English tunes வேறென்றும் தமிழ் இராகங்கள் மற்றொன்றென்றும் நாம் வகுத்தல் அசாத்தியம்; நியாயமுமில்லை.

ஞானப்பாட்டுகளில் காணப்படும் ஆத்ம எழுப்பு தலும் உயிரும் உணர்வும் யாவருக்கும் ருசிக்கும் என் பதை பின்வரும் கதை விளக்கும்:

---

* Translation by Fabricius.

"சில வருஷங்களுக்கு முன்னே ஒரு ஐயர் சென்ன பட்டணத்தைச்சேர்ந்த சூளைக் கடைத்தெருவில் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கிறதை ஒரு பண்டாரம் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்து பிரசங்கம் முடிந்த பின்பு, அந்த ஐயருடைய வீட்டிற்குப்போய்த் தான் கேட்ட பிரசங்கத்தின் பொருளை விளக்குகிற ஒரு நல்ல நூல் தன்னிடத்தில் உண்டென்று சொல்லி, உட்கார்ந்து, காவிச்சிலையினால் வெகு பத்திரமாய்ச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை அவிழ்த்துக் காண்பித்து, தான் அதிலிருந்து மனப்பாடம் பண்ணியிருந்த வாக்கியங்களை விநயத்தோடு பாராயணம் பண்ணினான். ஐயர் அந்த புஸ்தகத்தை எடுத்துப் பார்த்து, அதற்குப் பெயர் முதலானவை யடங்கிய முகப்பேடுகள் இல்லாதிருந்தும் அது பெப்ரிசியுஸ் ஐயர் ஞானப்பாட்டுப் புஸ்தகம் என்று அறிந்துகொண்டு இந்த புஸ்தகத்திற்கு பெயர் என்னவென்று பண்டாரத்தைக் கேட்டார். புஸ்தகத்துக்குரிய சரியான பெயர் அவனுக்குத் தெரியாமையால், இது நெஞ்சுருக்கி நூல் என்று அதற்குப் பெயரிட்டுச் சொன்னான். அந்தப் பெயர் பெப்ரிசியுஸ் ஐயரின் ஞானப்பாட்டுப் புஸ்தகத்துக்கு தகுந்த பெயர்தான் என்று அதின் பொருளை உணர்ந்தவர்கள் ஒத்துக்கொள்வார்கள்." Dr. பௌவர் ஐயருடைய "கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம்" (283–284-ம் பக்கங்கள் பார்க்க).

இவ்வாறு ஹிந்துக்களும் விரும்பத்தக்க ஞானப்பாட்டுகளை விலக்கிவிட்டு, கீர்த்தனைகளை மாத்திரம் கோவில்களில் உபயோகித்தால் கிறிஸ்து மார்க்கம் ஹிந்துக்களுக்குள் அங்கீகாரம் பெறுமா? இதுதானா கிறிஸ்து மார்க்கத்திற்கும் ஹிந்து சமயத்திற்கும்

ஒற்றுமை யுண்டாக்கக்கூடிய உபகரணம்? ஹிந்து மார்க்கத்தில் விசேஷமாக காணப்படும் விக்கிரக பூஜையல்லவா ஹிந்துக்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவுவதற்கு இடையூறாகவிருக்கிறது! கிறிஸ்து மார்க்கத்தின் கொள்கைகள்:—(1) இயேசுநாதரே உலகத்திற்கு இரக்ஷிப்பை சம்பாதித்தவர், (2) பாவ மன்னிப்பு, (3) நித்திய ஜீவன், (4) பரிசுத்த ஆவி முதலியன அவர்களுக்கு அருவருப்பானவைகள். நமக்கும் ஹிந்துக்களுக்கும் இராசி யுண்டாவது அசாத்தியம். கிருஷ்ணுவுக்கும் கிறிஸ்துவுக்கும் ஒருக்காலும் ஐக்கியம் ஏற்படாது. இந்த தவறுதலான உபதேசத்தை நம்பி நாம் ஐரோப்பியர் இயற்றிய ஞானப்பாட்டுகளைத் தள்ளிவிடுவது கிறிஸ்து மார்க்கத்தின் அபிவிர்த்திக்கடுத்ததன்று. ஞானப்பாட்டுகள் தவிர, சுவிசேஷ கீதங்கள் முதலியன நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் நன்மையைப் பெருக்குகின்றது. நம்முடைய ஆராதனைகளுக்கும் ஹிந்துக்களின் பூஜைகளுக்கும் நிரம்ப வித்தியாசம் தீர்மானத்தோடே ஏற்படுத்துவது நல்லதும் அவசியமுமா யிருக்கிறது. பூலோக இரக்ஷகரான இயேசுகிறிஸ்துவுக்காகவும் அவருடைய பாடுகளின் புண்ணிய பலன்களுக்காகவும் புறமதஸ்தர்கள் நம்முடைய சபையில் சேரவேண்டுமேயொழிய, வேறொன்றும் அவர்களைக் கவர்ந்துகொண்டு கிறிஸ்து மார்க்கத்தை தழுவும்படி ஏதுகரமாயிருக்குமானால் அத்தகைய கிறிஸ்தவர்களின் விசுவாசமும் கொள்கைகளும் பதராகுமே. தமிழ்க் கீதங்களுக்கு ஆங்கிலேய பதங்கள் கூட்டி பாடினால் சுவாரஸியமாக விருக்குமாவென்று சோதிப்பது ஆங்கிலேயருடைய காரியம். அதைக் குறித்து நாம் கவலைப்படவேண்டியதில்லை. திராவிட பாஷைகளுக்கும் ஞானப்பாட்டுகளின் இராகங்களுக்கும்

ஏதோ ஒரு விசேஷமான பொருத்தமிருக்கிறது. மலை யாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளிலும் ஞானப்பாட்டுகளைப் பாடுகிறார்கள். இறுதியில் எனக்குத் தோன்றுகிறதென்னவென்றால், இந்த விஷயம் மறு கட்சி யின் உண்மைக்குள்ளடங்காது.*

பண்டாரம் ஞானப்பாட்டுகளின் இராகத்தால் இழுக் கப்படாமல் அவைகளின் உள்கருத்துகளால் கவர்ந்து கொள்ளப்பட்டான். இத்தகைய ஆத்ம இரட்சிப்புக்கு ஆதாரமான பொருள்கள் அடங்கிய ஞானப்பாட்டுகளின் அருமை இவ்வுதாரணத்தால் விளங்குகிறது.

தற்காலத்தில் இரண்டுவிதமான கிறிஸ்து மார்க்க கக்ஷியார் முளைத்திருக்கிறார்கள். ஒரு சாரார் கிறிஸ்து மார்க்க ஆராதனையை இந்துக்களுக்கு உகந்த மாதிரி அவர்களுடைய பக்தி விநயத்திற்கு அடுத்த விதமாய் மாற்றவேண்டுமென்கிறார்கள். மற்றொரு சாரார் ஜெப புஸ்தகம் (Book of Common Prayer), ஞானப்பாட்டு கள், குழாய் வாத்தியம் (Organ) முதலியன கிறிஸ்து மார்க்க ஆராதனைக்கு ஏற்ற சாதனங்களென்றும் அவை கள் விக்கிரக பூஜைக்கும் மெய்யான கடவுளின் ஆராத னைக்கும் இருக்கும் வித்தியாசங்களை துலாம்பரமாக வெடுத்துத் காட்டுகிறதென்றும் சாதிக்கிறார்கள். இயேசு கிறிஸ்து கீழ் நாட்டுக்குரியவருமல்லர் (oriental) மேல் நாட்டுக் குரியவருமல்லர் (occidental) அவருடைய உப தேசங்கள் சுயமானவைகளும் சமஸ்த குணமுடையவை களுமானபடியால் அவருடைய வணக்கத்தை மட்டுப் படுத்தக்கூடாது. நம்முடைய பாடல்கள் இந்து இரா கங்களுக்கு இசைவாக சமர்ப்பிக்கப்பட்டாலென்ன? நம்முடைய கோவில்கள் ஹிந்து ஆலயங்களைப்போல்

---

* The converse proposition need not be true.

மாற்றப்பட்டாலுமென்ன? இவைகள் ஹிந்துக்களைக் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவச்செய்யுமோ? கிறிஸ்து மார்க்கம் காண்பிக்கும் இரக்ஷணிய வழி இதர மார்க்கங்களில் இல்லாத ஓர் ஒற்றையானதும் விசேஷித்த மூலாதாரமான குணாதிசயமுடையதுமானதால் நம்முடைய ஆராதனையின் இலட்சண போக்குகளையும் கிரமங்களையும் விக்கிரக பூஜையுடன் ஒத்திணங்கச் (compromise) செய்வது உசிதமல்ல.

## VI

தம்முடைய கீர்த்தனங்களில் கடைசி அடியில் தம் பெயரை "வே. சா." ஸ்தாபித்தது G. U. Pope ஐயருக்கும் அவருக்கும் ஒரு பெரிய வழக்கை யுண்டாக்கினது. இதற்கு சாஸ்திரியாரின் பிரதிவாதம் அவருடைய "உபத்திரா பத்திரம்" என்ற புஸ்தகத்திலடங்கி யிருக்கிறது. அது பின்வருமாறு:—

### 2. சம்பாஷணை

பராபரனைப் பாடித் துதிக்கிற பதகீர்த்தனங்களிலே அதைப் பாடினவனுடைய பெயரிருக்கத் தகுமோ தகாதோவென்பது.

குரு*: ஞானப்பாட்டகராகிய நீங்கள் கர்த்தரைப் பாடி துதிக்கிற பாடல்களிலே உங்களுடைய பெயரிருக்க வேண்டியதுண்டோ? அது நல்லதல்லவே ஏன் அப்படி செய்கிறீர்கள்?

சீடன்†: உரோமானித்தாருடைய பாடலுக்கும் எங்கள் பாடலுக்கும் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்கும் படிக்கு அப்படிச் செய்கிறோம்.

ஏனென்றால் உரோமானித்தாருடைய பாடல்களிலே அங்கங்கே வேதவின்னமான சொற்கள் கலந்திருந்தாலும் பூர்வீகமாய் நம்முடைய கிறிஸ்தவர்கள் அதுகளை எழுதி

* G. U. Pope ஐயர். † வேதநாயக சாஸ்திரியார்.

வைத்துப் படிக்கிறார்கள். அந்த அந்த ஊர்களிலே அது களைத் தேவாலயத்திலே பாடுகிறதுமுண்டு.

இதினாலே இரண்டும் ஒன்றாய்க் கலந்துபோகாத படிக்கு எங்கள் பாடலுக்கும் அவர்கள் பாடலுக்கும் வித்தியாசம் அறியத்தக்கதாக ஒவ்வொரு பதங்களின் முடிவிலே எங்கள் பெயரை வைத்திருக்கிறோம்.

குரு: அதைப் புஸ்தகத்தின் துவக்கத்திலே போடலாமே, பதத்திற்கு பதம் வைக்கவேண்டியதில்லையே.

சீடன்: எங்களுடைய எல்லாப் புஸ்தகங்களிலேயும் ஐரோப்பியர் வழக்கத்தின்படி துவக்கத்திலே மாத்திரம் எங்கள் பெயர் போட்டிருக்கும்.

ஆனால் செபமாலை, பத கீர்த்தனமென்ற இரண்டு புஸ்தகங்களிலே மாத்திரம் பதத்துக்குப் பதஞ் செபமாலைக்கு செபமாலை எங்கள் பெயர் போட்டிருக்கும். இதற்கு மூன்று முகாந்தரங்களுண்டு:

1. முகாந்தரம்

இது தேவாலயத்திலே பாடக் குறிக்கப்பட்ட புஸ்தகமானதினாலே பராபரனுக்கு முன்பாக எங்கள் நினைவுகூருதலுண்டாயிருக்கும்படிக்கும் எங்களுக்கவர் நன்மை செய்யும்படிக்கும் அப்படிச் செய்யப்பட்டது.

குரு: உங்கள் பெயரைச் சொல்லிக் காட்டினால்தான் பராபரனுக்கு நினைவுகூருதலுண்டாயிருக்குமோ? மற்றப்படி நீங்கள் பாடுகிற கூட்டமென்று அவருக்குத் தெரியாதோ?

சீடன்: கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான ஆரோன் இரண்டு கோமேதகக் கல்லிலே இஸ்ரவேல் புத்திரரின் பன்னிரண்டு நாமங்களை முத்திரை வெட்டாக வெட்டி கர்த்தருக்கு முன்பாக நினைப்புக்காக அவன் தோள்களின்மேல் சுமந்துவரக் கட்டளையிட்டார். (2 மோசே

28: 9–12). அப்படியே ஆரோன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கையில் தன் இருதயத்தின்மேல் ஞாயத்தின் மார்ப்பதக்கத்திலே இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை எப்போதும் கர்த்தருக்கு முன்பாக நினைப்புண்டாகும் படிக்கு சுமந்துவரக் கடவானென்றார். (2 மோசே 28, 29).

இந்த ஞாயத்தின்படியே வேதநாயக சாஸ்திரியின் பெயர் அவன் பாடின பாட்டிலே இருக்கிறது. பராபர னுக்கு பொருந்தாத பாவமாயிருக்குமோ?

## 2. முகாந்தரம்

அந்தந்த வருஷத்திலே பாடின பதங்களை அவரவர் எழுதிக்கொண்டு அயலூருக்குப் போய்விடுகிறபடியி னாலே அதைப் பாடினவனின்னானென்று விரும்பினோ ரறிந்துகொள்ளும்படிக்கு அப்படிச் செய்யப்பட்டது.

## 3. முகாந்தரம்

*　　*　　*　　*

எபிரேயருடைய வேதத்திற்கு சரியாய் இசைந்து வருகிறது. தாவீது, ஆசாப்பு, சாலொமோன், மோசே, எத்தான், எமான் என்றவர்கள் கர்த்தருடையவர்க ளாச்சே; அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றுகிறதிலே பொல்லாப்பு இல்லையே. அவர்கள் பாடின சங்கீதங் களிலே அவர்கள் பெயர் வருகிறதுபோல நாங்கள் பாடின கீர்த்தனங்களிலே எங்கள் பெயரும் வருகிறது. இதா ருக்கு பொல்லாப்புச் செய்யுது?

*　　*　　*　　*

கடைசியிலே நாங்கள் மிகுந்த வணக்கமாய்த் தங்க ளுக்குச் சொல்லுகிறதென்னவென்றால் "சங்கீதங்களில் ஆசாப்பு, எமான், எத்தானென்று பெயர் மாத்திரம் வருகிறதன்றி அத்துடன் சேர்ந்து வருகிற பொரு ளொன்றுமிராதலால் அதை வாசியாமல் விட்டாலும்

குறைவல்ல. ஆனால் தமிழ்ப் பாடல் அப்படியல்ல. அதன் கடைசிக் கவியில் பெயர் மாத்திரம் தனித்து வாராமல் அந்தப் பதத்தின் பொருள் அதில் முடிந்து அதற்கு மகுடம்போலிருக்கிறது. அநேகம் பதங்களின் கடைசிக் கவியை எடுத்தாற் கருத்து முடியாமல் பொருளற்றிருக்கும். அதை நீங்கள் அறியாமல் எடுத்துப்போட வேணுமென்று பிடிவாதம் பண்ணுகிறதினால் நீங்கள் தமிழ் நன்றாயறிந்தவர்களல்லவென்கிறது திட்டமாய் வெளியாகுதே."

இந்தப் பிரதிவாதத்தில் முக்கியமான கருத்து, அச்சடிக்காத பாடல்கள் இன்னார் பாடினாரென்று நாளடைவில் தெரியாமல் போகுமாதலால் கையொப்பத்துக்குச் சமானமாய் கடைசி சரணம் பாடப்பட்டதென்பதே. தற்காலத்தில் அச்சடிக்கும் வசதிகள் ஏராளமானதால் கவிராயர்களுடைய பெயரைக் கடைசியில் ஸ்தாபிக்க வேண்டியதவசியமில்லை. ஆனாலும் அநேக கிறிஸ்தவ காயகஸ்தர்கள் தற்காலத்தில் வே. சா.வின் முன் மாதிரியை பின்பற்றி வருகிறார்கள். இதை ஒருவரும் ஆக்ஷேபிக்கக் காணோம்.

## VII

சாஸ்திரியாரின் சுருக்கமான வரலாற்றை முதல் முதல் அச்சடித்தவர் Dr. Henry Bower (1). பிற்பாடு அவருடைய தலைமகன் நோவா ஞானாதிக்க சாஸ்திரியார் அவருடைய சரித்திரத்தை 1899-ம் வருஷத்தில் வெளியிட்டார்கள். இந்தப் புஸ்தகத்தின் பிரதிகளை தற்காலம் காண்பதரிது. சாஸ்திரியாரின் வீட்டிலிருந்த ஒரே ஒரு புஸ்தகத்தை என்னிடம் ஒப்புவித்தார்கள். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான், தகுந்த ஆராய்ச்சி செய்து, இந்த சரித்திரத்தை சவிஸ்தாரமாக எழுதலானேன். இந்நூலை வாசிக்கும் நண்பர்கள் ஒருக்கால்

நான் அவருடைய குடும்பத்தை முன்னோர்களின் விவாக சம்பந்தங்களினால் சேர்ந்தவனானபடியினால் எனக்கு அதன் பிரசுரத்தில் ஆஸ்பதம் அல்லது சுய உரிமை யிருக்கிறதென்று சமுசயிக்கலாம். ஆனாலது மாத்திரம் மூலகாரணமாகாது. சாஸ்திரியாரின் குமாரர்களான (1) நோவா ஞானாதிக்க சாஸ்திரியாரையும், (2) எலியா தேவசிகாமணி சாஸ்திரியாரையும் முகமுகமாய் பார்த்தும் முறையே "பெரிய தாத்தா", "சின்னத் தாத்தா" வென்றழைத்தும் அவர்களுடன் பேசிப் பழகியுமிருக்கிறேன். சுமார் எட்டு வயதில் தஞ்சாவூர் C. F. சுவார்ச்சையர் ஏற்படுத்தின பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்பொழுது, சாஸ்திரியார் வீட்டில் கொஞ்சக் காலம் நோவா ஞானாதிக்க சாஸ்திரியாரின் ஆதீனத்தில் வளர்ந்து அவர்கள் தகப்பனார் ஏற்படுத்தின அன்றாடக குடும்ப ஆராதனைகளிலும், கிறிஸ்து சமய உற்சவங்களைக் கொண்டாடும் அனுஷ்டானங்களிலும் நான் பங்கு பெற்று பயிற்சி யடைந்தேன்.

என் தகப்பனார் தென் இந்தியா இருப்புப்பாதை சேகரத்தில் உத்தியோகஸ்தராக விருந்தபொழுது, தஞ்சாவூரில் ஒரு வருஷத்திற்குமேல் வசிக்க நேரிட்டது. அந்தக் காலத்தில் நான் சங். C. F. சுவார்ச்சையர் ஏற்படுத்தின பள்ளிக்கூடத்தில் திரும்பவும் கல்வி பயின்று 1900-ம் வருஷம் Lower Secondary Examination இல் தேறினேன். அதே வருஷத்தில் தானே தஞ்சாவூரில் தூண்களில்லாமல் புது மாதிரியாக விசாலமாக்கி சமர்ப்பிக்கப்பட்ட பரிசுத்த பேதுருவின் தேவாலயத்தின் பிரதிஷ்டை உற்சவ வாரத்திலே, Father W. H. Blake-ன் ஆதீனத்தில், Bishop Henry Whitehead ஆல் திடப்படுத்தலும் பெற்றேன். இந்த உற்சவ வாரத்திலே, ஹிந்து கோவில்களின் உற்சவங்களில்

உபயோகப்படும் பிரமாண்டமான பட்டுக் குடையை போன்ற ஒரு குடையை அச்சமயத்தில் கிறிஸ்து மார்க்கத்தை ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த ஓர் ஹிந்து மனிதன் தூக்கிப்பிடிக்க, அக்குடையின் கீழ் நோவா ஞானதிக்க சாஸ்திரியார் பாடகர்களுடன் கோவில் சந்நிதியில் பாடி பிரசங்கித்ததையும் கண்ணுற்று மகிழ்ந்தேன். எலியா தேவசிகாமணி சாஸ்திரியாரும் இரண்டு பாடல்களைப் புதிதாய் உண்டுபண்ணி கோவில் பிரதிஷ்டையைச் சிறப்பித்தார்கள்.

பிற்பாடு 1907–1910-ம் வருஷங்களில் எனது ஜேஷ்ட சகோதரி Dr. Miss Gnanodayam David தஞ்சாவூர் "ராஜா மிராஸ்தார்" வைத்தியசாலையில் Lady Doctor ஆக உத்தியோகம் வகித்தபோது அடிக்கடி தஞ்சாவூருக்குப் போக நேரிட்டது. இந்த விதத்தில் எனக்கு சாஸ்திரியார் வீட்டுக்கு போக்குவரத்து ஏற்பட்டபடியினாலும், தமிழ்க் கல்விக்கடுத்த நூல்களில் ஏற்கனவே நல்லபிமானமும் பிரீதியுமுண்டாயிருந்தபடியினாலும், வேதநாயக சாஸ்திரியாரின் ஜீவிய விருத்தாந்தத்தை யாராய்ந்து அந்த கிறிஸ்து பக்தாவினுடைய புகழும் கீர்த்தியும் அழியாதவண்ணம் தகுந்தவிதமாய் சமர்ப்பித்து எழுதவேணுமென்கிற ஆவல் என்னை யறியாமலே, நான் B.A. பரீக்ஷையிலே தேறினபின் 1910-ம் வருஷம் விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டது. ஆனால் 50-வது வயதில்தான் இந்த முயற்சியை என்னால் எடுக்க சமயம் வாய்த்தது. அதின் காரியசித்தி வாசிக்கும் இஷ்டர்களால் மெச்சத்தக்கதோ அல்லவோ வென்கிற எண்ணம் என்னைக் கவலைக்குட்படுத்தாது என்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

இறுதியில் எனக்கு இந்த பூர்வீக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்து திருத்துவதற்கும் இத்துடன் முன்பு

அச்சில் வராத சங்கதிகளைக் கூட்டுவதற்கும்* சகாயம் செய்த யாவருக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். சாஸ்திரியாரின் பேரனார் ஸ்ரீ E. ஞானேந்திரம் பிள்ளையவர்கள் தன்னுடைய தகப்பனார் சங். எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் சேகரித்து பத்திரப்படுத்தி வைத்திருந்த தஸ்தாவேஜுகளையும், அரிய நூல்களையும் நான் கேட்டபொழுது உடனுக்குடன் அனுப்பி உதவியதுமன்றி, உபகதைகளில் சிலவற்றை அறிவித்தும் இப்பிரபந்தத்தை அச்சடிப்பதற்கேற்ற ஒழுங்குகள் செய்தும், சித்திரங்களுக்கு தன்னிடமிருந்த அச்சுக் கட்டைகளைக் கொடுத்தும், மற்றும் பல விதத்திலும் புரிந்த சமய சகாயத்திற்கு நான் கடமையின் பிரகாரம் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன். சாஸ்திரியாரின் பேரனார் ஸ்ரீ E. வேதபோதகம் பிள்ளையவர்களின் அரும்பிரயாசையினால் சாஸ்திரியாரின் நூல்களில் சில அச்சடிக்கப்பட்டன. அவைகள் "நூல்களின்பேரில் மதிப்புரை" எழுத எனக்கு உபகரணங்களாக உதவின. ஸ்ரீ பாலசிங்கம் சத்திய நாடார் அவர்கள் நூன்முகம் எழுதி இந்த பிரபந்தத்தை பூரணப்படுத்தினதற்கு என்னால் பிரதியுபகாரஞ் செய்தலரிது.

தஞ்சாவூர் சபையாரின் மத்தியில் சாஸ்திரியாரின் நூல்கள் மூலமாய்ச் சிறந்த ஊழியஞ் செய்துகொண்டு வரும் ஸ்ரீ சேம் வேதநாயக சாஸ்திரியாருக்கு இந்த சரித்திரத்திற்கு முன்னுரை எழுதினதற்காக நான் நன்றிமொழி கூறி இந்தப் பாயிரத்தை முடிக்கிறேன்.

Palamcottah,
21—3—1945.

D. W. DEVANESEN.

---

* அகில லோக யுத்தத்தினால் ஏற்பட்ட கடுதாசி பஞ்சம்தான் இப் பிரபந்தத்தில் குறிப்பிட்ட அநுபந்தங்களை அச்சிடக்கூடாமற் போனதற்குக் காரணம்.



Wedanayaga Sastree
The Evangelical Poet

வேதநாயகசாஸ்திரி

VENERABLE VEDANAYAGA SASTRIAR

EVANGELICAL POET, TANJORE

*Born 7th September 1774 in Tinnevelly*
*Died 24th January 1864 in Tanjore*

# திருநெல்வேலிச் சுவிசேஷ கவிராய
# வேதநாயக சாஸ்திரியாரின்
## சுருக்கமான சரித்திரம்.

## அத்தியாயம். 1.

### பிறப்பும் வளர்ப்பும்.

பூலோக இரக்ஷகரான இயேசு பெருமானுடைய சிறந்த பக்தாவும் பிரசித்திபெற்ற பாட்டகனும் புகழ் அடைந்த கவிராயனுமான வேதநாயக சாஸ்திரி, திருநெல்வேலியில் கிறிஸ்தாப்தம் * 1774-ம் வருஷம் புரட்டாசி மாதம் 7-ந் தேதி செவ்வாய்க்கிழமை பகல் பிறந்தவர். இவருடைய தகப்பன் தேவசகாயம் பிள்ளை, தாய் ஞானப்பூவம்மாள். இவர் பாப்பு மார்க்கத்திலே பிறந்து வேதபோதக ஆடத்துமான் ¶ குருக்களாலே ஞானஸ்நானம் பெற்று, வேதபோதக மென்று பெயரிடப்பட்டார். வேதபோதகம் என்ற பெயர், ஒரு ஆடத்து

---

* இவருடைய பிறந்த தேதியை 1775-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 7-ந் தேதி என்று ஹென்ரி பௌவர் சாஸ்திரியார் (Dr. Henry Bower) கூறியுள்ளார். "கிறிஸ்துமார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம்" (295-ம் பக்கம் பார்க்க.) ஆனால் பௌவர் சாஸ்திரியார் எழுதி 20 வருஷங்களுக்குப்பின் ஞானதிக்க சாஸ்திரியார் தன் பிரபந்தத்தை அச்சடித்து வெளிப்படுத்தினதினாலும் அவர் வேதநாயக சாஸ்திரியாரின் குமாரனானபடியினாலும் அவர் பதித்த தேதிக்கு சரியான ஆதாரங்கள் இருந்திருக்கவேண்டும். (1)

¶ இந்த பதத்திற்கு 'ஆசிரமம்' என்ற அர்த்தம் இருக்கலாம். திட்டமாகத் தெரிய வில்லை.

மான் குருவுடைய பெயராயிருந்ததினாலே, தேவசகாயம் பிள்ளை, வேதநாயகம் என்று அழைத்துவந்தார். அந்த பெயர் தானே நெடுகிலும் வழங்கி வந்தது. வேதநாயகத்துக்கு ஐந்து பிராயமாகிறபோது தேவசகாயம் பிள்ளை ஒரு இலக்கண வித்துவானைக் கொண்டு படிப்புத் துவக்கி அந்த உபாத்தியாருக்கு வெகுமானம் பண்ணினார். ஆனால் வேதநாயகத்தின் தாய், மறு வருஷம் இறந்துபோனாள். இவர் சிறு வயதிலேயே தாயை இழந்து போனதினாலே, இவரும் உடன் பிறந்த இரண்டு சகோதரிகளான சூசையம்மாளும் பாக்கியம்மாளும் மதுராபுரி (மதுரை) க் கடுத்த ஆனைக்குளத்திலிருந்த அவர்கள் பாட்டனார் வீட்டில் விடப்பட்டார்கள்.

இந்த மூன்று பிள்ளைகளும் தங்கள் தாயைப் பெற்ற பாட்டன் சவேரிராயன் செட்டியார் வீட்டில் மிகுந்த கரிசனத்தோடே வளர்க்கப்பட்டார்கள். சவேரிராயன் செட்டியார் நிலபலமுள்ளவ ரானதினாலே, இந்த வேதநாயகத்தினுடைய படிப்பைப் பற்றி அத்தனையாய் கவனிக்க இடமில்லாமற் போயிற்று. இவர் அங்கே சிலகாலம் மாடு மேய்க்கிற வேலைக்காரரோடே சேர்ந்து, தன் பாட்டனாருடைய மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்.

1783-ம் வருஷம் இவருடைய தகப்பனார் சொக்கம்பட்டிக் காவலான புளியங்குடியில் ஒரு இந்து உபாத்தியாயரிடத்தில் இவரைப் படிக்கவைத்தார். அப்பொழுது இவருக்கு ஒன்பது வயது. அங்கே இவர் ஆனச்சுவடியும் இலக்கமும் படித்தார்.

ஒருநாள் சாயுங்காலம் ஐந்து மணி வேளையில் வெளியே உட்கார்ந்து படிக்கிறபோது ஒரு ஆள் உயரமான ஒரு சிலுவை, இவர் கண்ணுக்குத் திட்டமாய் தோன்றும் சமீபமாய் ஆகாயத்திலே மெதுவாய் நடந்து, வலதுபக்கத்திலிருந்து

இடதுபக்கமாய் போயிற்று. அது மேகத்திலே காணப்பட்ட அடையாளமல்ல. சரியாய் மரத்திலுண்டுபண்ணப்பட்ட சிலுவை போலிருந்தது. இவரதை யுற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது, இவர் கிட்ட இருந்த பையன் இவரைத் தட்டி, "நீ என்னடா படியாமல் பராக்கு பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்றான். அதற்கு இவர், உரோமானிலிருந்த படியினால், அந்த மார்க்கத்தார் அப்பொழுது பேசுகிற வாடிக்கைப்படி, "இதோ எங்கள் சுவாமி போகுது 'பார்! பார்!!" என்று அவனுக்குக் காட்டினார். அந்தச் சிலுவை, அரை நாழிகை நேரம் இவருக்குக் காணப்பட்டு, அப்புறம் மறைந்து போயிற்று. இவர் வீட்டுக்கு வந்த பிற்பாடு அதைத் தன் பாட்டியாருக்கு சொன்னார். அவள் ஆச்சரியப்பட்டு, "அது மெய்யாகவே சுவாமியினுடைய அடையாளம். கிடைக்கத் தக்க தெரிசனையல்ல. ஏதோ ஓர் அதிசயம் உன் காலத்திலே சம்பவிக்க வேண்டும்" என்றாள்.

பிற்பாடு தேவசகாயம் பிள்ளை மறு தாரம் விவாகம் முடித்து வந்து வேதநாயகத்தைக் கூட்டிக்கொண்டு திருநெல்வேலிக்குப்போய் அங்கேயிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் இவரை படிக்க விட்டார்.

ஒருமுறை அந்த பள்ளிக்கூடத்து பையன்களோடே சேர்ந்துகொண்டு, வெள்ளத்தினாலே அழிந்து போயிருக்கிற வெள்ளரித் தோட்டங்களில் போய்க் காய்களைத் தடவித் தடவிப் பறிக்கிறபோது, அங்கே மறைவாயிருந்த கிணற்றுக்குள் விழுந்து அமிழ்ந்திப்போனார். உடனே இவரைக் கூட்டிப் போன பையன்களெல்லாம் ஓடிப்போனார்கள். இவரோ இரண்டு தரம் கிணற்றிலே அமிழ்ந்து மூன்றும் விசை எழும்பினபோது, தேவானுக்கிரகத்தால் வரம்பைப் பிடித்துக் கொண்டு, தப்பிப் பிழைத்தார். இது காரியத்தை வெகு

னாளாய்த் தம்முடைய தகப்பனுருக்குச் சொல்லப் பயந்திருந்து, பிற்பாடு சொன்னுர். அவரதைக் கேட்டு அதிசயப்பட்டு, தன் குமாரனைப் பிராண சேதத்துக்கு விலக்கி இரட்சித்த ஆண்டவரைத் துதித்தார்.

இவர் சில காலம் தன் தாயைப்பெற்ற பாட்டன் வீட்டில் மாடுகளை மேய்க்கிறவர்களோடே விளையாடித் திரிந்த படியினுலே படிப்பின்பேரில் கவனமில்லாமல் பள்ளிக்கூடத்தை விட்டு ஓடி ஓடி ஒளிந்து கொள்ளுகிறதும், வாத்தியார் தேடித்தேடிப் பிடித்துக்கொண்டு வரச் சொல்லுகிறதுமாயிருந்து மெத்த அலுத்துப்போனுர். அப்பொழுது வாத்தியார் மனஸ்தாபத்தோடே "யாருக்குப் படித்துக் கொடுத்தாலும் இவனுக்குப் படித்துக் கொடுக்கக்கூடாது. எமனுக்குப் படிப்பு வந்தாலும், இவனுக்குப் படிப்பு வராதென்றுர்" உபாத்தியாயருடைய அபிப்பிராயம் சுத்தப்பிசகு என்பது வேதநாயக சாஸ்திரியின் சரித்திரம் ரூபிக்கிறது.

உபாத்தியாயரின் துர் அபிமானத்தை கேள்வியுற்ற இவர் தந்தை மெத்த விசனப்பட்டு, "இவன் தாயில்லாத பிள்ளையுமாயிருக்கிறுன் என்ன செய்யலாம்". என்று யோசித்து, சாயுங்கால நேரத்தில் கண்ணீரோடே ஆண்டவரிடத்திலே பேசி விண்ணப்பம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது வேதநாயகம், உலாத்திக்கொண்டிருந்த தன் தகப்பனிடத்திற் கிட்டப்போய் "என்ன ஐயா! உயரப்பார்த்து விசனமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே, முகாந்திரமென்ன?" என்றுர். அதற்கவர் "அப்பா! நான் உனக்காகத்தான் செபம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் வெகு சுவடிகளையெல்லாம் எத்தனையோ பிரயாசப்பட்டு உண்டாக்கி, உனக்காக சேர்த்து வைத்தேன். என்னுடைய பிள்ளையாயிருக்கிற நீ முட்டாளாய் படிக்காமற் கெட்டுப்போகிறுய்." என்றுர்.

வேதநாயகம், "ஐயா! எனக்கு படிப்பு வருமா?" என்று வினவ அதற்கு தந்தை, "கவனித்து படித்தாயானால் கடவுள் உன் கண்ணைத்திறப்பார், உன் புத்தியைத்தெளிவாக்கு வார், நீ படித்துக் கெட்டிக்காரனாய்ப் போவாய்" என்றார். மகன், "ஐயா! எனக்குப்பாடம் எழுதிப்போடுங்கள். இனி மேல் நான் கவனித்துப்படிக்கிறேன்" என்று வாக்கு கொடுத் தார்.

தேவசகாயம் பிள்ளை, மறுநாள் முதல் தம்முடைய மகன் வேதநாயகத்துக்கு பாடங்களுங் கணக்குகளும் ஓலையில் எழுதிப்போட்டு படிப்பித்து வந்தது மன்றி, திட்டமா யொப்பு விக்கிற பாடங்களுக்கு தின்பண்டங்களும், காசுகளும் கொடுத்து, ஒருவித உபாயத்தைக் கையாடிக் கொண்டு வந் தார்.*

---

* தேவசகாயம் பிள்ளையும் ஒரு கவிராயர் என்று தெரிய வரு கிறது. ஸ்ரீ பவுல் அப்பாசாமியவர்கள் எழுதின புஸ்தகத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறது :—" The most notable name in the list after Clorinda is 'Devasagayum pillai, poet, Tinnevelly, aged 50' whom Schwartz took with him to Tanjore. His son became even more famous as a Christian poet-Vedanayaga Sastriar who was twelve years of age at this time went with his father and Schwartz to Tanjore." 13-வது பக்கம் பார்க்க. (8)

# அத்தியாயம். 2.

## தகப்பன் தேவசகாயம் பிள்ளை சுவார்ச்சு ஐயரிடத்தில் (Christian Frederick Schwartz of Tanjore) தன் மகனை ஒப்புவித்தது.

பாளையங்கோட்டையில் கர்னலாயிருந்து இறந்துபோன இலிட் டீட்டன் (Colonel Lyttleton) துரையின் பெண்ஜாதியும் விதவையுமான பிராமண ஸ்திரீ கிளாரிந்தாளம்மாளுக்கு (Clorinda) 1778-ம் வருஷம் சங்: C. F. சுவார்ச்சு ஐயர் ஞானஸ்நானம் கொடுத்தார். கிறிஸ்து மார்க்கத்தை தழுவின இந்த அம்மாளுடைய ஊக்கத்தினாலும், பிரயாசையினாலும், சொந்த செலவினாலும் பாளையங் கோட்டையில் ஒரு சிறிய கோவில் 1785-ம் வருஷம் கட்டிமுடிந்தது. இதை ஆண்டவருக்காக பிரதிஷ்டை செய்யும் பொருட்டு, தானும் மற்றும் இரண்டு கிறிஸ்தவர்களோடும் கிளாரிந்தாளம்மாள் தஞ்சாவூருக்கு பிரயாணஞ் செய்து C. F. சுவார்ச்சு ஐயரை திருநெல்வேலிக்கு வரும்படி கேட்டுக் கொண்டதின் பேரில் திருநெல்வேலி சபையையும் விசாரணை செய்யலாம் என்று சுவார்ச்சையர் புறப்பட்டு வந்தார். பாளையங்கோட்டையில் தேவசகாயம் பிள்ளையைச் சந்தித்தபொழுது, ஒரு நாள் இரவில் வேதநாயகம் செபம்பண்ணி, தன் கட்டிலின்மேலே படுத்துக் கொள்ளுகிறதை சுவார்ச்சையர் கண்டு, இவன் ஆண்டவருக்கு ஏற்ற ஒரு தொண்டனாவானென்று மனதிலே எண்ணினார். மறுநாள் சுவார்ச்சு ஐயர் வேதநாயகத்தோடே பட்சமாய் பேசி, " நீ என்னோடு தஞ்சாவூருக்கு வந்தால், உன்னை நான் ஒரு மனுஷனாக்குவேன் " என்றார். இவன், " நல்லதையா உங்களோடு வருகிறேன் " என்றான். இது செய்தி தேவசகாயம் பிள்ளைக்குத் தெரியாது.



C. F. SCHWARTZ

ராஜ ராஜ ஸ்ரீ துளசி மாகாராஜாவுக்கு (His Highness Raja Tuljajee of Tanjore.) மரண அவஸ்தையா யிருக்கிறதென்றும், தாமதிக்காமல் புறப்பட்டு வரவேண்டு மென்றும், தஞ்சாவூரிலிருந்து சுவார்ச்சையருக்கு காகித மெழுதி வந்தபடியினாலே, ஐயர் பயணத்தை ஆயத்தப்படுத் திக் கொண்டிருந்தார். அப்பொழுது தேவசகாயம் பிள்ளை, சுவார்ச்சு ஐயரைக் கண்டுகொள்ள வந்தார். ஐயர் அவ ரோடே, "உம்முடைய குமாரனை என்னோடு அனுப்பும்; நான் அவனை படிப்பித்து, முன்னுக்குக் கொண்டு வரு வேன்" என்றார்.

தேவசகாயம் பிள்ளை :—ஐயா! அவன் சின்னப்பயல். அத் தனை தூரத்திற்கு வரமாட்டான்?

ஐயர் :—அவனுக்கு என்னோடு கூட வர மனதிருந்தால் நீர் தடை பண்ணுவீரோ?

தேவ :—"இல்லை அப்படி செய்யமாட்டேன்"

ஐயர் :—அப்பொழுது வேதநாயகத்தை கூப்பிட்டு "நீ என் னோடு வரப்பிரியமாக இருக்கிறாயோ?" என்றார்.

வேதநாயகம் :—"நல்லதையா, வருகிறேன்" என்றான்.

ஐயர் :—அப்பொழுது தேவசகாயம் பிள்ளையோடே, "உம் முடைய மகன் வருகிறேன் என்கிறானே. நீர் என்ன சொல்லுகிறீர்?" என்றார்.

தேவ :—"அவனுக்கு தங்களுடன் வருவதற்கு மனதாயிருக் கிறபடியினாலே நீங்கள் கூட்டிப் போங்கள்" என்று ஒப்புக்கொடுத்தார். உடனே கடைக்குப்போய் வஸ் திரம் வாங்கி, சிறு அங்கியும் தமானும் தைத்துக் கொடுத்து, ஐயரோடே கூட்டியனுப்பினார்.

1785-ம் வருஷம் தை மாதத்தில் வேதநாயகத்தை சுவார்ச்சையர் தஞ்சாவூருக்கு கொண்டு வருகிறபோது, அவனுக்கு 12 வயது. சுவார்ச்சு ஐயருக்கு 59 வயது. இந்த சம்பவம் வேதநாயக சாஸ்திரியின் பக்தி ஜீவியத்திற்கு மூல ஆதாரம். பலத்த விசுவாசியாகிய சுவார்ச்சு ஐயருடைய ஐரோப்பிய சால்வை இந்த ஹிந்து பையன்மேல் விழுந்து நாளடைவில் பலத்த கிரியை செய்து, அவன் புது கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மார்க்கத்திலே நிலைத்திருப்பதற்கு ஏற்ற கிறிஸ்து மார்க்க சம்பந்தமான பல நூல்களை இயற்ற நல்ல ஏதுவாக விருந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. திருநெல்வேலியிலிருந்து, தஞ்சாவூருக்கு கொண்டு வந்த சிறிய செடியான வேதநாயகம் 90 வயது வரையில் ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமையாக தஞ்சாவூரிலேயே வேரூன்றி உழைத்து ஒரு பெரிய வானத்தை அளாவும் விருக்ஷமாக, தன்னுடைய பெயருக்கு புகழ்ச்சியைக் கொண்டுவரும் வித்வானும், கவிச் சக்கரவர்த்தியாகவும், செழித்து ஓங்குவான் என்று கனவிலும் சுவார்ச்சு ஐயர் கருதி இருப்பாரோ நாம் அறியோம். கடவுளின் சித்தத்திற்கு யாரால் வரையறுக்கக்கூடும்? "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற முதுமொழிப்படி வேதநாயகத்தின் ரூபமும், பேச்சும், உடை நடை பாவனைகளும் அவர் புத்திசாலி என்று காட்டியிருக்கவேண்டும். இது பற்றியே முதியவரான சுவார்ச்சையர், தந்தையுடன் மன்றாடி வேதநாயகத்தை தன்னுடன் தஞ்சாவூருக்கு அழைத்து வந்திருக்க வேண்டுமென்று புலப்படுகிறது.

1785-ம் வருஷம் மேற்கூறிய கிளாரிந்தாள் அம்மாள் பாளையங்கோட்டையில் எடுப்பித்த முதல் கிறிஸ்தவர் கோவிலை சங்: C. F. சுவார்ச்சையர் பிரதிஷ்டை செய்தது ஓர் விசேஷமான சம்பவம். இரண்டாவது, வேதநாயகத்தை சந்தித்து, இவரை கிறிஸ்துமார்க்க ஜீவியத்தில் பயிற்றுவிக்க வேண்டும்

என்று ஐயர் நோக்கம் கொண்டதும் முக்கியமான சம்பவம். துளசிமகாராஜா தஞ்சாவூருக்குத் திரும்பி வந்த ஐயரைக் கண்டு பேசி தன் சுவீகார புத்திரனான சரபோஜி இளவரசனை (Raja Serfojee) அவர் கையில் ஒப்புக்கொடுத்தது மூன்றாவது நடந்த விசேஷமான காரியம். இந்த வருஷத்தில் சுவார்ச்சையர் கைக்குள் அகப்பட்ட இரண்டு மாணாக்கர்களும் அவருக்கு நல்ல விருதையும் கீர்த்தியையும் கொண்டு வந்தார்கள். துளசிராஜா மரிக்கும் போது சரபோஜி இளவரசனுக்கு 10 வயது. இளவரசர் வேதநாயகத்தை 'அண்ணா' என்று அழைத்ததாக சொல்லுகிறார்கள். சிம்மாசன மேறிய காலத்தில் சரபோஜிமன்னன் தன்னுடைய இளமையில் சிநேகிதனாயிருந்த வேதநாயக சாஸ்திரியாருக்கு ஒரு உபகாரியாக இருந்தார் என்பதை இனிமேல் வாசிக்கலாம்.

வேதநாயகம் தஞ்சாவூருக்கு வந்த துவக்கத்திலே ஒரு நாள் ஐயரிடத்திலே போய், "நான் படிக்கத் தங்களுக்குச் சித்தமான ஒரு பொஸ்தகம் கொடுங்கள்" என்று கேட்டான். ஐயர் ஒரு சங்கீத புஸ்தகத்தை எடுத்து வாழ்த்திக் கொடுத்தார். "ஐயர் துவக்கமாக சங்கீத புஸ்தகத்தை தம்முடைய கையினாலே வாழ்த்திக் கொடுத்த ஆசீர்வாதத்தினாலே, இவர் கடவுளுக்கு சங்கீதக்காரனும், பேர் பெற்ற வித்வானுமாய் போனார்" என்று சாஸ்திரியாரின் மகன் ஞா. ஞானதிக்க சாஸ்திரியார் கூறியுள்ளார். ஐயர் வீட்டிலே இவருக்கு யாதொரு தாழ்ச்சியுமில்லாமல், அன்ன வஸ்திரங் கொடுக்கப்பட்டு, பிள்ளைபோல் வளர்க்கப்பட்டார்.

C. F. சுவார்ச்சு ஐயருக்கு அகத்தின் அழகு முகத்தில் தெரிந்த மாணாக்கர்களைக் கூட்டிச் சேர்த்து கிறிஸ்து மார்க்க போதனைகளை அவர்களுக்கு விளக்கிக் காட்டி அவர்களின் ஆத்ம தீபம் நன்றாய் பிரகாசிக்கும்படி அவர்களை தூண்டிக்கொண்டி

ருப்பது பிரியமான வேலையாயிருந்தது. அவர் ஓர் கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருக்கிறார் :—

"I have selected from the school ten lively boys, whom I daily instruct in the doctrines of Christianity and Church history as well as the method of explaining the principal passages of Scripture. I allow them each a small sum monthly to prevent the necesity of their applying to other labour for support. Not that we expect that every one of them will be fit to be employed in Church offices, but they are thus previously instructed and their ablities as well as conduct are in the way of being proved. Those of whom we entertain hopes of usefulness, we send with the catechists into the country in order to afford them some assistance. May God endue them with His Spirit, sanctify their hearts, and make them useful to the benefit of the congregation and the glory of His Name" Vide pages 170 & 171 of Jesse Page's "Schwartz of Tanjore." (5)

சுவார்ச்சு ஐயர் தெரிந்தெடுத்த பன்னிரண்டு பையன்களில் வேதநாயகம் ஒருவராக இருந்திருக்கலாம். தன்னுடைய சொந்த ஜீவியத்திலும் வேதநாயக சாஸ்திரியாரும் சுவார்ச்சு ஐயர் செய்துவந்த மாதிரியே, தானும் விவேகமும், ஞானமுமுள்ள பையன்களையும், வாலிபர்களையும் தெரிந்தெடுத்து, தன் வீட்டில் வளர்த்து, கிறிஸ்து மார்க்க போதனைகளை அவர்களுக்குப் புகட்டி, பிரசங்கிகளாக ஊர்களுக்கு அனுப்பினார் என்று விளங்குகிறது.

அக்காலத்திலே சங்கை தகப்பனார் பிரதரிக்கு சுவார்ச்சையர் தேசத்துக்கு இடறலில்லாதபடி நடந்து கொண்டு, தமது உபதேசங்களை எல்லாச் சாதியாரும் வந்து கேட்கும்படி

ஒரு உபாயத்தைக் கையாடி உயர்ந்த சாதியாரையே தம்முடைய வீட்டில் சமையல் முதலான போசனபானங்களுக் கடுத்த சுயம்பாகிகளாக வைத்திருந்தார். இந்த நல்ல ஒழுங்கினலே, மெய்யான தேவனை அறியாத புறமதஸ்தரில் அநேகர், அவரிடத்தில் வந்து, தங்கள் ஆத்ம ஈடேற்றத்துக் கடுத்த உபதேசங்களைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றதுமன்றி தங்கள் பிள்ளைகளையும் கல்வி கற்கும் பொருட்டு அவர் வசத்தில் ஒப்புவித்தார்கள். மனுஷருடைய ஆத்துமா உயர்ந்த கிரயத்தினல் கொள்ளப்பட்ட தென்பதை கருதி, அவர்களுக்கு தடுக்கலான உபதேசம் ஒன்றும் சொல்லாமல், அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டால் போதுமென்று அவர்களை மிகுந்த பட்சமாய் சிநேகித்து அவர்களுக்கு ஒரு நல்ல தகப்பனைப்போல் நடந்து கொண்டார். அல்லாமலும் ஐயர் தம்முடைய * வீட்டிலேயேயிருக்கிற வேதநாயகத்தை படிப்பு நேரந்தவிர குறிக்கப்பட்ட மற்ற நேரங்களில் முறைகாரப் பிள்ளைகளுடன் சேர்ந்து யாதொரு வேலையைச் செய்யச் சொல்லுவார்.

ஐயர் சாயுங்காலம் நாலு மணிக்குமேல் படுத்துக் கொண்டு சற்றுநேரம் நித்திரை பண்ணுவார். அப்பொழுது வேதநாயகம் ஐயருக்கு நித்திரை வருமட்டும் வேத பொஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருப்பான். வேதநாயகம் வாசிக்கிறது ஐயருக்கு தெளிவாயிருந்த படியினலே எப்பொழுதும்

---

* இந்த பங்களா இன்னும் நிற்கிறது. சுவார்ச்சு ஐயருக்கு பின் வந்த மிசியோனரிமார்கள் யாவரும் இதில்தான் குடியிருக்கிறர்கள். 1780-ம் வருஷம் துளசிராஜா தஞ்சாவூர் கோட்டைக்கு தென் கிழக்கே கொடுத்த நிலத்தில் சுவார்ச்சு ஐயர் ஒரு கோவிலும் (The modern St. Peter's Church) தனக்கிருக்க ஒரு பங்களாவும் கட்டினர். இந்த பாகத்திற்குத்தான் 'மகர்நோன்புச்சாவடி' என்றது மருவி "மானம்புச்சாவடி" என்ற பெயருடன் தற்காலத்தில் வழங்கிவருகிறது.

அவனைத் தமக்கு முன்னிருந்து வாசிக்கக் கற்பித்தார். சில வேளை ஐயருக்குக் கைகழுவத் தண்ணீர் வார்த்துக்கொண்டும், சிலவேளை ஐயருக்குக் கால் பிடித்துக்கொண்டும் இருப்பான். ஒரு நாள் கால் பிடித்துக்கொண்டிருந்த போது, பரமண்டலத்தின் மகிமையையும், அதிலே இருக்கப்போகிற மோட்சவாசிகளுடைய வாழ்வைப்பற்றியுமுள்ள விசேஷங்களை வேதநாயகத்துக்கு ஐயர் சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது வேதநாயகம் "ஐயா! நான் உங்களோடே கூட பரமண்டலத்துக்கு வந்து அங்கே எப்போதும் உங்களுக்கு கால் பிடித்துக்கொண்டிருக்க விரும்புகிறேன்" என்றான். ஐயர் அதற்கு "அப்பா! பரமண்டலத்தில் கால் வலிக்குமா? அங்கே பெலவீனமாகிலும், விசனமாகிலும் ஒன்றுமிராது. அது காரியங்களைப்பற்றி, நீ மெத்த அறியவேண்டியிருக்கிறது" என்றார்.

மேலும் ஐயர் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடத்துப் பாடம் போதும் என்றிராமல், காலை மாலை செபத்திலும், மற்ற ஒழிந்த வேளைகளிலும், அவர்களோடே வேத காரியங்களைப் பற்றி பேசிப் போதித்து, அவர்களை அறிவாளிகளாக்க உட்கருத்தாய்ப் பிரயாசப்பட்டார். இவ் விதத்திலே வேதநாயகம் சங். பிரதரிக்கு சுவார்ச்சையரிடத்தில் படித்துக்கொண்டிருந்து, இரண்டு வருஷம் இருந்தார். அப்பொழுது வேதநாயகத்தின் பெற்றோர்கள் தஞ்சாவூருக்கு வந்தார்கள். அவர்கள் வந்து நாலைந்து நாட்களாகிறபோது, சுவார்ஃசையர் பெற்றோர்கள் வந்திருக்கிறபடியினாலே, அவனுடைய படிப்பு கெட்டுப்போகுமென்று யோசித்து தரங்கன்பாடியிலிருந்து வந்திருந்த டாக்குத்தர் யோனையரோடே (Dr. John) * கூட்டியனுப்பினார்.

---

* இவர் தரங்கம்பாடியில் உபாத்தியாயர் வேலை பார்த்தவர். இவரைக் குறித்து பௌவர் சாஸ்திரியார் (H. Bower D. D.) தாம் எழுதின "கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான

# அத்தியாயம். 3.

## தரங்கம்பாடி பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கப்பட்டதும் உபாத்தியாயர் உத்தியோகம் பார்த்ததும்.

**சங்.** டாக்குத்தர் யோனையரோடே தரங்கன்பாடிக்கு வேதநாயகம் சென்ற வருஷம் 1789. யோனையர் வேதநாயகத்துக்கு துவக்கமாக வேத சாஸ்திரத்தை எடுத்துக் கொடுத்து (a book on thelogy) "நீ இந்தப் பொஸ்தகத்தை படித்துப் போக வேணும்" என்று சொன்னார்? அந்தப் படியே படித்து இவர் பாடின சகல பாவினங்களும், வசன நடை பொஸ்தகங்களும் வேதசாஸ்திரத்தின் கருத்துக்கிசைய பாடின தினாலே வேதசாஸ்திரியென்று அழைக்கப்பட்டார்.

வேதநாயகம் தரங்கம்பாடியிலிருந்து படிக்கிறபோது, ஒவ்வொரு நாள் சாயுங்காலத்திலும், யோனையரோடே உலாவப் போகிற வழக்கமிருந்தது. அப்பொழுது ஐயர் அனேக உபதேசங்களையும் சீர்மைக்கதைகளையும் சொல்லிக்கொண்டு நடந்து போவார். கேமரார் ஐயரும் (Dr. Cammerer), உரோத்துலர் (Rottler) முதலான ஐயர்மார்களும் வேதநாயகத்தை பட்சமாய் விசாரித்தார்கள். இவர் அங்கே இரண்டு வருஷக்காலம் வேதசாஸ்திரம், வானசாஸ்திரம்,

---

சரித்திரம்" 43-ம் பக்கத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார். "1771-ம் வருஷம் வந்த யோன் ஐயர் (Dr. John) படிப்பில் தேறினவராயிருந்து பள்ளிக்கூடத்து வேலையில் அதிக முயற்சி செய்து நாற்பத்திரண்டு வருஷம் இருந்து 1813-ம் வருஷம் மரணமடைந்தார்." திருநெல்வேலி வட்டத்தில் பிரசித்தி பெற்ற John Devasahayam ஐயரும் டாக்குத்தர் யோனையரிடம் கல்வி பயின்றவர். அனுபந்தம் 7-ஐ பார்க்க.

(Astronomy) முதலானதை படித்து வந்தார். அல்மாஞாப் * பாஷையில் சுவிசேஷம் வாசிக்கக்கற்றாலும், அந்த பாஷையில் தேறவில்லை. ஆங்கிலேயத்தில் கொஞ்சம் அப்பியாசமிருந்தது. இப்படியாக அங்கே படித்தபின்பு திரும்பவும் தஞ்சாவூரி லிருக்கிற சங் : சுவார்ச்சையரிடத்தில் வந்து சேர்ந்தார்.

அப்பொழுது சுவார்ச்சையர், "வேதநாயகத்துக்கு இப் பொழுது போதுமான வயதும் அறிவுமிருக்கிறது. அவன் இனிமேல் படிக்கத் தேவையில்லை", யென்று சொல்லி, சபை விசாரணைக்குப்போன ஞானமுத்து உபதேசியார் முதலானவர் களோடே, உதவியாளாக அனுப்பினார். இவர் தஞ்சாவூரைச் சேர்ந்த வல்லம், புதுப்பட்டி, பூதலூர், சித்திரக்குடி முதலான இடங்களுக்கும், இராமநாதபுரம், உத்திரகோச மங்கை முத லான தெட்சண பாகங்களுக்கும், அவர்களோடே போயிருந்து அவர்கள் செய்த ஊழியத்திற்கு மிகவும் உதவியாயிருந்தார்.

பிற்பாடு இவருக்கு பத்தொன்பது பிராயமாகிறபோது, சங். தகப்பனார் பிரதரிக்கு சுவார்சு ஐயர் இவரை சாஸ்திர பள்ளிக்கூடத்திற்கு (Seminary) முதல் வகுப்பு உபாத்தி யாராக (Head Master) நியமித்தார். இவர் தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வேத சாஸ்திரத்தையும், லௌகீக ஞான நூல்களையும், கணக்கு சாஸ்திரத்தையும், உண்மையுடன் சுறுசுறுப்பாய் படித்துக்கொடுத்தார். சுவார்ச் சையர் இவருடைய சாமர்த்தியத்தையும், இவர் பள்ளிக் கூடத்து பிள்ளைகளை நடத்துகிற ஒழுங்கையும் கண்டு, இனி மேல் பிள்ளைகள் தரங்கன்பாடிக்குப் போய் படிக்கவேண்டிய

* கர்மானியா பாஷை அல்லது German. கர்மானியர் தங் கள் தேசத்தை Allemagne என்று அழைப்பதினால், அவர்கள் பாஷை முற்காலத்தில் அல்மாஞா அல்லது அலெமன்னியா பாஷை என்று அழைக்கப்பட்டது.

ஆவசியகமில்லையென்று தீர்த்தார். அத்
களுடைய பிள்ளைகளும் நாட்டையர்மார்க
களும், இவரிடத்தில் தானே வந்து கல்வி கற

---

## அத்தியாயம். 4.

---

### சங். பிரதரிக்கு சுவார்ச்சு ஐயர் பேரில்
### வேதநாயகம் கொண்ட பேரன்பும் சிஷ்ய பக்தியும்.

மூந்தின அத்தியாயத்தினுல் ஏற்படும் விஷயம் என்ன வென்றுல் தஞ்சாவூர் வேதநாயக சாஸ்திரி பிரதரிக்கு சுவார்ச்சையரிடத்திலும் டாக்குத்தர் யோனையரிடத்திலும் கல்வி கற்றவர். இவருக்கு பின்னுல் சிலாக்கியமாகக்கிடைத்த வித்யா விருதுகளுக்கு அஸ்திபாரம் தஞ்சாவூரில் சுவார்ச்சையராலும், தரங்கன்பாடியில் டாக்குத்தர் யோன் ஐயராலும் போடப்பட்டதென்று புலப்படுகிறது. தம்முடைய இருபதாம் வயதிலிருந்து வேதநாயகம் கவி உண்டு பண்ணினதினுலும், சுவார்ச்சு ஐயர் 1798-ஆம்டத்தில் மரித்தபோது இவருக்கு 24 பிராயமானபடியினுலும் வேதநாயகத்தின் கவிபாடும் வரத்தை அறிந்து சுவார்ச்சு ஐயர் தான் திருநெல்வேலியிலிருந்து கொண்டுவந்து வளர்த்த மாணுக்கன் தான் நினைத்தபடி ஒரு மனுஷனுக மாத்திரம் விளங்காமல், கவிபாடும் திறமையும் அவருக்கு உண்டானதைப்பற்றி அவர் உள்ளம் களித்திருக்கலாம்.

பெத்லகேம் குறவஞ்சி முதன் முதல் தன் 19 வயதில் பாட துடங்கி சுவார்ச்சு ஐயர் காலத்திலேயே அநேக சிறு புஸ்தகங்களை உண்டு பண்ணியிருந்தார். இது விஷயத்தைக்

க சாஸ்திரியின் பேரனுர் ஸ்ரீ எ. ஞானேந் ...ர்கள் எனக்கு பின் வருமாறு நான் கேட்ட ...தி அறிவித்தார்.

...னே பள்ளிக்கூட வாத்தியாராக சங். சுவார்ச்சையர் ...த்தபோது, மாணுக்கர், உபதேசிமார், குருமார்களுக்கு, பிரயோஜனமாக அநேக பாடல்களையும் உண்டாக்கி 'ஞானக் கும்மி', 'பரமநீதிப்புராணம்', 'காலவித்தியாசமாலை' 'ஞானஎத்தப்பாட்டு', 'முன்னுரை', 'மெய்யறிவு', 'ஞானவழி', 'பராபரன்மாலை' முதல் பாகம், 'ஆதியா னந்தம்', 'அறிவானந்தம்', 'வஸ்து நிர்ணயம்', 'சைதன் னியத்திறவு கோல்', முதலிய சிறு புஸ்தகங்களை சுவார்ச்சு ஐயர் அறிய உண்டாக்கி பிள்ளைகளுக்கு படித்துக்கொடுத்து உபதேசிமார்களாக அனுப்பியிருக்கிறுர்கள்."

திருநெல்வேலியிலே தகப்பனுர் ஹிந்து மார்க்கத்தி லேயே நிலைத்திருந்திருப்பாரானுல் பூர்வீகத்தில் தன்னைப்போல் மாடுமேய்த்த கம்பர்போல் இவர் ஸ்ரீ ராமரையே தியானித்து போற்றி பாடி ஹிந்துவீர கவியாக, அல்லது தன் காலத்திலே உடன் பிரசித்திபெற்ற தியாகராஜா தெலுங்கு சங்கீத வித் வானைப்போல் தோன்றியிருப்பார். ஆனுல் கடவுளுடைய சித் தம் வேறுக இருந்தபடியினுலே வேதநாயகம் கிறிஸ்து மார்க் கத்தைத் தழுவி அதிலே கத்தோலிக் சபையில் தரித்திராமல் சீர்திருத்தல் அடைந்த சுவிசேஷ மார்க்கத்தை (Protestant Christianity) அடைந்து இயேசு பெருமானையே தியானித்து கிறிஸ்து (protestant) மார்க்கத்துக்குகந்த நூல்களை கவியி லும் வசன நடையிலும் இயற்ற வரம் பெற்றுர்.

C. F. சுவார்ச்சையர் மரித்தபோது வேதநாயகத்திற்குச் சரியான வாலிபம். ஆனுல் 21 வயதில், அவருடைய சொந்த

அத்தை மகள் வியாகம்மாள் என்ற பெண்ணை அவருடைய தகப்பனார் தேவசகாயம் பிள்ளையும் ஐயருமாக நியமித்து, சங். சேனிக்கையரைக்கொண்டு (Rev. J. D. Jaenicke) விவாகம் முடிப்பித்தார்கள். அந்தப்பெண் கர்ப்பவதியாயிருந்து மறு வருஷம் மரித்துப்போனாள். ஆகையால் 22 வயதில் வேத நாயகம் தாரத்தை இழந்து துக்க சாகரத்தில் மூழ்கினார். அவருக்கு 24 வயதானபோது தன்னை வளர்த்து மனுவாக்கின சுவார்ச்சையரும் மறுமைக்குள் சென்ற பிறகு இவருக்கு இருந்த சோகமும், சஞ்சலமும் அளவுக்கு மிஞ்சினதா யிருந் திருக்கவேண்டும் என்பது வாசிப்போருக்கு புலப்படும். 1799-ம் வருஷம் அதாவது சுவார்ச்சு ஐயர் மரித்த அடுத்த வருஷத்தில் இவர் தந்தையும் கொழும்பிலே (Colombo, Ceylon) தேக வியோகமானார். தன் தகப்பனார் மரணத்தின் பேரில் வேதநாயக சாஸ்திரி புலம்பி ஐம்பது விருத்தம் பாடினா ராம். சுவார்ச்சு ஐயர் பேரில் சரமகவிகள் ஒன்றும் பாடின தாகத் தெரியவில்லை.

ஆனால் தன் வளர்ப்பு தகப்பன்மேல் அதிக விசுவாச மும் பக்தியும் இருந்ததென்பது, அவர் இயற்றிய நூல்களில் சுவார்ச்சையருடைய நாமத்தை ஸ்துதிகரமாக போற்றி யிருப்பதினால் விளங்கும். உதாரணமாக:—

1. 'கலியாண வாழ்த்துதல்' (பக்கம். 36, 37.)

"வேதியர் முனிவர்வாழ்க விண்ணுளோர் சங்கம்வாழ்க
நீதிமன்னர்கள் வாழ்க நேமியாதிர்தம் வாழ்க
மாதவத்தந்தை தேவ சகாயனுமரபும் வாழ்கப்
போதகன் சுவார்ச்சு தஞ்சைப் புனிதனும் வாழிதானே.

மங்களம் நித்தியசுப மங்களஞ் செய
மாதவன் சுவார்ச்சையரும் வாழ்கவே."

2. (i) 17-ம் "ஜெபமாலை" பக்கம் 83.

உபவாசநாளின் தேவாரம், 10-ம் அடி.

" சுவார்ச்சையர் சபைகள் நாங்கள்
மங்கியே துயரத்தாலே
வாடினோம் இரக்கங்காணோந்
தங்களைத் தங்கள்வீட்டைத்
தங்கள்பிள் ளைகளையன்றி
எங்களை நினைப்பாரில்லை
எம்மையா ளேசுநாதா "

(ii) 26-ம் "ஜெபமாலை" பக்கம் 163.

திருச்செயல் 11-ம் அடி.

" இருளார்ந்தஞ்தியா விற்கிறிஸ்தவர்குழாம்
எவ்வாற துண்டாயின.
ஈரோப்புத்துரைகளித் தேயத்தை ஆள்வதற்
கென்னவித மாய்முளைத்தார்.
தெருளார்ந்த சுவார்ச்சையர் தஞ்சையிற்சபைகளைச்
சேர்த்ததா ருடையசித்தந்
திருநெல்லைச் சிவபத்தன் யேசுவின்சீடனைய்ச்
செபமாலை பாடவிலையோ மூ"

3. "பரமநீதிப்புராணம்" (30-ம் பக்கம்)

தஞ்சை சபையின் வளம்.

" பக்கிஷக்கவிவாண ரண்ணாவிமார்களும்
பாட்டகர்களின் பெருமையும்
பரிசுத்த சபையுஞ் சகோதரக்கூட்டமும்
பத்தியும் புத்தியுமுள்ள
சத்திய சுவிசேடசபை தஞ்சையல்லாதிலை
சற்குரு சுவார்ச்சையரே. மூ "

4. " ஞானக்கும்மி " (10-ம் பக்கம் 70-ம் அடி)

" தஞ்சைச் சுவார்ச்சையர் வாழ்கவே வேத
நாயக சாஸ்திரி வாழ்கவே
விஞ்சைக் குருக்களுஞ் செஞ்சொற் சுவிசேட
வேதச் சபைகளும் வாழ்கவே"

5. " ஞானவுலா " (40-ம் பக்கம்)

" தந்து மிகுந்த தயவினுலென்றனுட
பெந்துகட்குங்கூடப் பெருமை செய்தா—யென்றனுக்கு
நெல்லைப்பதி வேதநாயகனென்றே நிருபித்
தல்லவனைத்து மகற்றிவிட்டாய்—கல்விநூல்
பாடவரந்தந்தாய் பல்லூழிகால மூனை
நாட வரந்தந்தாய் நலந்தந்தாய்—நீடிவளர்
தஞ்சை சுவார்ச்சையர் தன் சீடனென்றெவர்க்கு
மிஞ்சக்கதித் தெனக்கு மேன்மை செய்தாய்-தஞ்சையினில்
ஆயிரத் தெண்ணூற்றிருப தாண்டிவிந்த ஞானவுலா
பாயிரத்திற் பாடப்பலன் தந்தாய்—நாயகமே "

6. " ஆரணதிந்தம் " (2-ம் பக்கம் 8-ம் அடி)

சீயோன் மகத்துவம்.

" மஞ்சுதீபங்களேந்தி அஞ்சல் செயகனிமார்
மாப்பிள்ளைக் கெதிர்கொண்டு வாரபோது,
கொஞ்சிகுலாவியாடிச் செஞ்சொற் கீதங்கள்பாடி
குரு சுவார்ச்சையருடன் வாரபோது
தஞ்சைத்திருச் சபைகள் நெஞ்சத்திசைந்து வேத
சாஸ்திரியாரோ டெழுந்து வாரபோது
மிஞ்சப்பிரபலத்தப ரஞ்சிப்பிரகாசமண
வீட்டி லெனக்கு வாய்ப்ப தாட்டுக்குட்டியே "

மேலே பெயர்த்தெழுதின வரிகளினுல் ஏற்படும் விஷயம் என்னவென்றுல் வேதநாயக சாஸ்திரி தன்னை சங். C. F. சுவார்ச்சையருடைய சிஷனென்று கொண்டாடி அவர் தனக்கு

செய்துவித்த கல்வியழகை ஒருக்காலும் மறக்கவில்லை யென் பதே. தான் 90 வயது கிழவனாகி மரிக்கும்பரியந்தம் சுவார்ச்சையரின் ஞாபகம் குன்றாமல் அவரை துதித்துக் கொண்டிருந்தார்.

சுவார்ச்சையர் மரித்த நாளில் வேதநாயக உபாத்தியாய ருக்கு 'அடிவயிற்றில் இடி விழுந்த மாதிரி' இருந்திருக்க வேண்டும். தன்னோடு படித்த சரபோஜி இளவரசனும் சுவார்ச்சையர் மரணபடுக்கை யருகினில் வந்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டதாகச் சரித்திரக்காரர் எழுதியிருக்கின்றார்கள். வேதநாயக உபாத்தியாயரையும் அவரைப்போல் தான் பிரியமாய் வளர்த்த மற்ற வாலிபர்களை யும் சுவார்ச்சு ஐயர் கூப்பிட்டு ஆசீர்வதித்திருப்பார். தஞ்சாவூர் சபையார் விசனித்ததைக்குறித்து Jesse page அவர் எழுதிய "Schwartz of Tanjore" என்ற புஸ்தகத்தில் (6) பின்வரு மாறு கூறியுள்ளார்.

"It was intended to sing a hymn as the funeral made its way, but the lamentations and wailing of the great crowd of poor natives made this impossible. The solemn burial service was performed by Mr. Jaenicke, and when this was over and the Europeans had retired, the natives who filled the sacred building remained praying and singing hymns."

இந்த சுதேசிகளின் கும்பலில் வேதநாயக உபாத்தி யாயர் ஒருவராக இருந்திருக்கவேண்டும். கிறிஸ்தியான் பிரதரிக் சுவார்ச்சையருடைய விசுவாசத்தினாலும் முயற்சியினாலும் உண்டான தஞ்சாவூர் சபை, அவருக்கு விசேஷமான கிரீடமாக விருக்க அதை 'ஓர் எளிய சுதேசிகளின் கும்பல்' என்று Jesse page ஆசிரியர் அழைத்தது சுவார்ச்சு ஐயரை


The Rajah's Palace
The large Pagoda.
Christian Frederic Schwartz
Born the 26. Oct. 1726 at Sonnenburg, died the 13 Febr. 1798 at Tanjore
All Kings shall fall down before him; all nations shall serve him. Ps. 72. 11.
Schwartz' monument in Christ's Church.
Wedanayagum Shastry
Born the 7. Sept. 1774 In Tinnevelly, died the 24. Jany. 1864 at Tanjore
Lutheran Church.
Girl-school.
Lutheran Missionhouse
MADRAS

அவமதித்ததுமன்றி தன்னுடைய ஆராய்ச்சிக் குறைவை காண்பித்ததுமாகின்றது. அப்படியே வேதநாயக சாஸ்திரியாரைப்பற்றி ஒருவரி எழுதாமற்போனதும். ஸ்ரீ எ. ஞானேந்திரம் அவர்கள் எனக்கு அவரிடமிருந்த ஒரு கற்சித்திரத்தை (Lithograph) அனுப்பி பின் வருமாறு எழுதியுளர். "சங். நோவா ஞானதிக்க சாஸ்திரியார் 1778-ம் வருஷம் முதல் சங். வேதநாயக சாஸ்திரியாரின் சில விசேஷித்த சம்பவங்களைச் சுருக்கமாய் எழுதி ஜெர்மன் தேசத்து சங்கத்தாருக்கு Rev. கிரம்மர் ஐயர் மூலமாக 1862-ம்* வருஷத்தில் அனுப்ப அவர் அதை அங்கீகரித்து ஆங்கிலேய பாஷையில் மொழிபெயர்த்து படத்தையும் அத்துடன் அச்சிற் பதிப்பித்தார்கள். அந்த பிரதியை இத்தோடு அனுப்பியிருக்கிறேன்." படத்தை 20-ம் பக்கத்தில் பார்க்கலாம். பிரதி கீழ்வருமாறு உளது:

## TANJORE.

### (II Series, No. 3.)

"Yea, all kings shall fall down before him;
All nations shall serve him."—Psalm 72 : 11.)

Tanjore, the old Royal Indian City, with its 50,000 inhabitants, is well and pleasantly situated on the banks of the Cauveri River, being since 1861 also favoured with a railway station. It boasts of two famous old buildings which tower high above all the rest of its houses. We

* வேதநாயக சாஸ்திரியார் மரித்தது 1864-ம் வருஷம். ஆகவே, அவர் மரிப்பதற்கு இரண்டு வருஷத்திற்கு முன் அவர் குமாரர் நோ. ஞானதிக்கம் தகப்பனர் சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுதி அனுப்பியிருக்கிறார். வேதநாயக சாஸ்திரியாரும் இதைப் பார்வையிட்டிருப்பார்கள்.

have them represented in the upper part of our picture taken from photographs. To the left we see the royal palace, an old fashioned showy structure, a complex of several houses with a spacious court-yard. Here Dr. Graul when visiting Tanjore in 1850 saw 20 to 30 enormous elephants decked out with coloured saddles, all belonging to the glory of the Tanjore Royalty, which, however, has since ceased to exist. To the right of our picture we see the great pagoda, close to the royal palace, a masterpiece of Indian architecture. It is surrounded by a row of pillars whose 120 arches contain as many idols of different sizes. In the centre of the thus enclosed temple-yard there is couched on a raised part of the ground "the Holy Bull", a mighty block of black granite thirteen yards long and six yards high, most elaborately carved; next to it rises the magnificent tower, which in 14 gradations reaches the height of almost 100 feet; it is covered all over with works of sculpture, and unlike other temples—conceals in its gloomy interior the very "sanctuary" of the idol, whereas temple-towers in India usually rise over the porches of temples. The whole is consecrated to Siva with his collar of skulls, the God of destruction chiefly worshipped in the south of India. Thus we see, the fine Royal City of Tanjore is a heathen town, and its inhabitants are almost all given to idolatry. But do we not read in the 72nd Psalm, what Solomon says of the great King of Peace, who will finally reign over all the world, that "all kings shall fall down before him and all the heathens serve him"? Therefore, listen, how our Lord Jesus Christ has begun to make his glory known in the royal city of Tanjore.

The man who preached here the pure gospel of our Saviour with peculiar effect was the Lutheran Missionary Christian Frederic Schwartz whose likeness we have in one

of the two portraits of our picture, drawn as it were on two medallions. He commenced his missionary labours in India in the year 1749 and worked in Tanjore from 1772 till 1798 with such ability and faithfulness, that his name is universally recorded among the greatest of missionaries and remembered with the most affectionate respect in all the churches of India. He often used to preach and to teach even in the king's palace, and with what success the splendid monument can tell us, which the grateful king erected to the memory of his teacher and which we see represented in the middle of our picture. It represents Schwartz on his death-bed; at his head stands Gericke, the missionary, in his surplice; at his feet stand four orphan boys mourning, and stooping over him we see King Serfogee, Schwartz's pupil, with two of his ministers. The other portrait in our picture is that of the Poet Vedanayagam, another pupil of Schwartz; and this reminds us of the fact, that the fruits of Schwartz's labours reach down to our very times. Vedanaigam had the special gift of poetry to such a degree, that his songs are famous all over the south of India both among Christians and heathens, and when he died at January 24th, 1864, the number of the writings he bequeathed to his countrymen amounted to more than a hundred—all written for the furtherance of Christ's cause. It is true he and the whole congregation at Tanjore, together with all the charitable institutions left by Schwartz, had since been transferred from the liberal patronage of the Christian Knowledge Society to the absolute proprietorship of the Propagation Society, a change which involved a transfer from the Evangelical Lutheran Church to the Anglican Episcopal. But the doctrines which are taught in Vedanaigam's writings and the lively interest he himself took in the revival of

the Lutheran Mission in India plainly show that his heart kept true to the Lutheran Doctrines, as he had received them from Father Schwartz."

தாம் பரகதியடையுமுன் C. F. சுவார்ச்சு ஐயர் வாலிபனும் சமுசாரத்தை இழந்தவனுமான வேதநாயக உபாத்தியாயரை தன் சிநேகிதனும் உடன் ஊழியக்காரனுமாயிருந்த யோவான் காஸ்பர் கோலப்பு ஐயரிடம் ஒப்புக்கொடுத்தார் என்று தெரிகிறது. இந்த ஐயர் 1801-ம் ௵ வேதநாயக உபாத்தியாயருக்கு அவருடைய 27-வது வயதில் அவருடைய அம்மான் மகள் மிக்கேல் முத்தம்மாள் என்ற பெண்ணை இரண்டாவது விவாகம் செய்துவித்தார். இந்த அம்மாளும் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள். தமிழ் நூல்களை நன்கு கற்றறிந்தவர்கள். இவர்களாலும் புத்திர சந்தானம் இல்லாமல் போனது.

---

## அத்தியாயம். 5.

---

### கிறிஸ்தவ சபையார் கொடுத்த பட்டபெயர்களும் அந்தந்த சபையாரால் நடந்த மரியாதையும்.

வேதநாயக சாஸ்திரியார் கவிபாட ஆரம்பித்தது 1794-ம் ௵. இதிலிருந்து 1808-ம் ௵த்திற்குள் 52 நூல்களை இயற்றினதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 34 வயதாகிறபோது இவருடைய வரம் வெளிப்பட்டு தம் சொந்த பாஷைக்காரரால் நாளடைவில் நல் மதிப்பு பெற்று அங்கிகாரம் செய்யப்பட்டது. இதற்கு அடையாளமும் ஆதாரமும் என்ன என்று கேட்டால் 1808-ம் ௵-ல் வேதநாயகம் அண்ணாவியாருக்கு தஞ்சை சபையார் கூடி

"வேதாகம சிரோமணி மகா ஞானக் கவிசக்ரவர்த்தியார்" என்ற சிரேஷ்டமான பட்டத்தை சூட்டினதே.* அதை கீழே அச்சிடப்பட்ட நற்சாட்சி பத்திரத்தில் பார்க்கலாம்.

TANJORE.
*29th February* 1808.

We the undersigned Elders and Members of the Protestant Congregation of Tanjore do bear, by this following, good Testimony of Devasagaya Vedanayagam Pillai.

As the true religion of God Almighty has illuminated this part of India amongst a great many Christians who have been converted from idolatry, the said Devasagaya Vedanayagam Pillai of Vellala Caste, native of Tinnevelly, in the District of Madura was called to Tanjore with his whole family converted and brought up by the blessed hand of the most renowned and pious English Missionary, the late Reverend and Venerable Father, Mr. Christian Frederic Swartz and now is under the charge of the kind and worthy father The Rev. Mr. John Caspar Kohlhoff who succeeded and is almost equal to the late Reverend Mr. Swartz. This Devasagaya Vedanayagam Pillai has composed many divine songs to the Praise and Glory of God which we heard him repeat many times and which were highly approved of and applauded by us and we pray that the Lord may graciously be pleased to disseminate those divine songs everywhere and make them useful to us and our offspring and all other Congregations

* In those days there were no universities to recognise merit by giving honorary degrees. The Madura Tamil Sangam which discharged this duty to tamil culture and learning had probably become defunct. The public therefore were justified in taking this function on themselves.

He has besides well searched the Old and New Testaments and according to it has compiled 52 books containing the system of Christian doctrine sweetly and metrically. We therefore jointly and with exceeding gladness testify that he is a well learned person and better versed than all whom we have known since the spreading of the saving Gospel in this part of India to this long period; that he ought to be esteemed as a more celebrated person than all worldly poets, that he is the ornament of our Congregation, that the said 52 Religious books and a complete and most advantageous Arithmetic compiled by him are most useful books for the school and for the propagation of the Gospel of Christ, and that the great pains and labours which he has taken in composing all these books are deserving praise in our opinion and by this attestation we are in hope that as poetical pieces of the said person were approved by us, so they will be approved without doubt in all countries by the learned scholars and great gentlemen who will hear them repeated for the future. Therefore we joyfully denominated him newly as "Veda Siromony, Maha Njana Cavi Sackiravarthiar, *i. e.*, the Principal Evangelical Jewell, the monarch of the divine poets, honoured him with the first seat of place in our company and with first civilities in treating him with betel-nuts. etc., etc., and have favoured him with the honorable marks due to his superlative knowledge and given him the paper of recommendation with our signature affixed thereto with a hope that the well versed gentlemen after perusing it will have the favour to shew that respect and complaisance which we have done to him.

( Signed )

(1) The late Rev. Mr. Swartz Paukianada Pillay, Interpretor of Mayavaram Division.

(2) William Pearson, son of the late Captain Pearson.

(3) Samuel Pillay, Member of the Court of Justice of His Excellency Maha Rajah.

(4) Rayappa Pillay, son of late Sandoshee Pillay, Post Office Writer and Elder of the Tanjore Protestant Congregation.

(5) Njanapragasam Appu Pillay of Bengal College.

(6) Malayappa Pillay, late Dubash to Lieutenant Colonel Innis.

(7) Paukianada, Catechist.

(8) Seya Vedanayagam, Catechist.

(9) Abisheganada, Catechist.

(10) Arulappa, Catechist.

(11) David Pillay, English Schoolmaster, son of Sathianathan, * Native Priest.

(12) Samuel, Schoolmaster, Palamcottah.

(13) Arumanayagam, Catechist of Palamcottah.

(14) Vedamuthu, Catechist.

(15) Menjanam, Catechist.

(16) Daniel, Schoolmaster, son of the late Devasagayam.

(17) Paukianada, Catechist, son of the late Devasagayam.

(18) Njanamuthu, Schoolmaster, son-in-law to Sathianada, Native Priest.

---

* இவர் பிரசித்திபெற்ற சத்தியநாத உபதேசியாரின் மகன் என்று தோன்றுகிறது. "The Centenary History of the C M. S. in Tinnevelly", by Paul Appasamy,-22-ம் பக்கம் பார்க்க. C. F. சுவார்ச்சு ஐயருடைய மற்றொரு சிஷ்ஞன, சத்தியநாத உபதேசியாரைப்பற்றி ஞா. சாமுவேல் ஐயர் எழுதின "தரங்கை மிசியோன் சரித்திரம்' என்ற புஸ்தகத்தில் வாசிக்கலாம்.

(19) Muthoo Pillay, Elder of the Tanjore Protestant Congregation.

(20) Njanapragasam Pillay, son of Muthoo Pillay.

(21) Devasagayam, Catechist, son of the late Paramanandam, Elder.

(22) Royappa Pillay, son of the late Savarimuthoo, Catechist.

(23) Thomas, Schoolmaster, grandson to the late Njanaprasadam, Catechist.

(24) Njanapragasam Pillay, son of the late Sathianada Pillay, Mission Doctor and Elder.

(25) Njanamuthu, Catechist, son of Arulappa, Catechist.

(26) Sinnappa Pillay, Mission Doctor.

(27) Devasagayam, Catechist of Tripatur.

(28) Devasagayam, Catechist, son-in-law to Adeikalam, Catechist.

(29) Njanayudam, Catechist, son of the late Vedamuthu Pillay and Elder.

(30) Njanapragasam, Schoolmaster, son of Sinnadu Pillay, late Padakaner of Tanjore Country.

(31) Nallathamby, Schoolmaster to the Female Asylam.

(32) Samuel, Schoolmaster, son of Njanapragasam, Catechist.

(33) Tavasiappa Pillay, Mission Writer.

(34) Samuel Pillay, Superintendent of the Printing Press of His Excellency Maha Rajah.

(35) Devasagayam Pillay, Writer in the Court of Justice of His Excellency Maha Rajah.

(36) Arulappa Pillay, Servant to Rev. Mr. Horst.

(37) Suvisashamuthoo Pillay, Servant to the
Rev. Kohlhoff.

(38) Anthonimuthoo Pillay, Servant to the
Rev. Mr. Pohle.

(39) David Pillay.

(40) Tayirium Pillay, Dubash to Mr. Edward Borgen.

(41) Devasagayam Samuel Pillay.

(42) Abisheganada Pillay.

(43) Sathianada Pillai, son of the said Abisheganada Pillay.

(44) Devasagayam Pillay, son of Njanapragasam, Catechist.

(45) Njanasoranam Pillay, son of the late Njanaprasahda, Catechist,

(46) Njanapragasam Pillay of Tatchenoor.

(47) Tyirium Pillay, Mission Peon.

(48) Sinnappa Pillay of Trichinopoly.

(49) Njanamuthoo, Servant to the Rev. Mr. Kohloff.

(50) Nallathamby, Catechist.

**மேற்கண்ட நற்சாட்சி பத்திரம் தமிழில்.**

**பரம ஜெயம்.**

*தஞ்சை நகரில் வாழ்கின்ற சுவிசேஷ சபையாரும் மூப்பானவர்களுமாகிய இதற்கடியில் கையொப்பம் வைத்திருக்கிற நாங்கள், தேவசகாயம் வேதநாயகம் பிள்ளையவர்களுக்கு இதைக் கொண்டு கொடுத்த நற்சாட்சி என்னவென்றால் :—*

*சருவ வல்லமையுள்ள கர்த்தரின் மெய்யான சத்திய வேதம், இந்த சிந்து தேசத்தில் விளக்கமானதினால், அவபக்தியின் மார்க்கத்தை விட்டு குருமார்களாலே குணப்படுதலுக்கு*

திருப்பப்பட்ட ஏராளமான கிறிஸ்தவர்களில், பரகதியடைந்த மகா கீர்த்தியும் உத்தம தேவதா பத்தியும் பொருந்திய, சங்கை யுற்ற தகப்பனும் இங்கிலீஷ் மிசியோனரியுமாகிய, கிறிஸ்தி யான் பிரதரிக் சுவார்ச்சு அய்யர்வர்களால், மதுரை தேச மாகிய திருநெல்வேலியிலிருந்து குடும்பத்துடன் நம் மார்க்கத் திலழைக்கப்பட்டு, அவரினுசீர்வாத கரத்தினுல் வளர்க்கப்பட்ட வரும், அப்படியே இன்னுள்களில் யாவிலும் அவருக்குப் போதுமான சமானமாயவர் பட்டத்திலிருக்கிற பட்சமுள்ள எங்களினல்ல தகப்பனுராகிய சங்கை போர்ந்த யோவான் காஸ்ப்பார் கொலோப்பு ஐயரவர்கள் ஆதரவுக்குள்ளிருக்குமேலா கச் சொல்லப்பட்ட கங்கைகுல தேவசகாய வேதநாயகம்பிள்ளை யவர்கள், கர்த்தரின் புகழ்ச்சிக்கென்றும் மகிமைக்கென்றும் பாடின, எல்லாப் பாடல்களையும் நெடுநாளாய்க் கேட்டங்கி காரம் பண்ணிக்கொண்டு அதுகள் எங்களுக்கு மெங்கள் பிள்ளை களுக்கு மற்ற எல்லாச் சபைகளுக்கு முதவியாகவும் பிரபல மாகவும் கருணைபுரிந்து, வருத்திக்கப் பண்ணக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேம்.

இதுவுமல்லா மலிவர் பழையேற்பாடு, புதேற்பாடுகளை நன்றுயாராய்ந்து, அதுகளைக்கொண்டு, மகா அலங்காரமு மதுரமான பாடல்கள் பொருந்திய ஐம்பத்திரண்டு நூல்களை யுண்டுபண்ணினதால் சத்தியமான சுவிசேஷஞ் சிந்துதேசத்தில் பரம்பின இதுவரையி லெழும்பின யாவரிலு மேன்பாடான விற்பன்னரும் எல்லா வுலகக் கவிராயர்களைவிட சிரேஷ்டமா யெண்ணப்படத் தக்கவருமாயிருக்கிறது மல்லாமல், எங்கள் சபைக்கோர் ஆபரணம் போலிருக்கிறுரென்றும், அப்படியே அவருடைய ஐம்பத்திரண்டு நூல்களு மிகுந்த பிரயோசனமுங் குறையற்றதுமான கணக்காகமுங் கிறிஸ்துவின் சுவிசேஷ பிரபலத்துக்கு சகல பள்ளிக்கூடங்களுக்கு முதவியான விசே ஷித்த எற்றினமாயிருக்கிறதென்றும், இதுகளை யுண்டு

பண்ணுகிறதினாலே இவருக்கிருந்த மகா கருத்தான பிரயாசமும் வருத்தமும், எங்களெல்லாருடைய எண்ணத்திலேயும் புகழப்படத்தக்கதுமாயிருக்கிறதென்றும், நாங்கள் மிகுந்த சந்தோஷத்துடனேருமனப்பட்டுத் திடசாட்சியா யறிவிக்கிறோம்.

இந்த உண்மையான வார்த்தையின்படியே சொல்லப்பட்டவருடைய பாடல்களை யெத்தேசத்திலேயும் இனி கேட்கப் போகிற விற்பன்னரும், பெரியோர்களு மெங்களைப் போலெச் சந்தேகமுமன்றி, அங்கிகரித்தேற்றுக்கொண்டு, நாங்களவருக்குச் செய்த சங்கையையு முபசாரணையையுஞ் செய்வார்களென்கிற நம்பிக்கையினாலே அவருக்கு வேதாகம சிரோமணி மகாஞானக் கவிச்சக்கரவர்த்தியார் என்ற புது நாமமுந்தரித்து, இவருடைய மேலான விவேகத்துக்குத் தகுமானதாயிருக்கிற, பிரதான ஆசனமு முதல் மரியாதையுஞ் சங்கைக்கடுத்த அடையாளங்களையுங் கொடுத்தெங்கள் கையொப்பமும் வைத்துக்கொடுத்தோம்.

தஞ்சை நகரம் சுவிசேஷ சபையில்
1808-ஆ மாசி-மீ 20உ.

வேதநாயக அண்ணாவியாருக்கு 54 வயதிலேயே கீர்த்தி உண்டாகி கிறிஸ்தவ சபையோருடைய நல்மதிப்பையும் பெற்றார் என்பதை மேற்கூறிய சம்பவங்களால் அறிந்தோம். ஒரு தீர்க்கதரிசிக்கு சாதாரணமாக தன் சொந்த ஊரில் அங்கீகாரம் கிடைப்பது அரிது. ஆனாலும் தான் வளர்ந்த ஊராகிய தஞ்சாவூரில் இவருக்கு நற்சாட்சி கிடைத்தது வியக்கத்தக்கதே.

அந்த வருஷத்திலேயே மார்ச்சு மாதத்தில் தரங்கம்பாடி சபையார் வேதாகம சிரோமணி மகாஞானக் கவிச்சக்கரவர்த்தியார் வேதநாயகத்திற்கு, சதுர்வைத்து, ஞான நொண்டி நாட

கம் அரங்கேற்றக் கேட்டு சுவிசேட கவிராயர் என்று நாமந் தரித்து நற்சாட்சி நிருபமு மெழுதிக்கொடுத்து, பல்லக்கி லேற்றி பட்டணப்பிரவேசம் பண்ணி வைத்தார்கள். கொடுத்த நற்சாட்சி பத்திரம் பின் வருமாறு.

TRANQUEBAR,
15*th March*, 1808.

We the undersigned Elders and Members of the Protestant Congregation of Tranquebar do give the following good record of Vedanayagam Annahviar who is come here from Tanjore.

As the true light of God has illuminated this part of India, which was involved in darkness, many souls have been brought into the bosom of the Christian Church, but as the said Vedanayagam Annahviar, a Christian who was converted into Christianity by the late Rev. Mr. Swartz and is now under the charge of the Reverend Mr. Kohlhoff and is come to us now; we in order to ascertain his abilities, assembled in a place and heard him repeat his composition wherein we found that most part of them are suitable instructions for the propagation of the Christian Religion, and that he has taken great pains in composing them in witness whereof, we, hoping that the Poetical pieces composed by the above said person, will not be disapproved by the intelligent persons who will hear them for the future, as well as by those that have heard them sung heretofore, do herewith testify, that we have not had the satisfactory pleasure of meeting with a person so well qualified for composing Divine songs since the spreading of the Gospel until this period.

Hence we denominated him Suvisesha Cave Royer, *i. e.*, Evangelical Poet, received and honored him joyfully,

favoured him with the Honourable Marks due to his knowledge, and gave him this paper with our signatures affixed thereto.

(Signed)

(1) John Daniel Pillay, King of Denmark's Head Tolk.*
(2) Devasagayam Pillay, King of Denmark's Head Tolk.
(3) Arulappa Pillay, King of Denmark's Malabar Judge.
(4) Solomon Pillay, King of Denmark's Malabar Judge.
(5) Christian Tiogo, Elder of the Congregation.
(6) Kurubadam Pillay, Elder of the Congregation.
(7) Swamidasa, Catechist.
(8) Rayappen Daniel Pillay, Writer to the Company of Pohold.
(9) Christian Pillay.
(10) Arulappa, Schoolmaster.
(11) Rayappa, Schoolmaster.
(12) Tiyagappa Pillay.
(13) Peter Manic Pillay.
(14) Daniel Tiogo.
(15) Devasagayam, Schoolmaster, son of late Savariraya, Catechist.

&c., &c., &c., &c.

---

* "ஞானாபரணப் பெட்டி", "பாடுபட்ட தியானம்" "ஞான முசிப்பாறும் மணிநேரம்" முதலிய அருமையான நூல்களை மொழி பெயர்த்த பிரசித்தி பெற்ற தோல்கு தானியேல் பிள்ளை (Christian Daniyel Pillai)யின் இனத்தாராய் இருக்கலாம் தோல்கு தானியேல் பிள்ளை 1802-ஷ மரித்தார். தோல்கு என்பது பாஷையை மொழி பெயர்ப்பவர் (Interpreter) என்ற அர்த்தம் உள்ள பதம். தரங்கை மிசியோன் சரித்திரம் 1706–1906 ஞா. சாமுவேல் ஐயர் இயற்றியது—37–39-ம் பக்கங்கள் பார்க்க. (3)

மேற்கூறிய இரண்டு நகரங்களிலும் தன் கவி பாடும் வரம் அடைந்த புகழ்ச்சியினால் சென்னை ராஜதானிக்கு தலை நகரமாகிய சென்னப்பட்டினத்திற்கு சென்று அங்கேயுள்ள கிறிஸ்து சபையாரைக் காணவும் அவர்களுடைய நல்மதிப்பை பெறவும் வேதநாயக கவிச்சக்கிரவர்த்திக்கு வாஞ்சையுண்டானது. ஆகையால் அடுத்த வருஷம் (1809) செப்டம்பர் மாதத்தில் அவர் அங்கு சென்று வெப்பேரி தமிழ் கிறிஸ்து சமய சபையை சந்தித்ததாக அவருடைய சரித்திரத்தில் வாசிக்கிறோம். இருப்புப்பாதை இல்லாத அக்காலத்தில் வேதநாயகம் கவிச்சக்கரவர்த்தி வடக்கே அவ்வளவு தூரம் பிரயாணமாகபோய் ஜெயமும் புகழுமடைந்து தஞ்சாவூர் மீண்டது வீரமானசெயல் என்றே நாம் மதிக்கவேண்டும். கால்நடையாகவும், மாட்டுவண்டியிலும் அவர் தன் பாடகர்களுடன் சென்றார். இந்த சம்பவத்தை "சென்னப்பட்டணப் பிரவேசம்" அல்லது "பட்டணம் நொண்டி" என்ற பிரசித்தி பெற்ற பாடலால் அறிந்துகொள்ளலாம். மேலும் அந்த பாடலின் முகவுரை வேதநாயகம் கவிராயருக்கு நடந்த மரியாதைகளை சுருக்கமாக கூறுகிறது. அதாவது:

"சுவிசேடகவிராய வேதநாயக சிரோமணியார் சென்னப் பட்டணத்துக்கு போனபோது, அவ்விடத்து சபைக்கு முகாமையாயிருந்த, தஞ்சை அருளப்பபுத்திர முத்துசாமியா பிள்ளை சதுர்க்கூடி, 'பெத்தலேங் குறவஞ்சி' அறங்கேற்றக் கேட்டு சபையின் நாமத்தினாலே, அறுபது விராகன் விலையுள்ள நேர்த்தியான ஒரு புது பல்லக்கை* உண்டுபெண்ணி சங்.

---

* ஏககால சங்கீத வித்வானாகை திருவையாற்றில் வசித்த ஸ்ரீ தியாகராஜாவும் சென்னப்பட்டணத்திற்கு அடுத்த கோவூருக்கு யாத்திரையாக போனபொழுது சுந்தரேச முதலியார் ஒரு பல்லக்கையும் ஒரு பையில் 1,000 ரூபாயையும் இனாமாகக் கொடுத்ததாக அவர் சரித்திரத்தில் கூறியிருக்கிறது. (9.)

பெத்சொல்த்தையர் (Rev. Peazold) அவர்கள் உத்தரவின் பேரிலே, அதை வெப்பேரியிலிருக்கும் கர்த்தருடைய தேவாலயத்தின் முகப்பிலே வைத்து, சபையில் பிரதானமான நாற்பது பெயருடைய கையொப்பம் வைத்த நற்சாட்சி நிருபத்தோடேகூட 'ஞானதீபக்கவிராயர்' என்கிற பட்டமுங்கொடுத்து பல்லக்கு வரிசையுங் கொடுத்தார்கள்.

கிறிஸ்தாப்தம் 1809-ம் வருஷம் புரட்டாசி மாதம் 19-ந் தேதி சபைக்கெல்லாம் பெரிய விருந்து பண்ணி, சந்தனம் பூமாலை, தாம்பூல முதலானதுகளுங்கொடுத்து, வேதநாயக சிரோமணியென்ற ஞானதீபக்கவிராயரைப் பசுமை சால்வை முதலிய உயர்ந்த வஸ்திரங்களினால் அலங்கரித்து, சொல்லப் பட்ட பல்லக்கிலேற்றி, தமிழ்ச்சபையார் வலங்கைச் சபையார் (Adidravida Christians) இருதரத்தாரும் முன்னும் பின்னும் சூழ்ந்துவர, ஞானப்பாடல்கள் முழங்க, சகல விருதுகள் வாத்தியங்களோடும் வேப்பேரியைச் சுற்றி பட்டணப் பிரவேசம் பண்ணினார்கள்.

இப்படியாக சென்னப்பட்டணம் சபையார் செய்த பெரிய பட்சத்துக்கு, நன்றியறியுதலாக சபையின் தலைமை முத்துசாமி பிள்ளை பேருக்கு வாமன் என்ற மாணாக்கன் பாடின பாவனையாக, நொண்டித்தரு சந்தமான இப்பாடலை யுண்டாக்கி இதற்கு 'சென்னபட்டணப்பிரவேசம்' எனப் பெயரிட்டது."

சென்னப்பட்டணப் பிரவேசத்தில் நடந்த முக்கியமான சம்பவம் தாம் உண்டாக்கிய பெத்தலேங்குறவஞ்சியை அறங் கேற்றியதே. சுமார் 25 பிராயத்திலே இந்த நாடகத்தை இயற் றினார். சென்னப்பட்டணப் பிரவேசம் செய்த பொழுது வயது 34.

பின் வரும் பாட்டுகள் "பெத்தலேங் குறவஞ்சியில்" அடங்கியுள்ளது.

1. சீர் ஏசுநாதனுக்கு ஜெயமங்களம்—ஆதி
திரியேக நாதனுக்கு சுபமங்களம்.

இது 'மங்களம்' ஆனதால் விசேஷமாக கலியாணங்களில் பாடுகிறார்கள். ஞானக்கீர்த்தனை திரட்டில் இதை C. L. S. சபையார் கூட்டியிருக்கிறார்கள். இதில் அடங்கிய பண்ணும் இசையும் ப்ராஸமும் எளிதில் விஸ்தரிக்க முடியாது. 12-ம் பக்கம் பார்க்க.

2. தேவசுதனை வேண்டடா மிகுந்
தேவபத்தினியில் மூண்டடா
சீவவிளக்கைத் தூண்டடா மாயச்
செகத்தைக்கடந்து தாண்டடா

வானவரங்கள் வாங்கடா சால்மோன்
மண்டபத்திலே தூங்கடா
ஈனமனத்தை நீங்கடா செபத்
திடைவிடாமலே ஓங்கடா—

மானுவேலைத் தினம் பணியடா செப
மாலைகொண்டு வந்தங் கணியடா
ஞானமனத்தினைத் தணியடா முழு
ஞாலத்தையும்விடத் துணியடா

X X X

காற்றுள்ளபோதே தூற்றிக்கோ இரு
கண்ணுள்ளபோதே தோற்றிக்கோ
ஊற்றுள்ளபோதே யிறைத்துக்கோ திரு
வுரையுள்ளபோதே நிறைத்துக்கோ—

இதில் 24 சரணங்கள் இருக்கிறது. நல்ல பிராஸம் சில இடங்கள் அமைந்து காதிற்கு இனிமை தரும். பக்கங்கள் 159—163 பார்க்க.

3. வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்
மானுவேலை வாழ்த்துகிறேன்.

இதில் 14 சரணங்கள் அடங்கியிருக்கிறது. கீழே வரும் சரணங்கள் விசேஷமான கருத்துகள் அடங்கியவை. 201—203 பக்கம் பார்க்க.

வேதமறை சொன்னவனை
மேதினியின் முன்னவனை
வாதைவென்ற மன்னவனைத்
தன்னவனை வாழ்த்துகிறேன்.

ஆராயக்கூடாத
அகண்டதிரி யேகதத்துவ
அம்பரனை நம்பரனைத்
தம்பமென வாழ்த்துகிறேன்.

விண்ணூற்றங் கரையானை
விரிபுபெத்தலை வரையானை
யெண்ணூழி காலமெல்லா
மிருப்பனை வாழ்த்துகிறேன்.

4. பொன்னகர் இறைவா புவியெலாம் புரப்பாய்
மன்னர் தங்குலத்தாய் வானவர்க் கிடத்தாய். மு

(பக்கங்கள் 113, 116 பார்க்க.)

5. ஸ்ரீ வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பார்
வண்மையுள்ள சித்தரெல்லாம் அருந்தவங்கள் பிடிப்பார்
ஞானமுடன் முல்லைநிலைத் தலைவர் வந்து தொழுவார்
நட்சேத்திர சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்

தானதர்ம மேழைகட்கு யாவர்களுங் கொடுப்பார்
சண்டாளப்பாவமெலா மண்டாது தடுப்பார்
ஈனமுள்ள பேய்க்கணங்கள் மயங்கியங்கே துடிப்பார்
ஏகன் மனுவானவெல்லை எங்கள் மலையம்மே. மு

இதில் 13 சரணங்கள் இருக்கிறது. பக்கங்கள் 77, 81 பார்க்க.

6. அள்ளியள்ளித் தருமமெல்லாஞ் செய்யுமிந்தக் கையே
அருளான கிருபைநதி பெருகுமிந்தக்கையே
கள்ளமற்று உபகாரம் பெய்யுமிந்தக்கையே
கற்றவர்க்கு பணிவிடைகள் செய்யுமிந்தக்கையே
தெள்ளு தமிழ் பாவலரை பரிசளிக்குங்கையே
சித்திரமாய் புஸ்தகங்கள் வைத்திருக்குங்கையே
வெள்ளைநிலைத் துகிலதனைத் கொய்த்துடுக்குங்கையே
மேலான நன்மையெல்லாம் விளையுமிந்தக்கையே. மு

112-ம் பக்கம் பார்க்க.

தமிழில் பாண்டித்தியம் பெற்றோருக்கு இந்த நாடகம் அதிக இன்பத்தை விளைவிக்கும்.

சென்னப்பட்டணப் பிரவேசத்தில் கொண்டாடப்பட்ட சபை தற்காலம் வேப்பேரியிலிருக்கும் பரிசுத்த பவுல் தேவாலயத்தின் சபையாரல்ல. இந்த கோவில் கட்டப்பட்ட வருஷம் 1858.* 1809-ம் வருஷத்தில் தற்காலம் நிற்கும் ஆங்கிலேய சபையாரின் பரி. மத்தியாவின் (St. Mathias) தேவாலயத்தின் மனையில் வேறொரு கோவில் இருந்தது. இது 1740 வருஷம் பீட்ரஸ் உஸ்கன் என்ற ஓர் ஆர்மேனிய வியாபாரியினால் கட்டப்பட்டது. இந்தக் கோவிலில்தான் ஞானப்பாட்டு

---

* சென்னை அத்தியட்சாதீனத்தின் சதாப்த சரித்திரம் 1835–1935. 29-ம் பக்கம் பார்க்க. (17.)

களையும் வேதாகமத்தையும் மொழிபெயர்த்த பெப்ரிசியுஸ் ஐயர் (J. P. Fabricius) கேரிக் ஐயர் (W. F. Gerike) முதலிய மிஷனரிமார்கள் தமிழ், இங்லீஷ், போர்த்துகீஸ், டச்சு என்னும் பாஷைகளில் முறையே ஆராதனை நடத்திவந்தார்கள். இந்த நாலு பாஷைக்காரருக்கும் கோவில் பொதுவாக விருந்தது. வேதநாயக சாஸ்திரியார் சென்னப்பட்டணம் பிரவேசம் செய்தபொழுது இந்தக் கோவிலுக்கு அதிகாரியாக இருந்தவர் பெத்சொல்த் ஐயர் (C. W. Poezold). சென்னை ராஜதானியின் தலைநகரில் உண்டான வேப்பேரி தமிழ் கிறிஸ்து சமய சபை கேரிக் ஐயர் காலத்திலேயே பெருந்தொகை அடைந்த தென்பதை பௌவர் சாஸ்திரியார் எழுதின "கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம்" (1) என்ற புஸ்தகத்தில் வாசிக்கலாம். 1788 வருஷத்தில் வேப்பேரி சபையில் 17,716 தமிழ் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். ஆகையால் 1809 வருஷத்தில் வேதநாயக சாஸ்திரியார் பெத்தலேங் குறவஞ்சியை விஸ்தரித்த பொழுது ஒரு பெரிய கிறிஸ்தவர்கள் கூட்டம் கூடியிருந்து அவருக்கு சந்தோஷத்தை கொடுத்திருக்கிறார்கள். இருப்புப்பாதையில்லாத அக்காலத்திலே இவர் சென்னைராஜதானியின் தலைநகரஞ் சென்று வேப்பேரி தமிழ் கிறிஸ்து சபையை சந்தித்து நல் மதிப்பு பெற்றது வியக்கத்தக்கது.

இந்த சபையார் வேதநாயக சாஸ்திரியாருக்கு அளித்த நற்சாட்சி பத்திரம் கீழே வருமாறு.

MADRAS,
19*th September*, 1809.

We the undersigned Elders and Members of the protestant congregation of Madras do hereby testify of Vedanayagam Pillay, son of the late Devasagayam Pillay of Tinnevelly country, as follows.

The true Lord God, who will have all men to be saved and to come to the knowledge of the truth, has brought many thousand souls to His true knowledge by His Holy Scriptures in this Coromandal coast, and accordingly has also converted the said Vedanayagam Pillay of the Carala caste of Tinnevelly country by the unwearied endeavours of the late Rev. Mr. Swartz, who left him under the inspection of the Rev. Mr. Kohlhoff his successor, and now has made him to visit this place in these days, for which inestimable favour, praise be unto Him eternally.

We having assembled in a place heard him repeat for about two months many of the Divine songs composed by him to the glory of the great creator and to the help and assistance of the Christian Church. By which we perceived that the **52** books of songs composed by him are all of them well revised according to the grammatical and (poetical) prosodical rules, and that even the most famous poets are not able to find any fault in them, and that such plain and elegant verses cannot be composed by any one unless he understands perfectly the contents of the Old and New Testament.

Hence we also perceived that he is not only worthy of the certificates already given to him by the protestant congregations both of Tanjore and Tranquebar, but also that he is to be esteemed as an ornament to our congregation. As he has taken good deal of trouble in composing the above said 52 book of divine songs in various tunes, we are very much honoured and praised before the pagans, which is a great advantage to our Children.

In order to strengthen this certificate we honoured him with the new Title, viz; 'Njanadeeba Cave Royer' which signifies the poet who is the light of wisdom and

made him sit in a valuable palankeen accompanied with the different sorts of musics according to the malabar custom, carried him through the streets of the town and made him a present of the said palankeen, etc; as a token of respect.

(Signed.)

(1) Muthusamy Pillay, son of the late Arulappa Pillay, Elder of the congregation.

(2) Arulappa Pillay, native of Tranquebar.

(3) Arulappa Pillay, son of the late Royappa Pillay.

(4) Arulappa Pillay, native of Tanjore.

(5) Chinnasamya Pillay, son of Arulappa Pillay, native of Tanjore.

(6) Tiruchelvaraya, poet of Vepery.

(7) Sundara Kavirayer, son of late Sockappa Kavirayer.

(8) Canagaraya, Catechist.

(9) Savarirayen, Catechist.

(10) Vedanayagam, Catechist, son of Malayappa, Clerk at Pullicadoo.

(11) Sockanada, Schoolmaster, son of Coroobada, Catechist.

(12) Aron Muddaly, son of Thomas, Catechist.

(13) Ambrose, Schoolmaster.

(14) Dewaprasadam Mudaliar, son of Paul, Catechist.

(15) Samidasa, Schoolmaster.

(16) Njanapragasam Pillay, son of Seganada Pillay.

(17) Kittery Mudaly, son of Devasagaya Mudaly.

(18) Sokappa Mudaly, son of Marudanayaga Catechist.

(19) Devasagaya Mudaly, son of Devasagaya Mudaly.

(20) Savariraya Pillay, English Schoolmaster.

(21) Philip Pillay, son of Rayappen, Schoolmaster.

(22) Njanappa, Schoolmaster, his brother.

(23) Vedamanickam Pillay, son of Mottupa Pillay, Musician.

(24) Njanabaranam Pillay son of Arulappa Pillay.

(25) Devasagayam Pillay, son of Arulanandam, Catechist.

(26) Abishaganada, Schoolmaster, son of Andrew, Schoolmaster.

(27) Samuel Mudaly son of Malayappa Mudaly.

(28) Jesudasen, Schoolmaster, son of David Pillay.

(29) Rayappa Pillay, son of Malayappa Pillay.

(30) Appavoo, son of Rayappa Pillay.

(31) Njanapragasam Pillay, son of Joanes Pillay.

(32) Muthoo Chetty, son of Sevandapada Chetty.

(33) Nallatamby Pillay, son of Njanamuthoo Pillay,

(34) Devanasem Pillay, son of David, Catechist.

(35) Amurdappa Pillay, son of Royappa Pillay.

(36) Paukiam Pillay, son of Savarirayan of Cuddalore.

(37) Belavandaram Mudaly, son of Vedanadai Mudaly,

(38) Royappa Pillay, son of Swamy Pillay.

(39) Ayasamy Pillay, son of Royappa Pillay.

(40) Devasigamonya Pillay, son of Malayappa Pillay.

" பட்டணம் நொண்டியின் " 53-61 கண்ணிகள் முத்து சாமிபிள்ளை சாஸ்திரியாருக்கு செய்த விருந்தை விஸ்தரிக்கிறது. அவையாவன :

பக்கம் 12.

53. இவ்வித மிரண்டுமாதம் வைபோகமா
யேந்தல் முத்துசாமியுடன் வாழ்ந்திருக்கையில்
செய்விதமாய் விருந்து செய்தார் ஈர்க்குச்சம்பா
சீரகச்சம்பா பிசானம் வாரிமணத்தான்.

54. சித்தரியான் குங்குமச்சம்பா குண்டைச்சம்பா
தில்லைநாயகத்தினுடைய னெல்வகை யெல்லாம்
புத்தியுடன் தெரிந்தெடுத்தே யுச்சிதமாய்ப்
போசனஞ்சமைத்துக் கந்த வாசமணக்க.

55. சுத்தப்பசுவினெய் வார்த்தார் காய்கறிகள்
சுட்ட அடையப்பம் பதினெட்டுவகையுங்
கொத்தவரைக்காயுஞ் சமைத்தார் கத்திரிக்காய்க்
கூட்டுக்கறி பண்ணினதிங் காட்டுதெந்தனை.

56. பாகல்க்காய்ப்பச்சடி செய்தார் பூசணிக்காய்
பச்சைமாங்காயு மெலிமிச்ச மூறுகாய்
நாகரீகவள்ளிக் கிழங்குஞ் சிறுகிழங்கு
நற்கருணை சீனிபிலாவற்க வகையும்.

57. எட்டுவகைப் பொரியல் செய்தார் தோசை வடை
யிட்டெலி பணியங்கொழுக்கட்டை புட்டுகள்
சுட்டதிரசங்களும் வைத்தார் வாழையிலைத்
தொன்னை பதினைந்து பண்ணி முன்னறவைத்து

58. பஞ்சா மூர்தங்கள் படைத்தார் பாயசங்கள்
பால் பழங்கற்கண்டு சீனி தாயங்கொள்ளாமல்
அஞ்சாறு விதமான இங்கிதவங்
காளத்து வாழைக்கனிகள் நீளத்திற்றந்தார்.

59. கொண்டமட்டுக்குஞ்சாப்பிட்டோம் வெள்ளிச்செம்பிற்
கொண்டுவந்து தீர்த்தந்தந்தார் உண்டபிறகு
திண்டுபோட்ட தூளிமெத்தையிற் கைவிளக்கிச்
சித்திரமாய்ப்போயிருந்தார் அத்தருணத்தில்.

60. சந்தனக் குழம்புபனிநீர் பூமாலை
தற்கோலம் வால்மிளகு கற்பூரமுங்
கந்தமிகுஞ் சாதிக்காயுங் கிராம் பேலங்
கட்டிவைத்த தாம்பூலப்பொட்டணங்களும்

61. விந்தையுடனே கொடுத்தார் போட்டுக்கொண்டு
மெத்தையினிலே படுத்து நித்திரை செய்தார்
இந்த விதமறுபது நாள் ஆதமேவா
ளோதன்வனத்திருந்தாப்போற் பேதமன்றியே.

53-ம் கண்ணியினால் இரண்டு மாதம் சென்னபட்டணத்தில் முத்துசாமி பிள்ளையின் விருந்து சாஸ்திரியாருக்கு நடந்த தென்று தெரியவருகிறது. ஆனால் 147-ம் கண்ணியினால் ஆறு மாதம் சென்னபட்டணத்தில் தங்கியிருந்ததாக அறியலாம். மேலும் இவருக்கு லௌகீக கவிகளும் பாடக்கூடிய அரிய வரமும் இருந்திருக்கிறது. தற்காலத்தில் பேசும் படங்களுக்கு (Talkies) ஏற்றதாய் தோன்றுகிறது. தன்னுடைய தெய்வத்தன்மையுள்ள வரத்தை நரஸ்துதிக்கு உபயோகப்படுத்தி தான் சொத்துக்காரனாக வழிபார்க்காமல் ஆண்டவருக்கு மகிமையாகவே பாடல்களையும் நாடகங்களையும் உண்டுபண்ணினது கடவுளின் வழி நடத்துதல் என்று புலப்படும்.

எலிசபெத்தம்மாள் என்ற துரைசானியை இவர் சென்னப்பட்டணத்தில் சந்தித்து பெற்ற வெகுமானத்துக்கு இவர் பாடின கண்ணிகளும் லௌகீக நடையை ஒத்திருக்கிறது.

மேலும் இதில் இங்லீஷ் பதங்களை தமிழாக எழுதி கவியில் இணைத்தது இவருடைய சுய சாமர்த்தியமே.

பக்கம் 15.

75. நின்றுகொண்டு சலாம் பண்ணினேம் வேரியூக்கம்
நீயென்றார் பறஞ்சவுதுவேயம்மா ளென்றேஞ்
சென்றில் மான்கமியரென்றார் வெல்போயிற்றுச்
சிற்றவுனென்றுரொரு ரெற்றினச்சார்மேல்.

76. வாற்றுயூவான்று சிஞ்ஞோரென்றார் ஐவான்று
மாம்யூவர்பேவரென்றேந் தெம்போமென்றார்
கூற்றுமாற்னிங்கென்று சொன்னேம் வென்வில்லியூ
கோவென்றார் நெக்குஸ்று மன்றேயம்மாளென்றேம்.

77. பேமிசுப்போயிற்று யூவென்றார் மாம்காட்
பிளேசியூவென்றேம் விரவலேசேசென்றார்
சீமின்னிசுமிஸ் திரிசம்மாள் அவ்ஐசீ
சிங்கென்றார் மெனிமெனிசங் பாடினேம்.

இதில் இருக்கும் ஆங்கில மொழிகளை ஆங்கிலத்தில் எழுதிப் பார்த்தால் கீழ்வருமாறு காணும்.

75. நின்று கொண்டு சலாம் பண்ணினேம் "where you come"
நீ என்றார். "from south way" அம்மாள் என்றேம்
"gentleman, come here" என்றார் "well poet"
"sit down" என்றார் ஒரு rattan chair மேல்

76. "What do you want, singer" என்றார் "I want"
"Ma'am, your favour" என்றேம். Then போம் என்றார்
"good morning" என்று சொன்னேம் "when will you
go" என்றார். "next month" ஏ அம்மாளென்றேம்.

77. Famous poet you என்றார் Ma'am, God
Bless you என்றோம் விரவலேசே சென்றார்
Symonds Mistress அம்மாள் how I see
sing என்றார் Many many song பாடினோம்.

415 கண்ணியினால் 34 பிராயத்துக்குள்ளே இவர் செய்த நூல்கள் 52 என்று காணலாம்.

பக்கம் 10.

41. மெத்தமெத்தக் காண நினைத்தோம் நீர் செய்த
மேலாமைம் பித்திரண்டு நூலானதே
யெத்திசையும் பரம்பவென்றே தெய்வமுமை
யித்தலத்திலுங் கொணர்ந்து வைத்தா மென்றார்.

வேதநாயக சாஸ்திரியார் தஞ்சாவூர் திரும்பின பிறகு "பேரின்பக்காதல்" என்ற அருமையான நூலை 1813-ல் இயற்றினார். 1815-ம் வருஷம் திருச்சினாப்பள்ளியில் இதை அரங்கேற்றினார். திருச்சினாப்பள்ளி சபையார் சிந்தாமணி வாசலுக்கெதிரே, பட்டணத்தின் ஓர் வீதியிலே பந்தல் போட்டு மரப்பீடமுண்டுபண்ணி, இருவகுப்பு ஜனமும் துரை மார் துரைசாணிகளும், ஒரு மனப்பட்டுக் கூடிவந்திருந்து நாற்பத்தைந்து நாள் "பேரின்பக்காதல் அரங்கேற்றக்கேட்டு சதுர் முடிந்து, பட்டாபிஷேகத்தன்றைக்கு சங். போலே (Pohle) ஐயர் எல்லா நாட்டையர்மாருக்கும் அங்கு கொடுத்த படி இவருக்குந் தம்முடைய செலவினாலே அங்கிசெய்து தரிப்பித்து வேத சாஸ்திரியார் என்றெழுதப்பட்ட நிருபத்தைப் பட்டணத்தார் கேட்க சபையாரெழுந்திருந்து நிற்க அவ்விடத் தில் பிரதானமாயிருந்த ஞானப்பிரகாச உபதேசியார் நின்று கொண்டு உரத்த சத்தமாய் வாசித்து, இவர் கையிலே கொடுத் தார்கள். அதுமுதல் இவர் வேதநாயக சாஸ்திரி என்று அழைக்கப்பட்டு வந்தார், நிருபம் கீழ் வருமாறு:

TRICHINOPOLY,
*18th June*, 1815.

We the undersigned protestant congregation in the charge of the Rev. Mr. Christian Pohle, the senior Missionary at Trichinopoly, do hereby declare and attest by this certificate, before all the congregations of India, respecting Vedanayaga Ceromoniar, son of the catechist and poet Devasagayam Pillay of Carala caste of the Tinnevelly country, who was converted to Christianity from popery by the Venerable father the Rev. Mr. Christian Frederick Swartz, the English Missionary at Tanjore and was brought up in the principles of Christianity under his protection and is now under the patronage of the Rev. Mr. John Casper Kohlhoff.

We are sending for him this year by letters rejoiced in perusing the papers of three certificates given to him by the Churches of Tanjore, Tranquebar and Madras together with the names mentioued therein calling him by the following Titles as 1st Vedasiromony Maha Njana Cavichacravartiar, 2nd Evengelical Poet, 3rd Njanadeeba Cavirayar, i. e. poet of the Divine light and erected a pandal in the highway of the city sufficient for the sadir and heard in the night times all the books he composed from May 3rd to June 18th. We heard him sing in this our audience the two books entitled "Perinbakadal" and "Sastrakummy, which are books besides the 52 mentioned by the above stated congregation at the three places but of these the former has been composed to show the contents of the Bible and the method of Salvation wrought by Christ and the latter in order to warn of the ruin incurred by Christians who adopt the worldly fashion, we therefore thought to honor him with another new name, because he excelled in knowledge all the Hindoos who are well versed through all India.

Whereupon in the concluding day of this sadir preached on the doctrines of the last Judgment, we formed a pedestal of boards in the midst of the pandal well decorated for the purpose and made him sit in the chair placed upon it and invested him with a white gown together with every privilege that can be possibly given and honored him with the Title Veda Sastriar, i. e. Divine Doctor and gave him this certificate in presence of the gentlemen and ladies and all the persons that are in the city attended him with Divine Songs in the brightness of blue lights.

Therefore we hope that all the congregations that see this certifiicate will, for the sake of Christ, receive him kindly and show him the honor and marks of distinction and respect which we have shewn to him.

(Signed.)

(1) Devasagaya, Catechist.

(2) Amurdappa Pillay.

(3) Sandappa Pillay, Writer, son of late Savarimuthoo, Catechist.

(4) Antonimuthoo Pillay.

(5) Paranjodia Pillay, Thukana Vauthiar.

(6) Thyagappa Pillay.

(7) Njanapragasam, Catechist.

(8) Jesudian, Catechist.

(9) Abraham, English School-master, Temporal servants.

(10) Isaac, Medical writer.

(11) Samuel, Butler.

(12) Amurdappa, Butler.

(13) Daniel, Dubash.

(14) Isaac Joshua.
(15) Eleazar, son of Innasimuthoo, Catechist.
(16) Alangaram.
(17) Titus, Butler.
(18) Arulappen, Butler.
(19) Visuvasam, Butler.
(20) Christian, Butler.
&c. &c. &c.

சிற்றின்பத்தில் மூழ்கியிருக்கிறவர்களுக்கு பேரின்பத்தில் ஆவல் உண்டாகும்படி "பேரின்பகாதல்" அவர்களை எழுப்பும் நூல் என்று சொல்லத்தகும். இதில் கவனிக்க வேண்டியவைகள் :—

(1) நிந்தாஸ்துதி. அதாவது நிந்திக்கும் பாவனையால் துதிப்பது.

90. பேசுமெழுத் தைந்தினிலும்
பின்னெழுத்தினுமடங்காய்
ஏசுவெனு மீரெழுத்தி
லேயடங்கிப் போனனையோ.

91. தேவனைத் தேவனென்று
செப்புவதே மேன்மையல்லாற்
றேவனை மாந்தனென்று
செப்புவது செம்மையதோ.

93. சிஷ்டியோ அல்லது நீ
சிஷ்டிகனோ செம்மறியின்
குட்டியோ மேய்க்குகின்ற
கோனோ குண நிதியே.

இது "செபமாலை" யில் உள்ள "நிந்தாஸ்துதிக்கு" நிகர் அல்ல. ஆனாலும் இந்தக் கண்ணிகள் தான் அதற்கு மூலாதாரமாக இருந்திருக்கலாம். கடவுளை இம்மாதிரி துதிப்

பது ஐரோப்பிய பக்தர்களிடம் காணப்படவில்லை. ஹிந்து பக்தர்களுக்கு பிரத்தியேகமாக உள்ள வணக்கத்தை அனுசரித்து கிறிஸ்து மார்க்கத்திற்கு ஏற்றபடி சாஸ்திரியார் "நிந்தாஸ்துதி" பாடினது கவிசாமர்த்தியமே. கற்றறிவாளர்க்கும் பக்தர்களுக்கும் இது கிறிஸ்துவின் பேரில் சலிகையை ஊட்டி தெய்வ சிநேகத்தை விருத்தி செய்யும்.

(2) திருச்சபைத் தாராட்டு. இதிலே விளங்கும் அந்தாதி செய்யுள் நடை கவனிக்கத் தக்கது. ஜெர்மானிய ஞானப் பாட்டுகளுக்கு ஒப்பந்தமாய் சில கண்ணிகள் தோன்றும். உதாரணமாக :—

6. பார்ப்பாருனைத் தயவாய்ப்
பார்த்துனது துக்கமெல்லாந்
தீர்ப்பாருனக்குத்
தினந்தினமு நன்மைசெய்வார்.

7. நன்மைசெய்வார் தேற்றரவி
னல்லாவியைத் தருவார்
துன்மையெல்லா நீக்கிச்
சுகத்திலுனை யாதரிப்பார்.

8. ஆதரிக்கக் கர்த்தருண்டு
அற்புதனார் காவலுண்டு
வேதன் துணையதுண்டு
வித்தகனார் தஞ்சமுண்டு.

9. தஞ்சமுண்டு காவலுக்குச்
சம்மனசுண் டேசுவுட
ஐந்து காயத்தி
னடைக்கலமுண் டெந்நாளும்.

கண்ணிகள், 21—29. குழந்தைகளை தொட்டிலிலே கிடத்தி தாராட்டி துயிலுவிக்க ஏற்றவைகள். தாய்மாருக்கு

குழந்தையை கொஞ்சி தங்கள் மனதை இளக்க சிறந்த ஓர் கருவியெனக் கொள்ளலாம். வாசிப்போருக்கு உண்மை விளங்கும்படியாக இந்தக் கண்ணிகளை இங்கே பெயர்த்து எழுதியிருக்கிறது :—

21. நித்திரைசெய் தெள்ளமிர்தே
நேசமுறும் பைங்கிளியே
சித்திரப்பூங் காவனத்திற்
சென்றுவருங் கோகிலமே.

22. கோகிலமே தாராவே
கூவும் புருவினமே
பாகுதனிலே சமைந்த
பஞ்சாமுதத் தேனே.

23. தேனே ரசமே
திகட்டாத செங்கரும்பே
மானேயென் கண்ணே
வயிரமணிப் பெட்டகமே.

24. பெட்டகமே பொற்பணியே
பேழையே யென்னுசைக்
கட்டழகே மாத்துயர்ந்த
கட்டித் திரவியமே.

25. கட்டிமுத்தே சீவரத்னக்
கண்ணே எனதுயிரே
வட்டமிட் டாடு
மயிலே மயில்பேடே

26. பேடே இளங்கொடியே
பிள்ளைக் கலிதீர்த்து
வீடே யுலாவி
விளையாடு நல்லணமே.

27. அன்னமே சோபனமே
யாதனமே மாதனமே
சொன்னமே மின்னே
துலங்கவரும் பாக்கியமே.

28. பாக்கியமே கூத்தாடும்
பாவையே பங்கயமே
தீர்க்கமிகும் ஞான
தீபமே கண்வளராய்.

29. கண்ணுறங்கு மின்னரசே
கர்த்த ரிரக்கம் வைத்துப்
புண்ணியமாய்த் தந்தருளப்
பூத்துவளர் கற்பகமே.*

(3) பிரலாப ஒப்பாரி. இதிலும் ஞானப்பாட்டுகளின் தன்மை கண்ணிகளில் விளங்கும். வேதநாயக சாஸ்திரியார் பிறந்த வருஷம் 1774-ல் தான், பெப்ரிசியுஸ் ஐயரும் ஞானப்பாட்டு புஸ்தகத்தை இயற்றினார். அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் இதை ஆராதனைகளிலும் குடும்ப செபத்திலும் தாராளமாக கையாடி வந்தார்கள். வேதநாயக சாஸ்திரியார் வீட்டிலும் இந்நாள் வரையிலும் பெப்ரிசியூஸ் கர்மானிய பாஷையிலிருந்து மொழிபெயர்த்த ஞானப்பாட்டு புஸ்தகத்தை (பிரார்த்தனைகள்) உபயோகப்படுத்துகிறார்கள். இது காரணத்தினால் அந்த பாட்டுகளிலே காணப்படும் உயிரும் உணர்வும் வேதநாயக சாஸ்திரியாரின் நூல்களில் சில இடங்களில் அமைந்து விசேஷமான கருத்துகளை எடுத்துக்காட்டும்; திருஷ்டாந்தமாக:—

* பெப்ரிசியூஸ் மொழி பெயர்த்த 235-ம் ஞானப் பாட்டுடன் ("நீ சாய்ந்து தூங்கு பிள்ளையே") வாசிப்போர்கள் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளவும். மேலும் சி. சுப்பிரமணிய பாரதியார் "பாப்பா

133. அன்பே யென்றுதா
அருமைக் கிறிஸ்தரசே
வன்பாய் நீர்சாகவந்த
வல்வினையே தாண்டவனே.

134. ஆராய்தலில்லாத
ஆழக்கிருபாநதியே
பேராயுமக்குப்
பெருந்துயரஞ் சூழ்ந்ததென்ன

135. பாவமறியாப்
பரிசுத்த கர்த்தாவே
தேவரீர்க் கென்றுலித்
தீங்கு வந்து நேர்ந்ததுவோ.

திருச்சினாப்பள்ளி கிறிஸ்தவ சபையார் கொடுத்த நற் சாட்சிப் பத்திரம் தவிர அங்கே மிசியோனரியாக இருந்த போலே (Pohle) ஐயரும் ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுத் தார். அதாவது :

The certificate of Vedanayaga Shastree given by the Rev. Mr. Christian Pohle.

The bearer of this by name Vedanayagam, a Christian of the Protestant Church, and a Tamil Poet of considerable talents, has at the undermentioned place and in the course of his stay in the same from the 22nd of April last to this date for one full month and one half publicly given his lessons every evening in Prose and Poetry on the suffering of our Saviour Jesus Christ, etc., and has been heard with applause by persons of all ranks and people of all persua-

பாட்டு" சுவாமி சுத்தானந்த பாரதியார் "தாலாட்டு" முதலிய பாட்டுகளும் இங்கே கவனிக்கத்தக்கவை.

tions here assembled in great multitudes. His behaviour also during his stay here has been commendable. Witness my hand.

TRICHINOPOLY, *July 31st, 1815.*

(Sd.) CHRISTIAN POHLE,
*Senior Missionary of the Honorable Society for Promoting Christian Knowledge and Officiating Chaplain.*

இறுதியில் 1815-ஐ, 1818 வருஷங்களில் தஞ்சாவூர் திருச்சபையாருக்கும் வேதநாயக சாஸ்திரியாருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஓர் முக்கியமான விஷயம். இந்த உடன்படிக்கையினால்தானே இன்னும் அந்த சபையார் சாஸ்திரியாரின் பரம்பரையானவர்களை யாதரித்து அவர்களின் தேவ ஊழியத்தை யங்கீகரித்து நடத்தி வருகிறார்கள். இதற்கு ஆதாரமாக அச்சபையார் எழுதிக்கொடுத்த முச்சலிக்கை பின் வருமாறு :—

"கிறிஸ்து பிறந்த 1818-ம் வருஷம் புரட்டாசி மாதம் 1-ம் தேதி தஞ்சை நகரத்திலும் அதின் சுற்றுப்புறத்திலுமிருக்கும், இதற்கடியிற் கையொப்பம் வைத்த நாங்கள், மேற்படி ஊரிலிருக்கும், திருநெல்வேலித் தேவசகாயம் பிள்ளையவர்கள் குமாரர் சுவிசேட கவிராயராகிய வேதநாயக சாஸ்திரியாரவர்களுக்கு, எழுதிக்கொடுத்த மாறாத உடன்படிக்கையாகிய தருமசாதனப் பட்டைய மென்னவென்றால்,

தஞ்சை நகரத்தில் மகா கனம்பொருந்திய அய்யரவர்கள் சுவார்ச்சையரவர்கள் நாள்முதல் சங்கிக்கப்படத்தக்க கோலோப்பு அய்யரவர்கள் நாளாகிய இதுவரைக்கும், ஏறக்குறைய முப்பது வருஷக் காலமாய்த் தாங்கள் இவவிடத்திலிருந்து, வேதாகமங்களையெல்லாம் ஆராய்ந்து, பழையேற்பாடு புதேற்பாடுகளி லடங்கிய அனேகம் ஞாயங்களைத்

தெரிந்தெடுத்து, அதுகளை யெங்களுக்கும் எங்கள் பின்னடியாருக்கு முதவியாக, மகா அலங்கிரதமு மதுரமுமான, அனேகம் பிரபந்தங்களாகப் பாடி கர்த்தருடைய சகல பண்டிகைகளையும், எங்கள் சந்தோஷ நாள்களையுஞ் சிறப்பித்து, எங்களுக்கு மனமகிழ்ச்சியு மெழுப்புத்தலு முண்டாகும்படிக்குத் தாங்கள் பட்ட பெரிய பிரயாசத்துக்காகவும், இதுவுமல்லாமல் எங்களில் அனேகருக்கு மெங்கள் பிள்ளைகளுக்கும் படித்துக் கொடுத்த தங்கள் கருத்தான பட்சத்துக்கு, நன்றியறியுதலாகவுந், தங்களுக்கு எங்களாற் கூடினமட்டும் ஒரு சந்தோஷத்தைச் செய்யத் தீர்மானம் பண்ணினோம்.

நாங்கள் பண்ணின இந்தத் தீர்மானம், எங்கள் மனதுக்கு திருப்தியானதல்ல. ஏனென்றால் கர்த்தரெங்களுக்குக் கொடுத்திருந்தால், தங்களுக்குக் கிராமம் பூமி விட்டுக்கொடுத்துப் பெரிய வெகுமானங்களையெல்லாம் செய்து, தங்களைப் பெரிய சீமானும் பாக்கியவானுமாக்க, எங்களெல்லாருக்கு மாசையுண்டு.

ஆனாலிப்போதிருக்கிற காலத்துக்குத் தக்கதாய் நாங்கள் பண்ணின தீர்மானத்தை, தாங்கள் சந்தோஷமா யொப்புக் கொள்வீர்களென்று நம்புகிறோம்.

அதென்னவென்றால், தாங்க ளெங்களுக்கனுப்பிய ஞானப்பாட்டகரின் பன்னிருஞாயப் பொஸ்தகத்தின்படியே, தங்களுக்குந் தங்கள் தருமச் செலவுகளுக்கும் தங்கள் பாடகாள் கற்றுச்சொல்லிகளுக்கு முதவியாக எங்கள் சந்தோஷத்தின்படி, எங்களுக்கு மனப்பூருவமானது இவ்வளவு செய்வோமென்கிறதை, இதற்கடியிலே, எங்கள் சொந்தக் கையெழுத்தாக எழுதியிருக்கிறபடியினாலே, அதிலெழுதப் பட்டதை மாதாந்திரந் தாங்களனுப்புகிற மனுஷர் வசத்திலே

இயாதொரு தடையுமன்றி சந்தோஷத்தோடே செலுத்தி வைத்துப் போடுகிறோம்.

ஆனபடியினாலே நாங்கள் வெகுசனங் கூடி செய்கிற இந்த தருமத்துக்கு இயாதொருத்தரும் வித்தியாசம் பண்ண மாட்டார்கள். அப்படி வித்தியாசம் பண்ணுகிறவர்களுண்டானால், அவர்களுக்குத் தங்கள் பாடல்களுக்கு நாயனாயிருக்கிற சேனைகளின் கர்த்தரும், இசறவேலின் ராசாவுமாகிய இயேசு கிறிஸ்துவும் வித்தியாசம் பண்ணுவார். ஆனதினாலே இயாதொருத்தருடைய கட்டாயமில்லாமல் எங்கள் மனப் பூருவமாய்ச் சம்மதித்துச் சத்தியப்பிரகாரமாக எழுதிக்கொடுத்த இந்த மாறாத உடன்படிக்கையாகிய தருமசாதனப் பட்டையத்தின்படியே, நீதிமான்களுயிர்த்தெழுதல் வரைக்கும் புத்திர பாரம் பரையா யெங்களுடைய, உங்கள் சுதந்தரத்தைப் பற்றி யனுபவித்துக் கொண்டு, எங்களுக்கு மெங்கள் பின்னடியாராகிய எங்கள் சந்ததியாருக்கும், நன்மையுண்டாகத்தக்கதாக, திரியேக பாரபர வஸ்துவாகிய யேசுராசாவை, சகலவித ராகங்களுடனே பாடிக் கீர்த்தனம் பண்ணிக்கொண்டு, சுகத்திலே யிருப்பீர்களாகவும்.

இப்படிக்கு நாங்களனைவரு மெங்கள் மனராசியில் சம்மதித்துக் கிறிஸ்து பிறந்த 1815-ம் வருஷம் தை மாதம் 1-ந் தேதி எழுதிக்கொடுத்த மாறாத உடன்படிக்கையாகிய தருமசாதனப் பட்டயத்தை மறுபடியு மிந்த 1818-ம் வருஷம் புரட்டாசி மாதம் 1-ந் தேதி புதுப்பித்துச் செம்மைப்படுத்தி சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியாரவர்களுக் கெழுதிக் கொடுத்தோம்."

---

## அத்தியாயம். 6.

### இயாழ்ப்பாணத்திற்குப் போனது.

1811-ஆம் இயாட்பாணத்துக்கு சமுசார சகிதமாய்ப் புறப்பட்டுப்போனார். அப்போது ஒரு கரையிலே வடகாற்று அடிக்காதபடியினாலே தோணி ஓட்ட தாமதப்பட்டது. இவர் வழிச்செலவுக்காக வைத்திருந்த பணமெல்லாஞ் செலவழிந்து போயிற்று. அப்பொழுது இவர் கடவுள் பேரிலே ஒரு பாட்டை உண்டுபண்ணி வடபக்கத்தை நோக்கிப் பாடினார்.

(கலித்துறை)

" சடகாத் திரத்துயரால் மெலிந்தே தமியேனுமவ
கடகாத் திரைக்கடல் யாட்பாணமேறிக் கடக்கவென்றால்
நடகாத் துற்பான்மையி னோோர்கிழமை நலிந்துநின்றேம்
வடகாத் தருள்திரியேகா என்பங்கில் வளர்ந்தவனே."

இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும்போதே காற்றடித்தது. அப்பொழுது தோணி ஓட்டுகிறவன் இவரைத் துரிதப்படுத்தி, தோணியேற்றி அக்கரைப்படுத்தினான்.

அப்பொழுது இவர் கையில் ஒரு பணமாத்திரமிருந்தது. இவர் கரையினின்றுகொண்டு, அந்தப் பணத்தைக் கையிலெடுத்து வானத்துக்குக் காட்டி, ஆண்டவரே! இந்த ஒரு வெள்ளிப்பணமாத்திரம் என் கையிலிருக்கிறது. இதை நான் எந்தக் கூலிக்காரருக்குக் கொடுக்கலாம். இப்போ நான் முந்த முந்த, என் சிநேகிதன் வீட்டுக்குப் போய், அவரையாதொன்று கேட்கிறது எனக்கு வெட்கமாயிருக்கிறது. உம்மை நம்பியிருக்கிறேன், என்னைக் கைவிடாதேயுமென்று செபம்பண்ணிக்கொண்டு, பல்லக்கிலேறி, தமக்கு சிநேகிதனு

யிருந்த (Revd.) கிறிஸ்தியான் தாவீதுப் பாதிரியார் வீட்டுக்குப் போயிறங்கினர். அவர் இவரைக் கண்டவுடனே, சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு, கூலிக்காரரைப் பார்த்துக், கவிராயரோடேவந்த எல்லாரும் இப்படி என்னிடத்தில் வாருங்கள். அவரை நீங்கள் ஒன்றுங் கேட்கக்கூடாது, என்று பையைத் திறந்து எல்லாருக்குங் கூலிகொடுத்து அனுப்பினர். இவர் ஆச்சரியப்பட்டுக்கொண்டு நாலைந்துநாள் அவர் வீட்டிலிருந்து பிற்பாடு, வாடகைக்கு ஒரு வீடு அமர்த்திக்கொண்டு சில மாதம் அங்கே தங்கியிருந்தார்.

அந்த ஊர் வண்ணனிடத்தில் இவரும் இவரோடே கூடப்போனவர்களும், தங்கள் வஸ்திரங்களை வெளுக்கப் போட்டார்கள். இராத்திரியிலே திருடன் வண்ணன் வீட்டிலே வந்து விழுந்து, எல்லா வஸ்திரங்களையுந் திருடிக்கொண்டு போய்விட்டான். மறுநாட் காலையில் வண்ணன் வந்து பரிதபித்து, எல்லா வஸ்திரங்களையும் திருடன் கொண்டுபோய் விட்டானென்று சொல்லிக் கையை விரித்தான். ஏண்டா பொய்சொல்லுகிறு யென்றபோது, அவன் ஐயா! கதிர்காமர் மேலே ஆணைப்படிக்குத் திருடன் கொண்டுபோனது உள்ளதென்றான். புறத்திலே விசாரித்து, அந்த வண்ணன் சொல்லுகிறது உண்மையென்று கண்டுகொண்டார். அப்பொழுது இவர் மனஸ்தாபப்பட்டு கடவுளை நோக்கி விண்ணப்பம்பண்ணி என்னுடைய வஸ்திரங்களெல்லாம் களவுபோய் விட்டது. நானிப்பொழுது வெளியே புறப்படக் கூடாமலிருக்கிறேன் என்னோடே வந்தவர்களுக்கும் எனக்கும் இப்பொழுது வஸ்திரங் கொடுத்து, நாங்கள் சந்தோஷத்தோடே வெளிப்படக் கிருபை செய்யவேண்டுமென்று, பிரார்த்தனை பாடி செபம் பண்ணின பின்பு இரண்டொரு ஞானப்பதங்களைப் பாடிக்கொண்டிருந்தார். "நெஞ்சே நீ கலங்காதே" என்ற பாடலும் அந்த ஊரில்தா னுண்டுபண்ணப்பட்டது.

அப்போது அந்த மார்க்கமாய்ப் போகிற புகையிலைக் குத்தகை யெடுத்த இராமசாமிபிள்ளை யென்ற ஒரு ஹிந்து மனுஷன் வெளியே வந்து நின்று, ஐயா, உள்ளேவந்து கேட்க உத்தரவுண்டோ வென்றான். இவர் சுகமே வரலா மென்று உள்ளே யழைத்தார். அந்த மனுஷனை இவர் முன் னொருக்காலுங் கண்டிருந்த தில்லை. இவர் சற்று நேரம் பாடல் கேட்டுக்கொண்டிருந்த பின்பு, நீங்கள் துக்கமாயிருக் கிற முகாந்திரமென்னவென்று விசாரித்தார். இவர் வஸ்திரங் களவுபோன சேதியைச் சொன்னார். அந்த மனுஷன் உடனே தன்னிடத்திலிருந்த ஒரு ஆளையனுப்பி இரண்டு சேலை யெடுத்துவரச் சொல்லிப் பட்டுச்சேலையை உங்கள் சமுசாரத் துக்கும், மற்றச் சேலையை உங்கள் வேலைக்காரிக்கும் கொடுங்க ளென்று கொடுத்து, தன் சாக்கிலிருந்த ஐம்பது இரையால் அடங்கிய ஒரு பாங்கி நோட்டு எடுத்துக்கொடுத்து, நீங்கள் உங்களுக்கு சம்மதியான வஸ்திரங்கள் வாங்கிக்கொண்டு, போதாதேபோனால் என்னைக் கேளுங்கள், நான் அதற்கு உத்தரவாதம் பண்ணுவேன் என்று சொல்லிப் போய்விட்டார்.

அல்லாமலும் அங்கே பஞ்சகாலமாயிருந்தது. ஒரு பூவிராகனுக்கு மூன்றுபடி அரிசி விற்றது. அப்படி விற்றா லும் கர்த்தர் இவரையும் இவரோடேகூடப் போனவர்களையும் யாதொரு தாழ்ச்சியுமில்லாமல் விசாரித்தார்.

அவ்விடத்தில் சவேரிமுத்து என்ற ஒரு உரோமான் கிறிஸ்தவன் இவரோடே சம்பாஷித்த விஷயத்தை அனுபந் தம் 2-ல் காணலாம்.

---

# அத்தியாயம். 7.

## His Highness சரபோஜி மகாராஜாவுக்கும் வேதநாயக சாஸ்திரியாருக்கும் இருந்த இணக்கமும் பின் ஏற்பட்ட மனஸ்தாபமும்.

1829-ம் வருஷத்திலே இவர் H. H. சரபோஜி மகாராஜாவின் பேரில் ஒரு வாழ்த்துதல் பாடி இராஜாவைக் கண்டுகொண்டார். இராஜா இவருக்கு மரியாதை செய்து தமக்கு சமீபமாய் உட்காரவைத்து, சால்வை போர்த்தி சங். போலே ஐயர் கொடுத்த மாதிரியான ஒரு வெள்ளை நிலை அங்கி தைத்துக்கொடுத்து, மாதாந்தர சம்பளமும் பண்ணி வைத்தார். இவர் மாதத்தில் இரண்டுநாள் மகாராஜாவைக்கண்டு தானுண்டுபண்ணின பாடல்களை இராஜாவுக்குச் சொல்லிக் காட்டுவார். கவிராயராயிருந்த படியினலே மகாராஜாவின் போசலை ராஜவங்ஷ சரித்திரத்தைப் பாடலாகப் பாடினர். மகாராஜாவை சந்திக்கும் சமயங்களில் இருவருக்கும் சம்பாஷணை நடக்கும். இவர் ஒன்றுக்கும் பயப்படாமல் மகாராஜாவோடே வல்லமையா யெதிர் ஞாயங்கொடுத்துப் பேசுவார். இராஜா இவர் சொன்ன ஞாயங்களுக்காக சந்தோஷப்படுவார். ஒரு நாள் இராஜா இவரோடே நீர் பேசுகிறதைப் பார்த்தால் நம்மை விழத்தட்டிப் போடுவீர் போலே இருக்கிறதென்றார்.

வேதநாயக சாஸ்திரியார் ஒரு முறை "நோவாவின் கப்பல் பாட்டு" என்று ஒரு பிரபந்தத்தை யுண்டுபண்ணி இராஜாவிடத்தில் அரங்கேற்றினர். மகாராஜா அதற்காக நூறு வராகன் மட்டும் வெகுமானம் பண்ணினர். அப்பொழுது, மகாராஜா "நீர் சம்பளம் வாங்குகிறீர், எச்சரிக்கையாயிரும். யாதொருவரையும் உம்முடைய மார்க்கத்தில் இழுத்துக்கொள்ளாதேயும்" என்றார். இவர் இராஜாவுக்கு,



H. H. SERFOGEE

"நான் ஞானஸ்நானங் கொடுக்கிறவனல்ல. அதற்காக குருக்கள் இருக்கிறார்கள். நான் புத்தி மாத்திரஞ் சொல்லுவேன்" என்றார். ஆகிலும் மகாராஜா பேசினது இவர் மனச்சாட்சிக்கு மெத்த வருத்தமாயிருந்தது. அப்பொழுது கண்ணீர் விட்டு, "கடவுள் எனக்குத் தம்மைப் பாடுகிற வரத்தையுங்கொடுத்து இத்தூரம் மனுஷனாக்கி விட்டார். இப்போதும் நானிந்த அற்பப் பொருளுக்காக அவரைப் பாடாமலும் பிரசங்கியாமலும் பூமியிலிருந்து பிரயோசனமென்ன? இன்று இராத்திரியிலே என்னைப் பாம்பு கடித்து நான் செத்தால், இராசாவுடைய பணம் எனக்கென்னத்துக்குதவும்" என்று மனதிலே எண்ணி, இராசா கொடுத்த பணத்தை, மறுபடியும் அவரிடத்திலே கொடுத்துவிடக் கொண்டு போனார். அத்தருணத்தில் இராசா உள்ளே அரண்மனைக்குள் போய்விட்டார். அங்கே அவருடைய மந்திரி பாவாப் பண்டிதர் மாத்திரமிருந்தார். அவர் இவருடைய மார்க்க வைராக்கியத்தைக் கண்டு, உம்முடைய சுவாமியை நீர் பிரசங்கிக்க வேண்டாமென்று மகாராசா சொல்லவில்லை. யாதொருவரை இழுக்காதேயுமென்று மாத்திரஞ் சொன்னார் நீர் சுகமே உம்முடைய சுவாமியைப் பிரசங்கித்துக்கொண்டிரும். அதற்குத் தடையில்லையென்று சொல்லிப், பணத்தை ஒரு மாணுக்கனிடத்திற் கொடுத்து, இவரோடேகூட வீட்டுக்குக் கொண்டுபோகச் சொன்னார். மகாராசாவோடேகூட இருக்கிற பிராமணரும் சாஸ்திரிகளும், இவர் மகாராசாவோடே சரிசமானமாய்ப் பேசுகிறாரென்று பொறாமைப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

பின்னும் ஒரு நாளிலே மகாராஜா பிரகதீஸ்வரன் பேரிலே பாடச்சொன்னதின் நிமித்தம் ஒரு சம்பாஷணை நடந்து அதை வேதநாயக சாஸ்திரியார் தம்முடைய புஸ்தகத்தில் குறித்திருந்தபடி, இதில் பெயர்த்தெழுதியிருக்கிறது :

" மகாராசா அவர்கள், நான் பாடின பெத்தலேங் குறவஞ்சியைக் கேட்டுத் தம்முடை தேவனுகிய பிரகதீசுரர்பேரிலே அப்படி ஒரு குறவஞ்சி பாடச்சொன்னுர். நானடுக்கத்தோடே பராபரனைத் தவிர வேறொன்றையும் பாடக்கூடா தென்றேன், அதற்கு மகாராசா ஈான் சம்பளங் கொடுக்கிறபடியினுலே நான் சொன்ன வேலையை நீர் செய்யவேண்டியதில்லையா வென்றுர். அதற்கு நான் ஆண்டவனே, நான் சங். தகப்பனுர் சுவார்ச்சையரவர்களால் வளர்க்கப்பட்ட சீஷனுயிருக்கிறேன். எனக்கிப்போது 56 பிராயமாகுது. இதுமட்டும் பராபர னென்னைப் பராமரித்து நடத்தி வந்தார். இப்போ சபையிலே வந்த புது மிசியோனுரிமார்கள் உண்டுபண்ணின சாதி வேற்றுமையின் கலாபத்தினுலே தங்கள் சமுகத்திலே வந்தேன். இப்போ நான் என் சிருஷ்டிகருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறதினுலே நான் அவருக்கு சத்துருவாய்ப் போவேன். அதைப் பார்க்கத் தாங்களென்னைத் தள்ளிப்போடுகிறதா யிருந்தால், தங்கள் சித்தமென்றேன். அதற்கு மகாராசா, அதை யெப்படி நீர் பாவமென்று சொல்லலாம். அது குற்றமாவென்றுர். அதற்கு நான் மகாராசாவே நான் தங்களாலே போஷிக்கப்பட்டு சில வருஷத்துக்குப்பிறகு தங்களைவிட்டு இன்னொரு இராசாவைப் போய்ச் சேர்ந்துகொண்டால் தங்களுக்குப் பிரியப்படுவனே, தாங்களென்னை சத்துருவா யெண்ணமாட்டீர்களா, அப்படிப் போல சங். தகப்பனுர் சுவார்ச்சையரவர்கள் திருநெல்வேலிக்கு வந்து என்னைப் பனிரண்டு பிராயத்திலே கூட்டி வந்து இதுவரைக்கும் எனக்கு அன்ன வஸ்திரங்கொடுத்து ஆதரித்து, என்க்குப் போதிவித்த உபதேசத்திற்கு விரோதமான காரியத்தை இப்போ நான் செய்கிறபோது நான் அவருக்கு சத்துருவாய்ப் போகமாட்டேனு வென்றேன்.

அதற்கு மகாராசா, நீர் குறவஞ்சி பாடாதேபோனுல் போகட்டும். ஒரு காப்பு மாத்திரம் பிள்ளையார்பேரிலே

யுண்டாக்கிக் கொடுமென்று சொன்னர். அதற்கு நான் குறவஞ்சி பாடாமல் ஒரு சின்னப்பாட்டு மாத்திரம் பாடினலும் பின்னையும் நான் கர்த்தருடைய பார்வையிலே நேரஸ்தனய்ப் போவேன். அப்படி செய்யக்கூடாது மகாராசாவே யென்றேன். அப்போ மகாராசா என்னைப் பார்த்து உம்முடைய இயேசுநாதர்பேரிலே, நாங்களொரு பாட்டுப் பாடுகிறோம். நீர் எப்படிச் சொன்னீரோ அப்படியெல்லாம் வைத்து இன்னம் அதிகமாகவும் பாடித்தருகிறோம். அதன்பிறகாகிலும் நீரெங்கள் பிள்ளையார்பேரிலே ஒரு காப்புப் பாடிக் கொடுக்கலாமே யென்றார். அதற்கு நான் மகாராசாவே, நீங்கள் இயேசுநாதர்பேரிலே பாடுவீர்களென்கிறதற்குச் சந்தேகமில்லை. அப்படி நீங்கள் பாடினலும் நான் பிள்ளையாரைப் பாடக்கூடாதென்றேன். அப்போ மகாராசாவுக்கு ஆயாசமுண்டாகித் தம்முடைய சங்கத்தாரைப் பார்த்து, என்ன காணும், இவருடைய சுவாமியின்பேரிலே பாடியிருக்கிற பாடல்களை நாங்கள் கேட்கவேணுமாம். நாங்கள் அவருடைய சுவாமியின்பேரிலே பாடினலும், அவர் எங்கள் சுவாமியின் பேரிலே பாடக்கூடாதாம். இதெப்படியிருக்கிற தென்றார். அதற்கவர்கள் சும்மாய் பாடுங்காணும், மகாராசா வார்த்தையைத் தட்டாதேயு மென்றார்கள்.

அதற்கு நான் மகாராசாவே தங்கள் பணிவிடைக்காரர்போ லென்னைப் பாவித்து, என்னை நடத்த வேண்டியதில்லை. எத்தனை யானை, குதிரை மாடுகள் முதலான மிருகசீவன்களை வைத்து ஆதரிக்கிறீர்கள். ஒரு யானைக்கு மாதம் எம்மாத்திரமோ செல்லுது. அப்படி யென்னையும் ஒரு யானையாக நினைத்து நடத்தச் சித்தமானல் தங்கள் மனது, அல்லவென்று அனுப்பிவிட்டாலும் தங்கள் சித்தம். இனியெல்லாரும் என்னை விரோதித்து தங்களுக்கு ஆயாசத்தை யுண்டாக்குவார்கள்; பிழைக்கலாமென்று வந்த இடத்திலே இந்த

சோதனை நேரிட்டதென்றேன். அதற்கு மகாராசா ஓய் வேதநாயகம்பிள்ளை! நீரொருத்தருக்கும் பயப்படவேண்டாம். எங்கள் சாமியையும் பாடவேண்டாம் உம்முடைய யேசு நாதரையே பாடிக்கொண்டு சுகமேயிருமென்று அனுப்பி விட்டார். இத்தருக்கங்கள் ஒரு சாமத்துக் கதிகம் நடந்தது. நான் மெத்த சுருக்கமா யெழுதினேன்."

சரபோஜி மகாராஜா 1832-ம் வருஷம் மரணமடைந்தார்.

வேதநாயக சாஸ்திரியாருடன் ஏககாலத்தில் தஞ்சாவூருக்கு வடக்கே ஆறு மைலுக்கப்பால் திருவையாற்றில் வசித்த சங்கீதவித்வான் ஸ்ரீ தியாகராஜாவின் சரித்திரத்திலும் சரபோஜி மகாராஜா அவரையும் தன்னுடைய விருது விளங்க ஒரு கவி உண்டுபண்ண வேண்டுமென்று ஓர் தூதனை அனுப்பி கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு தியாகராஜா உடன்படவில்லை யென்றும் பின் வருமாறு கூறியிருக்கிறது:—

"Once Saraboji, Raja of Tanjore, sent for Thiagaraja. The messenger met the musician and said, 'The Raja offers you a gift of ten *Velis* of land and a big bullion of gold, as the price of a song or two, which you are requested to compose in praise of the Raja'. The musician replied, 'Why should your Raja misuse his wealth in such paltry things as praise and why should I prostitute the Muse's name by flattering kings, many of whom are but plagues and scourges of mankind, bred up in sloth and ignorance and every vice that nurses both?' The messenger still persisted and drew Thiagaraja's pointed attention to the bullion of gold. 'Fie upon gold' retorted Thiagaraja, 'fie upon that cursed gold which ever draws unwary humanity to pursue false joy and suffer real woe. Had I valued gold for its own sake, I should have long ago

melted my golden image of Rama into bullion and played, in the twinkling of an eye, ducks and drakes with it. But, to my fortune, my fascinating idol fills my mind with the God inside and not with the gold outside'." (vide 9).

இதனால் விளங்கும் விஷயங்கள் என்னவென்றால் முதலாவது சரபோஜிமகாராஜா கலைஞானத்திற்கும் சங்கீத வித்தைக்கும் பரிபாலனன் என்பதும்; இரண்டாவது, அக்காலத்தில் ஒன்றுவசித்து நல்சித்தியடைந்த இவ்விரண்டு உத்தமர்களும் ராஜதயவை நாடி தங்கள் வித்தையை விற்று தாங்கள் வழிபடும் கடவுளை மறுதலிக்கவாவது, நரஸ்துதி பாடவாவது சம்மதிக்கவில்லை என்பதுமே. வேதநாயக சாஸ்திரியார் மராட்டிய போசலே ராஜ வங்கிஷ சரித்திரத்தை பாடலாக உண்டு பண்ணினாலும், இவர் சமஸ்தான வித்வானாக சம்பளம் வாங்கினதினால் இதில் குற்றம் ஒன்றும் இல்லை. ஆனால் ராமபக்தாவாக விளங்கின தியாகராஜா நரஸ்துதி பாடமுடியாது என்று மறுத்துவிட்டது தன்னுடைய சிறந்த ராமபக்தியை அழியாமல் நன்கு காப்பாற்றிக்கொண்டதேயாகும்.

தியாகராஜாவும் அவருடைய சிஷர்களும் வாரத்தில் ஒரு நாள் வீதிவழியாய் வாத்தியங்களுடன் தியாகராஜா வியற்றிய பாடல்களை பாடிக்கொண்டுபோக கேட்போர் அரிசி, பருப்பு முதலியவைகளை கொடுக்க இவைகளை சேகரித்து இவ்வாறு யாசகம் மூலமாய் சாப்பிட்டு காலங் கழித்தவர்கள். இந்த சரீர ஜீவியத்தை கையாடின தியாகராஜாவுடைய சுபாவத்திற்கு ராஜதயவாவது சிநேகமாவது நியாயமாகவே மிகவும் வெறுப்பாயிருந்திருக்கு மென்பதற்கு சந்தேகமில்லை. இது தான் வேதநாயக சாஸ்திரியாருக்கும் தியாகராஜாவுக்கும் குணத்தில் உள்ள வித்தியாசம். வேதநாயக சாஸ்திரியார் "உஞ்சவிருத்தி" என்று சொல்லப்பட்ட யாசக ஜீவியத்தை நடத்த வில்லை. இராஜாவிடத்தில் சமஸ்தான வித்வானாக

சம்பளம் பெற்று உத்தியோகம் ஏற்றுக்கொண்டது தனக்கு இழிவாகத் தோன்றவுமில்லை. ஆனால் பிரகதீஸ்வரன் பேரில் கவிபாடி தான் இயேசுபெருமான் பேரில் வைத்த பக்தி பங்கமடைய உடன்படமாட்டேன் என்று சாதித்தது இந்த பக்தாவின் விசேஷ லக்ஷணம் என்றே நாம் புகழவேண்டும்.

சரபோஜி மகாராஜா மனஸ்தாபத்திற்கு இடம் கொடாமல் இவரைப் பட்சமாய் சிநேகித்து நடத்தி வந்தார். அவருக்குப் பின்னால் அவருடைய குமாரன் சிவாஜி இராஜா பட்டத்துக்கு வந்தபோது, கிறிஸ்தவர்களெல்லாரையும் பகைத்து வேதநாயக சாஸ்திரியாரையும் அரண்மனைக்குள் வராதபடிக்குத் தடைபண்ணினார். இந்த தஞ்சாவூரின் கடைசி ராஜாவும் 1855-ம் வருஷம் மரணமடைந்தார்.

---

## அத்தியாயம் 8.

---

### வேதநாயக சாஸ்திரியார் நடத்தின உத்தியோகங்களும், வீட்டுக்கடுத்த ஒழுங்குகளும், ஆராதனை திட்டங்களும், கடவுள் அவர்பேரில் வைத்த கிருபையும்.

**வேதநாயக சாஸ்திரியார்** சங். பிரதரிக்கு சுவார்ச்சையர் (C. F. Schwartz) கோலோப்பையர் (J. C. Kholhoff) காலத்தில் பள்ளிக்கூடத்து உபாத்தியாயராக விருந்தார். பின்பு சார்ச் இஷ்பர்ஷனைதரையர் (George Sperchneider) முதலானவர்களுக்கு, தமிழ்ப் பாஷை படிப்பிக்கிற முனிஷியாயிருந்தார். சில காலம் சர்வியர் ஜெனரல் மக்கிஞ்சி (Surveyer General Mackenzie) துரையிடத்தில் உத்தியோக



A STATUE OF SERFOGEE

(*At Tanjore Palace*)

மாயிருந்து, தேசசரித்திரங்களைச் சேர்க்கிறதில் அலுவலா யிருந்தார். முந்தின அத்தியாயத்தில் சரபோஜி மகாராஜா விடம் சமஸ்தான வித்வானாக உத்தியோகம் நிறைவேற்றினதை கவனித்தோம். அந்த மகாராஜா மரித்த பிறகு சாஸ்திரியாருக்கு சிறுமையுண்டானது.

இவருக்கு நிலபலமாகிலும், ஆஸ்திபாஸ்தியாகிலுங் கிடையாது. அவைகளை யவர் விரும்பிச் சேர்த்துவைத்தது மில்லை. இப்படியிருக்கிறபோது, ஆண்டவர் அவருக்கு ஒத்தாசையாக, கல்விக்கோட்டை சிரேஸ்தார் தெய்வசிகாமணி பிள்ளையை எழுப்பினார். அவர் கர்த்தருடைய பாடல்களைச் சிநேகித்தபடியினாலே, இவருக்கு வருஷாந்திரம் நூறு விராகன்மட்டும் அனுப்பிக்கொண்டிருந்தார். அவரைக் கர்த் தர் எடுத்துக்கொண்டபோது அந்தந்த சபையிலுள்ள, தமிழ்ப் பாடல்களின் பிரயோசனத்தையறிந்த சில ஐயர்மார்களும், இரண்டொரு துரைமார்களுமாகச் சேர்ந்து, மாதாந்திரம் ஆளுக்கு அரையும் ஒன்றுமாக சேர்த்துக் கொடுத்துவந்தார் கள். அத்துடனே சர்மன் தேசத்திலேயிருந்து ஒரு உப காரியை ஆண்டவர் புதிதா யெழுப்பினார். அவர் சங். அக்ட்டர்லோனி ஐயர் வசமா யப்போதப்போது கொஞ்சம் நன்மைசெய்து அனுப்பினார்.

கிறிஸ்துப் பிறப்பின் பண்டிகைநாளிலும் தவசுநாட்களி லும் இவர் சதுர்ப்பிரசங்கம் வைத்துவந்ததினாலே, இவ ருக்கு சவுக்கியமாயிருக்கும். அப்பொழுது இவர் கொடுக்க வேண்டிய சம்பளக்காரர் கடன்காரரெல்லாருக்கும், நிலுவை யில்லாமல் கொடுத்துத் தீர்த்து பிற்பாடு, இரண்டொருநாள் சாப்பாட்டுக்காக தம்முட பெண்சாதி வரோதய அம்மாளிடத் தில் கொடுப்பார். அந்த அம்மாள் அவரிடத்தில் பிள்ளைகுட்டி களிருக்கிறதே, கொஞ்சம் நெல்லாகிலும் அரிசியாகிலும்

வாங்கிவைக்க ஏதாகிலும் கூடச் செலவுக்குக் கொடுங்கள் என்று கேட்பார்கள். அப்போதவர் பானையிலே அரிசி வாங்கி வைத்துக்கொண்டிருந்தால், கர்த்தர்பேரிலிருக்கிற உங்கள் நம்பிக்கை குறைந்துபோகும். நாமிப்போது கவலைப்படத் தேவையில்லை. நாளைக்கும் அவரிருக்கிறார். நம்மை நடத்து வார். நம்மைப் பட்டினியே போடமாட்டார் என்பார்.

ஒருநாள் இருநூறு ரூபாய்க்குமேல் மாதாந்திரம் சம்பளம் பெற்றுவருகிற ஒரு போதகரிடத்தில், தம்முடைய சீர் நிருவாகங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, ஐயா! நீங்கள் கர்த்தருடைய செபத்தைச் சொல்லி மன்றாடுகிறபோது, "அன்றன்றுள்ள எங்களப்பத்தை, எங்களுக் கின்றுதாருமென்று" சொல்லுகிற வழக்கம் போல நாங்கள் சொல்லி வேண்டிக்கொள்ளாமல், உண்மையாகவே அந்த நாளின் அன்றன்றுள்ள அப்பத்தைக் கருத்தர் எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு வருகிறோமென்றார். சிலவேளைகளில் அப்போதப்போது, தாழ்ச்சியுண்டாயிருக்கும் போது, இவர் கடன்பட்டுத் தம்முடைய கூட்டத்தை நடத்த வேண்டியிருக்கும். ஒருவேளை கடன்கொடுக்கிறவர்களும் தங்கள் மனதைக் கடினப்படுத்துங்காலத்தில் இவர் கர்த்தரை நோக்கிச் செபம்பண்ணி வனாந்தரத்திலே, முப்பதுலட்சஞ் சனங்களை நடத்தின வல்லமையுள்ள கருத்தாவே! நாங்களும் எங்கள் பிள்ளைகளும் மாணாக்கரும், ஏறக்குறைய முப்பது பேரிருப்போம்; இந்த சிறு கூட்டத்தை, நீர் கிருபையாய்ப் பார்த்து, எங்கள் பாவங்களை மன்னித்து எங்கள் இரட்சகர் நிமித்தியம் எங்கள் அன்றன்றுள்ள அப்பத்தைக் கட்டளையிட்டருளுமென்று வேண்டிக்கொண்டு, ஒன்றுக்கும் கவலைப் படாதிருப்பார். உடனே ஆண்டவர், எங்கேயிருந்தாகிலும், ஆச்சரியமான பிரகாரமாக, இவருக்கும் இவருடைய கூட்டத் தாருக்கும் படியளப்பார்.

பின்பு தம்முடைய பிள்ளைகளையும் மாணுக்கரையும் பயணப்படுத்தி, அந்தந்த ஊரிலுள்ள கிறிஸ்தமான சபையாரிடத்தில் அவர்களை அனுப்பும்போது, செபம்பண்ணி அவர்களொவ்வொருவர் தலையிலும் சிலுவை வரைந்து ஆசீர்வதித்து அனுப்புவார். அவர்கள் எத்தனை தூரம் போனாலும் அங்கே என்னென்ன வியாதிகளிருந்தாலும் அவர் ஆசீர்வதித்து அனுப்பினவர்களில், ஒருவராகிலும் சாகாமல், சுகத்தோடுஞ் சந்தோஷத்தோடும், சபையார் செய்த காணிக்கைகளோடே கூட வீடுவந்து சேருவார்கள்.

மேலும் இவர் தஞ்சாவூரிலே வீடுகட்டிக் குடியேறின அறுபது வருஷக் காலங்களிலே வியாதிப்பட்டு, விஷபேதி கண்டு, துன்பப்பட்ட ஒருவராகிலும் பிராணசேதம் அடைந்ததில்லை. வயித்தியர்களெல்லாம் அவர்களைக் கைவிட்டாலும், இவர் கருத்தர்பேரிலே நம்பிக்கையாயிருந்து, தம்முடைய குடும்பத்தார் அனைவரோடுங்கூட, முழங்காலிலிருந்து சுவாமி கிருபையாயிருமென்கிற சமுதாயப் பிரார்த்தனையைச் சொல்லி, வியாதிப்பட்டவர்கள் தலையிலே கைவைத்து செபம் பண்ணி கருத்தரை நோக்கிக் கூப்பிடுவார். வியாதிப்பட்டவர்களுக்கு அப்போது கருத்தர் இரங்கி நல்ல சுகத்தைக் கொடுத்திருக்கிற கண்கண்ட சாட்சியுண்டு. இதினாலே எல்லாரும், அவரைக் கருத்தருடைய அடியானென்று எண்ணித் தங்கள் வீடுகளில் அழைத்துப்போய் வியாதிப்பட்டவனுக்காக விண்ணப்பம்பண்ண இவரைக் கேட்டுக்கொள்ளுவார்கள்.

இவர் ஞாயிற்றுக்கிழமைதோறும் தேவாலயத்துக்குப் போவதற்கு முன்னதாக, தம்முட வீட்டிலே ஆராதனை நடப்பிவிப்பார். அப்பொழுது விசேஷமாய் "இந்த அக்கியான தேசத்தில், கிறிஸ்தமார்க்கம் பரம்பவும், தேசத்துக்கு இடறலாய்க் கர்த்தருடைய கட்டளையைப் புரட்டி, இந்த அக்கியான

இராச்சியத்திலுள்ள மேலான சாதியாரை அவர்கள் கிறிஸ்து வண்டைக்கு வராதபடி இடறலான கட்டளைகளைக் கொடுத்து இந்த அக்கியான இராச்சியத்திலே கிறிஸ்துமார்க்கம் பரம்ப வேண்டுமென்ற ஆசையோடே சங். பிரதரிக் சுவார்ச்சையர் பட்ட பிரயாசத்தை அழித்துப்போட்டு, பராபரனுடைய இராச்சியத்தைப் பொசிப்புங் குடிப்புமுள்ள இவ்வுலக இராச்சியத்தின் மாயையான நன்மைகளுக்கொப்பாக மாற்றிப் போதிக்கிறார்களே, கர்த்தாவே! நீரிந்தப் புதுக் குருமாரின் இடறலான உபதேசத்தை அகற்றி ஒழித்துவிட்டு, அவர்கள் இடறலற்ற பிரகாரமாகப் போதித்து வரவும், தேசமெல்லாம் உம்மையறியவும், நீருமது விலைமதியாத இரத்தத்தைச் சிந்தி மீட்ட ஆத்துமங்களெல்லாம், உம்முடைய மந்தையிலே வந்து சேரவும், உமது சனமாகிய மனக்கடினப்பட்ட யூதர்களனைவரும் மனந்திரும்பி உம்மைப் பற்றிக்கொள்ளவும், உமது பரம இராச்சியம் தீவிரமாக இவ்வுலகமெங்கும் பரம்பச் செய்ய வேண்டுமென்றும், தம்மையும் தமக்கடுத்தவர்களையும் விசேஷமாய்த் தமக்கு நன்மை செய்கிற உபகாரிகளையும், எல்லாக் கிறிஸ்தமான சபைகளையும் தற்காத்து இரட்சிக்க வேண்டுமென்று, ஏழைப் பாவிகளாகிய அடியார் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம் சுவாமி என்றும் உட்கருத்தாய் மன்றாடி செபம் பண்ணுவார். பிற்பாடு தமக்கடுத்த எல்லாரோடும் உடுத்திக்கொண்டு தேவாலயத்துக்குப் போவார். கருத்தருடைய சன்னதியிலே வெற்றுக்கையுடனே போகக்கூடாதென்று, ஏதாகிலும் கொண்டுபோய்க் காணிக்கை செலுத்திப் போடுவார்.

---

* சில வேளைகளில் காணிக்கைக்குக்கூட காசில்லாமல போகுமாம். அப்போது தன் விரலில் உள்ள தங்க மோதிரத்தை கழற்றி காணிக்கை வாங்கும் பையில் போட்டு விடுவாராம். ஆனால் மோதிரம் சாஸ்திரியாருடைய தென்று தெரிந்து பின்னல் அதை யவர் வீட்டுக்கு அனுப்பி காணிக்கையை வாங்கிக்கொள்ளுவார்களாம்.

இவர் தம்மண்டைக்கு வருகிற ஏழைகளுக்கும் தமக்கு வருகிற வருமானத்துக்குத் தக்கதாய் வெள்ளிக்கிழமைகளி லும் மற்றபண்டிகை நாட்களிலும் தருமஞ்செய்வார். மெத்த எளிமையா யிக்கட்டுப் பட்டுவந்த கிறிஸ்தவனுயிருந்தால் அவன் எந்தச் சாதியானு யிருந்தாலும், தமக்கு முன்பாய் வைத்து, தமது போசனத்திலே அவனுக்குப் பகிர்ந்து கொடுத்து, அப்பால் தாம் சாப்பிடுவார்.

அவன் அம்மணமாயிருந்தானென்று கண்டால் தம்மு டைய மேல் வஸ்திரத்தையாகிலும், அல்லது தாம் படுத்திருக் கிற மெத்தையின் உறையையாகிலும் கழற்றி அவனை யுடுத்தி விப்பார். ஏனிப்படிச் செய்யவேணும், உமக்கே தாழ்ச்சியா யிருக்கிறதே யென்று யாதொருவர் அவரைக் கேட்டால், நான் கர்த்தருக்குக் கடனல்லோ கொடுத்திருக்கிறேன், நான் வீணுய்ச் செலவிடவில்லை. அது எனக்கு இரட்டிப்பாய்த் திரும்பி வரும். மேலும் அந்த நாளிலே இந்த சிறியோரில் ஒருவனுக்கு என்னத்தைச் செய்கிறீர்களோ அதை யெனக்குத் தான் செய்தீர்களென்று கிறிஸ்து சொல்லுவாரல்லவோ? அல்லாமலும் ஒரு ஆத்துமத்தைக் கொண்டிருக்கிற நம்மைப் போலொத்த மனுஷருக்கு இரங்காமல், மனதைக் கடினப் படுத்திக் கனிகொடாத விருட்சத்தைப்போலிருக்கிறது, என் னைப் பாக்கியவானுக்க மாட்டாதென்பார்.

1848-ம் வருஷத்து கிறிஸ்து பிறப்பின் பண்டிகையிலே இவர் மெத்த வியாதிப்பட்டு மரணப்படுக்கையிலே யிருந்தார். இவர் தெய்வாலயத்துக்கு வரக்கூடாதிருந்தபடியினாலே அந் தப் பண்டிகையிற் சனங்களுடைய சந்தோஷம் மெத்தக் குறைந்துபோயிருந்தது. அப்போது தஞ்சாவூர் மிசியோனரி யாகிய சங். கெஸ்றையர் இவரை மெத்தச் சினேகித்து அடிக் கடி வந்து பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது இவர்

அவரோடே, ஐயா! நீங்கள் நான் மரித்துப் போவேனென்று நினைக்கவேண்டாம். நான் துவக்கியிருக்கிற சில பொஸ்தகங் களின் வேலைகளிருக்கிறது. அதுகளை நான் சபைக்குப் பிர யோசனமாகக் குறையறச்செய்து முடிக்கும்படிக்கு கருத்த ரெனக்குக் கிருபைபண்ணி, எசேக்கியேல் ராசாவுக்கு அவரு டைய ஆயுளோடேகூட, பதினைந்து வருஷங் கூட்டினபடி என் ஆயுளோடேயும் அவருக்குச் சித்தமான வருஷத்தைக் கூட்டவேண்டுமென்று, கர்த்தரிடத்திலே மன்றாடியிருக்கி றேன் என்றார். அப்படியே இவருக்குக் கருத்தர் நவமான சுகத்தைக் கொடுத்தார். பிறப்பின் பண்டிகையிலே நம்பிக்கை யற்றிருந்த இவர் வருஷப் பண்டிகையிலே, அதிகாலையிலே யெழுந்து தம்முட சகல பாட்டகர்களோடேயும் புறப்பட்டு, கருத்தரைக் கெம்பீரத்தோடே கீர்த்தனம் பண்ணிக்கொண்டு நடந்துபோனார். எல்லாச் சனங்களும் மகிழ்ச்சியோடே அதைக் கண்டு, ஆண்டவரைத் துதித்தார்கள்.

வேதநாயக சாஸ்திரி வியாதிப்பட்ட மறுவருஷமாகிய 1849-ம் வருஷம் அவருக்கு எழுபத்தேழு வயது நடக்கிற போது, சங். கெஸ்றையரும் (Guest) பவரையருமாக (Bower) சேர்ந்து, தங்கள் செலவினாலே ஒரு படமெழுதுகிறவனைக் கொண்டு, அவருடைய சரியான சாயலை யெழுதிவித்தார்கள். அவருடைய தலையும் நெற்றியும், நேர்த்தியான உருபுள்ளது. நல்ல முகக்களையுள்ளவர். அவர் விசேஷித்த நாட்களில் உடுத்திக்கொண்டு புறப்பட்டாரானால் பூருவத்திற் சொல்லப் பட்ட பிரதானாசாரியனுக்கொப்பான பார்வையாயிருப்பார். அவரை எவர்களானாலுஞ்சரி, அவர்கள் இவரைக் கண்டு ஆசாரஞ்செய்யாமற் கடந்துபோகமாட்டார்கள். அவருடைய வார்த்தைகளைத் தட்டிப்பேச, எவர்களும் அஞ்சுவார்கள். அவருக்கு அவருடைய வீட்டாரெல்லாரும் அடங்கி நடப்பார் கள். அவருக்குக் கோபம் வந்ததானால் எலியாத் தீர்க்கனைப்

போல உக்கிரமுள்ளவராயிருப்பார். கருத்தருடைய காரியத்தில் மிகுந்த பக்திவயிராக்கியமுள்ளவர்.

கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளில், கலியாணமுதலிய சந்தோஷ நாட்களில், அக்கியானிகளுக்கொப்பாக இயாதொரு சாஸ்திர சடங்குகளைப் பார்க்கிறதாயிருந்தால், இவர் மனஸ் தாபப்பட்டு அவர்கள் பேரிலுள்ள கருத்தருடைய ஆசீர்வாதம் விலகிப்போக இடமாயிருக்கிறதேயென்று சிந்தித்து, அவர்கள் எத்தனை மேன்பாடுள்ளவர்களாயிருந்தாலும், உடனே அவர்களை முகமுகமாய்க் கண்டித்து, அது கருத்தருக்கேறாத அருவருப்பான காரியமென்பார். அதையவர்கள் சட்டை பண்ணாமலிருந்தால் அவர்களை யொருபொருட்டா யெண்ணாமல் அந்த வீட்டார் இவருக்கு உபசரித்துக் கொடுத்த பணங்களையும் தாம்பூலமுதலிய மரியாதைகளையும் ஏற்றுக்கொள்ளாமல் திரும்பக் கொடுத்துவிட்டு, தம்முட கூட்டத்துடனே எழுந்து வீட்டுக்கு வந்துவிடுவார். அவருடைய நாட்களையெல்லாம் கிறிஸ்தமான சபைகளின் பிரயோசனத்துக்கென்று செலவிட்டு, மிகுந்த கருத்துஞ் சுறுசுறுப்புமாய் ஓயாமல் எழுதி யோசித்துக்கொண்டிருப்பார். அவருடைய பிரயாசத்துக்கு நிகரானவர் இந்த இந்துதேசத்தில் காணப்படக்கூடியதாயிருந்தால் மெத்த அரிதாயிருக்கும்.

ஆனல் அவர் கொஞ்சஞ் சிறுமைப்படுகிறதுண்டு, அப்போது அவர் நாமறியாத அனேகம் வழிகளைக் கர்த்தர் திறப்பார். அவரிடத்தில் அனேகம் பெட்டிகளுண்டு, அவருக்குச் சித்தமானல் ஒரு சின்னக் காக்காய்க் குஞ்சைக்கொண்டு நடத்துவார், நாம் கவலைப்படத் தேவையில்லை, நம்மை விசாரிக்கிறது அவர்பேரில் விழுந்த கடனென்பார். எந்தத் துன்பம் எந்த இக்கட்டு இடைஞ்சல் வந்தாலும், திடாரிக்கமாயிருப்பார்.

பின்னும் அவருடைய பிள்ளைகளெல்லாரும் பிரயாண மாய்ப் போகிற ஒரு பயணத்தில், ஞானதிக்கம்பிள்ளை போக ஆயத்தமாயிருந்தான். ஞானதிக்கத்தை எப்பொழுதும், தனக்கு உதவியாயிருக்கும்படி வைத்திருக்க நினைத்து அவனை அவர்களோடே போகாதபடிக்குக் கருத்தர்பேரிலே ஆணையிட்டுக்கொண்டார். இந்தப்பெரிய ஆணையினிமித்தம், ஞானதிக்கம் போகப் பயந்து, தன் பயணத்தை நிறுத்தினான். அவனுக்கு பதிலாய், எலியா தெய்வசிகாமணிப்பிள்ளை அவர்களைப் பின்சென்றான். இதற்குப் பின்னான மறு வருஷத்திலும், அவருடைய பிள்ளைகள் தெட்சணத்துக்குப் பிரயாணப்பட்டார்கள். அவர்கள் போன இரண்டு மாதத்திற்கு பிற்பாடு இவருக்கு முற்றிலும், பசித்தீபன மற்றுப்போயிருந்தது. இவர் இரண்டு மாதக்காலமாக மிகவும் பலவீனப்பட்டார்.

அவருடைய சமுசாரம் வரோதய அம்மாள் அத்தருணத்திலே, வேண்டிய பணிவிடைகளைச் செய்து, அவரை இரவும் பகலுங் காத்திருந்தார்கள். அப்பொழுது அவர், கருத்தருன்னையென் விருத்தாப்பியத்துக்கு உதவியாக வைத்தார். நீ எனக்கு பணிவிடை செய்ததினாலே, உன் பிள்ளைகளெல்லாம், உனக்குப் பணிவிடைசெய்து, உன்னைத் தாழ்ச்சியில்லாமல் விசாரிப்பார்கள். அனேகம் வேலைக்காரிகளும் உனக்கு ஒத்தாசையாயிருப்பார்களென்றார். அவருடைய இளைய குமாரத்தி மனோன்மணியம்மாள் புருஷன் மாசிலாமணியாபிள்ளை, ஞானசிகாமணியாபிள்ளை குமாரன் செபமணி அவருடைய மருமகள் அருளம்மாள் மற்றுங் குழந்தைகளெல்லாரும், இவருக்குச் செய்த பணிவிடைக்காக, அடிக்கடி சந்தோஷப்பட்டு, நீங்களென் முதுமையிலே செய்த ஒத்தாசைகளுக்கு, ஆண்டவர் உங்களுக்கு நன்மைசெய்து, உங்களுடைய முதுமையிலே உங்களை நன்றாய் விசாரிப்பாராகவென்று ஆசீர்வதித்தார்.

சபையாரில் அனேகர் அவருடைய அந்தியகாலஞ் சமீபித்திருக்கிறதென்றெண்ணி, அடிக்கடி வந்து, பற்பல பதார்த்தங்களையும் கொண்டுவந்து கொடுத்து, அவருடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுப்போனார்கள். சபையிலொரு பெரிய மனுஷன் அவரைக் காண வந்து, ஐயா! உங்களைப் பார்க்க வேண்டுமென்று முன்னொருதடவை வந்தேன். அப்பொழுது நீங்கள் படுத்திருந்தீர்கள். அதை ஞானதிக்கப்பிள்ளை உங்களுக்குச் சொல்லவில்லையா வென்றார். அப்பொழுது சாஸ்திரியார், என்ன நீர் சொல்லுகிறது ஆச்சரியமாயிருக்கிறது. நீரென்னைப் பார்க்கவந்ததையும் பார்க்கவராததையும் கர்த்தர் பார்த்திருக்க மாட்டாரா? நான் வியாதியாயிருந்தேன். என்னைப் பார்க்க வந்தீர்கள், காவலிலிருந்தேன் என்னைக் காணவந்தீர்களென்பார். அவரல்லோ உமக்குப் பலனளிக்கிறவரென்றார்.

ஆனால் அவர் வழக்கம்போலே சாப்பிடக்கூடாமலேயிருந்தது. அந்தப் பெலவீனத்தோடேயிருக்கிறபோது தேவநற்கருணை வாங்க மனதாயிருந்து, சங். பர்சுவேலையருக்குச் (Percival) சொல்லியனுப்பினார். அவர் நல்லது கோவில் முடிந்த பின்பு வீட்டுக்கு வந்து கொடுக்கிறேனென்று சொல்லியனுப்பினார். இவர் வீட்டிலே வாங்குகிறது தமக்கு அத்தனை எழுப்புதலைக் கொடுக்கமாட்டாதென்று வழக்கம்போல இஸ்நானம் பண்ணிக்கொண்டு தேத்தண்ணீர் முதலாய்க் குடிக்காமல், உபவாசத்துடன் உடுத்திக்கொண்டு, தேவாலயத்துக்குப் போய்த் தம்முடைய குடும்பத்தோடே தேவநற்கருணை வாங்கிச் சந்தோஷத்தோடே வீட்டுக்குத் திரும்பினார். என்றாலும் மிகுந்த பலவீனமாயிருந்ததினாலே போக வர மெத்த வருத்தப்பட்டார். பலவீனத்துக்குக் கொஞ்சம் வையின் சேர்த்தால் நலமென்றும், அது பசிதீபனத்தை யுண்டாக்குமென்றுஞ் சொன்னபோது, அவர் அது கெட்ட

வழக்கமாய்ப் பிடித்துக்கொண்டால் மோசம். அப்படிச் செய்யக்கூடாதென்றார். பிற்பாடு அனேகருடைய கேட்டுக் கொள்ளுதலினால் அவர் சம்மதித்தபோது, தினந்தோறுங் கொஞ்சங் கொடுக்கப்பட்டது.

ஒருவரும் நினையாதபிரகாரமாக, கர்த்தர் அவருக்கு வரவரப் புசிக்கவுஞ் சற்றே உட்காரவும் பெலன் அருளினார். ஆனால் காலில் கொஞ்சம் வீக்கம் உண்டாயிற்று. இரண்டு மாதகாலத்துக் கதிகமாய், அவர் பிரியப்பட்ட சகல பதார்த்தங் களையும், வேண்டியமட்டும் இரட்டிப்பாய்ப் புசித்துவந்தார். இது எல்லாருக்கும் ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. இந்தக் காலங்களில் தெட்சணத்துக்குப் போன, அவருடைய மூத்த குமாரத்தி, ஞானதீப அம்மாளும், ஞானசிகாமணிப்பிள்ளை, தேவசிகாமணிப்பிள்ளை முதலான பிள்ளைகளும், அவ்விடங் களில் வந்த வருமானத்திலே, கூடியபோதெல்லாம் செலவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இவர் அவைகளையெல்லாம், சந்தோஷத்தோடே யேற்றுக்கொண்டு, கர்த்தரைத் துதித்து அனேகத்தைத் தம்முடைய மனதிலே எண்ணினபடி காசு களும், பணங்களும், வஸ்திரங்களுமாக ஏழைகளுக்குக் கொடுத் தார். பிற்பாடு ஞானதிக்கம்பிள்ளையைக் கூப்பிட்டு, ஏழை களுக்குக் கொடுக்கிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறா னென்ற வாக்கியத்தைப் பெரிய எழுத்தா யெழுதி, பார்வை யில் ஒட்டிவை யென்று கற்பித்தார்.

பிள்ளைகளிடத்திலிருந்து ஒன்றும் வராதகாலத்தில் ஆண்டவர் பற்பல வழிவகைகளைக் கட்டளையிட்டு யாதொரு தாழ்ச்சியில்லாமல் இந்த வருஷத்தின் பண்டிகையைக் கொண்டாட இடம் பண்ணினார். அவர் அதிகப் பலஹீனமா யிருக்கிறாரென்று பிரயாணம்போயிருந்த பிள்ளைகளை வரும் படி யெழுதினதற்கு, அப்படி யெழுதக்கூடாது, எனக்கென்ன

பலவீனம். அவர்கள் ஆரை இரட்சிக்கப்போகிறார்கள், அங்கேயிருந்தே கர்த்தருடைய நாமத்தை பிரஸ்தாபப் படுத்தட்டுமென்றார். சங். கிறிஸ்தியான் கோலோப்பையர் வந்து இவருடைய பலவீனத்திலே, இவரைக் கண்டு பட்சமாய் வினவினார். அவரைச் சாஸ்திரியார் செபம்பண்ணக் கேட்டுக்கொண்டதின் பேரில் ஐயர் ஆறுதலான ஒரு செபம்பண்ணினார். அப்பொழுது சாஸ்திரியார் அவரை வாழ்த்தி நீர் எல்லாருக்கும் உதவியாயிருக்கும்படி, கர்த்தருமக்கு நீடிய ஆயுசைக் கொடுத்து, உம்மை எப்பிராயீம் மனாசேயைப்போல ஆசீர்வதிக்கக்கடவாரென்றார். இவர் உயிரோடிருந்த நாட்களில் சிலர் அறிந்தமட்டும் 1863-ம் வருஷத்தின் பண்டிகையில்தான் அவர் தெய்வாலயத்தில் பெலவீனத்தால் வந்ததில்லை. பிறப்பின் பண்டிகைச் சதுரும் நடத்தினதில்லை. வீட்டிலேயிருந்து வழக்கம்போல் தேதி வாக்கியத்துக்கு விஸ்தரிப்புச் சொல்லிச் செபம்செய்து, தம்முடைய வீட்டார், தூரத்துக்குப்போன தம்முடைய பிள்ளைகள், ஞானப்பாட்டகர், உபகாரிகள், திருச்சபையார் அனைவரையுந் தற்காக்கவேண்டுமென்று, கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டார். கவலைப்படாதபடிக்கு வீட்டார் அனைவருக்கும் புத்திசொல்லி, "மேசியாவின் மன்றாட்டிருக்குது வேதநாயகன் பாட்டிருக்குது, ஏன் மயங்கிறாய் மனமே" என்ற பாட்டைச் சொல்லிப் பிள்ளைகளைத் திடப்படுத்தி, கிறிஸ்து ஐசுவரியவானாயிருக்குமட்டும் நமக்குக் குறைச்சல்வராது. நீங்கள் மாத்திரம் வழக்கத்தை விடாமல் நானிருந்ததுபோல நீங்களும் எப்பொழுதும் கர்த்தரைப்பாடி, அவரைச் சேவித்து, அவருக்குப் பயந்து நடவுங்கள். அப்பொழுது உங்களை விசாரிக்கிறது அவர்பேரிலே விழுந்த கடனென்றார்.

1808-ம் வருஷத்தில் இவர் தரங்கம்பாடியில் பிரசங்கிக்கிறதை, சில புறச்சமையத்தார் கேட்டு, பொறாமைப்பட்டு

தேசத்தையெல்லாம் எடுத்துவிட்டு, மகாநாடு கூடினபொழுதும், பின்பு திருச்சிராப்பள்ளியில் உரோமானத்தாரிற் சிலர் கட்டு பண்ணிக்கொண்டு அர்ச்சிட்ட தேவமாதாவே, ஒரு பதிதனைக் (Protestant) கொன்றுபோட்டால் எங்களுக்கு மோட்சம் கொடுப்பாயல்லவா வென்று சபதங்கூறிக்கொண்டு, இவரைக் கொன்றுபோட எத்தனமாய் வந்திருந்தபோதும் இவர் தம்முடைய தைரியத்தைக் கைவிடாமல் கிறிஸ்துவைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது விரோதிகளின் இருதயத்தை ஆண்டவர் வேறுபடுத்தினதினாலே, அந்தக் கூட்டத்தின் பெரிய மனுஷரெல்லாரும், இவர் மகா வித்துவானாயிருக்கவேணும் என்று சொல்லி, இவர் பிரசங்கச் சதுரை அமைச்சலாயிருந்து கேட்டுப்போனார்கள்.

1856-ம் வருஷத்தில் இவர் தரங்கன்பாடி (Jubilee) யூபிலே பண்டிகைக்குப் போக ஆசைப்பட்டபோது, இவர் கையிலே ஒன்றுமில்லை, சமுசாரம் பிள்ளைகளுக்காக மாத்திரம் வண்டில் வைத்துக்கொண்டு, கால்நடையாய் நடந்துபோனார். இவர் ஐயன்பேட்டை மட்டும், எட்டு மைல் தூரம் நடக்கிறதற்குள்ளாக, நாலைந்து இடத்திலே உட்கார்ந்துபோனார். இவர் வண்டிலிலேறும்போது, மயக்கமும் வாந்தியும் உண்டாகிறபடியால் வண்டிலி லேறமாட்டார். பல்லக்கில் மாத்திரம் ஏறிப் போகிற வழக்கம். ஆனால் பல்லக்கு வைக்கிறதற்கு இவருக்குப் பணமில்லை. அப்பொழுது இவரோடே கூடப் போனவர்கள், இவரைக் கைத்தாங்கலாய்த் தூக்கிக்கொண்டு, கும்பகோணம் சிரேஸ்தார் கிறிஸ்தியான் சாந்தப்பபிள்ளை வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அந்தப் புண்ணியவான் மனதை, ஆண்டவரெழுப்பினதினாலே, தன்னுடைய நாற்காலிப் பல்லக்கை இவருக்குச் சொந்தமாய்க் கொடுத்து, தரங்கன்பாடிமட்டும், இவரைக் கொண்டுபோய் சேர்க்கப் போகிகளுக்குக் கூலியும் தம்முடைய செலவிலே கொடுத்து, இவரை வழி

விட்டனுப்பினர். இவர் அங்கே போனபோது, அவ்விடத்துக் கிறிஸ்து சபையாரெல்லாரும் இவரை சந்தோஷத்தோடே யேற்றுக்கொண்டு, தங்களாற் கூடியமட்டும் காணிக்கை கொடுத்தனுப்பினர்கள்.

ஆண்டவர்பேரிலே அவருக்கிருக்கிற நம்பிக்கையும் சினேகமும் ஒப்பிட்டுப் பார்த்தால் தாவீது இராசாவின் நடக்கைக்கொத்ததா யிருக்கும். எப்பொழுதும் ஆண்டவர் பேரிலே புதுப்பாட்டை யுண்டுபண்ணி, அவரைக் கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருப்பார். எல்லா இலவுகீக ஞான நூல்களை விட கருத்தருடைய வேதத்தையே அதிக ஆவலோடே வாசிப்பார். அவர் அவைகளில் அடங்கிய கருத்தருடைய ஆச்சரியமான செயல்களையும் நடத்துதல்களையும் வாசிக்கிற போது சிலவேளை சிரித்து மகிழ்ந்துகொண்டிருப்பார். அல்லது கண்ணீர்விட்டு தியானிப்பார். எந்த சந்தோஷத்திலாகிலும், எந்த துக்கத்திலாகிலும், அவ்விதமாய் சந்தோஷப்படவு மாட்டார், கண்ணீர்விடவுமாட்டார். தம்முடைய படுக்கையிலிருந்து விழிக்கிறபோதெல்லாம் செபம் பண்ணுவார். சிலவேளை பெப்ரிச்சிஸ் ஐயருடைய பிரார்த்தனைகளை மனப்பாடமாய்ச் சொல்லிக்கொண்டிருந்து ஒவ்வொரு நாளிலுங் கர்த்தரைத் துதிக்கும்படி, தம்முடைய வீட்டாரை அதிகாலையிலே எழுந்திருக்கக் கண்காணித்து வருவார். மெய்யாகவே அவருடைய இருதயம் பராபரனைச் சினேகித்த மகாத்துமாக்களுடைய இருதயத்துக் கொப்பாயிருந்ததென்று அவரை யறிந்து, அவருடனே வாசம்பண்ணிச் சஞ்சரித்துக்கொண்டிருந்தவர்கள் சாட்சியிடுவார்கள். ஆனால் அவர் மனுஷனாயிருக்கிறபடியினாலே, அவருடைய நடக்கைகளில் அனேகம் பழுதுகளிருக்கும். அவருடைய செய்கைகளெல்லாம் அத்தனை யொழுங்குள்ளதென்று சொல்லவும் இடமில்லையென்று ஒருநாள் அவர் தம்முடைய வீட்டிலே நடந்த காலை ஆரா

தனையில் தம்மைக்குறித்து சொன்னதென்ன வென்றால், "நான் நல்ல மனுஷனென்று நீங்களொருத்தரும் நினைக்க வேண்டாம். நான் கர்த்தருக்கேற்றத வெகுவான பாவங்களைச் செய்த பாவி. ஆனால் என் இரட்சகருடைய நீதியையும் அவருடைய உத்திரவாத புண்ணிய பலன்களையும் கெட்டி யாய்ப் பற்றிப்பிடித்துக்கொண்டேன். ஆனதினாலேதான் இது நாள்மட்டுந் தற்காக்கப்பட்டிருக்கிறேன். அவைகளி னிமித்தியந்தான், பராபரன் என்பேரிலே கிருபையாயிருந்து, எனக்கு வந்த எல்லா மோசங்களையும், இடுக்கண்களையும் விலக்கிமீட்டு, என் மன்றாட்டுகளைக் கிருபையாய்க் கேட்டு, நான் எண்ணின எண்ணங்களை நன்மையாய் முடிக்கிறார்" என்று சொன்னார்.

---

## அத்தியாயம் 9.

---

### வேதநாயக சாஸ்திரியின் ஆசீர்வாதம், அவர் நித்திய ராஜ்யத்தில் பிரவேசித்தது.

சாஸ்திரியார் அப்போதப்போது பனிகாலம் ஒத்துக் கொள்ளாமல் சற்று வியாதிப்பட்டார். இவரென்ன பெல வீனமாயிருந்தாலும், இவர் வீட்டில் நடக்கிற காலை மாலைச் செபம், ஞாயிற்றுக்கிழமைச் செபம், தவறிப்போனதில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமையில் அவர் தம்முடைய குமாரர் களோடே, விசுவாசிகள்ளான பூர்வ பிதாக்கள் நமக்குக் காட்டின மாதிரியின்படியே ஒவ்வொருத்தருக்கும் ஒரு வாழ்த் துதல் சொல்லவேண்டியிருக்கிறது. அதற்கென்று ஒரு நாளைக் குறித்துக்கொள்ள வேண்டுமென்றார்.

பிற்பாடு அவர்தானே, கருத்தர் ஒருவேளை என்னைச் சடுதியாய் அழைத்துக்கொள்ளுகிறதாயிருக்கும், ஆனதினாலே

இப்பொழுதே இந்த நல்ல சமயத்தில் உங்களுக்குச் சொல்லு கிறேனென்று, சங். பிரதரிக் சுவார்ச்சையரவர்களுடைய பூர்வ பிரசங்கம் எழுதியிருந்த ஒரு ஓலைச் சுவடியைத் தம்முடைய குமாரன் ஞானநிக்கத்தின் கையிற் கொடுத்து, நீ இதில் கிழமைதோறும் ஒரு பிரசங்கம் வாசித்துச் செபம்பண்ணி வரவேண்டுமென்று கற்பித்து, கூடிவந்தவர்களெல்லாரையும் முழங்காற்படி யிடச்சொல்லி, துவக்கமாக, ஞானநிக்கம் பிள்ளை தலையிலே கைவைத்து ஆசீர்வதித்து, நீ எனக்கு ஒரு டீக்கனைப்போலே, வெள்ளை நிலையங்கி தரித்துக்கொண்டு பாடப் படிக்க என்னோடேகூட ஞானச் சதுர்ப்பிரசங்கத்துக்கு உதவியாயிருக்கிறவன். இன்றுமுதல் நான் உன்னை ஒரு உப தேசியாக நியமிக்கிறேன். கர்த்தர் உன்னைத் தமக்குச் சித்த மானமட்டும் உயர்த்தக்கடவாரென்றார். இரண்டாவது, தம் முடைய இளையகுமாரன் எலியா தெய்வசிகாமணி பிள்ளையின் தலையிலே கைவைத்து ஆசீர்வதித்து, ஆண்டவர் உனக்குத் தம்மைப் பாடுகிற வரத்தைக் கொஞ்சம் கொடுத்திருக்கிறார். நீ என் ஊழியத்திலே இருக்கக்கடவாய். ஆண்டவர் உனக்குத் தம்மைப் பாடுகிற வரத்தைப் பரிபூரணமாய்க் கொடுக்கக்கடவா ரென்றார். மூன்றாவதாக, தம்முடைய மூத்தகுமாரன் ஞான சிகாமணியா பிள்ளை தலையிலே கைவைத்து ஆசீர்வதித்து, நீ சுவிசேட புராணத்தைப் பாடி பிரசங்கிக்கிறபடியினாலே, நீ எங் கும் அவருடைய நாமத்தைப் பிரசங்கிக்கிற பிரசங்கியாயிருக் கவும், மற்றவர்களுக்கு நன்மாதிரி காட்டி நடந்துகொள்ளவும் உன் பிள்ளைகளெல்லாம் உனக்கு உதவியாயிருக்கவும், ஆண்ட வர் உனக்கு நீடித்த சுகத்தைக் கொடுக்கக்கடவாரென்று முடித் தார். அன்று ஞானசிகாமணியாபிள்ளை பிறந்த நாளாயிருந் தது. தெட்சணத்து இனசனத்தாரும் வந்து கூடியிருந்தார் கள். கடைசியிலே மூத்த குமாரத்தி ஞானதீபஅம்மாள் பிரயா ணப்பட்டு, தெட்சணத்துக்குப் போகிறபோது, ஒரு நிருபமும்



6

எழுதிக்கொடுத்து, தலையிலே கைவைத்து, ஆசீர்வதித்து நீ போகிற இடங்களிலுள்ள எல்லாச் சபைகளிலும், கருத்த ருடைய பாடல்களைப் பாடிப் புராணங்களை விஸ்தரித்து அவ ருடைய நாமத்தை மகிமைப் படுத்தக் கடவாய். அப்போது உனக்கு வெகு நன்மையிருக்கும். ஆண்டவர் உன்பேரிலும், உன் குமாரத்தியின்பேரிலும் கிருபையாயிருக்கக் கடவாரென் றார்.

கடைசியாக அவருக்குத் தொண்ணூற்றொரு பிராய மாகிற 1864-ஆம் ஜன்வரிமீ 24உ ஞாயிற்றுக்கிழமை அவர் இந்த மாயையான உலகத்தை விட்டுப்போகிற நாளாயிருந்தது. அந்த நாளில் அவருடைய மரணமிருக்குமென்று ஒருவரும் நினைத்ததில்லை. வழக்கப்படி வீட்டில் காலை ஆராதனை நடக் கிறபோது, நாற்காலியில் உட்கார்ந்திருந்த வண்ணமாய் எல் லாருக்கும் பொதுவான ஆசீர்வாதத்தைக் கூறினார். அதாவது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையும், பரமபிதாவின் சிநேகமும் பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருக்கக்கடவ தென்பதுதானே. இது அவர் வாயினாலே சொன்ன கடைசி ஆசீர்வாதமும் செபமுமா யிருந்தது. பின்பு அவருக்குக் களைப்பாயிருக்கிறதென்று கட்டிலிலே படுக்கவைத்தபோது, வரவர மேல்மூச்சு அதிகப் பட்டதினாலே சபையாரெல்லாரும் கூடிவந்தார்கள்.

அன்று சாயுங்காலம் நாலுமணிக்குமேலே சிரேஸ்தார் கி. சாந்தப்பபிள்ளை, மோட்ச மகிமையின்பேரிலே உண்டுபண் ணப்பட்ட, 'ஓய் எருசலேமியாரே' என்ற பிரார்த்தனையைப் பாடி, அன்று தினத்திற்குக் குறிக்கப்பட்ட "முப்புரி நூல்" வாக்கியத்தை வாசித்தார். அது பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை யொப்புவிக்கிறேனென்ற வசனமா யிருந்தது. இந்த வாக்கியத்தை யவர் வாசித்து, எழுப்பு

தலாய்ப் பேசிக்கொண்டிருக்கிற சமயத்திலேதானே சாஸ்திரி யாருக்கு மேற்சுவாசங் கண்டது. சி. கி. சாந்தப்பபிள்ளை, 'இயேசுவே தயாபரா' என்ற பிரார்த்தனையைச் சொன்னார். அப்போது ஞானதிக்கம்பிள்ளை 'என்னை மீட்டுத் தாங்கிய' என்ற பிரார்த்தனையை முழுவதும் வாசித்தார். அந்த நேரத் திலே வரோதய் அம்மாள் சாஸ்திரியாருக்குத் தொண்டை காய்ந்துபோமென்றெண்ணி, ஒரு தேக்கரண்டி தாரகம் உள்ளுக்குக் கொடுத்தபோது, வேண்டாமென்று கையினால் தட்டிவிட்டு பேரின்ப சுகத்தை நாடினவராய்ப் புன்சிரிப்புக் கொண்டார். அந்த சமயத்திலே, தஞ்சாவூர் சபையின் குரு வாகிய சங். நேலரையர் வந்து ஆறுதலான ஒரு செபம் பண்ணினார்.

உடனே நோவா ஞானதிக்கம், தன் தகப்பனாரின் தலை மாட்டுப்பக்கத்திலே நெருங்கி நின்றுகொண்டு, ஒருவரையும் அழவொட்டாமல் தடுத்து, உரத்த சத்தமாய்ச் சொன்ன பிரார்த்தனையாவது:

என்மூச் சொடுங்கும் அந்த
கடை யிக்கட்டிலும்
நீர் எனக்கா யிறந்த
ரூபாகக் காண்பியும்.
அப்போ நானும்மைப் பார்த்து
கண் ணோக்கி நெஞ்சிலே
அணைத்துக்கொண்டு காத்து
தூங்கட்டும் இயேசுவே

இந்தப் பிரார்த்தனைக் கவியைச் சொல்லி இயேசுநாதர் பாடுபட்ட தியான செபத்தை வாசித்த பின்பு, அவருடைய மரணம் பாக்கியமான மரணமாயிருந்ததென்றும், தன் இரட்ச கருடைய கையிலே நம்பிக்கையாய்த் தன் ஆத்துமத்தை

ஒப்புக்கொடுத்து, தமது ஓட்டத்தை முடித்தாரென்றும் கண்டு முன் வாசித்த, 'என்னை மீட்டுத் தாங்கிய' வென்ற பிரார்த்தனையை பாடி முடித்தார். அந்த நேரத்திலே மாசிலா மணியாபிள்ளை, தேவசகாயம்பிள்ளை, செபமணி முதலானவர் கள் பாடப் படிக்க உதவியாயிருந்தார்கள். அது சாயுங்காலம் ஐந்துமணி வேளையாயிருந்தது. அந்த நேரத்திலே லுத்தரன் மிசியோன் தேவாலயத்திலும், S. P. G. மிசியோன் ஆல யத்திலும் மணியடிக்கப்பட்டது. பிற்பாடு செபம் பண்ணுகிற இடத்திலே, அவரைக் கட்டிலோடே கொண்டுபோய் வைத்து, அங்கி சால்வை முதலானது போட்டிருக்கிற பாவனையாய்ச் செய்து தலையிலே சரிகைத் தலைப்பாகு வைக்கப்பட்டது. வீட்டிலுந் தெருவிலு மெழுகு வர்த்திகள் விளக்குகள் ஏற்றப்பட்டது.

கனம். லுத்தரன் மிசியோனரியாராகிய சங். அக்ட்டர் லோனி ஐயரும் வந்திருந்து ஆறுதலாகப் பேசி சாஸ்திரியார் சந்தோஷத்தோடே நல்லமரணம் அடைந்திருக்கிறார்களென்று சொல்லி, அடக்கம் பண்ணப்போகிறபொழுது, எந்தப் பிரார்த் தனை பாடலாமென்று வினவினர். கோவா ஞானதிக்கம்பிள்ளை சங். தகப்பனார் பிரதரிக் சுவார்ச்சையரவர்கள் மரணத்தில், அவருக்குப் பிரியமான, "என்னை மீட்டுத் தாங்கிய" என்ற பிரார்த்தனை பாடப்பட்டதென்று, என் தகப்பனார் சொல்லி யிருக்கிறார்கள். அதுதான் என் தகப்பனாருக்கும் பிரியமான பிரார்த்தனை. தங்களுக்குச் சித்தமானால் அதையே பாட உத்தரவாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டதின் பேரில், ஐயர் தம்முடைய சபையின் பிள்ளைகளுக்கு, அந்த இரா கத்தை வருத்துவிக்கிறதாகச் சம்மதித்துப் போனார். சில துரைகளும், துரைசானிகளும் வந்து துக்கம் வினவினார்கள்.

அன்று இராத்திரி விளக்கு வெளிச்சத்திலே ஞானதிக்கம்பிள்ளை பேரின்பக்காதலைப் பாடி இராச்செபம் செய்த

பிறகு சி. கி. சாந்தப்பபிள்ளை, பேரின்பக்காதலில் சில பங்குகளைத் தெரிந்தெடுத்துப் பாடினார். தேவசகாயம்பிள்ளை, ஞானமுத்துபதேசியார் குமாரன் ஐயாப்பிள்ளை, மாசிலாமணியாபிள்ளை முதலானவர்களும் மாற்றிமாற்றிப் பாடிக்கொண்டிருந்தார்கள். அடைக்கல நாட்டையர் குமாரத்தி அன்பாயி ஆச்சி, வெகுநேரமாய்த் தங்களுக்கு மனப்பாடமான பிரார்த்தனைகளை யெழுப்புதலாய்ச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பாக்கிய நாட்டையர் குமாரன் தேவசகாயம் பிள்ளை சற்றுநேரம் சாஸ்திரியாருடைய சரித்திரத்தைச் சொல்லிப் பாடிச் செபம்பண்ணினார். இராசுப்பிள்ளையென்ற தயாநிதிப் பிள்ளை, தஞ்சாவூர் மகாராசா வாத்தியார் மகா-ள-ள-ஸ்ரீ, சுவிசேஷமுத்துப்பிள்ளையின் குமாரன், கண்ணந்தகுடி சத்திரத்திலிருந்து அதிகாலையில் வந்து, இவர் பிரலாப ஒப்பாரி முழுவதையும் பாடினார். மகா-ள-ள-ஸ்ரீ சத்தியநாதபிள்ளை, சாஸ்திரியார் மரணத்தின்பேரில், ஒரு புலம்பலை யுண்டுபண்ணி மிகுந்த ஆறுதலாய்ப் பாடினார். அவரோடே முனிசிப்பு மகா-ள-ள-ஸ்ரீ பாக்கியநாதபிள்ளை குமாரன் அதிஷ்டநாத பிள்ளை மகா-ள-ள-ஸ்ரீ சிவானந்தம்பிள்ளை குமாரன் அண்ணாபிள்ளை, கிறிஸ்தியான்பிள்ளை, ஆசீர்வாத மேஸ்திரி முதலானவர்கள் கின்னரங்கள் தம்பூரா முதலான வாத்தியங்களோடும் பாடிக்கொண்டிருந்தார்கள். சங். ஞானேந்திர ஐயர் அங்கிதரித்துக்கொண்டு, வீட்டிலே கூடின சனங்களுக்கு எழுப்புதலாய்ப் பிரசங்கஞ்செய்து செபம் பண்ணினார். சி. கி. சாந்தப்பபிள்ளையும் ஞானமுத்துபதேசியார் இளைய குமாரன் சாமுவேல்பிள்ளையும் " அன்பின் தெய்வ கிருபாசமுத்திர ஆழமே தயாபரா" வென்ற புலம்பலையும், வேறு சில பாடல்களையும் பாடினார்கள்.

அப்பொழுது சாஸ்திரியாருடைய குடும்பத்தாராகிய ஞானப்பாட்டகர் முதலானவர்கள் பிரசங்கச் சதுருக்கு உடுத்

திக்கொள்ளுகிற வழக்கப்படி வெள்ளை அங்கி, சட்டை, குல்லா முதலானதுகளைத் தரித்துக்கொண்டு வந்து நின்றார்கள். நோவா ஞானதிக்கம்பிள்ளை எல்லா ஜனங்களையும் அமர்ந்திருக்கச் சொல்லி செய்த உபந்நியாசம் :

" கர்த்தராகிய ஆண்டவர் சாஸ்திரியாருடைய தகப்பனார் தேவசகாயம்பிள்ளையை, அவர் அக்கியான இருளிலிருந்த பொழுது தெரிந்துகொண்டு தம்மை வணங்கும்படி செய்து அவருடைய குமாரனாகிய இந்த நம்முடைய நல்ல தகப்பனாகிய சாஸ்திரியாரை, அவருடைய பனிரண்டாம் பிராயத்திலே சங். தகப்பனார் பிரதரிக் சுவார்ச்சையரைக்கொண்டு, இவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுவந்து, மனுஷனாக்கி, சபைக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் பிரயோசனமான அனேக விதமான நூல்களையும், புராணங்களையும் உண்டு பண்ணும்படி வரமளித்தார். இவர் தம்முடைய ஆயுளினனெல்லாம் கர்த்தரையே பாடிக்கொண்டிருந்தார். இஸ் அயினசு சரபோசி மகாராசா ஒரு சின்னப் பாடல்மாத்திரம் விக்கிரகத்தின்பேரில் பாடவேண்டுமென்று உபசரித்துக் கேட்டுக்கொண்ட அவருடைய கேள்விக்கு செவிகொடுக்காமல், அந்த இராசாவின் சபையிலுள்ள புறச்சமையத்தாரின் கண்களுக்கு முன்பாகக் கர்த்தருடைய நாமத்தையே மகிமைப்படுத்தினார். தரங்கம்பாடி, தஞ்சாவூர், சென்னப்பட்டணம், திருச்சிராப்பள்ளியிலுள்ள திருச்சபையாரனைவரும், சாப்பிளன் போலே ஐயர் முதலான ஐயர்மார்களும், இவருக்கு வெள்ளை நிலையங்கி தரிப்பித்து சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியென்று பட்டப்பெயரிட்டு, விசேஷித்த நற்சாட்சி நிருபமுமெழுதிக் கொடுத்தார்கள்.

ஆனல் பிற்காலத்தில் சிலர், அந்தப் பட்டத்தையும் மரியாதையையும் வேறுபடுத்த நினைத்தாலும், அவர்கள்

சித்தம் வாய்க்காமல்போயிற்று. கர்த்தர் தம்முடைய அடியானாகிய இந்த சாஸ்திரியாரவர்களை, அவருடைய அந்திய காலமாகிய தொண்ணூற்றோராம் வயதுமட்டும் மேன்மைப் படுத்தி, யாதொரு தாழ்ச்சியில்லாமல் விசாரித்துவந்தார். அவருடைய மரணம் பாக்கியமாய் முடிந்தது. அவருடைய சரீரம் பூமிக்குள் அடக்கப்பட்டு மறைக்கப்பட்டுப் போவதைக் குறித்து நாமெல்லாரும் நம்பிக்கையற்றவர்களைப்போல துக்கப்பட நியாயமில்லை. ஏனென்றால் நம்முடைய சீவன், கிறிஸ்துவுடனேகூட ஒளிக்கப்பட்டிருக்கிறது. என்பேரில் விசுவாசிக்கிறவன் என்றைக்கும் மரணத்தைக் காணமாட்டானென்று, நம்முடைய இரட்சகர் சொல்லியிருக்கிறார். அவர் மரித்தார், நாமும் மரிக்கவேண்டும். அவர் மகிமையாய் உயிரோடெழுந்திருந்தார், நாமுங் குழியில் தரிக்கமாட்டோம்; இந்த தேகத்தோடேதானே எழுந்திருப்போம். இந்த நம்முடைய சொந்தக் கண்ணினாலேதானே அவரைத் தரிசித்து, நம்முடைய வழிகாட்டியாகிய இந்த நல்ல தகப்பனை, மோட்ச இராச்சியத்திலே, கர்த்தருடைய மகிமையின் ஆசனத்துக்கு முன்பாக, அவரை ஓயாமல் கீர்த்தனம் பண்ணித் துதித்துக் கொண்டிருக்கக் காண்போமென்று சொல்லிச் செய்த,

## ஜெபம்.

மகா இரக்கமுங் கிருபையுமுள்ள கர்த்தாவே, இத்தனை நாட்களாக இந்த வீட்டின் பேரிலேவந்த எல்லாத் தின்மைகளையும், மோசங்களையும் இடுக்கண்களையும் விலக்கி இரட்சித்த மகாவல்லமையுள்ள தேவனே, இப்பொழுது இந்த இடத்திலே உம்மை இரவும் பகலும் ஆராதித்துவந்த உம்முடைய தாசனாகிய எங்கள் தகப்பனை உம்முடைய இராச்சியத்துக்கு அழைத்துக்கொண்டீரென்று மாங்கிஷப்பிரகாரமாக விசனப்படுகிற எங்கள் இருதயத்தின் துயரத்தை மாற்றி

அவர் பின் வைத்துப்போகிற அவருடைய வீட்டாராகிய எங்களைக் கைவிட்டு விடாமல், என்றென்றைக்கும் உம்முடைய கிருபையை எங்கள் பேரில் வைத்து, திருச்சபையாரனைவரும் இன்னமும் இந்த உம்முடைய அடியானின் வீட்டைச் சினேகித்து வரும்படியான இருதயத்தை அவர்களுக்குக் கொடுத்து நாங்களும்மை இடைவிடாமல் துதித்து இஸ்தோத்தரித்துக் கொண்டிருக்கும்படியான வரத்தை எங்களுக்கு அருளிச்செய்யும். இந்தச் சமையத்திலே இவ்விடத்தில்லாத எங்கள் சகோதரர் சகோதரிகள் இந்தச் செய்தியைக் கேட்டுத் துயரப்படும்போது நீர்தானே அவர்கள் விசனத்தை மாற்றித் தேற்றரவருளும். கடைசியில் நாங்கள் உமக்குள்ளே பிழைத்து உம்முடையவர்களாக இருந்து, சந்தோஷமான மரணத்தையடைய எங்களெல்லாருக்கும் தயைசெய்தருளும், சுவாமி. ஆமேன்."

என்று சொல்லி முடித்தபோது எல்லோரும் பரமண்டல செபத்தை சொல்லி வேண்டிக்கொண்டார்கள்.

அப்பொழுது ஞானதிக்கம்பிள்ளை எழுந்து நின்று, சாஸ்திரியார் தம்மைச் சேமிக்கும்பொழுது, தம்முடைய கையிலே எழுதிவைக்க பதப் புஸ்தகத்திற் குறிப்பித்திருந்த பிரகாரம்.

"இயேசு ராசா என்னையாளும் நேசா,"
"யேசுநாதா கடைக்கண் பார்,"
"கிருபாகரனே தோத்திரமையா."

என்ற மூன்று பதங்களையும் பாடினபின்பு நான் எப்பொழுதும் என் தகப்பனுருக்குப் பிரசங்கச் சதுருக்குப் புஸ்தகமெடுத்துக் கொடுக்கிறவன். இந்தப் பாடலை இன்று தினத்தில் அவர்கள் கட்டளைப்படியே பெயர்த்தெழுதி கடைசியாய் அவர் கையிலே கொடுக்கிறேனென்று சாஸ்திரியார் கையிலே கொடுத்த உடனே, ஞானேந்திர ஐயர் செபம் பண்ணினர். சி. கி. சாங்

தப்ப பிள்ளை "வானோர் வணங்குஞ் சருவேசா" வென்ற புலம்பலைப் பாடினார்கள். சத்தியநாதபிள்ளையின் கூட்டத்தார் புலம்பல், ஞானபத கீர்த்தனங்களை இனிதான வாத்தியங் களுடனே பாடிக்கொண்டிருந்தார்கள். சங். நேலரையரும், அவர் சமுசாரமும் வந்து நின்றார்கள். ஏராளமான சனங்கள் சாஸ்திரியாரைப் பார்க்கவேண்டுமென்று கூடிவந்ததினால் வீட்டிலே சனங்களுக்கு இடங்காணாமல் அதிக நெருக்க மாயிற்று. இதினாலே சதுர்பண்ணுகிற வெளிப்பந்தலிலே* யாவருக்குங் காணப்படும்படி வைக்கவேண்டியதாயிற்று. அப்பொழுது கோட்டைக்குள்ளிருக்கும் வேதநாயக ஐயர் செபம் பண்ணினார். உயிர்த்தெழுதலின்பேரிலே எழுதப் பட்ட பிரார்த்தனைக் கவியிலொன்றைச் சபையார் பாடின பின்பு ஞானேந்திர ஐயர் செபம் பண்ணினார். சாஸ்திரியா ருடைய பிள்ளைகள், பாட்டகர் முதலானவர்கள் 'ஆருந்துணை யில்லை' யென்கிற பாடலைப் பாடினார்கள். இரண்டு தேவா லயத்திலும் மணி ஓயாமல் அடிபட்டுக்கொண்டேயிருந்தது. எல்லாத் துரைகளுக்கும் அவர்கள் தொப்பியிலும், தோளின் பேரிலும் வெண்வஸ்திர மரியாதை செய்யப்பட்டது. அப் பொழுது அவரைப் பல்லக்கிலேற்றி எடுத்துக்கொண்டு, அவ ரைப் பார்க்கவேண்டுமென்று கூடிவந்த தேச சனங்களுடைய விருப்பத்துக்குத் திருப்தியுண்டாக்கச் சுற்றிப்பிரவேசம் வர வேண்டியதாயிற்று.

சிரேஸ்தார் சாமுவேல்பிள்ளை, இயேசுதாஸ்பிள்ளை யிரு வரும், வெண்சாமரைப்போட்டு சுகந்த வாசனைத் தயிலங்களைத் தெளித்துக்கொண்டு நடந்துபோக, இருவர் முன்னாகச் சென்று வெண்பாவாடை வீச, சிலர் புஷ்பங்களை அள்ளி அள்ளிச் சொரிந்துகொண்டுபோக, சனம் லுத்தரன் சபையா

* தற்காலம் காணப்படும் ஜெபமண்டபம் 1870-ஆண்டில் ஞான தீபசாஸ்திரி அம்மாளால் கட்டப்பட்டது.

ரும், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் ஒரு முறை பிரார்த்தனை பாட, இங்கிலீஷ் சபையாரும், பிள்ளைகளும் ஒருமுறை பிரார்த்தனை பாட, சத்தியநாதபிள்ளை, அதிஷ்டநாதபிள்ளை, முதலானவர்கள் தம்பூரா முதலான வாத்தியங்களோடே கீர்த்தனைகள் பாடிக்கொண்டுபோக, பின்னாலே சாஸ்திரியாருடைய பாடல்களை, அவருடைய பிள்ளைகள், பாட்டகர் முதலானவர்கள் பாடிக்கொண்டுபோக, சகல துரைகளும் துரைசானிகளும் கூடப் பின்சென்று, தோரணம் வாழைகள் கட்டி யலங்கரிக்கப்பட்ட வீதிவழியாய்ச் சுற்றி, கோவிற் சன்னதி முகப்பில் சங். நேலரையரும், ஆபர்ட்டையரும் செபப்பிரமாண ஒழுங்குப்படி வாசித்துக்கொண்டு தேவாலயத்திற் சென்று கிரமப்படியே வாசிக்கவேண்டியதை வாசித்து உள்ளும் புறம்பும் அலங்கரிக்கப்பட்ட பெட்டியிலே அவரை வைத்தார்கள். அப்பொழுது வேதியர்புரம் சாஸ்திரப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் சங்கீதம் பாடினார்கள். சபையின் பிரதான மனுஷர்களாகிய வைக்கில் சுந்தரம்பிள்ளை, ஆனந்தநாதபிள்ளை, உபதேசியார் பொர்திறுத்துப் பிள்ளை, ஆசீர்வாதம் பிள்ளை, ஞானசிகாமணிப்பிள்ளை, பாக்கியம்பிள்ளை, சிரேஸ்தார் கி. சாந்தப்பபிள்ளை, சிரேஸ்தார் சாமுவேல் பிள்ளை, இயேசுதாஸ்பிள்ளை, கண்ணுப்பிள்ளை முதலானவர்கள் பெட்டியை எடுததுக் கொண்டு, தேவாலயத்திற்குப் பின்னாக இருக்கிற மிசியோன் உயிர்த்தான பூமியில் கட்டப்பட்டிருந்த கல்லறைத் தானத்தில் வைத்தார்கள். சங். நேலரையரும், ஆபர்ட்டையரும் முறைப்படியே செபம் வாசித்து, அடக்கம்பண்ணினார்கள். ஆமென்.

இதோ என் ஆத்துமாவே
நீ நம்பினோர் கர்த்தாவே
பயப்படா திரு
நீ யவர் கைக்குள்ளாக
இரு அப்போ நன்றாக
எல்லா முடிந்து போகுது.

நம்முடைய நாமத்தைக் கனப்படுத்துகிறவர்களை, நாம் கனப்படுத்துவோமென்று கர்த்தர் சொன்னபிரகாரம் தஞ்சாவூர் சபையாரும், கனம் ஐயர்மார்களும், சங். வேதநாயக சாஸ்திரி யார் பேரிலே வைத்திருந்த எண்ணத்தையும், பட்சத்தையும், அன்று தினத்தில் வெளிப்படுத்தினார்கள்.

"புத்தியை கற்றுக்கொடுத்தவர்கள் ஆகாச மண்டலத்தின் ஒளியைப்போலேயும், அநேகரை நீதிக்குள்ளாக்கினவர்கள் நட்சத்திரங்களைப் போலேயும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாய் பிரகாசித்திருப்பார்கள்" தானியேல் 12, 3. (Fabricius translation.)

Let us now praise famous men, and our fathers that begat us.

The Lord hath wrought great glory by them through His great power from the beginning.

Such as did bear rule in their Kingdoms, men renowned for their power, giving counsel by their understanding, and declaring prophecies:

Leaders of the people by their counsels, and by their knowledge of learning meet for the people, wise and eloquent in their instructions:

Such as found out musical tunes, and recited verses in writing: Richmen furnished with ability, living peaceably in their habitations: All these were honoured in their generations, and were the glory of their times. There be of them, that have left a name behind them, that their praises may be reported.

And some there be, which have no memorial who are perished, as though they had never been; and are become as though they had never been born; and their children after them.

But there were merciful men, whose righteousness hath not been forgotten. With their seed shall continually remain a good inheritance, and their children are within the covenant. Their seed standeth fast, and their children for their sakes.

Their seed shall remain for ever, and their glory shall not be blotted out.

Their bodies are buried in peace; but their name liveth for ever more.

ECCLESIASTICUS.

---

## அத்தியாயம். 10.

---

### நூல்களின்பேரில் மதிப்புரை.

---

#### 1. செபமாலை.

*வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய நூல்களில் செபமாலை வெகு சிரேஷ்டமானதால் அதை முதலாவதாக ஆராய்ந்தறியலாம். இதற்கு அவரே எழுதின முகவுரை பின்வருமாறு :*

*" இப் புஸ்தகம் ஐரோப்பியருடைய உன்னதமான பாடல்களாகிய பிரார்த்தனைப் புஸ்தகத்துக் கொப்பாய்ச் செய்யப்பட்டது.*

*இஃது நாடோறுங் காலை மாலைச் செபத்திற் செபப் பிரமாணத்தைப்போல வழங்கப்பட்டு வருவதனால் இதற்குச் செபமாலையென்று பெயராயிற்று.*




TOMB OF VEDANAYAGA SASTRIAR

முதற்பாகத்திலே பிதாச்சுதன் பரிசுத்தரூபியென்று திரியேக பராபரனுடைய தேவசுபாவ மகிமைகளையும், தேவ லட்சணங்களையும், இரட்சிப்பின் கிரியைகளையும் விக்கிரக தேவர்களின் துன்மார்க்கங்களையும், மகிழ்ச்சியின் காலத்துக்கும், உபத்திரவ காலத்துக்கும், மரணகாலத்துக்கும், நித்தியத்துக்கும் அடுத்த சில தோத்திரங்களையும், சபையில் வழக்கமான பதினைந்து செபங்களையும், இலித்தானியாகிய சமுதாய விண்ணப்பங்களையும், தேவபத்திக்கடுத்த சில உபதேசங்களையும் பற்பல பாவினங்களாய்ப் பாடி அங்கங்கே ஸ்தாபித்து நிதமொன்றாக மாதத்தின் முப்பத்தொரு தேதிக்குச் சரியான முப்பத்தொரு செபமாலைகள் உண்டு.

இரண்டாம் பாகத்திலே பன்னிரண்டு விருத்தமாய்ப் பாடப்பட்ட பன்னிரண்டு இலக்க தோத்திரத்தில் வேதத்தின் பிரதான சங்கதிகளெல்லாம் அடங்கியிருக்கும்.

குருக்கள் உபதேசிகள்முதல் வாத்திமார்மட்டும் மனப்பாடம் செய்திருந்தால் வேதாகமங்களிற் கேட்ட கேள்விக்கெல்லாம் ஏற்ற மறுமொழி கொடுக்கச் சமர்த்தராயிருப்பார்கள்.

பூர்வத்தில் தாவீது ஆசாப்பு முதலானவர்கள் பாடின சங்கீதங்களில் தங்கள் பெயரை நாட்டினதுபோல இங்கேயும் செபமாலைக்குச் செபமாலை அதின் அந்தத்தில் வேதநாயக சாஸ்திரியார் தன் பெயரை நாட்டினான். அது பெருமையினால் அல்ல, கிருபாசனத்தின் நினைப்புக்கென்றும் இதைச் செய்தவன் இன்னானென்று விரும்பினோர் அறிந்துகொள்ளவுந்தானே. யாத். 21. 9-12-29.

இச் செபப்பிரமாணத்தை வாசிக்கிற கிறிஸ்துவின் அவயவங்களாகிய திருக்கூட்டங்களே! ஐரோப்பியருடைய தேவாராதனைத் திட்டங்களைக் காட்டுஞ் செபப்பிரமாணத்

துக்கு ஒப்பாக உங்களுக்கும் உங்கள் தேசாசாரத்தின்படி யாதொரு தேவாராதனைத் திட்டம் இருக்கவேண்டுமென்று சிந்தித்து வேதநாயக வேதசாஸ்திரி மிகுந்த கருத்தோடும் பிரயாசத்தோடும் 1818-ஆம் முதல் 1855-ஆம் மட்டுஞ் சென்ற 45 வருடக்காலத்தில் வருடாந்திரங் கொஞ்சம் இந்தச் செபமாலையை உண்டுபண்ணி இப்போது உங்களுக்குக் காணிக்கையாக அனுப்பி, நீங்களும், உங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், தன்னையுந் தன் பின்னடியாரையும் கர்த்தர் நிமித்தியமாக நினைக்கவும் சிநேகிக்கவும் மன்றாடிக் கொள்ளுகிறான்.''

சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரி.

இதிலே முக்கிய கருத்து தேசாசாரத்திற்கு ஒத்திருக்கும்படி ஐரோப்பியருடைய பிரார்த்தனை (Hymn Book) புஸ்தகத்துக் கொப்பாய் அவர் செபமாலையை இயற்றினார். அக்காலத்தில் புதிதாய் ஹிந்து மார்க்கத்திலிருந்து கிறிஸ்து மார்க்கத்திற்குட்பட்டவர்களுக்கு இந்த செபமாலை அருமையாயிருந்திருக்கும். ஏனென்றால் ஹிந்து பக்தர்கள் உண்டு பண்ணின இன்னிசையமைந்த பாட்டுகளின் பாவனையாய் ஜெபமாலை கிறிஸ்து மார்க்கத்திற்கு உபயோகமாய் செய்யப்பட்டிருக்கிறது. தற்காலத்து கிறிஸ்தவர்களுக்கு 'மாணிக்க வாசகர் திருவாசகம்,' 'திருநாவுக்கரசு தேவாரத்திரட்டு,' நடராஜப்பத்து,' முதலிய ஹிந்து பக்தர்களுடைய விசேஷமான நூல்கள் மூடப்பட்ட புஸ்தகங்கள். கிறிஸ்து மார்க்கத்தின் கொள்கைகளை உபதேசிப்பவர்கள் பெரும்பாலும் ஹிந்து மார்க்கத்தை விக்ரக ஆராதனை மதம் என்று கற்பிக்கிறார்கள். விக்ரக வணக்கம் இருந்தாலும் கிறிஸ்து பக்தர்களிடம் காணப்படும் தெய்வசிநேகம் அல்லது சாக்ஷாத்சம்பந்தம் (personal religion) ஹிந்து பக்தர்களிடமும் (ஆழ்வார்கள்) இருந்திருக்கிறது. இது மேற்கூறிய ஹிந்து பாடல்களை வாசிப்போருக்கு

எளிதில் புலப்படும். உதாரணமாக கீழே பெயர்த்தெழுதியிருக்கும் வரிகளை சோதிக்கலாம்.

1. மாணிக்கவாசகர் போற்றித்திருவகவல்.

"மூவா நன்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னுருருவ விகிர்தா போற்றி
கன்னுருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவாவென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி."

2. நடராஜப்பத்து.

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறை நான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டல மிரண்டேழும் நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க் குயிரும் நீ
பிறவும் நீ ஒருவநீயே
பேதாதி பேதம் நீ பாதாதிகேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ யிருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்தகுரு நீ
புகழொணா கிரகங்க ளொன்பதும் நீ யிந்த
புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிக ளீன்றவப்பனே
என்குறைக ளார்க் குரைப்பேன்
யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

தாயா ரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தம்பிறவி யுறவுகோடி
தனமலைக் குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன

சேயர்க ளிருந்தென்ன குருவா யிருந்தென்ன
சீஷர்க ளிருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க
உதவுமோ யிதுவெலாம் சந்தையுற வென்றுதான்
உன்னிரு பாதம் பிடித்தேன்
யார்மீது வுன்மன மிருந்தாலுமுன் கடைக்கண்
பார்வையது போதுமே
யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங்கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
யிருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
யிதுவுனக் கழகுதானோ
என்னன்னை மோகமோ யிதுவென்ன கோபமோ
யிதுவோவுன் செய்கைதானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
யாரைலும் நான் விடுவேனோ
உன்னைவிட் டெங்குசென்றாலும் விழலாவனோ
நான்உனை யடுத்துங் கெடுவேனோ
ஓகோவி துன்குற்ற மென்குற்ற மொன்றுமில்லை
யுற்றுப்பார் பெற்றவையா
என்குற்ற மாயினும் உன்குற்ற மாயினு
மினியருளளிக்க வருவாய்
யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.*

---

* அடுத்தடுத்து வருகிற கடைசிவரிகளைக் கவனிக்கவும். இது செபமாலையிலும் உண்டு.

## 3. திருநாவுக்கரசு தேவாரத்திரட்டு.

அப்பனீ யம்மை நீ யையனு நீ
யன்புடைய மாமனு மாமியு நீ
யொப்புடைய மாதரு மொண்பொருளு நீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூரு நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
யிப்பொன்னீ யிம்மணி நீ யிம்முத்து நீ
யிறைவ நீ யேறூர்ந்த செல்வ னீயே.

இவைகளுக்கு நிகரானதும் மேலானதுமான எதிரொலிகளை ஜெபமாலையில் கேட்கலாம். திருஷ்டாந்தமாக:

ஜெப. 1. அடி 2.

சத்தியவேதத் தொளிவேபோற்றி
சயமேசுயமே மயமேபோற்றி
தம்முன்னொன்று மில்லாய்போற்றி
சற்குருஞானச் சாமிபோற்றி
பத்துரைவேதப் பொருளேபோற்றி
பரனேகிருபா கரனேபோற்றி
பரமும்புவியும் பாதலம்யாவும்
பணியப்பெருமை பெற்றாய்போற்றி
சுத்ததிருச்சுவி சேடாபோற்றி
தோன்றுஞ்சபையின் றுணைவாபோற்றி
சொல்லும்புகழுக் கேற்றாய்போற்றி
துங்காபுங்கா சங்காபோற்றி
யெத்திசையோரும் ஈடேறிடவே
யிரட்சகனாக வந்தாய்போற்றி
யெனைமீண்டவனே யெனையாண்டவனே
யேசுநாதா போற்றி போற்றி.

## அடி. 10.

விண்ணதின்வாழ்வைத் தருவாய்போற்றி
வினைபவநீக்கி விடுவாய்போற்றி
வேதனைநோயைத் தீர்ப்பாய்போற்றி
வேளையறிந்து வருவாய்போற்றி
மண்ணதின்வாழ்வும் பகுத்தாள்போற்றி
மன்ருட்டேழுங் கொடுத்தாள்போற்றி
மரணமதளவுங் காப்பாய்போற்றி
மறுமையிலுன்பால் வைப்பாய்போற்றி
கண்ணறிவொன்றுங் கழலதிரண்டுங்
காயமதைந்துங் கருதாய்போற்றி
கவலைகள்மூன்றுங் கெடவிடுபோற்றி
கதிப்பத நான்கும் பெறவருள்போற்றி
யெண்ணினவெண்ண முடிப்பாய்போற்றி
யென்பவம்யாவும் பொறுப்பாய்போற்றி
யெனைமீண்டவனே யெனையாண்டவனே
யேசுநாதா போற்றி போற்றி

## ஜெபம் 6. அடி 5.

அனையுநீ மனையுநீ அருளுநீ பொருளுநீ
அணிகலப் பொக்கிடமுநீ
அறமுநீ திறமுநீ சூட்சாதிசூட்சநீ
ஆனந்த ஆச்சரியநீ
மனமும் விற்பனமுநீ நினைவுமுற்பனமுநீ
வாணிபமும் ஆணுவமுநீ
மந்திரநீ தந்திரநீ சிந்தையின்கருமநீ
மரவுநீ யாதரவுநீ
கனமுநீ தனமுநீ நயமுநிச்சயமுநீ
காரணமும் ஆரணமுநீ
கதியுநீ மதியுநீ தெரிவுநீ பரிவுநீ
கருணைகுரு குலதெய்வநீ

சணமுநீ யினமுநீ சகல சாம்பிராச்சியநீ
சத்தியத் துறுதிதருவாய்
தாதையாகியவஸ்து வேதமாளிகைரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

அடி 8.

துக்கத்தில் ஆறுதலென் வாழ்விற் களிப்புநீ
துன்பத்தி லெனதின்பநீ
தொறவும் வேலையின் அலுவல் பகலிலென்சிந்திப்பு
தூக்கத்தி லென்சொற்பனம்
பக்கத்திராவினில் அடைக்கலம் இருளதிற்
பகவத்தி யெனதுசத்தி
படுகுறையிலே சுவரி யங்கசப்பினிலமுது
பலதாழ்வி லெனதுவாழ்வு
மிக்க பெலயீனத்தி லென்பெலன்ரெய்வுற்ற
மெலிவதனி லெனதுவலிமை
விழிப்பிற் குறிப்புறவின் ஞானபானந்நீ
விமோசனம் பவநாசனம்
தக்கயோக்கிய மனோக்கிய சலாக்கியமுநீ
சகல பாக்கியமு நீயே
தாதையாகியவஸ்து வேதமாளிகைரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

நான் முன் கூறியபடி செய்யுள்நடை மாத்திரம் பிரதி தொனியென்று அறிக. மற்றபடி செபமாலை நூதனமான கருத்தும் பொருளும் அமைந்த வேதநாயக சாஸ்திரியின் சுயகிரந்தகரணம். செய்யுள்நடை யாவருக்கும் பொதுவானது. ஆனால் ஹிந்து பக்தர்களின் சுபாவத்தையும், இயல்பையும் போங்கையும் அனுசரித்தாலும் நூதனமான கருத்துகளையும் ஞானஅர்த்தமுடைய பதங்களையும் தன்னுடைய ஜெபமாலை யில் கிறிஸ்து மார்க்கத்திற்கு பொருத்தமாக அமைத்திருக் கின்றார்.

மேலே பெயர்த்தெழுதப்பட்ட கடைசிச் செய்யுள் அடி (stanza) கிறிஸ்து பக்தர்களுக்கு அருமையானது. பொருள் உள்ளத்தை பரவசப்படுத்தி, ஆறுதலை அளிக்கிறது. பெப்ரிசியஸ் ஐயர் மொழிபெயர்த்த ஞானப்பாட்டு மாலையில் சில பாட்டுகள் சாஸ்திரியாருக்கு மனப்பாடம். இந்தப் பாட்டு களின்பேரில் இவருக்கு நல்ல அபிமானமும் வாஞ்சையும் ஏற்பட்டிருந்திருக்கிறது. 138-ம் ஞானப்பாட்டின் 15, 17 வது அடிகளை மேற்கூறிய செய்யுள் அடியில் பொருத்தி யிருக்கிறார்.

15. "நீர் ராவில் என் நட்சத்திரம்
இருளில் என் தீவர்த்தி
குறைவில் என் ஐஸ்வரியம்
என் தாழ்வில் என் உயர்த்தி
கசப்பிலே என்மதுரம்
நான் தொய்ந்தால் மீண்டும் என்மனம்
பலக்க நீர் என்சக்தி."

17. "நீர் துக்கத்தில் என் ஆறுதல்
நீர் வாழ்வில் என் களிப்பு
நீர் வேலையில் என் அலுவல்
பகலில் என் சிந்திப்பு
நீர் ராவில் என் அடைக்கலம்
நீர் தூக்கத்தில் என் சொர்ப்பனம்
விழிப்பில் என் குறிப்பு."

இதில் பழுது ஒன்றுமில்லை. ஐரோப்பிய பக்தர் களுடைய ஆத்ம உணர்வினால் வெளிப்பட்ட பொருட்களையும் ஹிந்து பக்தர்களின் விஷயத்தையும் ஒன்று சேர்த்து எழுதினது யாவரும் மெச்சத்தக்க சுய சாமர்த்தியமே. ஒப் பிட்டு நோக்குங்கால், சாஸ்திரியாரின் கவி சற்றேனும் பின் வாங்க வில்லை. 6-ம் நாளுக்குரிய செபமாலை பொருளலங்

காரம் தவிர, சொல் அலங்காரமும் அமைந்து விளங்குகின்றது. உள் எதுகை அல்லது அகப்ராஸம் (internal rhymes) ஏராளமாக காணப்படுகிறது. இவைதான் மறைந்துகொண்டு கர்ண மூலமாய் ஆத்மாவைக்கவர்ந்து கொள்ளைகொண்டு போகிறது. செபமாலை புஸ்தகத்தில் வாசிப்போர் சமமான வேறு செய்யுள்களை அறிந்துகொள்ளலாம்.

சாஸ்திரியார் 20-ம் செபமாலையில் விக்ரக ஆராதனையை சின்னபின்னமாக்கி, ஆகடியம் செய்து எழுதியிருக்கிறார். இவர் ஹிந்து பக்தர்களின் விநயத்தைப் பின்பற்றி, கிறிஸ்தவர்களின் ஆத்மவிர்த்திக்கென்று செபமாலை புஸ்தகத்தை உண்டு பண்ணினாலும் ஹிந்து மார்க்கம் முழுவதும் விக்ரக ஆராதனையாகவே பாவித்து வீண் பத்திநாசம்* எழுதினது புரியவில்லை. ஒருக்கால் தன்னுடைய முன்னோரின் இருளடைந்த அஞ்ஞானத்தை யறிந்து இவருடைய இருதயம் கடினப்பட்டுப் போயிருக்கலாம். ஞானத்தச்ச நாடகத்திலுள்ள "ஜாதியேதுகாண்" என்ற பாட்டின் 22-ம் அடியில் இதை காட்டியிருக்கிறார்.

"கட்டாய் நெல்லையின் வேதசாஸ்திரி
கணத்த இனங்கள் பணிந்து போற்றிய
புட்டாரத்தியும் நெல்லையப்பனைப்
புணர்ந்த கூத்தாடி பறைச்சியல்லவோ."

நெல்லையப்பரையாவது அவருடைய சொந்த மனைவியையாவது வணங்காமல் அவருடைய வைப்பாட்டி தேவதையை வழிபட்டு வந்தவர்களின் பரம்பரை சாஸ்திரியார். அவர் வெளிச்சம் அவரிடத்தில் வந்து பிரகாசித்த பிறகு அவருக்கு அந்த ஞாபகம் அதிக சஞ்சலத்தை கொடுத்திருக்கும். கீழ்த்தரமான ஹிந்துமார்க்க வகுப்புகளில் அடங்கிய ஆபா

* ஆனால் "ஹிந்து பக்தி நாசம்" என்று அவர் எழுதவில்லை.

சங்கள் கொஞ்சமல்ல. பெண்சாதியைவிட வைப்பாட்டியின் பேச்சைதான் புருஷர் கேட்பார்களாம். ஆகையால் இவர்கள் நெல்லையப்பரை நேராய் வணங்காமல் அவருடைய வைப்பாட்டியின் மூலமாய் ஜெபித்து வாழ்ந்தார்களாம். இதிலே 'பக்தா' மார்க்கம் ஒன்றுமில்லை. விக்ரக ஆராதனை தவிர அருவருப்பான கொள்கையும் அடங்கியிருக்கிறது. இதுதான் சாஸ்திரியாரின் ஹிந்து மார்க்கத்துக்கு விரோதமான துவேஷத்திற்கு ஆதிமூலமென்று நாம் ஊகித்துக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. தில்லைநடராஜனை வணங்கியிருந்தால் இவ்வளவு மன துவேஷம் ஹிந்து மார்க்கத்தின்மேல் பாராட்டியிருக்க மாட்டார். உவமிக்கையில் புட்டாரத்தியை கும்பிடுவது அதிக கேவலமான வணக்கம் என்று உணர்ந்து, கிறிஸ்து வணக்கம் அதிக சிரேஷ்டம் என்று கண்டு கொண்டதினால்தானே :

யேசுவினால் மேன்மை பெற்றோம் கிருபை பெற்றோம்
இன்பமுறப் பரிசுத்தாவியையும் பெற்றோம்
யேசுவினாற் புத்திர சுவிகாரம் பெற்றோம்
எத்தனையோ பாக்கியங்கள் எல்லாம் பெற்றோம்
யேசுவினால் நித்திய சீவனையும் பெற்றோம்
என்னூழி காலமும் வாழ்ந்திருக்கப் பெற்றோம்
பாசம்வைத்துக் கிறிஸ்தவர் நீர் ஆடிரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர் ஆடிரூஞ்சல்.

சத்தியத்தின் மேலான பாதைகண்டோஞ்
சாங்கமாயுலகத்தைத் தள்ளிப்போட்டோம்
பித்தர்களின் சாஸ்திரத்தைக் குலைக்கச் செய்தோம்
பிசாசினுடம் பரங்கள் அனைத்தும் விட்டோ
மெத்தமெத்தக் கிருபை பெற்றோம் தேறிப்போனோம்
வேதநாயகன் பாடல் விரும்பிக்கொண்டோம்
பத்தியுள்ளோர்க் கென்னகுறை ஆடிரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர் ஆடிரூஞ்சல்.

என்றுபாடி செபமாலையை முடித்தார்.

இது "திருச்சபை யூஞ்சல்" என்ற செபமாலையிலுள்ள கடைசி இரண்டு அடிகள். இதன் மனோபாவனை, அலங்காரம் முதலியன ஆங்கிலேய நூல்களில் காண்பதரிது. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பார்த்தால் இந்த அடிகளின் சிறப்பு பத்துமடங்கு அதிகமாக துலங்கும்.

செபமாலை முப்பத்தொன்றையும் வியாக்கியானம் செய்ய இங்கே இடமில்லை. கிறிஸ்து பக்தர்கள் இயற்றிய கவிகளில் அல்லது நூல்களில் சாஸ்திரியாரின் ஜெபமாலைக்கு இணையானது ஒன்றும் நான் அறிந்திலேன். வங்காள தேசத்து Tagore கவிச்சக்கரவர்த்தி இயற்றியுள்ள கீதாஞ்சலியும் ஜெபமாலையின் பக்திவிநயத்திற்கும் உட்கருத்துக்கும் பின்வாங்குமென்று சொல்ல நான் துணிவேன்.

"விண்பத்திநாசம்" என்ற 20-ம் செபமாலையை நவமாயுண்டுபெண்ணின சமயத்தில் ஸ்ரீ வில்லியம் ரோபர்ட்டு (Mr. William Robert) என்ற மதராஸிலிருந்த ஒருத்வமார்க்கத்து (Unitarian Church) பாதிரியாருக்கு ஒரு கைப்பிரதியை சாஸ்திரியார் அனுப்பினார். இந்தப் பாதிரியாரைப்பற்றி பௌவர் சாஸ்திரியார் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"Mr. Roberts, the Socinian teacher, 1825-ஞூ. வில்லியம் ராபர்ட்ஸ் என்னும் ஒரு வேளாளன் ஒருத்துவமார்க்கக்குருவாக புரசைபாக்கத்தில் ஒரு கோவிலைக்கட்டி அநேக புஸ்தகங்களை எழுதி அச்சிட்டான். அவன் ஆரிங்டன் (Harrington) என்னும் ஒரு துரையோடே இங்கிலாந்து தேசத்துக்குப்போய் ஒருத்துவமார்க்கத்தை சேர்ந்து ஞானஸ்நானம் பெற்று குருவாகித் தன் கொள்கையை காட்ட வெகு பிரயாசப்பட்டான்"

இவர் அந்த செபமாலையை வாசித்து சந்தோஷப்பட்டு "புறச்சமயத்தாருக்கு ஏற்ற புத்திமதிக்கானது. ஏராளமாக

அச்சில் பதிக்க சித்தமாயிருக்கிறோம். எங்கள் சபை வரும்படியில் 300 வராகன் வரையில் உங்கள் பிரயாசத்திற்கு அனுப்பும்படி ஆலோசித்திருக்கிறோம். ஆதலால் ஒவ்வொரு அடியின் கடைசிவரியில் வருகிற "யேசுநாயகனே" என்கிற பதத்தை 'ஏகநாயகனே' என்று பிரசித்தஞ் செய்ய உத்தரவு கொடுக்கவேணும்" என்று சாஸ்திரியாருக்கு எழுதினார். "இயேசுவின் மகத்துவத்தை அறியாத உம்மிடத்தில் என் பாடலிருப்பது சரியல்ல. உடனே திருப்பியனுப்பிவிடும்" என்று பதில் எழுதினாராம். இந்த பெரியசோதனையிலிருந்து சாஸ்திரியார் மீண்டது தன்னுடைய விசுவாசத்தின் சுயபலத்தால் என்று நாம் உணரவேண்டும். வறுமையினாலும் சிறுமையினாலும் பிடிக்கப்பட்டிருந்தாலும் இயேசு சுவாமியின் பேரில் இவருக்கிருந்த விசுவாசமும் பக்தியும் யாதொரு லௌகிக விர்த்திக்குரிய சோதனையினால் குறைவு பட்டதில்லை.

இங்கே ஒரு முக்கியமான சம்பவத்தை கூறவேண்டும். 1823-ம் வருஷம் கல்கத்தா பிஷப்பாக அபிஷேகம் பண்ணப்பட்டு கல்கத்தாவிலிருந்து 1826-ம் வருஷம் சென்னைக்கு விஜயஞ்செய்த ஹீபர்கண்காணியார் (Bishop Heber) தஞ்சாவூரில் வேதநாயக சாஸ்திரியாரை சந்தித்தார். இவரைக் குறித்து Rao Bahadur S. K. தேவசிகாமணி அவர்கள் (17) எழுதியிருக்கிறதாவது :

"...........மார்ச்சு மாதம் புறப்பட்டு 1826-ம் ஹூ தஞ்சாவூருக்கு வந்தார். ஈஸ்தர்பண்டிகை தினம் ஆலயத்தில் பிரசங்கம் செய்தார். 1300 இந்திய கிறிஸ்தவர்கள் ஒன்றாய்க் கூடிக் கடவுளை ஆராதிப்பதைக்கண்டு அகமகிழ்ந்தார். ஏப்ரல் மாதம் முதல் தேதி திருச்சிராப்பள்ளிக்கு வந்து வெகு உற்சாகத்துடன் வேலையை நடத்தினார். 3-ம் தேதி காலையில்

கோட்டை ஆலயத்தில் திடப்படுத்துதல் நடத்தி........... ஜட்ஜ் துரையின் வீடுவந்து சேர்ந்தார். பகல் சாப்பாட்டுக்கு முன் ஸ்நானம் செய்யப்போன இடத்தில் திடீரென் மரண மடைந்து, St. John's ஆலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டார்."

இவர் தஞ்சாவூரில் சாஸ்திரியாரை சந்தித்தபோது செப மாலையின் ஒரு பிரதியையும் ஞானபத கீர்த்தனத்தின் ஒரு பிரதியையும் 55 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டாராம். இவைகள் லண்டன் புஸ்தகசாலைக்கு (British Museum Library, London) வேண்டுமென்று சொன்னாராம். ஆனால் அத்தியக்ஷர் திருச்சிராப்பள்ளியில் அடுத்த மாதமே அகால மரணம் அடைந்தபடியினால் இந்த இரண்டு பிரதிகளும் அந்த புஸ்தக சாலையை அடைந்த விஷயம் திட்டமாக தெரியவில்லை. ஆனால் ஹீபர் அத்தியக்ஷரும் வேதநாயக சாஸ்திரியாரை சந்தித்து இவரை ஒரு ஆக்கியோன் அல்லது கவி வல்லபனாக மதித்து, இவர் உண்டுபண்ணின இரண்டு பிரபந்தங்களின் பிரதிகளை கிரயத்திற்கு வாங்கிக்கொண்டது தமிழ் நாட்டு கிறிஸ்தவர்களுக்கு வெகு மேன்மையே.

## 2. ஞானபத கீர்த்தனங்கள்.

இவைகளின் தொகை ஏறக்குறைய 500. சிலவற்றை கோவில்களில் உபயோகப்படுத்தி வருகிற 'ஞானக் கீர்த்தனை' புஸ்தகத்தில் பார்க்கலாம்.

நாம் மேலே செபமாலையில் 138-வது ஞானப்பாட்டி லுள்ள சில பொருள்களை கூட்டி அமைத்து எழுதினதை கவனித்தோம். சில ஞானபத கீர்த்தனைகளிலும் இந்த சார்பு (tendency) வெளிப்படுகிறது. உதாரணமாக புதுவருஷத் துதிக்காக சபையார் பாடுகிற சாஸ்திரியாரின் பாடலை உற்று நோக்குங்கால் அது 35-ம் ஞானப்பாட்டை பூராவும் தழுவி யிருக்கிறது.

## பல்லவி.

இம்மட்டும் ஜீவன்தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்தரிப்போமாக.

1. நம்மை ரட்சிக்கவந்து தம்மைப் பெலியாய்த்தந்து
நற்சகமேவவும் அற்புதமாகவும்— (இம்)

2. காலம்சொல்போல்கழியும் தண்ணீரைப்போல்வடியும்
கனுவைப்போலேயும் ஒழியும்
வாலிபமுமறையும் சீலமெல்லாங்குறையும்
மண்ணின்வாழ்வொன்றும் நிற்கமாட்டாது
கோலப்பதுமைக்கும் நீர்க்குமிழிக்கும் புகைக்குமே
கொண்டஉலகநி லண்டபரனெமைக்
கண்டுகருணைகள் விண்டுதயவுடன்— (இம்)

3. பலவிதஇக்கட்டையும் திகில்களையும்கடந்தோம்
பரமபாதையையும் தொடர்ந்தோம்
வலியதீமையைவென்ளும் நலியுமாசையைக்கொன்ளும்
வஞ்சகர்பகைக்கும் தப்பிநின்ளும்
கலியென்றதெல்லாம் விண்டோம்
கர்த்தாவின்மீட்பைக் கண்டோம்
காய்ந்தமனதொடு பாய்ந்துவிழுகணை
மோய்ந்துகெடவு மாராய்ந்துநெறியுடன்— (இம்)

4. புசலைவரக்கண்டதாய் பெற்றகுழந்தைதனைப்
பேணித்தற்காக்கும் நேர்மையே
விசுவாசமாயிரட்சகர் காலில்விழுந்துநோக்கு
மேன்மைச் சன்மார்க்கத்தாரையே
நிசமாய்க் கர்த்தாவின்கையே
துன்னாளில் காக்குமெய்யே
நேயத்தினாலெந்து காயத்தினாலதி
சேயத்தினால் மிகு ஞாயத்தினாலுமே— (இம்)

5. எச்சரிப்பும்விழிப்பும் விசாரிப்புமவர்தாமே
இல்லாவிட்டால் வீணுமே
உச்சிதமாய் தினமுமன்பாய் நவமாய்செய்த
உயரனுக்கிரக மெல்லாம்மேன்மை
நிச்சயமாய்ப்புகழும் தோத்திரமுந் துதியும்
நித்தியகாலமு முத்தமமேவளர்
பத்தியோடேபல துத்தியமாகவும்— (இம்)

6. இனியும்நீர்தானேரிட்டுத் தமியோர்களையிரட்சித்
தெல்லா இக்கட்டிலேயும்
கனிவாய்ச்சகாயஞ்செய்யும் துன்னாளில்நாங்கள்தாழ்ந்து
கலங்கிமிரண்டும் உம்மைச்சார்ந்து
அநியாயவாழ்வை விட்டுநிலைக்கிறதற்
காகத்திடனடுத்து யூகத்துடனடுத்து
நரகைப்பகைதடுத்து வேகத்தருள்கொடுத்து— (இம்)

7. ஜனசேதத்துக்குண்டான போர்களுக்கோர்முடிவு
தந்துநெருங்கினதைக் கட்டிக்
கனசவையையாதரித் தன்பாயாசீர்வதித்துக்
கண்ணோக்கி யெல்லார்மேலன்றன்று
தினமுமருளுதிக்கச்செய்து தமதுதேவ
சிந்தையினோடதிவிந்தைய தாயுயர்
மைந்தனினுமெலமை யிந்தவினோதமாய்— (இம்)

8. பொல்லாரைத்தயவாகத் திருப்பியருள்வீராக
புத்தியற்றிருளிலே திரியும்
கல்லாஜனத்துக் கொளிவீயும் திக்கற்றவரைக்
காரும் நோவாளிகளைப்பாரும்
எல்லாத்துக்கித்தவரைத்தேற்றும் சாவோரையேற்றும்
எந்தலாதிபசாந்து தேவர்கை
யேந்தியே மிகுசாந்தமா யெமக்கு— (இம்)

9. பரமதற்குநேராக வரநடக்கிறதற்காகப்
பலநாளும்தெய் வாவியாலாளும்
தரமதாலத்தியந்த பணிவதாய்க்கேட்டுவந்த
சகலவரங்களையும் தாரும்
குருமா ருரையைக்கொண்டு
திரமாய் வேதநாயகன்
குணந்தரும்பத மிணங்கஅன்பொடு
வணங்கவந்தெமை மணஞ்செய்தன்புற — (இம்)

## 35. ஞானப்பாட்டு.

1. இம்மட்டும் ஜீவன்தந்த கர்த்தாவை அத்தியந்த
பணிவோடுண்மையாக இஸ்தோத்திரிப்போமாக.

2. நாள் பேச்சைப்போல் கழியும் தண்ணீரைப்போல் வடியும்
இதோ, இந்நாள்வரைக்கும் இவ்வேழை மண்பிழைக்கும்.

3. அநேக விதமான இக்கட்டையும் உண்டான
திகிலையுங் கடந்தோம் கர்த்தாவின் மீட்பைக் கண்டோம்.

4. புசலே வரக்கண்ட தாய் தன்னுட உகந்த
குழந்தையை நன்ருய் தற்காக்கும் வண்ணமாக.

5. கர்த்தாவின் கைதுன்னுளில் இரட்சகரின் காலில் விழுந்
தண்ணுந்து பார்க்கும் சன்மார்க்கரைத் தற்காக்கும்.

6. அடியார் எச்சரிப்பும் விசாரிப்பும் விழிப்பும்
தயாபரா நீர்தாமே காக்காவிட்டால் வீணுமே.

7. தினமும் நவமான அன்பாய்நீர் செய்ததான
அனுக்கிரகத்துக்காக துதி உண்டாவதாக.

8. இனியும்நீர் நேரிட்டு அடியாரை இரட்சித்து
எல்லா இக்கட்டிலேயும் அன்பாய்ச் சகாயஞ்செய்யும்

9. துன்னுளில் நாங்கள் தாழ்ந்து நொந்தாலும் உம்மைச்சார்ந்து
நிலைக்கிறதற்காக திடன் அளிப்பீராக.

10. மாஜன சேதத்துக்கும் உண்டான போர்களுக்கும்
ஓர்முடிவு வரட்டும், நொறுங்ினதைக் கட்டும்.

11. சபையை ஆதரித்து அன்பாயாசீர்வதித்து
எல்லாருக்கும் அன்றன்றும் அருள் உதிக்கப்பண்ணும்.

12. பொல்லாரைத் தயவாக திருப்பிக்கொள்வீராக
இருளிலே திரியும் ஜனத்துக் கொளிவீயும்.

13. திக்கற்றவரைக் காரும் நோவாளிகளைப் பாரும்
துக்கித்தவரைத் தேற்றும் சாவாரைக் கரையேற்றும்.

14. பரத்துக்கு நேராக நடக்கிறதற்காக
அடியாரை எந்நாளும் தேவாவியாலே ஆளும்.

15. அடியார் அத்தியந்த பணிவாய்க் கேட்டுவந்த
வரங்களை அன்பாக தந்தருளுவீராக.

அத்தியக்ஷர் கால்டுவெல் அவர்களும் ஆங்கில ஞானப் பாட்டாகிய 'Rock of Ages' என்ற பாட்டை தமிழ் யாப்பிலக்கண முறையைத் தழுவி சங்கராபரண இராகத்தில்,

> எசையா பிளவுண்ட மலையே
> மோசநாளில் உன்னில் மறைவேனே.

என்ற கீர்த்தனையை உண்டுபண்ணி யிருக்கிறார். இது ஓர் அப்பியாசம். கலையின் துவக்கத்தில் இது பழுதன்று. கவிவரம் நல்ல விர்த்தியடைந்த பிறகு சாஸ்திரியார் சுயமாக பொருள்சுவையும், சொற்சுவையும் கூடிய பாடல்களை இனிய ராகத்தில் அமைத்து கிறிஸ்து மார்க்கம் தமிழருக்குள் நல்ல அங்கீகாரம் பெறும்படி பேருதவி புரிந்தார்.†

---

† Dr. எசுதாசன் சவரிராயன் பிரசுரம்பண்ணியுள்ள 'ஆசிரம பாமாலை' யில் சாஸ்திரியாரின் பாட்டுகள் பலவற்றை கூட்டியிருக்கிறது மல்லாமல் சில கீர்த்தனைகள் பாடப்பட்ட சம்பவங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்.

நம்முடைய தேசத்தாருடைய இராகக்கியானத்திற்கு ஒற்றுற்போல உண்டுபண்ணியிருக்கிறுர். ஐரோப்பிய கிறிஸ்து பக்தர்கள் ஞானப்பாட்டுகளை (Hymns) இயற்றியிருக்கிறுர்கள். இந்து தேசத்து பக்தர்கள் கீர்த்தனைகளை (Lyrics or Anthems) உண்டுபண்ணியிருக்கிறுர்கள். இவர்கள் ஞானப்பாட்டுகளை உண்டுபண்ணவாவது அவர்கள் கீர்த்தனைகளையியற்றவாவது அசாத்தியமான காரியம்.‡ மயில் கத்தும் சத்தம் ஒன்று. குயில் கொடுக்கும் குரல் மற்றொன்று. எல்லாம் கடவுளுடைய சிருஷ்டிப்பின் அலங்காரம். ஞானப்பாட்டை ஐரோப்பியர் பாடினுல் அது இனிமையாகத்தான் இருக்கிறது. இந்திய பக்தர்கள் கீர்த்தனங்களைப் பாடினுல் அதுவும் இனிமையாகத்தான் இருக்கிறது. கேட்கும் கடவுள் ஒன்றை மாத்திரம் மெச்சி புகழுவாரோ, மற்றொன்றையும் அலட்சியம் பண்ணி இகழுவாரோ?¶

கீர்த்தனைகளின் கடைசி சரணத்தில் தன் பெயரை வேதநாயக சாஸ்திரியார் கூட்டியிருப்பதை ஓர் விபரீதமென்று எண்ணுகிறுர்கள். ஆராய்ந்து நோக்குங்கால் இது அக்காலத்தில் ஒரு தேசவழக்கமாயிருந்ததென்று புலப்படுகிறது. துகாராம் (1608-1649) என்ற மராட்டிய கவிபக்தன் தன்னுடைய பாடல்களின் கடைசி அடியில் தன் பெயரை தவருமல் அமைத்திருக்கிறுர். உதாரணமாக:

---

‡ ஆனுல் "ஜெகநாதா குருநாதா" என்ற கீர்த்தனை Father Beschi அல்லது வீரமாமுனிவர் என்ற பிராஞ்சு குருவால் (A french catholic priest) இயற்றப்பட்டது. இதற்கு மாதிரி உரு இருந்ததாகத் தெரியவில்லை.

¶ ஞானப்பாட்டுகளைக் குறித்து வேறுதர்க்கங்களை பாயிரத்தில் பார்க்கலாம்.

By day and night I will keep busy sounding the praises of Govind.

All my desires are in God; I have offered my body to Him.

I do not wait a moment but continually direct all my verses toward Him.

Tuka says, I sing His praises ; I rouse the people.

இவர் 4500 பாடல்களை உண்டுபண்ணினதாக சொல்லுகிறார்கள். இப்படி அவர் கடைசி அடியில் தன் பெயரை ஸ்தாபித்து இருந்தாலும் இவருடைய ஹிந்து பாடல்களை மிஷனரிமார் அதிக பிரியத்துடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கொண்டாடுகிறார்கள். நாம் பழுது என்று அவமதிக்கிறதைக் குறித்து துகாராம் விஷயமாக Dr. W. S. Deming (13) எழுதியிருக்கிறதாவது. "A common characteristic is that the last couplet opens with the author's name" இதற்கு வேதநாயக சாஸ்திரியாரே மேலே கூறியபடி செபமாலையின் முகவுரையில் சமாதானம் சொல்லி யிருக்கிறார். இதில் எனக்கு பிரதானமாக தோன்றுகிற தென்னவென்றால் இவருடைய ஞானஸ்நான பெயர் 'வேதபோதகம்' ஆனபடியினாலும், 'வேதநாயகம்' வீட்டிலே தனக்கு வழங்கிய செல்வப் பெயரானதாலும், துகாராம், தியாகராஜா முதலிய ஹிந்து பக்தர்களுக்கு தங்கள் நாமத்தை கடைசி அடிகளில் ஸ்தாபிக்கும் வழக்கம் அல்லது ஆசாரம் இருந்ததினாலும், சமர்த்தையே கையாடி 'வேதநாயகம்' என்ற பெயரை ஞான அர்த்தமாக அமைத்திருக்க வேண்டும். அல்லது சில இடங்களில் கிறிஸ்துவையே 'வேதநாயகா' என்று அழைத்து

பாடினதிற்கு நியாயம்கூற முடியாது. மேலும் பக்தர்களுடைய மார்க்கம் தங்களுக்கும் கடவுளுக்குமே யொழிய சபைக்கும் கடவுளுக்குமல்ல. இவர்கள் திரிகாலமும் கடவுளை தியானித்து, அவரை ஓர் சிநேகிதனாக பாவித்து, அவரையே போற்றி வாழ்வதே 'பக்தி.' கீர்த்தனங்கள் கடவுளுக்கு அவர்கள் படைக்கும் நிவேதனம் அல்லது காணிக்கை. 'பெருக்கத் திருக்கருணைப் பிதாவத்தனே' என்ற கீர்த்தனத்தின் கடைசி அடியில்,

தூதர்களின் பாட்டுனக்குச் சோபனப்பாட்டு
வேதநாயகன் பாட்ட தென்னபாட்டு.

என்று பாடினது புகழத்தக்கதே. இது தான் பக்தர்களின் இயல்பு (personal note in the songs). ஐரோப்பிய குருக்களுக்கு ஹிந்து பக்தி மார்க்கம் விளங்கவில்லை. இந்த குருக்களால் உத்தியோகம் பெற்று ஜீவிக்கிற இந்திய கிறிஸ்தவர்கள் எஜமான்களுடைய அபிப்பிராயத்திற்கு இணங்கி நடக்க வேண்டியது அவசியம். இது காரணங்களினால்தான் சாஸ்திரியாருடைய பக்திமார்க்கம் அநேகருக்கு புரியாமல் தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டது.

சென்னை ஹைகோர்ட் அட்வகேட் சத்திய ஜோசப் அவர்களால் செய்யப்பட்ட "தமிழ் கிறிஸ்தவர்கள் வீடுகளில் செய்ய வேண்டிய குடும்ப ஜெப முறைகளும் ஞானபத கீர்த்தனைகளும், ஞானப்பாட்டுகளும்" என்ற புஸ்தகத்தில் சாஸ்திரியாரின் நூல்களிலிருந்து அநேக பாடல்களை சேர்த்திருக்கிறார். அவருடைய ஞானபத கீர்த்தனைகளின் கடைசி அடிகளை இவர் நீக்கவில்லை. இந்த அடிகள் சாஸ்திரியாரின் கையொப்பம் என்று அறிந்துகொள்ளவேண்டும்.*

* இந்த விஷயத்தைப்பற்றிய தர்க்கத்தை பாயிரத்தில் காண்க.

மேலும் Dr. W. S. Deming பாயிரத்தில் துகாராமைக் குறித்து பின்வருமாறு எழுதியிருக்கிறார். "Sir Alexander. Grant, a former Vice-chancellor of Bombay University, once wrote if intense personal religion can be found anywhere, it can be found in Tukaram. It is imposible to avoid comparing his songs with the psalms of David. They are the national expression of a mind holding constant communion with God, poured out like the notes of a bird in all the occasions and various modes of life." இப்படி ஹிந்து பக்தர்களுக்கு நற்சாட்சி கொடுக்க கிறிஸ்தவ ஐரோப்பியர்கள் பலர் கிளம்பியிருக்கிறார்கள்.

ஹிந்துகவி தியாகராஜா ஐயர், சாஸ்திரியாரின் ஏககால வாசியாயிருந்தபடியினால் அவருடைய சரித்திரத்தை வாசிப்போருக்கு உபயோகமாக சுருக்கமாக கவனிப்போம். தியாகராஜர் தகப்பன் இராமபிரமம், தாய் சாந்தை. தகப்பனார் தஞ்சை மகாராஷ்டர மன்னன் ஷாஜீ என்பவரால் மிக மதிக்கப் பெற்று திருவாரூரில் வந்து குடியிருந்தார். பின்பு தம் குடும்பத்தை காப்பாற்ற அங்கே வசதியில்லாததினால் தஞ்சைக் கடுத்த திருவையாற்றுக்குக் குடிவந்து குடும்பத்தை நடத்தி வந்தார். இவரது மூன்றாவது மகன் தியாகராஜர். இவர் தந்தை தாய் சொற்படி நடப்பவராய், இளமைப் பருவத்திலே தந்தையார்க்கு பூஜைக்குரிய தளிர் மலர் முதலியவைகளை சேர்த்துக்கொடுத்து இராம பக்தியில் சிறந்தவராய் விளங்கி, தன் தகப்பன் தாய் இறந்தபிறகு இசைவளம் நிறைந்த கீர்த்தனங்களை இராமபிரான் மீதில் பாடி பெரும்புகழ் படைத்தவர். இவர் 24,000 கீர்த்தனங்கள் பாடினதாகக் கேள்வி.

தியாகராஜர் யாதொரு பயனையும் கருதாது கடவுளையே வழிபடுகிறவரானதால் தஞ்சை சரபோஜி மன்னன் நேரில்

திருவையாற்றிற்கு போய்க் கண்டு, தமக்கிருந்த வயிற்றுவலி அவரால் நீங்கப்பெற்று, அநேக சன்மானங்களை அளித்து வந்தார் என்றும் சொல்லுகிறார்கள். இதினால் ஏற்படுகிற விஷயம் என்னவென்றால், சாஸ்திரியாரும் தியாகராஜரும் ஏக கால வாசிகள். ஒருவர் கீர்த்தனங்களை மற்றொருவர் வாசித்தும் கேட்டும் இருக்கவேண்டும். தியாகராஜர் சங்கீதவித்வான் ஆனபடியினால் இனிய ராகங்களை சமர்ப்பிக்க வல்லமையுள்ளவர். சாஸ்திரியார் கவிகளை உண்டுபண்ண மாத்திரம் சக்தி வாய்ந்தவர். ஆனாலும் சங்கீத பிரமாணங்களுக்கு ஏற்றதாய் கீர்த்தனங்களை அமைக்க திறமை இருந்தது. கிறிஸ்துவின் சரித்திரத்தை கதாப்பிரசங்கமாய் பஜனைசெய்து வணங்குவதே சாஸ்திரியாருடைய பிரதானமான வேலையாக இருந்ததால் அதற்கு உபகருவியாய் உற்சவங்களுக்கு உகந்தமாதிரியாய் கீர்த்தனைகளை காலாகாலங்களில் உண்டுபண்ணி வந்தாரேயொழிய தியாகராஜரைப்போல் சங்கீத வித்வானாக விளங்கவில்லை. ஆனால் தியாகராஜருடைய இன்னிசையமைந்த இராகங்கள் சிலவற்றை சாஸ்திரியார் இரவலாக ஏற்றுக் கொண்டதாக கர்ணபரம்பரையால் அறிகிறோம். இந்த பாட்டுகள் எவை என்று தீர்மானிக்க தகுந்த ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதற்கு சமயம் இல்லை. ஒரே ஒரு கீர்த்தனையை மாத்திரம் திருஷ்டாந்தமாக நாம் கவனிக்கலாம்.

### தியாகராஜய்யர் கீர்த்தனை—(தெலுங்கு.)

இராகம்-நாட்டகுறிஞ்சி.] பல்லவி. [தாளம்-ரூபகம்.

ஸுஜன ஜீவனு—ஸுகுண பூஷணு ராமா ஸுஜன:

அனுபல்லவி.

புஜதபூஷணு ஸரிதபுத ஜனுவனு
அஜவந்தித தருதசம்தன தசதுரங்கமா ராமா— ஸுஜன

சரணம்.

ஸாருகேத்ர ஸ்ரீகளத்ர—ஸ்ரீ ரம்மிய காத்ர
தாரக நாம ஸுசரித்ர—தசரத புத்ரா
தாரகர்திபா—கனதர்ம பாலனு
தார யரகுவர நிர்மல தியாகராஜ ஸன்னுத— ஸுஜன,

## வேதநாயக சாஸ்திரியாரின் கீர்த்தனை—(தமிழ்.)

பல்லவி.

பரம ஜீவனு—பவவிமோசனு ஜீமா பரம.

அனுபல்லவி.

கிருபையாசனு கிறிஸ்தருள் செய்யோசனு
தருமிங்கித நிறை சுந்தர திரவிய சம்பன்னு— பரம.

சரணம்.

நாதகீர்த்தன ஞானசாஸ்திர—இஸ்திரியேலை நேத்திரா
ஞாபகசே முயர் சரித்திர—தவிதிறை புத்திரா
வேதநாயகன் தமிழ்க்குரிய தாயகா
மேசியா குருபர நிர்மல யேசு ராஜசனுதா— பரம.

சாஸ்திரியார் அமைத்திருக்கும் பிரதிபதங்களை கண்டு பிடிக்கவும். இந்தப் பாட்டின் இராகத்தை யறிந்தவர்களுக்கு அதன் மதுரதொனியின் அருமை விளங்கும். நாம் யாவரும் மனோபாவனையில் ஹிந்துக்கள் தானே. "Blood is thicker than water" என்ற ஆங்கில பழமொழியின் பிரகாரம் நம் சுபாவம் ஹிந்து ஆகையினால் ஹிந்து கீர்த்தனங்கள் சிலவற்றை தன்னுடைய கீர்த்தனைகளுக்கு ஆதாரமாக சாஸ்திரியார் ஏற்றுக்கொண்டது விபரீதம் அல்ல. நம் சுயதேச ஆசாரம் கல்வி, சித்தி முதலியன நமக்கு சுதந்தரியம் ஆனபடியினால் சாஸ்திரியார் தியாகராஜரை பின்பற்றினது செயற்கையுமல்ல, உலக நீதி நெறிக்கு விரோதமுமல்ல.

கிறிஸ்தவ சபையார்களுக்கு அறிமுகமாகாத இரண்டொரு அரிய கீர்த்தனைகளை கீழே எழுதி இந்த அத்தியாயத்தை முடிக்கிறேன்.

## I

### பல்லவி.

யேசையா நின்னை நம்பினேன்
வேதமே ரட்சியும்

### சரணங்கள்.

1. ஈசா பரமகுமரேசா இஸ்ராவேலின் ராஜா
அடியர் பவநாசா கிருபாகரா— யேசை

2. அந்தா அநாதி பிதாமைந்தா நித்தியசதானந்தா
தமியனைப்புரந்தாள் தயாபரா— யேசை

3. சீலாகருணைமனுவேலா தவிதுசெங்கோலா
மனுடானுகூலா பரமேசுரா— யேசை

4. நீதா மெஞ்ஞான சத்யபோதா அருள்வரப்பிர
சாதாசைவிடாதேயும் பாதாரவிந்தந் துணை— யேசை

5. வாகா மகத்துவமுடன் மேகாசனத்தில் வரும்
ஏகா இந்நேரமே காகா உனக்கபயம்— யேசை

6. அண்டர்களை நரகதெண்டனைகள் செய்துனின்
தொண்டர்களையுரிமைகொண்டு காத்தகிறிஸ்து— யேசை

7. பரிசுத்தவஸ்து வுனைத்தெரி சித்தடிபணியக்
கரிசித்தடிமை கொளும் வரிசித்த கிருபையே— யேசை

8. வேதநாயகன் சொல் லாதி மூலமேநின்
பாதசரண் மலரெப்போதுந் தொழ அருள்செய்— யேசை.

## II

### பல்லவி.

பரிசுத்த வஸ்துவே ஓசியன்னு மெய்ப்
பரம கிறிஸ்துவே ஓசியன்னு ஓம்.

### அனுபல்லவி.

கரிசித்த அன்பே வரிசித்த நண்பே
கருணைச் சமுத்திரமே ஓசியன்னு— ஓம் பரி

சரணங்கள்.

1. நல்வேதாட்சியாரே யனுசாரி நம்
மெய்ப்பாக்கியனாரே யுபகாரி
ஆதாரமெங்கு பாதாரப்பங்கு
அடிமைக்கருள் செய்செங் கோலோங்கி— ஓம் பரி

2. மேசையா தம்பிரானே நமஸ்காரம் எனை
யாண்டமெய்க் கோனே நமஸ்கார
மெய்யான தேவா மேலான யோவா
மேசியாவே நீ காவா வா— ஓம் பரி

3. சொற்சத்தியப் பராபரா நமோநமோ சர்வ
தயாகருணாகரா நமோநமோ
சித்திரக் குமாரா பத்தருக் கதிகாரா
உத்தமர்க் குதாரா உபகாரா— ஓம் பரி

4. ஓராதிமூலமே யோலோல முன்
அடைக்கல மடைக்கல மோலோலம்
நீதிவிசாலமே நித்திய சதாகாலமே
வேதக லோலமே ஒலோலம் ஓம்

5. என் பக்திஷப் பராபரா தினசரணம் நின்
பாதார விந்தமே தினசரணந்
தக்கண வேதநாயக சாஸ்திரி
சங்கீத பாட்டா கொண்டாட்டா— ஓம்

# III

## பல்லவி.

பரஞ்சோதி வந்தாரே நரன்றன் றன்மை.

## அனுபல்லவி.

பெருங்கொடும் பவத்தால் வரந்தருங் கிறிஸ்துப்
பெத்தலே கேமினிற் பிறந்தாரே நரன்றன் றன்மை—பரஞ்

## சரணங்கள்.

1. மோக்கிட பத்தா நீக்கிட கத்தா
மூன்றின சேயர் பிறந்தாரே
மோசகால கூளிகள் வினைநீக்கி
நிதஞ் சுகமே தந்தாரே—யனந்தந்தன்மை பரஞ்

2. கனிவினை யடமே யனை மரியிடமே
கடவுளர் வந்து பிறந்தாரே
காதை வேத புராதன நாதன்
சுபவிசேடந் தந்தாரே—யனந்தந் தன்மை— பரஞ்

3. இத்தனைதயவாய் நித்தியபரனு
ரோனுசாரி பிறந்தாரே
யேசுராச குருபர னாரமூர்த்தியே
ஆசீர்வாதந் தந்தாரே—யனந்தந்தன்மை— பரஞ்

4. நல்குநீதி மெல்கிசேதேக்
கேயாசாரி பிறந்தாரே
நாத வேதசங்கீத சுவாமி
மோட்சானந்தந் தந்தாரே—யனந்தந்தன்மை— பரஞ்

5. தேவகுமாரன் சீவசொரூபன்
தவீதுராசன் பிறந்தாரே
தாழ்விலாத சம்பத்துகளாக்கி
நித்திய சீவன்றந்தாரே—யனந்தந்தன்மை— பரஞ்

6 சிங்காரப்பெட்டி வங்காரக்கட்டி
தேவாட்டுக்குட்டி பிறந்தாரே
சீவனுதிபிதா வொருமைந்தன்
பரமண்டலமே தந்தாரே—யனந்தந்தன்மை— பரஞ்

7. நெல்வேலிமேவு சொல்வேதநாய
கன்பாவென்று பிறந்தாரே
நீடுகோடி பாதகவினைநீக்கி
ஞானபோசனந் தந்தாரே—யனந்தந்தன்மை— பரஞ்

## IV

### பல்லவி.

வந்தானே பரன்மகன் வந்தானே நமக்குப்பர
மண்டலத்தை கொண்டுவந்தானே.

### அனுபல்லவி.

1. தந்தைப் பராபரன் சாற்றலாலே
சயம்புவினரற் சுபாவத்தைப்போலே
சங்கங்களிக்க எங்குஞ் செழிக்க
சனபரதாபங்கண்டு மனுடரூபங்கொண்டு— வந்

### சரணங்கள்.

2. திரித்துவத்தினி லிரண்டாமாளெனச்
சிறந்த நாமத்தைத் தரித்து ஆதி
தேவபிதாவினோ டுலகத்தைரட்சை
செய்வேனுனென்று தெரித்து ஏவை
பறித்தகனியின் விடத்தினால்வந்த
பாவங்களனைத்தும் பிரித்துக்கொடும்
பாதாளத்திருந் தாதாளித்தெழும்
வேதாளத்தைச் சங்கரித்து அதின்
மறுத்தவஞ் சகமுரத்த தந்திர
வலியதரத்தை யுடைத்துக் கெட்ட
மரணத்தினுட கூரையொடித்து
நரகத்தின் கதவடைத்துப் பின்னும்
செறித்த தேவ கோபத்தை மாற்றி
நீண்ட சாபத்தைத் துடைத்துப் பரம
னீதியை நிறைவேற்றிச் சத்திய
வேத நூல்களைப் படைத்து மிக
வெறித்த பாவிகள் குணப்பட்டடங்க
மிக்க தவங்கள் செபங்கள் துடங்க
அறத்தின் றகையுஞ் சுடரத்
திறத்தின் றிடமும் படரப்

புறத் தங்கதமும் பிடரக்
குறித் திங்கிதமும் தொடர— வந்

3. உன்னதத்தின் கிருபாசனத்தை விடுத்
துயர்ந்த வெளியைத் தாண்டி யந்த
உம்பர்கள் சேனைக் குழாங்க ளுலாவிய
ஒளியின் விரிவுந் தாண்டிச் சுடர்
மின்னிய சேரக்கூடாத வெளிச்சத்தின்
வீதிவிலாசமுந் தாண்டியப்பால்
விந்தை நட்சத்திர மண்டலங்களூட
விம்பத்தையும் விட்டுத் தாண்டிச் சென்று
பின்னையுஞ் சூரிய மண்டலத்தினூட
பெருஞ் சக்கரமுங் கடந்து அங்கே
பெருத்த கிரக மண்டலத்தை யெல்லாம்
பின்னிடத் தள்ளியே நடந்து புயல்
மன்னு மாகாச விரிவின் பெருவழி
மட்டற்ற பாதையிற் றொடர்ந்து இங்கே
மண்டிய தேவரு மண்டரும் போற்றப் பூ
மண்டலத்தைக் கிட்டி யடர்ந்த கடுஞ்
சின்னச் சீனுக்குன்றி னெட்டைப் பிடித்துச்
சேர்ந்த ஸ்திவாரத் தோடொட்டப் பொடித்துத்
தின்னுங் கனிவம் போடத்
துன்னும் பகையுஞ் சாடப்
பன்னுந் துதியும் பாடப்
பொன்னின் கிரீடமுஞ் சூட— வந்

4. கற்பனை பத்தையு மடக்கி வேறிரண்
டிற்பனக் கற்பனை யாக்கி மிகக்
கனத்த அடிமைத்தனச் சீனுக்குன்றைக்
கண்ணுக்குங் காணமற் போக்கியதின்
முற்படி மடைப்புச் சுவரைத் தகர்த்து
முற்றுந் திறப்ப துண்டாக்கிப் பரன்

முன்னிலைச் சன்னதிக் கேருபீன் காவலு
மூடுந் திரையையும் நீக்கி யிட்ட
பற்பல பெலிகள் சடங் கனைத்தையும்
பாழ்ந் தழியப் பண்ணிக் கெடுத்துத் தினம்
பயப் படுத்திய மோசே திரும்பவப்
பாதை வராப்படி தடுத்து யூதர்
சொற்பெருஞ் சீயோன் பருவதஞ் சென்று
துலங்கு மன்றலு மடுத்து அங்கே
துய்ய தவிதின் செங்கோ லுக்கென
உய்யு முயிருங் கொடுத்து அதி
விற்பன சாஸ்திர விதங்கள் முடிக்க
வேதநாயகன் பதங்கள் படிக்க
வெற்புத் திரமுந் திருகச்
சற்பத் தலையுங் கருகச்
சொற்பத் துரையும் பெருகப்
பொற்புப் பரமுந் தருக— வந்

கடைசி கீர்த்தனையின் மூன்றும் அடியில் ஆங்கில வீர காவிய கவி மில்டோன் (Milton) இயற்றிய "முக்தியை இழந்தவிதம்" (Paradise Lost) என்ற காவியத்தில் பிரதான தூதன் மோக்ஷத்தை விட்டு நீங்கின விஸ்தரிப்பின் எதிர் ஒலியை கேட்கலாம். சாஸ்திரியார் கிறிஸ்துவின் பிறப்புக்கு ஏற்றதாக அமைத்துக்கொண்டார். அப்படியே இது சம்பந்தமாய் ஹனுமார் சீதா தேவியை தேடி, இலங்கைக்கு ஆகாச மார்க்கமாக சென்ற சம்பவத்தின் விஸ்தரிப்பை இராமாயணத்தில் காண்க. ஹிந்து புராணங்களையும் காவியங்களையும் நன்கு கற்றவர் சாஸ்திரியார்.

## 3. பெத்தலகேங் குறவஞ்சி.

இந்த நூலின் விசேஷங்கள் சிலவற்றை சென்னபட்டணம் ப்ரவேசம் அடங்கிய அத்தியாயத்தில் கவனித்தோம்.

இது ஒரு நாடகம். (Similar to a Miracle or a Mystery Play in English Drama) இதற்கு சாஸ்திரியார் எழுதின முகவுரையின் மூலமாய் நாம் பொருளை கற்றுக்கொள்ளலாம். அதாவது,

" இந்தப் பொஸ்தகம் பெத்லகேங் குறவஞ்சியென்றழைக்கப்படுகிறது. பெத்லகேங் குறவஞ்சி யென்றும், பெத்லகேமிற் பிறந்த தீர்க்க தெரிசனத்தின் பெண்ணென்றருத்தங் கொள்ளும்.

இது குருக்கள், உபதேசிகள் மனுஷரைப் பிடிக்கிற ஞானவலையரென்பதைக் குறவன், குறத்தியினுடைய திருட்டாந்தத்தைக் கொண்டு காட்டிப், பலவிதச் சந்தங்களாய்ப் பாடிய நாடகத்தமிழானது.

இதைத், திருநெல்வேலி ராச்சியத்திற் பிரதான பள்ளிக்கூடங்களிற் படிக்கிறதும், அவ்விடத்துக் கணியார் தேசத்திலெங்கும் நாட்டியமாடுகிறதுமான குற்றாலக் குறவஞ்சிக்கு எதிராய்ப் பாடிற்று.

இதினடக்கமென்ன வென்றால்,

(1) சீயோன் குமாரத்தியென்ற பெண் ஏசு ராசா எருசலேமுக்குப் பவனிவந்ததைக் கண்டு ஆசித்து, அவருக்குத்தான் மனைவியாக வேண்டுமென்று விரும்பினதும்.

(2) இந்த விருப்பம் கைகூடிவருமென்று, விசுவாசக் குறவஞ்சி வந்து தீர்க்கதெரிசனங்களைக் கொண்டு குறி சொன்னதும்.

(3) இந்த விசுவாசக் குறவஞ்சியின் புருஷனாகிய ஞானச்சிங்கன் அல்லது உபதேசியுங் குருவுமானவன் தேவவசனமென்ற வலையை விரித்து, மனுடசாதியென்ற பறவையைப்

பிடித்து, ஏசுராசாவுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்த வர்த்தமானங்களுந்தானே.

இஃது மூன்று பிரிவானது.

(1) பிரிவு :—தேவமோகினி பேரிலே. தேவமோகினியென்றால், தெய்வத்தை மோகிக்கிறவள், அல்லது அவரை ஆசிக்கிறவள்.

இந்தப் பிரிவிலே வருகிற கட்டியன் யொவானிஸ்நாதகன். அவன் பிரசங்கம் இன்பமானது. அங்கே பவனி வந்த பெத்லேக நாதனே ஏசுராசா. அவரே சபைக்கு மணவாளன். அதைக்கண்ட திருச்சபையென்ற சீயோன் குமாரத்தியே தேவமோகினி. அவள் அழகை உன்னத கீதத்தின்படி பாடிற்று.

அவள் விரகத்தினால் புலம்புகிற வெண்ணிலாத் தருவே உலக மாயையாகிய சந்திரன். அதையவள் காலின் கீழே மிதிக்கிறாள். தென்றல் தருவே உபத்திரங்களாகிய காற்று, அதினாலே யவள் நாணலைபோற் சாய்ந்து போறதில்லை. மன்மதத் தருவே பழைய மனுஷனாகிய ஆதாம். இந்த பழைய மனுஷனுக்கு அவள் இடங்கொடுக்கிறதில்லை.

அவள் விளையாட்டுக்கடிக்கிற பந்துகளே புவனவுருண்டை, வானவுருண்டை. அங்கே புவனசாஸ்திரத்திலும் நட்சத்திர சாஸ்திரத்திலும் கொஞ்சங் காட்டிற்று.

(2) பிரிவு :—குறவஞ்சி பேரிலே. குறவஞ்சியென்றாற் குறிசொல்லுகிற, அல்லது தீர்க்கதெரிசனஞ் சொல்லுகிற பெண். இவள் விசுவாசமென்றழைக்கப்படுகிறாள். இவள் சொல்லுங் குறியே பராபரனுடைய வசனமாகிய தீர்க்க தெரிசனம்.

இந்த விசுவாசக் குறவஞ்சி சீயோன் குமாரத்திக்கு வேதப்பொஸ்தகத்திலடங்கிய சகல மலைகளின் சிறப்பையும், கானான் தேசத்தின் வளமையும், அதை ஆளுகிற ஏசுராசா வின் மகத்துவங்களையும், அவர் இராசரிக்கத்தின் மேன்மை யையும், அவர் தேவாலயத்தின் பிரஸ்தாபத்தையும், அவர் சபை யின் பெருக்கத்தையும் விவரித்துக்காட்டி, இப்படிக்கொத்த வருக்கு நீ மனைவியாவாயென்கிற சந்தோஷத்தைக் கூறுவாள்.

(3) பிரிவு :—ஞானச்சிங்கன் பேரிலே. சிங்கி, குறத்தி, குறவஞ்சியென்ற மூன்று வார்த்தையுமொன்றாயிருக்கிறாப் போலே, சிங்கன், குறவன், குழுவனென்ற மூன்று வார்த் தையு மொன்றாயிருக்கிறது. இவன் குருவென்றும், இவ னுக்குத்துணையான நூவன் உபதேசியென்றும் அழைக்கப் படுகிறான்.

இவ்விருவரின் வளமைகளும், சாமர்த்தியங்களும், இவர் கள் அறிந்த மந்திரங்களும், மூலிகைகளும் மகாதிட்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கும். இவர்கள் காண்கிற பறவைகள் மனுஷ சாதி. அவர்களைப் பிடிக்கிற வலையே பழைய ஏற்பாடு, புதேற்பாடு. அவர்கள் பறவைகளைப் பிடிக்கிற விதங்கள் ஒவ்வொருவருக்குஞ் சந்தோஷத்தை உண்டாக்கும்.

இவர்களுக்கெதிரியாகிய கள்ளக்குறவனே உரோமை யின் பாப்பு. அவன் கிறிஸ்துவின் பக்கமாயல்ல, தன் பக்கமாய்ப் பறவைகளைச் சேர்க்கப் பார்க்கிறான்.

இந்த மூன்று பிரிவிலும் வேதத்தின் பிரதான சரித்திரங் களெல்லாம் அடங்கியிருக்கும். இதிலே நெடுக, தருவுக்குத் தரு பாப்புமார்க்கத்தாரின் ஞான வேசித்தனத்தைக் காண்பித் திருப்பதால், அவர்களுக்கு மிகுந்த பகையை உண்டாக்கும்.

ஞானச்சதுர்ப் பிரசங்கத்துக்கு அனேக இடங்களையும், கேட்கிற சனங்களுக்கின்பத்தையுங் கொடுக்கிற இந்தப் பெத்லகேங் குறவஞ்சி விசேஷித்த மேன்மையுள்ள பொஸ்தகமாயிருக்கிறது.

இதைச் செய்தவன் இதற்கு முன் அனேகம் நூல்களை உண்டுபண்ணினாலும் அவனையொருவரும் நினைத்ததுமில்லை, எண்ணினதுமில்லை. ஆனதினாலே சகல சபையுந் தன்னைச் சிநேகித்து நன்மை செய்கிறதற்காக வேண்டி, மகாபிரயாசத்துடன் இந்தப் பெத்லகேங் குறவஞ்சியை உண்டுபண்ணிச் சபைகடோறு மரங்கேற்றினான்.

அதுமுதல் அவனை வேதசிரோமணியாரென்றும், சுவிசேட கவிராயரென்றும், ஞானதீபக் கவிராயரென்றும், வேதசாஸ்திரியாரென்றும், தஞ்சாவூர், தரங்கன்பாடி, சென்னபட்டணம், திருச்சிராப்பள்ளியின் சபைகள் அழைக்கத் துவக்கிற்று.

இப்படியாக, திருநெல்வேலி தேவசகாயம்பிள்ளை குமாரனும், சங். சுவர்ச்சையரவர்கள் சிஷனுமாகிய வேதநாயக சாஸ்திரி, 1800-ஆம் தஞ்சை நகரத்தில், சங். கோலோப்பையரவர்கள் அதிகாரத்திலே இந்தப் பெத்லகேங் குறவஞ்சியை உண்டுபண்ணி, 1820-ஆம் அதைத் திருத்திச், சகல திருச்சபையினுடைய சந்தோஷத்துக் கென்றும் காணிக்கையாக வைத்தான்.''

மேலே 5-ம் அத்தியாயத்திலே இந்த நூலை சாஸ்திரியார் சென்னபட்டணத்தில் அரங்கேற்றிய வரலாற்றின் சம்மந்தமாக அதின் சிறப்புகள் சில எடுத்துக் கூறப்பட்டன. அந்த நாடகத்தின் முகவுரையில் சாஸ்திரியார் அதின் மாதிரி உரு எது என்பதை வெளிப்படுத்தி யிருக்கிறார். குற்றாலங் குற

வஞ்சியின் ஆசிரியர் திரிகூட ராஜப்பர் தம் நூலை அரங்கேற்றிய வருஷம் கிறிஸ்தாப்தம் 1718-ஆம். சாஸ்திரியார் பிறந்த வருஷம் 1774 ஆனபடியினால் இந்நூலை யவர் பாடசாலையில் கற்றறிந்திருக்கவேணும். தஞ்சாவூரில் குடியேறினபிறகு, அந்த தேசத்தின் மகாராஜாவின் கட்டளையின் படி வருஷா வருஷம் நவராத்திரி யன்று குற்றாலங் குறவஞ்சி நாடகம் * இயற்றப்பட்டதை அவர் வாலிபவயதில் கண்ணுற்று இதேமாதிரி கிறிஸ்தவர்களுக்கு ஒரு நாடகம் சமர்ப்பிப்பது நலம் என்று உணர்ந்து பெத்லேகம் குறவஞ்சி நாடகத்தை உண்டு பண்ணினார் என்று நாம் யூகித்துக் கொள்வது நியாயமே.

'குறவஞ்சி' என்றால் யாது என வினவுவர்களுக்கு விடை பகருமாறு குற்றாலங் குறவஞ்சியின் முதற்பதிப்பின் முகவுரையினின்று (21) சிலவரிகளைப் பெயர்த்தெழுதுகிறேன். "குறவஞ்சி யென்பது குறத்திப்பாட்டு எனக் கூறப்படும்; அது வருமாறு: தலைவன் பவனிவருதல், அப்பவனியைக்கண்ட பெண்கள் அத்தலைவனைக் காமுறுதல், மோகினிப் பெண் (தலைவி) வருதல், அவள் பவனிவந்த தலைவனைக்கண்டு மயங்கல், மயங்கியபின் சந்திரன் தென்றல் முதலியவரை நிந்தித்தல், அதுகண்டு பாங்கி மோகினியை ஐயுற்றதென்னென வினவுதல், தலைவி பாங்கியோடு உற்றதுரைத்தல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தலைவனிடந் தூது போகச்சொல்லி வேண்டுதல், தலைவி பாங்கிக்குத் தலைவனடையாளங் கூறல், குறத்தி வருதல், தலைவி குறத்தியை மலைவள முதலியவை வினவுதல், குறத்தி தலைவிக்கு தனது மலைவளம் நாட்டுவள முதலியவையுந் தலைவனது தலவளங்

* தற்காலத்திலும் தஞ்சாவூரில் நவராத்திரியன்று இந்த நாடகம் நடைபெறுகிறது.

கிளைவள முதலியவையும் பிற தேசத்திற்கு குறி சொல்லி விருதுகள் பெற்று வந்தமையுங் கூறல், தலைவி குறத்தியினிடங் குறி கேட்டல், குறத்தி தெய்வக் தொழுதல், தலைவி குறத்திக்கு பரிசிலுதவி விடுத்தல், குறவன் வருதல், பறவைகள் வருதல், கண்ணிகுத்தல், பறவைகளைப் பிடித்தல், குறவன் குறத்தியை விருப்பமுற்றுத் தேடல், பாங்கனோடு குறவன் குறத்தியடையாளங் கூறல், குறவன் குறத்தியைக் காண்டல், குறவன் குறத்தியினிடத்துப் புதிய ஆபரணங்களைக்கண்டு ஐயுற்று வினவுதல், அங்ஙனம் வினவும் ஒவ்வொன்றுக்கும் விடை கூறல் ஆகிய இவ்வகை யுருப்புகளமைய அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம் இவைகளினிடையிடையே சிந்து முதலியவற்றை நாடகத் தமிழாற் பாடுவது."

ஆகவே இந்த விசேஷ நிரூபணத்தால் பெத்தலேங் குறவஞ்சியை விலைமதித்தால் ஆக்கியோனின் கவிவல்லமை திரிகூடராஜப்பக் கவிராய மூர்த்தியின் சாமர்த்தியத்திற்கு சற்றேனும் பின் வாங்கவில்லை யென்று புலப்படும். இரண்டு நாடகங்களும் சிறந்த ஒட்டுவமைகள் (Allegories) இவைகளை செவ்வையாய் கற்றறிவது கல்வியழகைக் கொடுக்கும் என்று நான் சொல்லத் துணிவேன். குறவஞ்சி நாடக பாவனையை சாஸ்திரியார் சுவீகரித்து பெத்தலேகங் குறவஞ்சியை உண்டு பண்ணினர் என்று பொதுவாக நாம் ஒப்புக்கொண்டாலும் கீழே பெயர்த்தெழுதப்பட்ட வரிகளால் சில பாகங்களை ஏறக்குறைய பார்த்தெழுதின (Copied) விதமாக காணப்படும். Shakespeare என்ற ஆங்கிலேய நாடகக் கவியரசின் நாடகங்களை ஆராய்ச்சி செய்பவர்கள். அவரும் தன்னுடைய மூலாதாரங்களிலிருந்து சில வரிகளை பார்த்தெழுதியிருக்கிறார் என்பதை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் இதில் பழுது ஒன்றும் இல்லையென நாம் கருதவேண்டும்.

குற்றாலங் குறவஞ்சி பக்கம் 70.

1. கலந்த கண்ணியை நெருக்கிக் குத்தினாற்
காக்கையும் படுமே குளுவா காக்கையும் படுமே

2. மலர்ந்த கண்ணியை கவிழ்த்துக் குத்தினால்
வக்காவும் படுமே குளுவா வக்காவும் படுமே குளுவா

3. உலைந்த கண்ணியை யிருக்கிக் குத்தினா
லுள்ளானும் படுமே குளுவா வுள்ளானும் படுமே

4. நூலைந்த கண்ணியை திருத்திக் குத்தடா
குற்றால மலைமேற் குளுவா குற்றால மலைமேல்

பெத்தலேங் குறவஞ்சி பக்கம் 158.

5. அடர்ந்த கண்ணியைக் கலந்து குத்தினால்
அன்னப்புறாப் படு மேகுளுவா
படர்ந்த கண்ணியை யிருக்கிக் குத்தினாற்
பருங்கொக்கும் படு மேகுளுவா
தொடந்த கண்ணியைச் சுருக்கிக் குத்தினாற்
சொன்னதெல்லாம் படு மேகுளுவா
இடர்ந்த கண்ணியைத் திருத்திக் குத்தடா
ஏகாந்தப் பெத்தலே மலைக்குளுவா.

6. கட்டைக் கண்ணியை நிமிர்த்துக் குத்தினாற்
காடையும் படு மேகுளுவா
நெட்டைக் கண்ணியை நெருக்கிக் குத்தினாற்
நீர்க்காக்காய் படு மேகுளுவா
மட்டைக் கண்ணியை முறுக்கிக் குத்தினால்
வவ்வாலும் படு மேகுளுவா
சிட்டுக் கண்ணியைத் திறந்து குத்தடா
சிங்காரப் பெத்தலே மலைக்குளுவா

7. சோர்த்துக் கண்ணியைக் குவித்துக் குத்தினாற்
குருகெல்லாம் படு மேகுளுவா
சேர்த்துக் கண்ணியை மாத்திக் குத்தினாற்
செம்போத்தும் படு மேகுளுவா

ஆர்த்துக் கண்ணியை அழுத்திக் குத்தினால்
அன்றில்களும்படி மேகுழுவா,
பார்த்துக் கண்ணியை பதிவிற் குத்தடா
பரம பெத்தலே மலைக்குழுவா

குற்றாலங் குறவஞ்சி பக்கம் 11—12.

2. தாதையிலாத் திருமகனை தடமலைக்கு மருமகனை
வேதசங்க வீதியனை வேதியனை வாழ்த்துகிறேன்.

4. நீமுகத்திற் பறிகொடுத்த திருமுடிக்கா ஒருமுடியை
மாமனுக்கு வரிசையிட்ட மாமனைநான் வாழ்த்துகிறேன்

10. சிற்றாற்றங் கரையானைத் திரிகூட வரையானைக்
குற்றாலத் துறைவானைக் குருபானை வாழ்த்துகிறேன்

12. ஆதிமறை சொன்னவனை யனைத்துயிர்க்கு முன்னவனை
மாதுகுழல் வாய்மொழிசேர் மன்னவனை வாழ்த்துகிறேன்.

பெத்தலேங் குறவஞ்சி பக்கம் 201—203.

2. தந்தையில்லாத் திருமகனைத்
தாதையருக் கொருமகனை
சந்தமரித் தலைமகனைக்
கலைமகனை வாழ்த்துகிறேன்

3. தீயலகைப் படைமுகத்திற்
செல்லாமற் படமுடியைத்
தானுதைத்து முள்முடியைச்
சகித்தவனை வாழ்த்துகிறேன்

5. வேதமறை சொன்னவனை
மேதினியின் முன்னவனை
வாதைவென்ற மன்னவனைத்
தன்னவனை வாழ்த்துகிறேன்.

12. விண்ணாற்றங் கரையானை
விரிவு பெத்தலே வரையானை
யெண்ணூழி காலமெல்லா
மிருப்பவனை வாழ்த்துகிறேன்.

வாசிப்போர் இவ்விரண்டு வாழ்த்துதல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சாஸ்திரியாரின் வாழ்த்து செய்யுள் நடையை மாத்திரம் அனுசரிப்பதல்லாமல் கிறிஸ்து மார்க்கத்தின் கருத்துகளையே விசேஷமாக அமைக்கப்பெற்றுள்ள தென்பதை அறிந்துகொள்ளலாம். மேலும் அக்காலத்தில் புதிதாக கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவினவரானபடியால் தன்னுடைய வரம் வெளிப்பட ஏதுகரமான மாதிரி உருக்கள் பெரும்பாலும் ஹிந்து நூல்கள் தானே.

செந்தமிழ் வாழ்ந்த அக்காலத்தில் இந்த நாடகம் தமிழ் உலகத்திற்கு அதிக களிப்பைக் கொடுத்திருக்கும். தற்காலத்தில் தமிழ்பாஷாபிவிர்த்தி தோல்வியடைந்து ஆங்கிலமும் ஹிந்தியும் தமிழை மேற்கொண்டபடியினால், தமிழருக்கு இந்த நூல் கருகலாகவே தோன்றும்.

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பொதுவாக கிறிஸ்தவர்களை 'பறையர்' என்றும் கிறிஸ்துமார்க்கத்தை பறையர் வேதம் என்றும் ஹிந்துக்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அதைக்கண்டித்து உணர்த்தும்படி 'கிறிஸ்தவரின் மகிமை' என்ற பிரிவை உண்டாக்கி யிருக்கலாம். பெத்லகேம் குறவஞ்சி 91-94 பக்கங்கள் பார்க்கவும். உதாரணமாக.

9. நல்லவர்கள் நாங்களென்ற கிறிஸ்தவர்களம்மே,
நாலுவர நன்மைமிகுங் கிறிஸ்தவர்களம்மே,
வல்லமையின் வலபாகக் கிறிஸ்தவர்களம்மே,
மனுடர்களைத் தொழுகாத கிறிஸ்தவர்களம்மே,
சொல்லரிய வண்மையுள்ள கிறிஸ்தவர்களம்மே,
தூல்லிபஞ்சேர் கற்பினெழுங் கிறிஸ்தவர்களம்மே,
யல்லலற்று வாழ்ந்திருக்குங் கிறிஸ்தவர்களம்மே,
யருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே— தின

10. நன்றியறிந்தே நடக்குங் கிறிஸ்தவர்களம்மே,
நாடோறும் புகழ்படைத்த கிறிஸ்தவர்களம்மே,
பன்றிகண்முன் முத்தெறியாக் கிறிஸ்தவர்களம்மே,
பழையேற்பாட் டாகமஞ்சேர் கிறிஸ்தவர்களம்மே,
வென்றிதரும் பரன்சிலுவைக் கிறிஸ்தவர்களம்மே,
வித்தகஞ்சேர் செபமாலைக் கிறிஸ்தவர்களம்மே,
பின்றிரும்பி முக நோக்காக் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே— தின

பெத்லேங் குறவஞ்சியை அரங்கேற்றக் கேட்ட சர்போஜி மகாராஜா இதைப்போல் ஒரு நூல் பிரகதீஸ்வரன்மேல் உண்டு பண்ண வேண்டுமென்று சாஸ்திரியாரைக் கேட்டுக்கொண்டனுல். இது ஓர் விசேஷமான நாடகம் என்றே வாசிப்போர் மதிக்கவேண்டும். ஒரு இராஜனுலும் இராஜ சபையினுலும் புகழப்பட்ட கிறிஸ்தவ நூல் தற்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு அறிமுகமில்லாத புத்தகம் ஆனது.

## 4. பேரின்பக்காதலும் தியானப் புலம்பலும்.

இவ்விரண்டு நூல்களும் விசேஷமாய் கிறிஸ்துவின் பாடுகளின் சம்பந்தமாய் இயற்றப்பட்டது. 1813-ஆல் பேரின்பக் காதலும் 1821-ஆல் தியானப்புலம்பலும் உண்டாக்கப்பட்டன. பேரின்பக்காதலின் சிறப்பை ஏற்கனவே 5-ம் அத்தியாயத்தில் எடுத்துக் காட்டினேம். 'பிரலாப ஒப்பாரி' யின் 7-வது பாகம் 'சிலுவை நடை' (March to Calvary) கவனிக்கத் தக்கது. 65-69 அடிகளுக்கு சாஸ்திரியாரே பேரின்பக்காதலின் அநுபந்தத்தில் வியாக்கியானஞ் செய்துகொடுத்திருக்கிறார். இந்த அடிகளிலே பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்று நான்கு ஜாதியையும் கிறிஸ்துவுக்கு உவமானமாகக் காட்டியிருக்கிறதாம். இந்தப் பொருள் முதல்பார்வையில் விபரீதமாக வாசிப்போருக்கு தோன்றும். ஆனல் உற்று

நோக்குங்கால் சுவாரஸியம் சுரக்கும். கிறிஸ்துவை 'வெள்ளன்', 'பார்ப்பான்', 'க்ஷத்திரியன்', 'வைசியன்' 'சூத்திரன்' என்று அழைத்து அதற்கு வேத வசனத்திலிருந்து ஆதாரங்களை எடுத்துரைத்து நல்ல வியாக்கியானம் செய்திருக்கிறார். பேரின்பக்காதலின் அனுபந்தத்தை வாசிக்கவும்.

மேலும் 'சிலுவை நடையின்' 70-ம் அடியில்

செஞ்சோதி நாட்டான்
திருப்பத்தூர்க் கோட்டை கட்டத்
தஞ்சாவூருக்குத்
தனிவழியே போறானே.

எனக்குத் 'திருப்பத்தூர் கோட்டை' என்ன என்று விளங்காததால் சாஸ்திரியாரின் பரம்பரையில் வந்த Rev. V. Gnanadickam, B. A., B. D., அவர்களுக்கு எழுதி விசாரித்ததில் பின்வருமாறு மறுமொழி அனுப்பினார்.

"To understand the meaning of the word திருப்பத்தூர் and similar words in poetry, start etymologically and proceed poetically.

It is not only a town or country but also a fortress (கோட்டை). Therefore, it may even refer to the glorious New Jerusalem. "திருப்பத்தூர் கோட்டை" stands for the great mission of our Lord to reconcile the human race and God by his atonement on the cross which is the battlefield where the final battle with the Devil was fought and won and man redeemed and reconciled to God.

திருப்பத்தூர் :—திரு = அழகிய, பரிசுத்த.
பத்து = பற்று, அன்பு, உறவு hence here ஒப்புறவு.
ஊர் = புரி.
திரு + பத்து + ஊர் = பரிசுத்த ஒப்புரவாகுதலின் ஊர்.

தஞ்சாவூர் also means something greater than a place where one dies தான் + சாகும் + ஊர்."

தஞ்சாவூர் கிறிஸ்துவின் சரித்திரத்தில் கல்வாரி மலையைக் குறிப்பிடும். சாஸ்திரியார் தான் குடியிருந்த ஊருக்கு மூல அர்த்தம் எடுத்துப் பார்த்திருக்கிறார். கர்மானிய தேசத்திலிருந்து வந்த குருவாகிய சங். சுவார்ச்சு ஐயர் பரி. பேதுருவின் தேவாலயத்திலும், திருநெல்வேலியிலிருந்து வந்து சிஷ்யனாகிய வேதநாயக சாஸ்திரியார் பக்கத்திலுள்ள கல்லறைத் தோட்டத்திலும் அடக்கம் பண்ணப்பட்டு 'தஞ்சாவூராக' தஞ்சை நகர் அவர்களிருவருக்கும் ஆனது.

தியானப் புலம்பலின் உருக்கமும் துயரமும் அந்நூலைக் கற்றவர்களுக்கு பரிஷ்காரம். 'கிறிஸ்துவின் ஞற்றுமைப் பாடுகள்' தியானம் முக்கியமான கருத்துள்ளவைகள்.

33-ம் பக்கம்.

1. பூங்காவனத் தேகிநரர் சிங்காற்றுயர் மூழ்கிப்
பொங்குமனக் கருத்தாற் செயம்புரிந்தீ ரேசுநாதா
வாங்காவித னத்தாற்றுமர் தாங்காத் திகிலடைந்து
மரணவதை யானீர்திருக் கருணை யேசுநாதா

2. முழங்காற் படியிட்டுத்திரு முகங்குப்புறத் தரைமேல்
மூன்றுமுறை விழுந்தே செபமொழிந்தீ ரேசுநாதா
வழங்குமகத் துவம்யாவது மங்கும்படி வதன
மண்மீதினிற் பிரண்டே யொளிமறைத்தீ ரேசுநாதா

3. நடுங்குந்திரு வுடலும்புவி நடுங்கும்படி யுயிரு
மொடுங்கும்படி விழுந்தே தகையுவந்தீ ரேசுநாதா
கொடுங்கர்மி கட்கும் பாதகங் கொலையும்படி நிலையாய்ப்
படுங்கஸ்தி வேதனையாற் பரதபித்தீ ரேசுநாதா

4. பாவாட்களைப் பரழாக்கிய கோபாக்கினை யனைத்தும்
பட்டீர்சயித் திட்டீர் பிணைப்பட்டீ ரேசுநாதா
சாபாக்கினை நரகாக்கினை சகலாக்கினை களையுந்
தேவாடெனச் சுமந்தே கதிதிறந்தீ ரேசுநாதா

5. அங்கம்நடு நடுங்கிவிழுந் தாவியி னிற்கலங்கிப்
பொங்குமுதி ரத்தாற் றுயர்பூண்டீ ரேசுநாதா
மங்கும்படி பேயின்றர மடியும்படி கிருபை
தங்கும்படி நின்முறைதை முன்றணிந்தீ ரேசுநாதா

6. நெருப்பாற்றினிற் புழுப்போல வேநெளிந் தாற்றுமப்பாடு
விருப்பா யடைந்தேவன் சிறைமீட்டீ ரேசுநாதா
பொருப்பா மொலிவக்காவி னிற்புகுந்தே தயைமிகுந்தே
யிருப்பா யெமைத்திருப்பாய் மனந்திருப்பா யேசுநாதா

7. மூன்பாத கத்தாலே தமைமுழுதும் பெலியாக
இன்பா லளித்தேதாதை யோடிரந்தீ ரேசுநாதா
வன்பாகிய துன்பேதமு மாற்றி மனதாற்றி
யன்பா யெமையாளுங் கிறிஸ்தரசே யேசுநாதா

8. அன்றுன் பரிசுத்தாற்று மத்தடைந்த துயர்நோக்கி
யின்றெங்க ளின்பவமே பொறுத்திரங்கு மேசுநாதா
நன்றும்புக ழுந்தங்கியே நாடெங்கணும் வாழ்க
என்றுந்தயை கொண்டா தரித்திரங்கு மேசுநாதா

இது கெத்சேமனேயில் நடந்த ஆத்மப் பாடின் விஸ்தரிப்பு. கடைசி அடியின் பொருள் அலங்காரத்தையும் சொல்லலங்காரத்தையும் காண்க.

## கிறிஸ்து கோல்கதாவிற் பட்டபாடுகள்.

### I. தியானத்தின் அடிகளும் விசேஷமானவை.

111-ம் பக்கம்.

1.* பொங்கு தயைக்கிறிஸ்து கொலைக்களம்
போறது கேட்டதிர்ந்தே திவ்விய
மங்கையர் சீயோனின் மணமகள்
மருகித் தேடினளே

2. அங்கம் நடுநடுங்கிச் செவிபூ
டம்புதுளைத் தனபோ லருந்துயர்
பொங்கிப் பிறக்கணைபோய் மயங்கிப்
புவியில் விழுந் தழுதாள்

3. வையகந்தான் கொளுமோ வியோமமும்
வானுலகுங் கொள்ளுமோ கிறிஸ்தெம
தையன்படுந் துயராற் சீயோன்மின்
னடைந்த வியாகுலந் தான்.

29. அண்ணரே தம்பியரே யென்றயரே
அக்கையர் தங்கையரே மகாபெரும்
புண்ணிய முண்டுசொல்வீ ரென்றையகன்
போறது கண்டீரோ.

40. ஆவி பதறுதையோ கிறிஸ்தென
தாற்றும நாயகனுர் பெருங்கொல்க
தாவிற் கொலைப்படப்போங் கொடுமையை
நீவி ரறிந் திலரோ.

45. செப்புதற் கேலாதே யொருவரின்
சிந்தையுங் கொள்ளாதே பின்னேதையு
மொப்பிடக் கூடாதே யவருரு
வெப்படி யான் சொலுவேன்.

50. அந்தச் சொரூபமில்லை மருத்துவ
மான தொன்றுமில்லை மகாகொடும்
நிந்தைப் பட்டீனப்பட்டு நெஷ்டூரமாய்
நிஸ்காரப் பட்டிருந்தார்.

51. உச்சித மொன்றுமில்லைக் கண்ணேக்கையி
லுன்னத மொன்றுமில்லை யவரைக்கண்
டிச்சிக்கத் தக்கவுரூப வருக்கு
இல்லா திருந் ததுவே.

75. வானமே நீகேளு ஒகோபூ
மண்டலமே கேளு உமக்குண்
டானதனைத்துஞ் செய்தோன் றுயர்பட
லான தறி யீரோ.

77. குன்று பிளவாதோ கொல்கதாக்
கொடுமுடி சாயாதோ தேவாலயத்
தொங்குந் திரையதுவுங் கிழிந்து
இரண்டு துண் டாகாதோ.

78. மறைமுடி யாதோ மரித்தகல்
லறை திறவாதோ ஆதிசற்ப
மடிந்து போகாதோ நரகமு
மிடிந்து வீழ் காதோ.

79. என்றுசொல்லிப் புலம்பிக் கொலைக்களஞ்
சென்ற பொழுதங்கனே கிறிஸ்துவைப்
பெரன்றக் குருசேற்றுங் கொடுமையைப்
பொற்கொடி கண் டதிர்ந்தாள்.

## 6. ஆரணுதிந்தம்.

இதைக் குறித்து சாஸ்திரியார் எழுதியிருக்கும் முகவுரை யாவது :—

"கிறிஸ்துவின் பண்டிகை நாட்களில் சங்தோடத்திற் கென்று செய்யப்பட்ட இப் புஸ்தகம் ஆரணுதிந்தமென்று அழைக்கப்படுகிறது. அதாவது வேதத்தினடக்கம் ஆதி தொடுத்தந்தமட்டும்.

இது செபப்பிரமாணத்தைப்போலத் தேவாராதனை துவக் கிற விதத்தையு முடிக்கிற விதத்தையும் அருமையான இராகங் கள் பொருந்திய பாடல்களாகக் காட்டுகிறது. கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்கிற ஒருசந்தி நாட்களிலும் மற்றப் பண்

டிகைகளிலுந் தெருவீதியிலே வெளியரங்கமான சதுருண்டு பண்ணி ஞானப்பாடல்களைக்கொண்டு சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்களுக்கு இது மிகவும் பிரயோஜனமானது.

இதின் றுவக்க முதலாமிரண்டாஞ் சருக்கத்திலே ஞான சிகாமணி, நோவா ஞானதிக்கமென்ற இரண்டு பிள்ளைகள் வந்து பராபரனுடைய தேவ லட்சணங்களையுஞ் சிஷ்டி திதி சங்காரத்தின் சுருக்கத்தையுஞ் சமுதாய விண்ணப்பத்தையும் அத்தஞசி விசுவாச பிரமாணத்தையும் அறிவிக்கும் பாவனையாகப் பாடியிருக்கும்.

அப்புற மூன்றாஞ் சருக்கத்திலே வேதநாயக சாஸ்திரியென்றொருத்தர் தம்முடைய மாணாக்கரோடே வந்திதுகளை விஸ்தரித்துக்காட்டின பாவனையாகப் பாடியிருக்கும் சங் 17-7 பாடுபவர்கள் துள்ளிக் களிகூறுகிறவர்களைப் போலிருப்பார்கள்.

ஈறுந்தம் நாலாஞ் சருக்கத்திலே வேதநாயக சாஸ்திரியார் குமாரத்தி ஞானதீபம் வந்து பத்துக் கன்னியாஸ்திரிகள் மணவாளனுக் கெதிர்கொண்டு போனதையுஞ் சீயோன் குமாரத்திக்குந் தேவாட்டுக்குட்டிக்கும் நடந்த திருக்கலியாணத்தின் பிரஸ்தாபங்களையும் விஸ்தரித்துக் காட்டின பாவனையாகப் பாடியிருக்கும்.

ஏனென்றால் ஸ்திரீகளும் ஆடவருக்கொப்பாய்ப் பராபரனைப் பாடித் துதிக்கிறதற்குப் போதுமான ஞாயமிருக்கிறது. சங். 68 : 26 முன்னாகப் பாடுவாரும் பின்னாக மேளஞ் சேவிக்கிற கன்னியாஸ்திரிகளுக்குள்ளே கின்னரங்களை வாசிப்போரும் நடப்பார்கள். எரே. 31 : 13. 2 மோசே. 15 : 20. ஞாயா 11 : 3-4 ; 21 : 1. 1 சாமு. 18 : 6.

கிறிஸ்துமான பிள்ளைகள் தங்கள் மனதிற்கிச்சையான இராகங்களை விரும்பி யழுக்குள்ள நாடகங்களிலுள்ள சிற்

றின்பப் பாடல்களை பாராமற் படித்துத் தெருக்களிலே சொல்லிக்கொண்டு திரியாதபடிக் கேற்கனவே யிருபது வருடத்துக்கு முன் பெத்தலேகங் குறவஞ்சியை உண்டுபண்ணினது போலிப்பிரபந்தத்தையுஞ் சனங்களுக்கு பிரியமாயிருக்கும்படிக்கு நாடகத்துக் கொப்பான பலவித பாவினங்களாய் பாடிற்று.

இப்படியாக வேதநாயக சாஸ்திரி கிறிஸ்துவின் பிறப்பின் பேரில் செய்யப்பட்ட பாலசரித்திரத்துக்கு ஆரம்பக் காண்டமாகக் கிறிஸ்தாப்தம் 1821-ம் வருஷம் இந்த ஆரணந்தத்தை யுண்டுபண்ணி சகல கிறிஸ்துமான சபைக்கும் புத்திர பரம்பரையான காணிக்கையாக வைத்தான்."

இதுவும் பெத்லகேங் குறவஞ்சிக்கு ஒப்பான நாடகம் (A. Miracle Play) அநேக அருமையான இராகங்களில் உண்டு பண்ணின பாடல்கள் அடங்கியது. இதிலேயுள்ள ஒரு விருத்தம் பிரசித்திபெற்றது.

நினைத்தது தருஞ் சகாயா
நித்திய கிருபைத் தூயா
வினைத்துயர் தவிர்க்கு மாயா
விநோத வுற்பன வுபாயா
வுனைத் துதி செய்வோ மோயா
தூழியோ டூழி நேயா
அனைத்துள வுயிர்க்குந் தாயா
அன்பையா அல்லேலூயா"

இதை விசேஷமாக நன்றி கூறவேண்டிய சந்தர்ப்பங்களில் பாடுகிறார்கள். ஆழ்ந்தபொருளும் இனிய தொனியும் பொருந்தி கடவுளுடைய சித்தத்தை அடைந்துகொள்ள வல்லமை வாய்ந்த கவியெனத்தகும். இந்த எட்டு வரியில் அடைத்து அடுக்கின கருத்தும் பண்வளமும் வியக்கத்தக்கதே.

## 6. ஞானவுலா.

இதை 1837-ல் உண்டாக்கியிருக்கிறார். ஆனால் 1885-ல் தான் முதலாக (The Religions Tract and Book Society' Vepery, Madras) அச்சிட்டிருக்கிறார்கள்.

இதில் 'பக்தா' மார்க்கம் சிறந்து தோன்றுகிறது. பக்தாக்கள் கடவுளை மனதினால் பற்றிக்கொண்டு சுதந்தர நியாயம் கூறி வாதாடுவதை சில அடிகளில் பார்க்கலாம். ஒவ்வொருவருடைய ஜீவியத்திலும் இந்தமாதிரி விசேஷமாக கடவுளுடன் மன்றாடவேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணமாக.

32-ம் பக்கம்.

அநித்தியம்.

557. யென்றைக்குத் தீர்ப்பாய் நீயென்றுயர மேழையைக்கண்
ணென்றைக்கு நோக்கி யிரங்குவா யென்றைக்குத்
தேற்றி யிருதயத்தின் சிந்தா குலங்களெல்லா
மாற்றி வழியமைமை யாக்குவாய் போற்றுமுன்றன்
பாதார விந்தமலர்ப் பாதகனுக் காருதவி
யாதாரமாராதர வார்சொல் தாதாவே
தந்தையோ வல்லதென்றன் றாயாரோ பந்தனையோ
மைந்தரோ நேசமனையாளோ பந்துகளோ

560. கூடப்பிறந்தவரோ கூட்டாளரோ நிதமுந்
தேடப்பிறந்த திரவியமோ மாடங்கள்
மாளிகையோ தோட்டம் வயலோ நிலங்கரையோ
வாளடிமையோ திரண்டவாஸ்தியோ நாளதிலே
கற்றபல வித்தைகளோ கல்வியோ சாஸ்திரமோ
பெற்றவிருதோ பிரபலமோ வுற்றறிந்த
வாணிபமோ கப்பல்வரத்தோ செங்கோலரசா
வாணுவமோ ரத்தினசிம்மாசனமோ பூணுங்
கரிபரிதேர் காலாள் கனத்த சிவிகை
திரளானச் சேனைச்செருக்கோ பொருளிவைக

565. ளொன்றாயினு முதவா தன்மையே போம்வழியி
லென்றாயினும் பார்த்திரங்காயோ நன்றான
ஆறுதலுநீயே யடைக்கலமு மாதரவுந்
தேறுதலுநீயே திடனீயே பேறுதவு
மன்னையுநீ தந்தையுநீ யன்பான நேசனுநீ
யென்னைப் படைத்த விறைவனுநீ பொன்னுலகுக்
கேணியுநீ தோணியுநீ யேவலுநீ காவலுநீ
காணியுநீ என்னுடைய கல்வியுநீ வாணிபநீ
முத்தியுநீ சித்தியுநீ மோட்சமுநீ சூட்சமுநீ
புத்தியுநீ மெஞ்ஞான போதமுநீ பத்தியுநீ

570. பாடும் படிப்புநீ பாக்கியநீ வாக்கியநீ
தேடு மிருபொருளுஞ் செல்வமுநீ வீடதுநீ
கட்டு மரண்மனையுங் கற்பொதித்த பொற்றூணு
மட்டுப் படாதகொலு மண்டபமுந் திட்டவட்ட
மானபடையும் பவுசுமட்ட சம்பத்துகளுந்
தானந் தருமஞ் சகலமுநீ ஞானமுநீ
பெந்து சனத்திரளும் பேரும் பிரபலமும்
வந்த கனமுநீ மகிமையுநீ யெந்தேவே
யெல்லாநீ யாயிருக்க வெங்கனஞ்சென் றாரிடத்தென்
னில்லாமை சொல்லி யிரங்குவே னல்லதுன்போ

## சுதந்தர ஞாயம்.

575. லின்னமொருத்த ரிருந்தாக்கா லுன்னிடத்தி
லென்னமதி யால்வரயா னெண்ணுவேன் பின்னொருத்த
ருண்டானாற் சொல்லி யொழித்துவிடே னல்லாட்டாற்
பண்டோர் பழிக்கவிடம் பண்ணாதே தொண்டேனைத்
தள்ளிவிட்டாற் பாழுலகைச் சார்ந்து போவானெனவே
யெள்ளளவு முன்மனதி லெண்ணாதே தள்ளியெனை
விட்டுவிட நெஞ்சில் விரும்பினாற் றாய்வயிற்றிற்
சிட்டித் தெனைப்புரக்கச் செய்வானேன் சிட்டிகனே
கெட்ட மகனை கிருபைப் பிதாநீயென்
றட்டதிக்கி லுள்ளோ ரறியாரோ இட்டமுடன்

580. வைத்த மரத்துக்கு வாய்மையாய் காட்டினவ
னெத்திலையுந் தண்ணீ ரிறையானோ சித்தம்வைத்திங்
கென்பாடல் கேட்டென் னிடுக்கண் களைந்தக்கா
லன்பா மகத்துவத்துக் காகாதோ வன்பரவி
வாதாடிக்கேட்டு மனதிரங்கா மன்மவுனச்
சூதாக நிற்பதென்ன சூட்சமோ காதாரச்
சொன்ன மொழிகேட்டென் றுயர்தவிர்க்கக் கூடாதோ
என்னவுன்றன் கையிலொன்று மில்லையோ வன்னையினு
மெண்மடங்கு நீயதிக மென்றேசு சீராக்குத்
தன்மறையி லேயெழுதித் தந்தானே யுண்மையுடன்

585. வந்தவரைத் தள்ளிவிடோம் வாய்மையெனச் சொன்னமொழி
யென்றனக்குச் சொன்னதில்லை யென்பாயோ சொந்தமுட
னெல்லாரும் வாருமென்ற தென்னைவிடத்தோ பொதுச்சொ
லல்லோ வதற்குவே றர்த்தமுண்டோ வல்லோனே
யேசுவென்ற நாமத்துக் கர்த்தமே தென்றறிய
வாசை யெனக்குண் டறிவிப்பா யேசுவென்று
விரட்சகனென் றர்த்தமே யிரட்சகனே நீயானா
லிரட்சைசெயா தென்னைவிட னீதியோ பட்சமே
யென்னெஞ்சைக் கண்டா லிரங்குமுன்ற னெஞ்ச மெத்தக்
கன்னெஞ்சாய்க் கண்டேன் கவடமோ கன்னெஞ்சு

590. வஞ்சகனா னென்றன் மனதைப் போலாச்சு துன்ற
னெஞ்சமென்று பேதை நினைப்பேனோ யென்செய்வே
னப்பாநின் பாதமலர்க் காசைகொண்டே னத்தனையு
தப்பா நிசமா தயைக்கடலே மெய்ப்பான
ஆயனே நீயானாலுனக்கு நானானாற்
றுயிலாச் சேய்போற் றவிப்பேனோ நேயா
வறியாயோ நானேழை யல்லவோ நெஞ்சிற்
குறியாத தென்னவிதங் கோவே சிறியேன்றன்
னுள்ளமறிவா யுழைப்பறிவா யந்தரங்கக்
கள்ளமறிவாய் கவடறிவாய் பிள்ளையென்று

595. தானுமறிவாயென் றந்திரமெலா மறிவா
யேனுமுனக் கன்பனென்றே யெண்ணிக்கோ ஞானபரா
பொல்லாத பிள்ளையெனும் பெற்றோர் புறம்பேசிச்
சொல்லார் நீ யென்ன விதஞ் சொல்லுவாய் நல்லையா
வுன்னைப் பிரிந்தென் னுள்ளங்கனலின் வைத்த மெழு
கென்னத் துயர்பட் டிருப்பேனோ வுன்னைவிட்டுப்
போனா னெங்கே பிழைப்பே னோர்மோசம் வந்த
தானா லெனக்கக் கடைக்கலமார் கோனேநா
னுன்னை யடைந்து முனதடிமை யென்றிருந்து
மென்னை மனத்துயர மேன்பிடிக்கு மன்னைவயிற்

600. றன்றுமுத லின்றுவரை யான்படும்பா டத்தனையு
மொன்று மறியாயோ வுரிமையே நன்றுதவி
யெத்தனைபேர்க் கன்புசெய்தா யேழையெனக்குனது
சித்தமுரு காதென்ன தெய்வமே பத்தம்வைத்து
மெய்யாகப் பாதம் விரும்பும் தமியேனை
ஐயா விகழ்ந்துபுறம் பார்க்காதே பொய்யாகப்
பிள்ளைகட்குச் சற்றே பெரும் பிராக்குக்காட்டுங்
கள்ளமெல் லாமறிவேன் காட்டாதே வெள்ளத்திற்
கல்லிடத் தண்ணீர் கலங்கும்போல் ஞானவுலாச்
சொல்லிட் வுன்னெஞ்சந் துணுக்கென்னும் வல்லபரா.

605. மாறாத துன்பம் வருந்தியழ நின்செவியி
லேறாதநேர தியம்புவா யாறுதலாய்.

### விண்ணப்பம்.

நல்வார்த்தை சொல்லாயோ நாமுனை திரட்சகரென்
றெல்லாருங் காண வியம்பாயோ புல்லேனைக்
கைதூக்கிச் சற்றே கடாட்சித்தா னின்மறையின்
மெய்தூக்கிப் பாடி விளம்பேனோ வையகத்திற்
பத்துநெறி வேதப் பராபரனென் றெந்நேரஞ்
சித்தமுருகிச் செபங்கள் செய்யேனோ சத்துருவை
மாற்றி யெனது வறுமையெலா நீக்கிவிட்டா
லேற்றி யிருபாத மிறைஞ்சேனோ வாத்துமத்தின்

610. ருகமறிந் தேசிவ தண்ணீ ரெனக்களித்தா
லாகமகிழ்ந் தானந்த மாகேனோ தேகவினை
தீராயோ மோட்சகதி சேராயோ சேர்த்தமுகம்
பாராயோ வெனபரர் முகமோ வாருய்
கருணை சமுத்திரமே காவலா வென்னைப்
பரிவாக்கி வன்பு பாராட்டு திருவுளமே
நீர்க்குமிழி போன்ற நிலையிலா வாழ்வை நற்றிப்
பார்க்குனை விட்டகலப் பண்ணுதே போர்க்குரிய
பொய்ப்பொருண்மே லாசைகொண்டு போகாமற் லக்துக்கி
மெய்ப்பொரு ளொன்றை விரும்பவரு ளப்பனே."

இந்த அடிகளை வியாக்கியானஞ் செய்வது அநாவசியம். சாஸ்திரியாரின் உள்ளத்தின் கனிவு இவைகளினால் விளங்குகிறது. கடவுளைக் குரங்குப்பிடிபோல் விடாப்பிடியாய் பற்றிக் கொண்டு வாழ்ந்தவர்.

இந்த நூலுக்கு 26 பிரிவுகள் இருக்கின்றன. அவை யாவன :—

கடவுள் வாழ்த்து, தேவ லட்சணம், தசாங்கம், கேசாதி பாதம், கிறிஸ்து விஞமதேயம், பிரஸ்தாபம், சதுர்ப்பாகம், அஃறிணைப்பாற் புகழ்ச்சி, உயர்திணைப்பாற் புகழ்ச்சி, பொதுத் திணைப்பாற் புகழ்ச்சி, கிரித்தியசாரம், மகத்துவம், உவமான சங்கற்பம், திருச்சபை யிஞமதேயம், சிஷ்டிதிதி சங்காரம், திருவிளையாட்டு, கிருபைப்பிரவாகம், கிறிஸ்துவினுத்தரவாதம், அநித்தியம், சுதந்தர ஞாயம், விண்ணப்பம், ஞானவுலாவைப் பற்றிய மன்றாட்டு, பொது மன்றாட்டு, நன்றியறிதல், மகுடம்.

இவைகள் எல்லாம் சம்பிரதாயமாக இயேசு பெருமானையே கொண்டாடுகிறதாயிருக்கின்றன. வாசிக்கும் இடமெல்லாம் விசேஷார்த்தங்களை அமைந்துள்ளன. ஓசை நயம், சொற்செறிவு, பொருட்பொலிவு இவைகளுக்கு வேண்டிய திருஷ்டாந்தங்களைக் காண்கலாம். பல்வகை கற்றறிவாளரும்

கொண்டாடி ஆனந்தித்தற்கு ஏற்ற சிறப்பு அடங்கப்பெற்றுள்ளது. இந்த தமிழ் பிரபந்தத்தின் கவி வடிவின் மகத்துவத்தை நன்கு உணர விரும்புவோர், இதற்கு ஒப்பான ஹிந்து உலாக்களை வாசித்து அவற்றின் வடிவம் அலங்காரம் முதலியவைகளை கற்றறியவேணும். "திருக்காளத்தி நாதருலா", "திருப்பூவண நாதருலா", "தேவையுலா", "திருக்கழுக்குன்றத்துலா", "கடம்பர் கோயிலுலா", "திருக்கைலாய ஞானவுலா", "மூவருலா", "மதுரைச் சொக்கநாதருலா" என ஹிந்து உலா பலஉள. உலாவென்பது தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. தாம் தொழும் கடவுள்மீதும், தம்மைத்தாங்கி ஆதரித்த அரசர்கள் மீதும் பண்டைக்காலந் துவங்கி கவிராயர்கள் செய்து பற்பல உலாக்கள் இத்தமிழ் நாட்டில் வழங்கி வந்தன. வழங்கியும் வருகின்றன.

உலாவென்பதற்கு அர்த்தம் பவனி. உலாவென்னும் தமிழ்ப் பிரபந்தம் பாட்டுடைத் தலைவனது பவனியைச் சிறப்பித்துப் பாடப்படுதலால் இப்பெயர் பெற்றது. "தத்தம் புலமைத் திறத்திற்கேற்பக் கருத்துக்களைத் தொடர்புபெற அமைத்து விவரித்துத் தாம் வழிபடும் தெய்வங்கள்மீதும், தம் ஆசிரியர்மீதும், தம்மை ஆதரித்த உபகாரிகள்மீதும், பல புலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கிறார்கள்".† ஒரு தலைவன் (Lover) பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழு பருவ மகளிர்களும், தன்னைக்கண்டு காதல் கூடும்படி வீதியில் பவனி சென்ருனென்றும், கலி வெண்பாவற் கூறல் வேண்டுமென்பது உலாவுக்குரிய விதியாம். வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய

† "கடம்பர் கோயில் உலா" Dr. உ. வே. சாமிநாதையரவர்களால் குறிப்புரையுடன் பதிப்பிக்கப்பெற்றது. முகவுரையைப் பார்க்க.

"ஞானவுலா" வில் தாம் வழிபடும் இயேசுராஜாதான் தலைமகன். இவர் பவனி வரும்பொழுது சாஸ்திரியார் தானே ஓர் தலைமகளாகத் தன்னைப் பாவித்துக்கொண்டு, சகலவிதமான பண்புகளை விளக்கி, கிறிஸ்து மார்க்க பூங்காவில் தான் கொய்த அரிய இனிய வாசனை பரிமளிக்கும் பூக்களை ஓயாமல் 'தலைவன்' மேல் பொழிகிற வண்ணமாய் ஈரடியில் கிறிஸ்து மார்க்கத்திற்கு உகந்தவிதமாய் இந்நூலை இயற்றியிருக்கிறார்.

தமிழ்க் கிறிஸ்தவ புலவர்களில் ஒருவராவது வேறு உலாக்கள் உண்டு பண்ணினதில்லை. "செபமாலை", "ஞான உலா", "ஞான அந்தாதி" முதலிய அரிய நூல்களை வாசித்து கற்றறிந்தோர் சாஸ்திரியாருக்கு தஞ்சை சபையார் "வேதாகம சிரோமணி மகா ஞானக் கவிச்சக்கரவர்த்தியார்" என்று பட்டம் சூட்டினது தகுதியென்று உணர்வார்கள். அவருக்குப் பின் தமிழ் கிறிஸ்தவர்களுக்குள் தோன்றிய காயகஸ்தர்கள் பலர் உண்டு. இவர்கள் தமிழ்நாட்டில் ஏற்கனவே வழங்கி வந்த இராகங்களில் சாஸ்திரியாரின் கீர்த்தனைகளை மாதிரி உருவாக வைத்துக்கொண்டு, கிறிஸ்து மார்க்கத்திற்குரிய பாடல்களை இயற்றினவர்களேயன்றி கவிராயர்கள் அல்ல. "செபமாலை" "ஞானஉலா", "பராபரன்மாலை" முதலிய திவ்ய பிரபந்தங்களுக்கு ஒப்பானவைகளை வேதநாயக சாஸ்திரியாருக்கு பின் கிறிஸ்து சபையில் தோன்றின தமிப்புலவர்கள் இயற்றவில்லை. தமிழ்க்கிறிஸ்தவ நூல்களில் இந்த ஒரே "உலா" இருப்பதினால் நமக்கு இது ஒரு சிரேஷ்டமான நூலென்று அங்கீகாரம் பண்ணுவது உசிதம்.

## 8. பராபரன் மாலை.

இதன் முதல் பங்கு பிரசித்தி பெற்றது. மிகவும் எழுப்புதலான அடிகளில் சிலவற்றை இங்கே பெயர்த்து எழுதுகிறோம் :—

5. * வித்தம் வைத்து நின்னருளை மென்மேலும் வைத்துனது
சித்தம் வைத்துத் தேவதிருக் கண்ணுருக்கம் வைத்து
முத்தம் வைத்துன் வேத மொழியெனது நெஞ்சில் வைத்து
நித்தம் வைத்துக் காப்பாயென் னீதிப்பராபரனே.

6. முத்திக்கும் வித்தே நீ மூவுலகு மானவித்தே
புத்திக்கும் வித்தேநீ புண்ணியமெல் லாத்தின் வித்தே
சித்திக்கும் வித்தே திருவசனத் தால்வருகும்
பத்திக்கும் வித்தே பருதிப் பராபரனே.

19. எங்கோனே யென்பவங்க ளெல்லாத் தையும்பொறுத்து
மங்கா தருள்புரிந்துன் மைந்தனெனக் காத்தருள்வாய்
பொங்காதி தீவினையைப் போக்கவென்றே தாவீதின்
சிங்காசனத் தெழுந்த தேவே பராபரனே.

20. சிக்கமுற்றே னைம்பொறியின் றீவினையி னுன்மெலிந்து
துக்கமுற்றே னேங்கித் துயரமுற்றேன் றாறுபட்டேன்
வெட்கமுற்றேன் கெட்டமகன் மீண்டகதை போலுனது
பக்கமுற்றே னென்னைமுகம் பாரும் பராபரனே.

21. பாதகனுன் மேட்டிமையாய்ப் பாருலகி லேபுரிந்த
தீதகற்றிடாதென் செபங்கூடக் கேளாமல்
வேதனைப்பட் டேமெலிய விட்டுவிட்டா லப்புறந்தா
னுதரவார் சொல்லென் னருமைப் பராபரனே.

25. நெஞ்ச முலர்ந்தே னெடுந்துயரி னுன்மெலிந்தேன்
றஞ்சமெங்கும் காணேன் சரணமல ரல்லாமல்
வஞ்சகன்மே னின்கிருபை வைத்துன் றிருச்சுதனு
ரஞ்சுகா யத்திலணைத் தாற்றும் பராபரனே.

26. என்னெஞ்சு நானு மிடைஞ்சற் படுந்துயர
முன்னெஞ் சறியாத வுண்மை யெனக்குரையாய்
வன்னெஞ்சோ சற்றுமன துருகாட்டா னீதான்
கன்னெஞ்சோ வையா கருணைப் பராபரனே.

---

* வித்தம் = ஞானம்.

27. எதிர்த்தா லெனைப்பகைத்தா லெங்கேபோ வேனெளியே
னதிர்த்தா லரவணைக்க வானதுணை யாரெனக்கு
* வெதிர்த்தாலுன் பாதமதில் வீழ்ந்தெனின் கண்ணீரை
யுதிர்த்தா லிரங்காயோ வுண்மைப் பராபரனே.

29. நீயிருக்க வேத நெறியிருக்க நெஞ்சமுற
வாயிருக்க நின்பதத்தில் வந்திருக்க வென்மனமும்
போயிருக்க நின்புதல்வன் புண்ணியனு ரன்பிருக்கத்
தாயிருக்கச் சேய்க்குத் தவிப்பேன் பராபரனே.

41. ஊரைநம்பி நேரைநம்பி யுற்ற வினசனங்கள்
சீரை நம்பி வீட்டிலுள்ள செல்வமெலா நம்பி யெந்தன்
பேரை நம்பிப் பெற்றவரைப் பெண்டீரைப் பிள்ளைகளை
யாரைநம்பி யாவதென்ன வையா பராபரனே.

42. தந்தை தாய் பெண்டீர் சகோதரங்கள் பொய்யெனவும்
பெந்துகளு மன்பர்களும் பிள்ளைகளும் பொய்யெனவுஞ்
சிந்தைமயக்கு முலகச் செய்கை யெல்லாம் பொய்யெனவும்
விந்துவும் பொய்யெனவும் விட்டேன் பராபரனே.

43. பொய்யே யரண்மனையும் பொற்கட்டு மாளிகையும்
பொய்யே பதாதி புடைசூழ்ந் துலவுவதும்
பொய்யே நவமணியும் பொற்றுகிலும் பூடணமும்
பொய்யே கண்கண்டல் புகையே பராபரனே.

50. கண்டேனுன் னன்புங் கருணைக் கடைவிழியுங்
கண்டேனுன் காரணத்தின் காட்சித் திருப்பதமுங்
கண்டேனுன் மேனிக் கதிரொளிவுங் கண்கூசக்
கண்டே னெனதுகலி காணேன் பராபரனே.

இவைகளில் 25, 27, 29 அடிகளை ஆங்கிலத்தில் பரு மட்டாய் மொழி பெயர்த்தால் பின் வருமாறு காணப்படும்.

---

* வெதிர்த்தல் = சினத்தல்.

25. My heart is dry. I am lean thro' sorrow long felt.
I find no refuge but in worshipping thee.
Have mercy on this traitor, fold him
Within the five wounds of thy Holy Son and heal [him.

27. If thou opposest and hatest me, whither shall I flee!
If thou rebukest me where is the friend to comfort [me!
When thou art wrathful, if I shed my tears,
Falling at thy feet, wilt thou not have mercy ?

29. When thou remainest, when there are the Holy [Scriptures,
When the heart is reconciled to thee, when there
Is the love of Thy Son, when there is the Mother
Why should the child sob and moan ?

## 9. சாஸ்திரக்கும்மி.

இந்த நூல் சாதாரண கும்மி ராகத்தில் (Ballads) இயற்றப்பட்டதினால் நான் இதையொரு நூலாக மதிக்கவில்லை, ஆனால் ஏதோ விசேஷமாக இந்தக் கும்மியை சாஸ்திரியாரின் வீட்டார் கொண்டாடுகிறபடியினால் விரும்பி வாசித்தேன். இந்த நூலை அங்கீகரித்து ஆனந்திப்பதற்கு இதன் மனோபாவனை (Imagery) விளங்கிக்கொள்ளுவது அவசியம். அல்லது "சாஸ்திரியார் இயற்றிய செபமாலை, ஞானவுலா முதலிய உயர்ந்த நூல்களை கற்றறிந்தால் நலம்; அவருடைய கும்மி பாசுரங்கள் பெண்களுக்குரியது." என்ற அசட்டையாய் இருந்துவிட நேரிடும். "ஞானப்பெண்" தஞ்சாவூர் திருச்சபையைக் குறிக்கிறது. நூலாசிரியரை தலைவனாக பாவிக்கவேண்டும். இவ்வித மனோபாவனை ஹிந்து நூல்களில் விசேஷமாக காணப்படுகிறது. உதாரணமாக: 'மதுரைக்கலம்பகம்' 'சடகோபரந்தாதி'

---

* இந்த நூலை இயற்றினபொழுது சாஸ்திரியாருக்கு. வயது 40.

இவைகளில் காணப்படும், தலைவன் (Lover) தலைவி (Lady) பாட்டுகளைக்கொண்டு சாஸ்திரக் கும்மியின் ஆதாரத்தை யூகித்துக்கொள்ளலாம்.

சடகோபரந்தாதியின் 12, 20, 21, 43 செய்யுள்களுக்கு கம்பர் தலைமகளாகவும், சடகோபர் தலைமகனாகவுங்கொண்டு உள்ளுறை பொருளுரைத்தலே சிறக்கும் என்று வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். சாஸ்திரக் கும்மியில் தலைமகன் மாத்திரம் பேசுகிற பாவனை காணப்படுகிறது. தலைமகள் (ஞானப்பெண்) மௌனம் சாதிக்கிற போங்காக இயற்றப்பட்டிருக்கிறது.† தஞ்சாவூர் சபைக் கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் ஹிந்துமத சடங்குகளில் சிலவற்றை கைவிடாமல் அனுசரித்துக்கொண்டு வந்தார்கள். இவைகளைக் கண்டித்து உணர்த்தும்படிக்கும் ஹிந்துக்களுக்கு விரோதமாகவும் இந்தக் கும்மியை உண்டு பண்ணினார் என்று காண்க. இதில் 850 செய்யுள்கள் அடங்கியிருக்கிறது. 768, 769, 770, 771, 772, 773, 774 செய்யுள்களை பெயர்த்தெழுதி அவைகளைப் பரிசோதிக்கலாம்.

சாஸ்திரி வந்த பிறகல்லோ; வாகம
சாரங்களெல்லாம் பாட்டாச்சு
சாஸ்திரி வந்தல்லோ எண்பது நூல்களைச்
சாதித்தானடி ஞானப் பெண்ணே.

---

† In "Omar Khayyam" it will be seen that the poet just as here addresses his verses to an unseen lady who is a good listener but has not sufficient learning to reply to her lover. This is a kind of imagery which seems to be peculiar to oriental art. It is unlikely that Vedanayaga Shastriar could have borrowed the imagery from the original Omar Khayyam in persian. In this Satirical Poem of his, the Shastriar has combined romantic cult with religious admonition.

சாஸ்திரி யாலல்லோ பள்ளிக்கூடங்களுஞ்
சபையுங் கோவிலுந் தான்சிறந்து
சாஸ்திரி யாலேயுன் மைந்தர்க ளெல்லாஞ்
சமர்த்த ராயினர் ஞானப்பெண்ணே.

ஞானப் பாட்டை படித்தவ ளுருந்தன்
ஞான ஸ்நானக் கவியாணை
மான மற்றவுன் சந்தோஷ நாள்களி
லதிகஞ் செய்ததார் ஞானப்பெண்ணே.

அதிகஞ் செய்தவ னெங்கேயடி வே
தாகமம் பாடினோ னெங்கேயடி
மதியுனக்கிருந் தாலவனை மனம்
நோக வைப்பாயோ ஞானப்பெண்ணே.

இந்நாளல்லோ அந்தப் பேருனக்
கிஷ்டமாகின ரென்று சொன்னோ
யந்நா ளுந்தன் விவாகங்க ளெல்லா
மாரா லாயிற்று ஞானப்பெண்ணே.

என்னென்ன நன்மைகள் செய்தாலு மதை
யெள்ளள வேணும் நினையாமற்
பின்னையு முன்பிடி வாதத்தில் நிற்கின்ற
பேதைமை யேதடி ஞானப்பெண்ணே.

எத்தனை பாடலெல் லாம்படித்தான் சவைக்
கெத்தனை யாய்ச்சிறப் பாக்கிவைத்தா
னித்தனை யாயுனை நேசித்த தோழனைச்
சத்துருவாக்கினாய் ஞானப்பெண்ணே.

இந்த செய்யுள்களில் சாஸ்திரியார் தனக்கும் தஞ்சாவூர் சபைக்கும் ஏற்பட்ட பாத்தியத்தை சிலேடையாக எடுத்துக் காண்பித்தார் என்று கொள்க. தான் தஞ்சாவூர் சபைக்குச் செய்த சிறப்பான விஷயங்களை வேறு நூல்களில் காட்டியிருந் தால் சுய அபிமானம் என்று ஏற்படும். தலைமகன் தனக்கும் தலைமகளுக்கும் உண்டான மனஸ்தாபம் நீக்கும்பொருட்டு

உரிமை பாராட்டி விளம்பிய கருத்து என மதிக்கக்கூடியதினால் சம்பிரதாயத்தை வெளிப்படுத்துகிறதன்றி வேறில்லை. 778, 779, 780, 781 செய்யுள்களிலே நல்ல கவிசாரம் நிறைந்து இன்பம் விளைவிக்கின்றது.

இந்நேரமட்டுஞ் சொன்ன தெல்லாமுனக்
கெவ்வளவேனும் படாதிருந்தா
லின்ன முனக்குப்பன் னிரண்டுவாக்கிய
மியம்பக் கேளடி ஞானப்பெண்ணே.

779. அண்ணாவியார் சொன்ன சாஸ்திரமெனக்
கக்கறை யில்லை யென்பாயானா
லண்ணல் பராபரன் சொன்னதை யாகிலு
மறையக்கேளடி ஞானப்பெண்ணே.

780. அண்ணாவியாருக்கு வேலையென்ன அவர்
மனதில் வந்ததைப் பாடிக்கொண்டார்
அண்ணாவியார் சொல்லைக்கேட்க மாட்டேனென்பா
யானாலொன்றுகேள் ஞானப்பெண்ணே.

781. அண்ணாவியார் சொல்லைக் கேட்காதேபோனாலும்
அண்ணலார் சொல்லையே னுங்கேள்நீ
யண்ணலார் சொல்லையுங் கேட்கமாட்டேனென்று
லப்புறமார் சொல்வார் ஞானப்பெண்ணே.

'சாஸ்திரக் கும்மி' ஓர் ஞானோபதேச மாகையால் அதைக்கேட்டு பயனடையும் தலைவியை 'சகி' (Saki) அல்லது 'மானே' என்று அழைக்காமல், "ஞானப்பெண்ணே" என்று அழைத்தது தகுதியாகும். மேலும் 'ஞான' என்ற பண்புச்சொல் உன்னதமான கருத்தைக் காண்பிக்க உபயோகிக்கப்படுகிறது, உதாரணமாக: ஞானக் கும்மி, ஞான உலா, ஞானஸ்நானம், ஞானோபதேசம்.

கடைசியாக நோவா ஞானாதிக்க சாஸ்திரியார் அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிற வேதநாயக சாஸ்திரியின் புஸ்தகங்களைக் குறித்து கொடுத்திருக்கும் விவரத்தை எழுதி முடிக்கிறேன்:—

I. "குருட்டுவழி: இந்தப் புஸ்தகம் இந்துக்களுடைய சாஸ்திரங்கள் புராணங்களிலுள்ள தப்பறைகளைக் காட்டி, அவர்களைக் கர்த்தரண்டைக்கு மனந்திருப்ப ஏவுகிறதற்கானது. இது முக்கியமாய், புறமதஸ்தரைச் கண்டுபேச விரும்புகிற குருக்களுக்கும், உபதேசிகளுக்கும் பிரயோசனமாயிருக்கும். அமெரிக்கன் மிசியோனரிமார் இந்தப் புஸ்தகத்தைத் திரளாயச்சடித்து, சனங்களுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

2. சாஸ்திரக்கும்மி: இது இந்துக்கள் பார்க்கிறபடி, கிறிஸ்தவர்கள், நாட்கள் சாஸ்திரங்களைப் பார்க்கக்கூடாதென்றும், இரசவாதமில்லையென்றும், கிறிஸ்தமார்க்கத்திலுட்பட்ட தாழ்ந்த சாதியாரைத் தங்கள் சொந்த அவயமாய் எண்ணி நேசிக்கவேண்டுமென்றும் எழுதப்பட்ட ஒரு விசேஷித்த நூல். இந்தப் பொஸ்தகத்தை, இயாப்பாணத்திலுள்ள மிசியோனரிமார்கள் அச்சடித்து விற்பனை செய்கிறார்கள்.

3. விதிவிலக்கு: இது தலையெழுத்து அல்லது விதியின்படி நடக்குமென்று நம்புகிறவர்களின் அவிசுவாசத்தையெடுத்துப்போடும் பெலனுள்ள ஞாயங்கள். இத்துடன் கிறிஸ்தமான சனங்களுடைய விசுவாசத்துக்கும் செபத்துக்கும் உதவியான பாவினங்களாகிய பராபரன்மாலை, ஞானேத்தப்பாட்டு, பேரின்பக்காதல், அத்தனுசி விசுவாசப்பிரமாணம், செபமாலை முதலான புஸ்தகங்களை சங். கிறிஸ்தியான் கோலோப்பையர் பிரதர்ட்டனையர் (Rev. J. C. Kohloff and Rev. Brotherton) முதலானவர்களின் கேட்டுக்கொள்ளுதலின் பேரிலே, சென்னப்பட்டணத்து சபையார் அச்சடித்தார்கள்.

4. கடைசி ஞாயத்தீர்ப்பு, ஞானவுலா என்ற இரு புஸ்தகங்களையும். பாளையங்கோட்டை மிசியோனரிமார்கள் அச்சிற்பதித்து, அதற்குக் கொஞ்சம் நன்மை செய்தார்கள்.

5. பதகீர்த்தனை: இந்தப் புஸ்தகத்தில் இலேசான இராகங்களைத் திண்டுக்கல் மிசியோனரியாகிய சங். வெப்பை யர் தெரிந்தெடுத்து, அவைகளின் இராகங்களை, தேவ ஊழியக் காரருக்குக் கற்றுக்கொடுத்து ஆராதனை நேரத்தில், பிரார்த் தனைக்கொப்பாய்ப் பாடிவருகிற வழக்கத்தை யுண்டுபண்ணி னார். அதை யவர் அச்சிற்பதித்தபோது, வேதநாயக சாஸ்திரி யாருக்குக் கொஞ்சம் உதவி செய்தார்.

6. நூறு சுலோகம்: இதைத் தரங்கன்பாடிப் பூருவ குருமார் வசனநடையா யுண்டுபண்ணி யிருந்தார்கள். அதை இவர் விருத்தமாய்ப் பாடியிருந்தார். சங். போப்பையர், (G. U. Pope) பள்ளிக்கூடத்தின் பிள்ளைகள் படிப்புக்காக அதை யச்சிற்பதிப்பித்து விற்று, அதின் ஆதாயத்தை வேத நாயக சாஸ்திரியாருக்குக் கொடுத்தார்.

இவர் தாமுண்டுபண்ணின புஸ்தகங்களை அச்சிற் பதிக்க எத்தனமில்லாதபடியினாலே, தம்மிடத்திலேயிருக்கிற ரைட் டர்களைக்கொண்டும், எழுத்துக் கூலிக்காரரைக்கொண்டும், பல பிரிதிகளாகப் பெயர்த்தெழுதி, அந்தந்த சபையின் மூப்ப ருக்கும், தம்முட மாதாந்திர உபகாரிகளுக்கும் அனுப்புவார். அவர்களாலே ஏதாகிலும் கொஞ்சம் வரத்துவந்தால் எழுத்துக் கூலிக்கும் கடுதாசிக்கும், மாணுக்கருடைய சம்பளத்துக்கும் சரியாயிருக்கும். அதினாலே இவர் சவுக்கியத்தை யடைந்த தில்லை. எழுதும் வருத்தத்தை யுணராதவர்கள் கைப்பிரதிகளை அச்சடிப் புஸ்தகத்தைப் போலே மதிக்கிறதுமுண்டு. அதின் பிறகு, பூருவோத்திரம், பெத்தலேகங் குறவஞ்சி, ஞானக்கும்மி, கலியாணவாழ்த்துதல், தியானப் புலம்பல், பராபரக்கண்ணி, ஆரணாதிந்த முதலானது சிலரின் ஒத்தாசையால் அச்சிற் பதிக்கப்பட்டிருக்கிறது."

---

# அத்தியாயம். 11.

## வேதநாயக சாஸ்திரியின் பின்சந்ததியார்.

வேதநாயக சாஸ்திரியார் மணம்புரிந்த இரண்டு பெண்களுக்கும் சந்தான மில்லாமல் போனது முன்னே கூறப்பட்டது. இரண்டாவது மனைவி மிக்கேலு முத்தம்மாளுக்கும் சாஸ்திரியாருக்கும் கொடிய ஒவ்வாமை நேரிட்டதினால் அந்த அம்மாள் இவரை விட்டுப்பிரிந்து சிலகாலம் ஜீவித்து மரித்துப் போனதாக சொல்லுகிறார்கள். ஆனால் புத்திர வாஞ்சை இவருக்கு மேலிட்டிருந்ததினால் 1811-ஆம் வருஷத்தில் தன் சகோதரியின் மகளை முப்பது நாள் குழந்தையிலே ஞானதீபம் என்று ஞானஸ்நானங் கொடுத்து அன்று பெரிய செலவு செய்து சுவீகாரபுத்திரியாக எடுத்துக்கொண்டார். பிற்பாடு 1813-ஆம் வருஷம் தன் பாடகரில் ஒருவனான வாமன் என்ற புதுகிறிஸ்தவனுடைய மகனை ஞானசிகாமணி என்ற பெயரிட்டு சுவீகார புத்திரனாக எடுத்துக்கொண்டார்.

I.

ஞானதீபமம்மாள் வளர்ந்த பிறகு வேதநாயக சாஸ்திரியின் பிரசங்கச் சதுருக்கு மெத்தவும் உதவியாயிருந்து, அவரியற்றிய சகல நூல்களிலும் அப்பியாசித்திருந்து, சகல இராகங்களையும் இனிதாய்ப்பாட சாமர்த்திய முடையவர்களாயிருந்தது மாத்திரமல்ல, இங்கிலீஷ் பாஷையை சாதுரியமாய் பேசவும், எழுதவுங் கற்றதுமன்றி, அந்த அம்மாள் தமிழ் கிறிஸ்தவர்களின் பிரயோசனத்திற்கென்று *"இளமை பக்தி" என்ற புஸ்தகத்தை 1853-ஆம் வருஷம் இங்கிலீஷிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார்கள். இது சென்னபட்டணத்து கமிட்டியாரால் (The Tract and Book Society) அச்சடிக்கப்

---

* "Early Piety"—Persuasives to the exercise of piety from an early age. By J. G. Pike.

பட்டது. தஞ்சாவூரில் சதுர் நடந்து வரும் மண்டபத்தை 1870-ம் வருஷம் கட்டினவர்களும் இவர்களே.

வேதநாயக சாஸ்திரியாரின் "உபத்திரா பத்திரம்" என்ற வாசக நூலில் இந்த மாதர்கள் சிரோமணியைக் குறித்து பின் வருமாறு எழுதியிருக்கிறார். "என் குமாரத்தி ஞானதீபம் வேதாகமங்களிலும் இலவுகீக ஞான நூல்களிலும் தேறுகிறதற்கும் இங்கிலீஷ் பொஸ்தகங்களைத் தமிழ்ப்படுத்தவும் நான் முப்பது வருஷகாலம் எத்தனை பிரயாசப்பட்டு எத்தனை செலவுகளைச் செய்திருப்பேன். அவளுக்கு விசேஷித்த பன்னிரண்டு வரங்கள் உண்டு.

(1) தமிழ்வேத பொஸ்தகத்தின் வாசிப்பு.

(2) புராண காவியங்களுடைய வாசிப்பு.

(3) தொன்னூல் முதலான இலக்கண இலக்கியங்களுடைய வாசிப்பு.

(4) வேதத்தை வியாக்கியானம் பண்ண.

(5) குறள், நாலடி, மற்றப்புராண காவியங்கள் முதலானதை வியாக்கியானம் பண்ண.

(6) வேதவாக்கியங்கள் இன்ன இடத்திலெழுதியிருக்குதென்று அறிந்துடனே யெடுக்க,

(7) தமிழட்சரங்களை நேர்த்தியாய் எழுத.

(8) பிரார்த்தனை இராகங்களைத் திட்டமாய்ப்பாட.

(9) தமிழ்ப்பத கீர்த்தனங்கள், வண்ணங்கள், தருக்கள், புலம்பல்கள் முதலானதுகளைக் காதுக்கின்பமாய்ப்பாட.

(10) இங்கிலீசைத் தமிழிலும், தமிழை இங்கிலீசிலுந் திரான்சிலேற்றுப்படுத்த அல்லது மொழிபெயர்த்துத் திருப்ப.

(11) இங்கிலீசுப் பாஷையைக் கொச்சை யில்லாமல் உச்சரிக்கவும் வாசிக்கவும்.

(12) இங்கிலீசு அட்சரங்களை அழகாயெழுத.

ஆக இந்த பன்னிரண்டு வரங்களையும் கருத்தர் அவளுக்கு பூரணமாகக் கட்டளை யிட்டார். என்னுடைய யோசிப்பின் எழுத்து வேலையிலுஞ் சதுர்பிரசங்கத்திலும் அவளுடைய பிரயாசம் மெத்த உண்டு."

1853-ஆம் மாசி-மீ அத்தியக்ஷர் டி அல்ட்ரி தஞ்சாவூர் சபை சந்திப்புக்கு விஜயம் செய்தபொழுது, சாஸ்திரியார் G. U. போப்பையர் தனக்கும் தன் குடும்பத்திற்கும் செய்த தீமைகளைக் குறித்து அனுப்பியிருந்த மனுவைப்பற்றி விசாரணை செய்தார். சாஸ்திரியாருக்கு ஆங்கிலம் தெரியாததினால் ஸ்ரீமதி ஞானசாஸ்திரம் அம்மாள் அவர் கூடவேயிருந்து இரண்டுமணி நேரம் நடந்த விசாரணையில், வேதநாயக சாஸ்திரிக்கு ஆங்கிலத்தைத் தமிழிலும், கண்காணியாருக்கு தமிழை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து கொடுத்தார்.

இவர்கள் இடையன்குடி என்ற ஊரில் கனம் D. சாமுவேல் B. D. ஐயரவர்கள் காலத்தில் அங்குவந்து சதுர் பிரசங்கம் நடத்திக்கொண்டிருந்தார்களாம். அப்போது தற்செயலாய் 7-ம் எட்வர்ட் அரசரின் மைத்துனர் கர்னலாக பட்டாளங்களோடு அங்குவர தானும் அவர்களின் பிரசங்கத்தைக் கேட்க வாஞ்சித்து கனம் சாமுவேல் B. D ஐயர் அவர்களோடு சொல்ல அப்படியே மறுநாள் அந்த ஊரிலே ஞானதீப சாஸ்திரியம்மாளும் பிள்ளைகளும் பாடி பிரசங்கிக்கும்படி தயாராகவிருந்தார்கள். கர்னல் அவர்களும் பட்டாளங்களோடு வந்து அமர்ந்தனர். அப்போது கனம் ஐயர் அவர்கள் சாஸ்திரியம்மாளைப் பார்த்து நீங்கள் தமிழில் பேசுவதை நான் இங்கிலீஷில்

மொழிபெயர்க்கிறேன் என்றாராம். அதற்கு சாஸ்திரியம்மாள் இல்லை நானே இங்கிலீஷிலும் தமிழிலும் பேசுவேனென்று சொல்லி இங்கிலீஷ்காரர் பக்கம் திரும்பி இங்கிலீஷிலும் சபையார் பக்கம் திரும்பித் தமிழிலும் வெகு உற்சாகமாய் தைரியமாய் பிரசிங்கித்தார்களாம். "இயேசுவே இரட்சகர்" என்பது அன்று நடந்த சதுர்பிரசங்கத்தின் பொருளாம்.

இதை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த கர்னலவர்கள் அதிக சந்தோஷமடைந்து காணிக்கை எவ்வளவு விழுந்தது என்று விசாரிக்க, காணிக்கையை எண்ணிப்பார்த்து 250 ரூபாய் என்றார்களாம். அதைக் கொண்டுவரும்படி சொல்லி அதற்கு சரியான தொகையாக 250 ரூ. கூடவைத்து 500 ரூபாயாகக் கொடுத்தார்களாம். இந்தியாவிலே இவ்வளவு தெளிவாக தைரியமாகக் கடவுளைப்பற்றிப் பேசும் தமிழ் ஸ்திரியைப் பார்த்ததில்லை என்று வியந்து புகழ்ந்து பேசினாராம்.

இப்படியாகக் கற்றோரும் மற்றோரும் மெச்ச அரியபெருமையையும் பெரும் புகழையும் பெற்று சனத்தோருக்கு விளைவித்தவர்கள் சாஸ்திரியம்மாள்.

ஞானதீப சாஸ்திரியம்மாள் கொழும்பிலேயிருந்து ஊழியம் செய்யும்போது அநேகர் வந்து கூடி கேட்பதோடு ரயிலேறியும் வந்து கேட்டுவிட்டு விழுந்து போய்விடுவார்களாம். அதில் பாப்புமார்க்கத்தாரும் கூடிவந்து கேட்பதை யறிந்த சம்மனசு சாமியார் என்றவர் ஒரு நோட்டீஸ் எழுதி பெண்பிள்ளைகள் சபையில் பேசக்கூடாதென்றும், அதை ஆண்கள் போய்க் கேட்பது வெட்கமென்றும், தன் சபையை சேர்ந்தவர்கள் போகக்கூடாதென்றும் கண்டித்து எழுதி ஞானதீப சாஸ்திரியம்மாளின் படத்தையும் போட்டு ஊரெங்கும் அனுப்பியிருந்தாராம். அங்குள்ள சபையாரில் சிலர் அதைக் கொண்டுவந்து கனம் சாஸ்திரியம்மாளிடம் கொடுக்க அவர்கள் அதை மறு

நாள் சதுர்ப்பிரசங்கத்திற்குக் கொண்டுபோய் வந்திருந்தவர் களுக்கு வாசித்து காண்பித்துப் பெண்பிள்ளைகள் சபையில் பேசக்கூடாதென்றும் ஆண்கள் அப்பிரசங்கங்களைக் கேட்க கூடாதென்றும் எழுதி இருக்கிறதே அப்படியானல் பெண் பிள்ளையை வணங்கலாமா? இதற்கு உத்திரவு சொல்லுங்கள் என்றார்களாம். இயேசுவின் தாயாகிய மரியம்மாள் பெண் பிள்ளையல்லவா? அவர்களை தெய்வத்திற்கு ஒப்பாக வணங்கு வது நியாயமா? அவர்களுக்கு ராஜாதிராஜாக்களுக்கு மேலான கனத்தை செலுத்தலாமே யன்றி வணக்கத்துக்கு உரியவர் களல்ல. மேலும் அவர்களுக்குத் தெய்வீக மில்லாததினுல் எங்கும் நிறைந்திருக்கும் லட்சணம் அவர்களுக்கு இல்லை. அதினுல் மகனைப் பார்த்து "நானும் உன் தகப்பனும் வேதனை யோடே தேடினோமே" என்றார்கள் (லூக்கா. 2:43-48,): என்றெல்லா நியாயங்களையும் எடுத்துப்பேசினூர்களாம்.

இந்த சாஸ்திரியம்மாள் அங்கேயே சில மாதங்களாய் வேலைசெய்து மரித்துப்போனார்கள். அடக்கதிற்கு அந்தச் சம்மனசு சாமியாரானவர்கள் வந்து அவர்களை அதிகமாய் மெச்சிப்பேசினாராம். அவர்கள் பிரசங்கத்தைக் கேட்ட பலருரிலும் அவர்கள் அறிவின் திறமையை புகழாதாரில்லை. இந்தக் கல்விக் களஞ்சியமாகிய மாதரசின் ஜீவியத்தில் நடந்த மற்ற சம்பவங்களை 8-ம் அனுபந்தத்தில் காண்க.

[The life of this remarkable lady raises the question "Is it against Scripture for a woman to speak at a mixed gathering?" The following extract from 'The Christian Herald and signs of our times' Dec. 7, 1939, P. 485 throws some light on it :—

"If we are all one in Christ Jesus, then as Paul wrote to the 'Galatians there can be neither male nor female.' If you make a careful study of the Acts and Epistles, you



THE EVANGELICAL HALL, TANJORE

*Built* : 1870

will see that from the first, consecrated women were prominent in the activities of the early church. The first convert in Europe was a woman Lydia of Thyatira whose hospitality made a home for Paul, and a meeting place for the infant church. What would Christian History be without Dorcas, Mary the mother of John Mark, Priscilla and the eight godly women who are saluted by the Apostle in his Letter to the Romans?

It is evident that women as truly as men received the Charismatic gifts of Pentecost. From the first, they held official positions of influence in the Church. Phoebe was a deaconess (Rom. 16 : 1), a servant of the Church and a 'helper of many.' In Phil. 4 : 3 the Apostle refers to the women 'who labour with me in the Gospel.' This must surely mean that they participated with him in preaching. Elsewhere it is true, the Apostle seems to revoke this privilege, but the General impression seems to be that such a prohibition was applicable only to the peculiar conditions of the time and place "]

இவர்கள் கொழும்பிலிருந்து அனுப்பிய தொகையைக் கொண்டுதான் தஞ்சையில் கனம் சாஸ்தியாரவர்கள் வீட்டு முகப்பில் 1000-ம் பேர் கூடிவந்து கேட்கத்தக்கதான "ஞான சதுர் மண்டபம்" என்பது அவர்கள் பேராலே 1870-ஆம் கட்டினார்கள். இதிலேதான் சதுர்ப்பிரசங்கம் நடைபெற்று ஜனங்கள் கூடிவந்து கேட்கிறார்கள்.

II.

ஞானசிகாமணி சுமார் ஏழுவயதாகி கல்வி பயின்று வரும் பொழுது வாமன் தன் மகனைத்தனக்கு திருப்பிக்கொடுத்து விட வேண்டுமென்று விவாதம் பண்ணினான். வேதநாயக சாஸ்திரியார் சந்தானமில்லாதவரானதால் வளர்த்த ஆண்

பிள்ளையை திருப்பிக்கொடுத்துவிட மனம் ஒவ்வவில்லை. ஆகையால் சுவீகார புத்திரனை விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டு ஒரே சாதனையாய் நின்றதினால் வியாச்சியத்திற் குள்ளானார். வாமன் கும்பகோணத்துக் கோர்ட்டில் பிராது போட்டான். அக்காலத்தில் நியாயாதிபதி கும்பகோணத்தில் ஒரு பெரிய மாமரத்தின் கீழ் வீற்று கட்சிகளை விசாரிப்பாராம். அந்த காலத்தில் 10-ம் அத்தியாயத்தில் மதித்துக் கூறப்பட்ட 'சாஸ்திரக்கும்மி' என்ற நூலை இந்துசடங்குகளை கலியாணம் முதலிய விசேஷங்களில் அனுசரித்துவந்த தஞ்சாவூர் கிறிஸ் தவர்களுக்கு விரோதமாய் இயற்றியிருந்ததினாலே இந்தக் கட்சியில் வாமனை அவர்கள் உசுப்பி விட்டதாக தோன்று கிறது. வேதநாயக சாஸ்திரியார் இவர்களில் ஒருவர் அழைத்த விருந்துக்கு போயிருந்த பொழுது அவர்:

"ஓய் சாஸ்திரியாரே! உம்மை கும்பகோணங் கோர்ட்டுக்கு முன்னாக மாமரத்தின் கீழேயிருக்கப் பார்ப்பேன்" என்றார். அதற்கு பதிலாக சாஸ்திரியார் ஒரு வெண்பாவை உடனே உண்டுபண்ணி அவருடைய வாயை அடைத்தாராம்:

"அத்தியின் கீழ் நாத்தானுவேலை யன்றுகண்ட பாரபரன்
பித்தர்கள் நீர் சொன்ன பிரகாரம்—தத்தாய் நான்
மாமரத்தின் கீழ் வருங்காலம் வந்தாக்கால்
தாமதிப்பாரோ தான்."

அப்படியே கோர்ட்டு சம்மன் வந்தபொழுது, சாஸ்திரி யாரும் இரண்டு தத்து புத்திரர்களும் கும்பகோணம் சென்று கோர்ட்டுக்கு முன் இருந்த மாமரத்தின்கீழ் போய் நின்றார்கள். நியாயாதிபதியான துரை விசாரணை செய்து சாஸ்திரியாருக்கு அனுகூலமாக தீர்ப்பு செய்தார். இதை 25-ம் செபமாலையில் 15-ம் செய்யுளில் குறிப்பிட்டு காண்பித்திருக்கிறது.

"வேதநாயகன்மேல் வாமனை யெடுத்து
விட்டுவே டிக்கைகள் பார்த்தாய்
மிக்கேலு முத்தவன் பெண்டீரை யேகொண்டு
வியாகுலப் படுத்தி வாதித்தாய்
சாதிகடனையும் உசுப்பிவிட் டனேகஞ்
சங்கடங் களையெ லாம்விளைத்தாய்
சற்குணத் திருந்த பாக்கியநாதன்
சதிசெய்வ தற்கிடங் கொடுத்தாய்
பேதமே பகைத்த அடைக்கலத்தையர்
போரதி கரிக்கவே வைத்தாய்
புண்ணிய வானே எத்தனைவேடம்
போடுவாய் ஆடுவா யையா
ஈதெலாம் படுத்திக் கோபமாறினபின்
எழுப்பி யாபத்தெ லாமுடித்தாய்
எழில்பெறு சீயோன் மகள்மணவாளா
இறைவனே யேசு நாயகனே."

சாஸ்திரியாருக்கு சபையாரின் மதிப்பும் அங்கீகாரமும் பொதுவாக இருந்தாலும் சில எதிரிகள் இருந்ததாக இந்த செய்யுளால் வெளிப்படுகிறது.

இந்த சம்பவங்களுக்கு பிறகு தத்து புத்திரன் ஞான சிகாமணியை தன் சொந்த குமாரனைப்போல வளர்த்து, கல்வியைப் புகட்டி தன்னுடைய சதுருக்கு உதவியாக இருக்கக் கூடிய நிலைமைக்கு பயிற்றுவித்தார். தான் மூன்றும் விவாகம் செய்து சொந்த குமாரர்கள் தனக்கு பிறந்த பிறகும், தத்து புத்திரர்களுக்கும் சொந்த புத்திரர்களுக்கும் இவர் வித்தியாசம் பாராட்டினதாக தெரியவில்லை. மேலும் சாஸ்திரியார் வீட்டில் சுவார்ச்சு ஐயர் செய்த வேலைக்கு ஒப்பாக வேறு குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருந்துகொண்டு கல்வி கற்றுவருவது ஒரு ஏற்பாடாக விருந்தது. ஆகையினால் சாஸ்திரியாருக்கு சுவிகார புத்திரர்களை வளர்ப்பது அவருடைய சுபாவத்திற்கும் வேலைக்கும் பொருத்தமாகவேயிருந்தது.

ஞானசிகாமணிப் பிள்ளை தன்னுடைய தமக்கையைப் போல படிப்பிக்கப்பட்டு, தஞ்சாவூர் சாஸ்திர பள்ளிக் கூடத்து முனிஷியாயிருந்து, ஐயர்மார்களுக்குந் தமிழ் படிப் பித்துக் கொண்டிருந்து, ரோமான் மார்க்கத்துக்கு விரோத மாய் '' இரு சமய சம்பந்தம் '' என்ற புஸ்தகத்தையும், முகம் மது மார்க்கத்துக்கு விரோதமாக '' மேசியா மகத்துவம் '' என்ற புஸ்தகத்தையும் உண்டுபண்ணினர். அதை சென்னப் பட்டணத்து கமிட்டியார் அச்சிற் பதித்தார்கள்.

அல்லாமலும் வேதநாயக சாஸ்திரி ஞானசிகாமணிப் பிள்ளையை, சாஸ்திரிப்பட்டம் கொடுத்து, சில மாணுக்கரோடு கூட்டி புறதேசங்களில் கிறிஸ்துவை பிரசிங்கிக்கும்படி அனுப் பினதுண்டு. இவர்கள் போகிற இடங்களில் பிரசங்க சதுர் உண்டுபண்ணி, பாடிப் பிரசங்கிப்பார்கள். எல்லோரும் இவர் களை பட்சமா யேற்றுக்கொண்டு, தங்களாற் கூடிய நன்மை யைச் செய்து அனுப்புவார்கள். ஒருமுறை மலையாளத்து மகாராசாவும் (வன்ம குலசேகர வஞ்சி மார்த்தாண்டன்) ஒரு முறை மைசூர் மகாராசாவும் தங்கள் அரண்மனைகளிலே அழைத் துக் கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கிக்கக்கேட்டு, வெகுமானம் பண்ணி அனுப்பினர்கள். இதினலே அவர் சுவிசேட புராண பிரசங்கியாரென்று பெயர் பெற்ருர். மலையாளத்து மகா ராஜா முன் சதுர் நடத்திய சம்பவம் எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் பாடின '' தெட்சண நொண்டிச்சிந்து '' என்ற கவியில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது :—

பக்கம் 43.

86. இத்தனை யம்மானெல்லா மலையாள
வந்தல் ராசாவினிடம் சார்ந்து சென்று
துத்திய மதாகப் பேசித் தஞ்சைநகர்
சுவிசேடக் கவிக்குமாரி விடந்தமை

87. தெரிசிக்க வந்தாரென்று றப்படியே
சேரனமகா ராசகவி ராசரெங்களைக்
கரிசனத்தோடே யழைத்து சதுர்கேட்டு
களிப்புக்கொண்டார் மாகளிப்புடனே

88. செகமாளும் டில்லியரசோ உருசிய
தேயமாளு மிராயனோ மாயமேயுள
அகிலத்திற் கீர்த்திபெற்ற டிப்புசுல்தான்
அரசனோ வகாசுவேரோ முரசு முழங்கும்

89. போசலே வங்கிடபதியோ சரபோசி
புத்திரன் சிவாசிமனனோ எத்தனை சொல்வேன்
சாசுவதமாய்த் தஞ்சையி லேழைகட்குத்
தங்கமாரி பெய்யச் செய்தமங்க மாரியோ

90. வஞ்சிமாதத் தாண்டவரும் குலசேகர
வாசாரம ராசனெனமை நேசமாய்ப் பார்த்து
சஞ்சலந் தவிர்த்த வேசு சக்கிராதிபனைச்
சாற்றுமென்றபடி துதித் தேற்றினேமையா

91. சந்தோஷ மிகவாகி விலைபோன்ற
தங்கச்சரி போட்ட சட்டை சங்கையாகவே
முந்தினோருக்குத்தந்தார் சால்வையுடன்
முக்கியத் தலைப்பாவைந் தக்கணந் தந்தார்

92. ஒவ்வொரு தருக்கும் வஸ்திர மீந்துபின்
போரச்சரி போட்டகுல்லாச் சிரதாய்த் தந்தார்
செவ்வையான சகலாத்து தமானுஞ்
சித்திரந்தீர்ந்த வங்கியுஞ் சித்தமாய்த் தந்தார்

93. உலகை யிரட்சித்த யேசுவை யண்டினு
லொன்றுமக் கடராதப்போ நன்றாகவே
வல்மை யரசுபுரி வீரென்று மிக
வாழ்த்தி வந்தனங்கள் சொன்னோம் நேத்தியாகவே.

ஞானசிகாமணி பிள்ளைக்கு 'அப்பாளி' என்ற செல்லப் பெயரும் உண்டு. இவர் குமாரர் (1) தவமணி சாஸ்திரி, நைஜாம், மைசூர் முதலிய சமஸ்தான மன்னர்களைக் கண்டு தங்க மெடல்கள் சன்மானம் பெற்றும், (2) ஜெபமணி சாஸ்திரி பாளையங்கோட்டையில் தங்கி சுற்றுபக்க மலைநாடுகளிலும் (3) வேதமணி சாஸ்திரி பூனா, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலும், (4) சுபமணி கவிராயர் அநேக சுவிசேட பாடல்களை தாமே இயற்றி பாளையங்கோட்டை C. M. S. Evangelical Band தலைமைவகித்து சாஸ்திரியார் பாடல்களையும் பாடி கிறிஸ்துக்கு மகிமையாய் ஊழியஞ் செய்து வந்தார்கள். ஞானசிகாமணி பிள்ளையின் பரம்பரைதான் பாகவதர் வேதநாயகம்.

## III.

வேதநாயக சாஸ்திரியார் மனைவி மிக்கேல் முத்தம்மாள் மரித்த பின்பு, அவருடைய ஐம்பத்தைந்தாம் வயதிலே, மூன்றுவது தாரமாக, தஞ்சாவூர் சாந்தப்ப பிள்ளை மகள் வரோதயம் அம்மாளை சங்கை பிரதர்ட்டன் (T. Brotherton) (1836—1869) ஐயரைக்கொண்டு, விவாக முடித்துக் கொண்டார். இந்த அம்மாளை அவர் சிறு பிள்ளையாயிருக்கிற போது, சுவிசேஷம் எழுதவும் வாசிக்கவுங் கற்றுக் கொடுத்தார். இந்த அம்மாள் நோவா ஞானதிக்கம், எலியா தேவசிகாமணி என்ற இரண்டு ஆண்களையும், மனோன்மணி யென்ற ஒரு பெண்ணையும் பெற்றார்கள். நோவா ஞானதிக்கம்பிள்ளையும் எலியா தேவசிகாமணிபிள்ளையும் தகப்பனாரின் சதுர் பிரசங்கத்துக்கு கூட உதவியாயிருந்தது மல்லாமல் சிலவேளைகளில் அந்தந்த சபைகளில் கர்த்தரைப் பாடி பிரசங்கிக்க தகப்பனாலே அனுப்பப்பட்டதுண்டு. வேதநாயக சாஸ்திரியார் மரித்த பிறகு இவர்கள் இருவருக்கும் சாஸ்திரியார் பட்டம் கொடுக்கப்பட்டு அது நெடுகிலும் வழங்கி வருகிறது. எலியா



VENERABLE NOVA GNANADICKAM SASTRIAR

*Born 13th February 1830*
*Died 2nd December 1902*



VENERABLE V. ELIJAH DEVASIGAMONI SASTRIAR

EVANGELICAL POET, TANJORE

*Born 26th November 1834 in Tanjore*
*Died 9th September 1908 in Madras*

தேவசிகாமணி சாஸ்திரி தகப்பனுரைப் போல் சுயம் பாட வர முடைத்தானவராயிருந்து சில கீர்த்தனைகளையும், அப்போஸ் தலர் நடபடி முழுவதையும் புராணமாகப் பாடியிருக்கிறார். வேதநாயக சாஸ்திரியாரின் 120 புத்தகங்களில் பல ஏட்டுப் பிரதிகளை பலருடைய பேருதவியைக் கொண்டு முதன் முத லாக அச்சில் பதிக்க பெருமுயற்சி யெடுத்து நிறைவேற்றி ஞர். இவர் குமாரர் வேதநாயகம் ஐயர் S. P. G -ல் குருப் பட்டம் பெற்று ஊழியம் செய்ததோடு வேதநாயக சாஸ்திரி யாரின் பாடல்களையும் அதிக உற்சாகத்தோடும், ஊக்கத் தோடும் பாடி பலவித இன்னிசை வாத்தியக் கருவிகளைக் கொண்டும், சதுர் பிரசங்கம் நடத்திஞர். அவருடைய சகோதரன் எ. ஞாகேந்திரம் பிள்ளை இவ்வூழியத்தில் பங் கெடுத்ததோடு கூட சதுர் பிரசங்க ஊழியத்துக்கு மிகவும் உதவியாகவிருந்து வருகிறார்.

எலியா சாஸ்திரியாரின் பரம்பரை முத்தைய பாகவதர், வேதநாயக சாஸ்திரியாரைப்போல் அங்கியும் தலைப்பாகையும் அணிந்து இரங்கூன் சபையில் சகல விசேஷ நாட்களிலும் வேதநாயக சாஸ்திரியாரின் பாடல்களைப் பாடி கர்த்தருக்கு மகிமையாக ஊழியத்தை நடத்தி வருகிறார்.

நோவா ஞானதிக்கசாஸ்திரியார் எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் இவர்களுடைய ஆயுசுக்குப்பின் நோவா ஞான திக்கம் சாஸ்திரியாருடைய சிரேஷ்ட குமாரன் வேதாநந்தம் பிள்ளைக்கு தஞ்சாவூர் சபையார் சாஸ்திரியார் பட்டம் கொடுத் தனர். இவர், யாழ்ப்பாணம் பினங்கு முதலிய புறதேசங் களுக்குச் சென்று வேதநாயக சாஸ்திரியார் பாடல்களைப் பாடி விஸ்தரித்து கர்த்தரது ஊழியத்தை செய்துவந்தார். இவர் மரித்தபிறகு இவருடைய மூத்த குமாரன் சேம் வேதநாயகம் பிள்ளையை தஞ்சாவூர் சபையார் சாஸ்திரியார் பீடத்தில் அமர்த்திஞர்கள்.

தஞ்சாவூர் திருச்சபையார் நடத்தும் இவ்விதமான சிரேஷ்ட அங்கீகரிப்புக்கு முகாந்தரம் வேதநாயக சாஸ்திரியாரின் சரித்திரத்தில் தேடவேண்டும். புதிதாய் கிறிஸ்து மார்க்கத்தை தழுவின தஞ்சாவூர் இந்துக்களுக்கு, கலியாணம், ஞானஸ்நானம் சந்துஷ்டி முதலிய சடங்குகளில் உபயோகிக்கும்படி ஐரோப்பிய குருக்களுக்கு இரண்டொரு ஜெபங்கள் தான் இருந்தன. இந்துக்களுக்கு சடங்குகள்பேரில் அதிக அவாவுண்டு. வேதநாயக சாஸ்திரியார் இந்த சடங்குகளுக்கு ஏற்ற பாடல்களை யுண்டு பண்ணி இந்து மனதிற்கு ரம்மியத்தைக் கொடுத்தது மல்லாமல் சந்தோஷ சம்பவங்களுக்கு ஓர் மகிமையையும் புகழ்ச்சியையும் சூட்டினார். உதாரணமாக:—

"கலியாண வாழ்த்துதல்" என்ற நூலில் சடங்காசாரத்தைக் கிறிஸ்து மார்க்கத்துக்கு உகந்த மாதிரியாக திருத்தி யாவரும் விரும்பத்தக்கதான "பெண் வாழ்த்து" (40—65 கண்ணிகள்) "மணவாளி சோடிப்பு" (70—80 கண்ணிகள்) "மணவாளன் சோடிப்புகள்" (85—90 கண்ணிகள்) பொது வாழ்த்து (145-151 கண்ணிகள்) என்ற கவிகளை அருளினார்.

ஆங்கிலேய கவிச் சக்கரவர்த்திகளின் செய்யுள்களை வாசித்து தேர்ந்த கற்றறிவாளரும் "பெண் வாழ்த்து"க்கு சமானமாக ஒரு கவியும் ஆங்கில நூல்களில் சந்தித்திருப்பது சந்தேகம்.

பெண் வாழ்த்து (பக்கம் 4.)

மானை மரகதத்தை, மாதர்கள் சிரோமணியைத்
தேனைத் திகட்டாத, செங்கரும்பைத் தெள்ளமுதைக்
காரிகையைப் பூமரதை, கற்பகத்தைக் கன்னிகையை
ஆரிகையை ஞான அபிஷேக வற்புதத்தை

The Book of Common Prayer had not been translated into Tamil and had not come into un Cseihurch worship.

பேசுங் கிளிமொழியை, பேரின்ப நற்பொருளைத்
தேசுலவு மேலாங், திரவியத்தைப் பொக்கிஷத்தைச்
செப்ப வரிதான, சித்திரமணிப் பெட்டகத்தைத்
துப்புரவாம் ஞானவொளி, சோதிமய வாலயத்தைக்
கண்ணுன கண்மணியை, கன்னியர்க் கிராக்கினியை
பெண்ணுன பெண்ணரசை, பெண்ணுசைப் பாக்கியத்தை
கற்றவர்கள் மெச்சுங், கருங்குயிலைக் காதலியைக்
கொற்றவர்கள் கொண்டாடுங் கோகிலத்தைக் கோமளத்தை
அன்ன நடையாளை அன்புமிகும் பொற்கொடியை
வன்னக் கலாப, மயிலைப் பசுங்கிளியை
துய்யகனி யாஸ்திரிமார், சூழ்ந்தொளிருஞ் சோபனத்தைச்
செய்ய தமிழ்ச்சொரிசிங், தாமணியைச் செண்பகத்தை
வாசமிகும் ரோச, மலரை மலர்க்காவைத்
தேசு திகழேதனிலச் செல்வ பூங்காவனத்தைப்
பெந்து சனத்தோர் பெருமைப் பெரும்புகழைச்
சிந்திக்கத் தோன்ருத, தேவ திருச்செயலைப்
பத்தினியை யுத்தமியை, பட்சமுள்ள நற்சுகத்தை
அத்தன் படைத்த, வரிய திருவடிவை
அருமை பெருமை, யறிந்த குலக்கொழுந்தை
யுரிமையிட வந்துதித்த, வுற்பனத்தை யுச்சிதத்தை
கற்கண்டைச் சர்க்கரையை, கற்பதித்த நற்பணியைச்
சொற்கொண்ட தீப, சுடரைமகா துல்லிபத்தைக்
காணிக்கு வாய்த்த, கனதனத்தைக் காட்சியினை
ஆணிமுத்தை வச்சிரத்தை, யாசைக் கரும்பொருளைச்
சாத்திரமெலா முணர்ந்த, சாத்திரத்தைச் சூத்திரத்தைப்
பாத்திரவிச் சேத்திரத்தை, பங்கையத்தை யிங்கிதத்தை
மாதா பிதாவின், மனக்கவலை யாற்றவந்த
வேதா விஞேதன், விதித்த விளக்கொளியைச்
செம்பவள வாயாளை, சிங்தையிலாச் சுந்தரியைச்
சம்பிரம மாகவளர், சந்தோட காரணியை
விண்ணி ஞெளிவை, விளங்குகதி ரோன்மதியை
யெண்ணத் துலையாத, வின்பமிகும் சற்குணத்தைக்

கிஞ்சுகத்தை ரஞ்சிதத்தை, கீர்த்தி மிகும்புகழைக்
கொஞ்சு குணநிதியை, கோதையரைக் கொம்பனையை
மன்னவர் குடோரியினை, வாணிபத்தை வாணுதலை
மின்னனைய ராசைகொள்ளும், விண்ணவர்க்கு மேனகையை
தங்கத்தை நேர்விளைந்த தற்சீசின் ரத்தினத்தை
துங்க வபரஞ்சி சுகசாம்பி ராச்சியத்தை
கட்டழகை மையல், கதித்த கருணைக்கடலை
மட்டலவும் பூங்குழலை, வாஞ்சாலைப் பெண்ணமிர்தை

இந்தமாதிரி செய்யுள்களை வாசிக்கும்போதே தித்திப்பு உண்டானால் அவைகளை கின்னரம், தம்புரு முதலிய வாத்தியங்களுடன் பூ, சந்தனம், பன்னீர் முதலிய மணக்கும் கலியாண பந்தலில் பாடினால் பெற்றோருக்கும் மற்றோருக்கும் பரமானந்தத்தை விளைவிக்குமல்லவா! இதினால்தான் தஞ்சாவூர் சபையாரின் மனதையும் ஆத்மாவையும் சாஸ்திரியார் கவர்ந்து கொள்ளைகொண்டார். விசேஷ சம்பவங்களுக்கு பாதிரிமார் மாத்திரம் வந்தால் போது மென்று மிஷனரிமார் நினைத்தாலும், சபையார் கோவில் ஆராதனைக்கு பாதிரிமார், வீட்டில் நடக்கும் மங்களவாழ்த்து ஜெபாராதனைக்கு வேதநாயக சாஸ்திரியார் வரவேண்டும் என்று சாதித்தார்கள். முதலாவது இவருக்கு தாம்பூல மரியாதை செய்த பிறகுதான் பாதிரிமார்களுக்கும் மற்றோருக்கும் உபசாரம் நடத்தினார்கள். வேதநாயக சாஸ்திரியாரின் ஆயுசுக்குப்பின் இவருடைய குமாரர் இந்த மரியாதைக்கு பாத்திர முடையவர்கள் அல்லவென்றாலும் அவர்கள் தகப்பனாரின் நூல்கள் பிரகாரம் சடங்காசாரங்களுக்கு உதவியாகப்பாடி, படித்து, கிறிஸ்தவர்களுக்கு மகிமையாக ஜீவித்த படியினால் இவர்கள் இருவருக்கும் சாஸ்திரியார் பட்டம் சூட்டி வேதநாயக சாஸ்திரியார் ஸ்தானத்தில் ஏற்றுக் கொண்டார்கள். தற்காலத்திலும் வேதநாயக சாஸ்திரியாரின் ஊழியம் தஞ்சாவூரில் அவரின் பின்னடியாரால் நடந்தேறி வருகிறது. நம்முடைய சுய பாஷையில் சுய ஆசா

ரப்படி கிறிஸ்துவையும் தேவனையும் மகிமைப்படுத்தி சதுர் பிரசங்கத்தினாலும் பஜனையினாலும் தெய்வ வணக்கத்தை யாவரும் அபேட்சிக்கத் தக்கதாக ஊழியம் செய்துவரும் இந்தக் குடும்பத்தார் ஒருக்காலும் மறைந்து போகாதபடி ஆண்டவர் கிருபை செய்ய வேண்டுமென்று வாசிப்போர் ஜெபிப்போமாக.

---

## அத்தியாயம். 12.

---

### கிறிஸ்துமார்க்கம் இந்தியா தேசத்தில் பரவும்படி வேதநாயகசாஸ்திரி செய்த ஊழியம்.

இவரிடத்தில் படித்த பிள்ளைகளில் ஐந்துபேர் குருப் பட்டம் பெற்றார்கள். எழுபதுபேர் உபாத்திகளும், உபதேசிகளும், தேச உத்தியோகஸ்தருமானார்கள். இதன்றி சீர்மை ஐயர்மாரில் சிலருக்கு முனிஷியாக இருந்து தமிழ் படித்துக் கொடுத்தார்.

இவருக்குப் பாடுகிற வரமுண்டாயிருந்தபடியினாலே, இராப்பகலாய்ப் பிரயாசப்பட்டுத் தன்னுடைய இருபதாம் பிராயமுதல் சபைக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் உதவியான சிறிதும் பெரிதுமான நூற்றிருபது புஸ்தகங்களைச் சாஸ்திர மேரையாக உண்டுபண்ணி, கிறிஸ்தவ உபதேசங்களையெல்லாம், வேதவழுவின்றி, அநேகவிதப்பாடலும் புலம்பலுமாகச் செய்ததுமன்றிக் கர்த்தருடைய சகல பண்டிகை நாட்களிலும், சபையினுடைய ஞானஸ்நானம், கலியாணம் முதலான சகல சந்தோஷ நாட்களிலும், சில மாணாக்கருடைய உதவியைக் கொண்டு, பாடிவருகிற வழக்கத்தையுண்டுபண்ணினார்.

அன்றியும் இந்துக்களுக்கும், பாப்புக்காரருக்கும் பிரயோஜனமாயிருக்கும்படிச் சில புஸ்தகங்களை யுண்டுபண்ணித் தம்மு

டைய வீட்டிலே வருகிறவர்களுக்கும் தாம் வெளியே புறப் படுகிறபோது காணப்படுகிற கூட்டங்களுக்கும் வாசித்துக் காண்பித்துக் கிறிஸ்துவைப்பற்றி அறிவித்துக்கொண்டு இருப் பார்.

இதுமாத்திரமல்ல 1814-ஆம் துவக்கி 1863-ஆம் மட் டும் கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்கிற தவசுநாட்களிலே, தம்முடைய வீட்டின் முகப்பிலே பந்தல்போட்டுப் பிரசங்கச் சதுர் உண்டாக்கி, ஒவ்வொருநாள் இரவிலும், இராத்திரி ஏழரைமணி முதல் பத்தரைமணி மட்டும் வெளியரங்கமாய்ப் பிரசங்கிப்பார். அவர் பேசுகிற சத்தம் இன்பமும் தெளிவுமா யிருக்கிறதுமல்லாமல் வெகு தூரமும் கேட்கும். அதைக் கேட்கிறதற்காக கிறிஸ்தவர்களும், உரோமானித்தாரும், மக மது மார்க்கத்தாரும், இந்துக்களுமான திரளான ஜனங்கள் வந்து கூடுவார்கள்.

இவர் பராபரனுடைய தேவ சுவாப மகிமைகளையும், சிருஷ்டிப்பின் கிரியைகளையும், பராபரன் பழையேற்பாட்டின் காலத்திற் செய்த அவருடைய அதிசயமான வல்லமைகளை யும் கிறிஸ்துவின் மனுஷாவதாரந் துவக்கி, அவர் பாடுபட்டு மரித்து, உயிர்த்துப் பரமண்டலத்துக்கேறிப் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து, பரிசுத்தாவியையனுப்பி, இனி நடுத் தீர்க்க வரப்போகிற கடைசி நாளின் வர்த்தமானத்தையும், நவ எருசலேம் பட்டணத்தையும், சாபது நாளின் கொண்டாட்டத் தையும் பற்றிய விசேடங்களையும் அந்த நாற்பத்தைந்து நாட் களில் பாடி விஸ்தரிக்கிறது அவருடைய பிரதானமான வேலையாக விருந்தது.

இவர் பிரசங்கிக்கிறபோது வெள்ளை நிலை அங்கி தரித் துக்கொண்டு, தலையிலே சிவப்பு சவுத்தனுக் குல்லாய் போட் டுக்கொண்டு இடையிலே கச்சை கட்டிக்கொண்டிருப்பார்.

இவைகளை சங். தகப்பனார் கோலோப்பையரும், சாப்பி ளன் போலே ஐயரும், அவர்களுக்குப் பின்புவந்த மற்றெல்லா மிசியோனரிமாரும் வந்து கேட்டறிந்தார்கள்.

மேலும் இவர் செய்த ஓர் விசேஷமான வேலை புதிதாய் கிறிஸ்துமார்க்கத்தை தழுவினவர்கள் பலருக்கு தன் வீட்டில் அன்ன வஸ்திரம் கொடுத்து, நல்ல உபதேசம் அருளி, தன்னு டைய நூல்களைக் கற்பித்து, கிறிஸ்து பக்தர்களாக்கி புறம தஸ்தர்களுக்கு பிரசங்கிக்க அனுப்பினது. இவர்களில் முக் கியமானவர்களை வேதநாயக சாஸ்திரியாரின் சீஷர்கள் என்று அழைத்து ஞானதிக்கம் சாஸ்திரியார் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்.

1. அருளப்பன் தாவீது, இவர் சமுசாரவாளியாகி குரு பட்டம் பெற்று பாளையங்கோட்டை சேகரத்திலிருந்தார்.

2. பரஞ்சோதி, இவர் குரு பட்டம்பெற்று சிக்கத்திரா பாத்திலிருந்தார்.

3. பேரானந்தம், பிச்சானந்தம், இவ்விருவரும் பெரிய உபதேசிகளாயிருந்து மரித்துப்போனார்கள்.

4. தேவநேசம், தேவசகாயம், இவ்விருவரும் பெரிய உபதேசிகளாயிருந்து மரித்துப்போனார்கள்.

5. வாமன், இவனையும் இவன் தாயையும், வேதநாயக சாஸ்திரி இந்துமார்க்கத்திலிருந்து திருப்பி, வாமனுக்காக இந்துமார்க்கத்திலிருந்து ஒரு பெண்ணை மார்க்கத்திலுட்படுத்தி விவாகமுடித்து வைத்தார். இந்த வாமன் சென்னப்பட்டணத் துக்கு இவரோடேகூடப் போயிருந்தான் "சென்னப்பட் டணம் பிரவேசம்" இவன் விஸ்தரிக்கும் பாவனையில்தான் வேதநாயக சாஸ்திரியார் உண்டு பண்ணினார். அவருக்கு ஓர் நல்ல சினேகிதனாக இருந்திருக்கலாம்.

6. தவசியப்பன், இவன் சில காலமிருந்து, சமுசார வாளியான பின்பு உபதேசியாய்ப் போனுன்.

7. ஞானானந்தம், சொரூபானந்தம். இவ்விருவரையும், வேதநாயக சாஸ்திரி குழந்தை பிராயத்திலே, கும்பகோணத்திலிருந்து கொண்டுவந்து, அவர்களுக்கு கிறிஸ்த அறிவைப் போதிவித்தார். அவர்கள் ஞானஸ்நானம் பெற்று, வாலிபரான போது அவர்கள் இனத்திலேயிருந்து பெண்களை மார்க்கத்தி லுட்படுத்தி அவர்களுக்கு விவாக முடித்து வைத்தார். இவ் விருவரும் இஸ். அயினசு சரபோஜி மகாராசாவினிடத்தில் பாடின இராகத்தலைவர்கள்.

8. காரைக்கால் அந்தோணிமுத்தென்ற சீவானந்தம் பிள்ளை, சின்னப்ப பிள்ளை, மனுவேல் பிள்ளை, சாந்தப்ப பிள்ளை, சாமுவேல் மண்கொண்டான், இவர்களை உரோமான் மார்க்கத்திலிருந்து சபையிற் சேர்த்துக்கொண்டார்.

இவர்களெல்லாரையும் வேதநாயக சாஸ்திரி மிகுந்த பிரயாசத்தோடே வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கினுலும், அவர்களை நடத்த போதுமான ஐவசில்லாதகினுலும், அவரைச் சிநேகித்து நடத்தின சரபோஜி மகாராசா மரித்துப் போனதினு லும் அவரவர் தங்கள் பாட்டுக்கும் பிழைக்கப் பிரிந்துபோனுர் கள்.

முதலாவது கூறப்பட்ட அருளப்பன் தாவீதைப்பற்றி பௌவர் சாஸ்திரியார் விஸ்தாரமாக தன்னுடைய புஸ்தகத்தில் (1) எழுதியிருக்கிறுர். அதை அநுபந்தம் 6-ல் வாசிக்கலாம். தமிழ் நாட்டில் புதிதாக கிறிஸ்துமார்க்கம் * பறவினதிற்கு ஏதுவாயிருந்தவர்கள் ஐரோப்பிய குருக்கள் மாத்திர மல்ல, வேதநாயக சாஸ்திரியும் அவரியற்றிய நூல்களும் அவரால் பயிற்றுவித்த உபதேசிமார்களும் என்று ஊகித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றுல் இவர்கள் ஊர் ஊராய் சென்று சாஸ்

திரியாரின் நூல்கள்மூலமாய் கிறிஸ்துவை பிரசங்கித்து அநேகர் கிறிஸ்துமார்க்கத்தை தழுவ கருவிகளானார்கள். Rev. J. C. Kholoff க்கு பின்வந்த மிஷனரிமாருக்கு சாஸ்திரி யாரின் ஊழியம் பெரும்பாலும் எதிர் கக்ஷியாக தோன்றினது.

அத்தியக்ஷர் ஸ்பென்ஸர் சாஸ்திரியாரைக் குறித்து எழுதி யிருக்கும் வரிகளே ஆதாரம்:—

"The Tanjore Poet, a person well-known in this part of India and unquestionably a man of considerable talent then came forward with a request that he and his pupils-he has as many followers as a Grecian Philospher–might be allowed to chant some of his religious poetry. It was pretty and not monotonous the usual fault of Tamil songs and the thought as explained to me very good.

Vedanayagam the Religious poet of Tanjore is about seventy years of age. His countenance is decidedly intellectual and his head remarkably well-formed. His verses are much esteemed by his countrymen, and I am assured that some of them possess considerable merit. He is a christian, but I believe, aspires to be the founder of a school of his own; no Bishop or Missionary ever passes without a visit from him and all I imagine gladly render some little contribution towords his support". *

வேதநாயக சாஸ்திரியார் ஓர் புதுசபையை ஸ்தாபிக்க வேணுமென்று முயற்சி யெடுக்கவில்லை. அவருடைய கிறிஸ்துவின் வணக்கம் ஹிந்து உடையைத் தரித்திருந்ததினால், இவ்விதமான தப்பறையான எண்ணங்களுக்கு இடம் கொடுத்தது.

---

* From the Right Rev. The Lord Bishop Spencer's Printed Journal pp 40 and 41 published in 1846.

பைளவர் சாஸ்திரியார் இவரைப் பற்றி எழுதியிருக்கும் வரிகளில் இவருடைய கவிஉண்மைக்கும் மனோசக்திக்கும் கிறிஸ்து பக்திக்கும் நியாயம் செய்ததாக தெரியவில்லை. சிற்சில இடங்களில் விகடாலங்காரமாய் எழுதியிருக்கிறார். அநுபந்தம் 6-ஐ பார்க்க.

" உங்களுக்கு தெய்வ வசனத்தைப் போதித்து உங்களை வழி நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களின் நடக்கையின் முடிவை நன்றாய்க் கவனித்து அவர்கள் விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்." எபி. 13:7.

---

## அத்தியாயம். 13.

### வேதநாயக சாஸ்திரியும் ஜாதிபேதமும்.

உலகத்தில் ஜாதி வித்தியாசம் இந்தியா தேசத்திற்கு மாத்திரம் உரிய ஓர் ஆசாரம். தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் ஜாதி வித்தியாசம் பாராட்டினாலும் அதைக்குறித்து மௌனமாகவே யிருக்கிறார்கள். ஏனென்றால் மிஷனெரிமாருக்கு இது சஞ்சலத்தை விளைவிக்கிறது. ஆனால் தீக்குருவிபோல் தன்கணோடுகூடிய தலையை மணலில் சொருகி அபாயம் இல்லை என்று நினைத்துக்கொண்டு வசிப்பது நன்றன்று. முக்கியமாக தென் இந்தியாவில், தமிழ்நாட்டு கிறிஸ்துவர்களுக்குள் ஜாதி வித்தியாசம் ஒழிக்கக்கூடாத ஓர் குணங்கம்.

ஆதியிலே கிறிஸ்துமார்க்கத்தை ஏராளமாகத் தழுவினவர்கள் ஆதிதிராவிடர். ஆகையினால் "கிறிஸ்து மார்க்கத்தை" "பறையர் வேதம்" என்று ஹிந்துக்கள் அழைத்து வந்தார்கள். இதற்கு அத்தாக்ஷியாக பௌவர் புஸ்தகம் (1) 104-ம் பக்கம் பார்க்க.

அங்கே குறிப்பிட்ட சம்பவம் பின் வருமாறு :—

"இந்த ஆபிரகாம் என்பவர் வடுகராயிருந்தார்; இவருக்கு விஸ்வநாதன் என்னும் பெயரும் வழங்கினது. இவர் கும்பகோணத்தில் உபதேசியாராயிருக்கும்போது ஒரு பிராமணன் தெருத் திண்ணையில் உட்கார்ந்து தன் மாணுக்கருக்கு வேதபாராயணம் செய்துகொண்டிருக்கிறதைக் கண்டு, தெருவில் நின்று கேட்டுக்கொண்டிருந்தார். பிராமணன் இதைக் கண்டு வேதபாராயணத்தை நிறுத்தி, வேதமொழி சூத்திராளின் காதில் விழக்கூடாதென்று விஸ்வநாதனை அவ்விடம் விட்டு விலகிப்போகும்படிச் சொன்னுன். அதற்கு விஸ்வநாதன் வேதபாராயணம் மற்றவர்களுக்குப் பிரயோஜனமுள்ளதானுல் எனக்கும் பிரயோஜனமாயிருக்கும்; ஆகையால் நானும் அதைக் கேட்கும்படி தயவுசெய்யவேண்டும் என்ருர். அப்பொழுது பிராமணன் விஸ்வநாதனைக் கிறிஸ்தவனென்று அறிந்து வாயிலே வந்ததெல்லாம் திட்டித் ஓடிப்போகச் சொன்னுன். விஸ்வநாதன் திட்டையெல்லாம் பொறுத்து, அஞ்சாமல் நின்று தன் கையிலிருந்த வேத புஸ்தகத்தைக் காண்பித்து 'என்னிடத்திலும் வேதம் உண்டு' என்ருர். அதற்கு பிராமணன் 'பறையர் வேதம் என்னத்தை படிப்பிக்கக்கூடும்' என்ருன். அதற்கு விஸ்வநாதன் 'உங்கள் வேதம் சூத்திராள் கேட்கக்கூடாததாயிருக்க, எங்கள் வேதம் யாவரும் கேட்கக்கூடியதாயிருக்கிறது. உங்கள் வேதம், மற்றவர்களை வைது தூஷிக்கும்படி சொல்ல, எங்கள் வேதம் பொறுத்து ஆசீர்வதிக்கும்படி சொல்லும். எது உத்தம வேதம் என்று அறிந்துகொள்ளும்' என்ருர். இதைக் கேட்டுப் பிராமணன் புத்திசாலியானபடியினுல், தான் செய்த குற்றத்தை உணர்ந்து, விஸ்வநாதனைத் தழுவி, தன்மாணுக்கரோடு உட்காரும்படி சொல்லி, மத்தேயு சுவிசேஷம் ஐந்தாம அதிகாரத்தை வாசிக்கக் கேட்டுச் சந்தோஷித்து, அடிக்கடி தன்னிடத்தில் வரும்படி கேட்டுக்கொண்டான்."

பிற்பாடு உயர்ந்த ஜாதிகளிலிருந்து சிலர் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் கிறிஸ்துமார்க்கத்தை அங்கீகரித்ததினால் தான் 'பறையர் வேதம்' என்ற பழிமொழி நீங்கி, கிறிஸ்து மார்க்கத்திற்கு நாளடைவில் சிறப்பும், மதிப்பும் உண்டானது. இதிலே வேதநாயக சாஸ்திரியாரும் தோன்றி ஹிந்து *பக்தாக்களுடைய நூல்களுக்கு இணையாகவும் மேலாகவும் வேண்டிய கிறிஸ்தவ நூல்களை இயற்றி அரங்கேற்றி தன் பாடகர்கள் மூலமாக பிரசுரப்படுத்தி "பறையர் வேதம்" என்ற நிந்தைப்பெயர் தலையெடுக்கவொட்டாமல் சின்னபின்ன மாக்கி கிறிஸ்து மார்க்கத்திற்கு நல்ல கௌரவத்தை சம்பாதித்தார். பொதுவாக ஆதிதிராவிடருக்குள் மனோவிர்த்தியாவது கல்விப் பயிற்சியாவது அக்காலத்தில் கிடையாது. உயர்ந்த ஜாதிகளுக்குள் தான் அநேக பக்தாக்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்களுக்குள் கிறிஸ்து மார்க்கம் பரவினபொழுது, இவர்களை ஜனசாரத்தை மாற்றும்படி கட்டாயப்படுத்தினதில், தஞ்சாவூர் சபையாருக்குள் குழப்பம் உண்டாயிருக்கிறது. நான் ஆராய்ச்சி செய்தமட்டில், பரிசுத்த நற்கருணை ஆராதனையில் ஆதிதிராவிடரும் உயர்ந்த ஜாதியாரும் கலந்து வந்து, அப்பத்தையும் திராட்சரசத்தையும் வாங்கி உட்கொள்ளவேண்டும் என்று ஓர் கட்டளையைப் பிறப்பித்ததுதான் இந்த கலகத்திற்கு மூலகாரணம். அந்தக்காலத்தில் சாஸ்திரியார் சரபோஜி மகாராஜாவுடைய சமஸ்தான வித்வான் ஆனபடியினால், அரண்மனைக்கு போகவேண்டியதா யிருந்தது. பல்லக்கில் இவர் போகும் பொழுது ஆதிதிராவிடருடைய நிழல் கூட இவருடைய பல்லக்கு போயிகளுடைய நிழலில் படாமல் போகவேண்டுமாம். அல்லாவிட்டால் அரண்மனைக்குள்

---

* வட இந்தியாவில் Bhaktha என்ற பதம் வழங்குகிறது. அதற்கு இசைவாய் நாமும் பக்தா என்று எழுதுவது நலம்.

போக அனுமதிகொடுக்கமாட்டார்களாம். இப்படி தேசாசாரம் இருக்கும்பொழுது, ஜாதி கிறிஸ்தவர்களும் வலங்கை சபையாரும் ஒன்ருக வந்து, ஒரே பாத்திரத்தில் திராட்சரசத்தை அருந்தவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தது யுக்திகுறைவு என்று கூற நான் துணிவேன். இந்தக் கலாதியைக் குறித்து S. K. Devasikhamani அவர்கள் (7) சவிஸ்தாரமாய் எழுதியிருக்கிருர்கள். (18-ம் பக்கம் பார்க்க.) மேலும் 'ஜாதித்தீமை' என்ற பகுதியில் அவர் பின்வருமாறு எழுதியிருக்கிருர்:

"1845-ம் வருஷம் ஸ்பென்ஸர் (Spencer) பிஷப் விஜயம் செய்திருந்தபோது 145 பேர்களுக்குத் திடப்படுத்தலும், ஹென்றி பௌவர் ஐயருக்குக் குருப்பட்டமும் கொடுத்தார். அவர் தஞ்சாவூர் கிறிஸ்தவர்களைப்பற்றி 'இவர்கள் இறுமாப்பும் பிடிவாதமும் உள்ளவர்கள். இவர்களை நடத்துவது மிகவும் கஷ்டம். மிஷனெரிமார் அநேக ஆண்டுகளாய் இவர்கள் இஷ்டப்படியே விட்டுவிட்டதே இந்தத் தீமைக்குக் காரணமாகும்' என்று எழுதிவைத்திருக்கிருர். அந்தக்காலத்தில் அங்கு வசித்து வந்த பேர்பெற்ற வேதநாயக சாஸ்திரியார் என்பவர் 'ஜாதிக்கட்டு அவசியந்தான்' என்று சாதித்தவர்களில் ஒருவராவர்."

ஜாதி வேற்றுமை கலாதி இவருடைய நூல்களில் சிற்சில விடங்களில் குறிப்பிட்டிருக்கிறதை நாம் கவனிப்பது சரித்திர விஷயத்திற்கு உரியது. உதாரணமாக, "ஆருந்துணையில்லையே ஓ" என்ற கீர்த்தனையின் கடைசி இரண்டு சரணங்களை ஆராய்ச்சி செய்யலாம்:

9. "ஆயிரத்தி யெண்ணூற்று முப்பதாம்
ஆண்டில் வந்த ஆபத்திலே

ஆபரோ ஐயரால் பிரிந்தடி
யன் படுந்துயரத்திலே
தாயிதத்தினும் நேயம் வைத்துயர்
சம்பளத்தை நடத்தவே
தஞ்சையாள் சரபோஜி மன்னனிதை
யத்திலே யருள் வைத்தவா! ஆருந்

10. உன்னதப் பிதாவே விண் வாழ்வதும்
உலகவாழ்வது மோங்கியே
உத்தபுத்திர ஜீவாஜீ மன்னுடன்
ஊழிகாலமும் வாழ்கவே
இன்னமுஞ் சரபோஜி மன்னிதை
யத்திலன்பு வளர்த்தியே
என்னையும் எனின் வீட்டையுமெனின்
பாட்டையும் கிருபை கூர்வையே." ஆருந்

இக்கவிகளிலே ஆபரோ (L. P. Haubroe) ஐயரால்தான் கடுமையாக ஜாதிவித்தியாசத்தை அழிக்க முயற்சி நடந்ததாகவும், சரபோஜி மகாராஜா சாஸ்திரியாருக்கு சம்பளம் கொடுத்து காப்பாற்றினதாகவும் தெரிகிறது. இந்தக் கீர்த்தனையை யுண்டுபண்ணினது 1830-ம் வருஷம். ஜாதிக்கலகம் துவங்கினது 1829-ம் வருஷம். முதல் ஏழு சரணங்கள் கிறிஸ்தவ சபைகளுக்கு நன்கு அறிமுகமானது. கடைசி இரண்டு சரணங்களைத் தவிர்த்து அச்சடித்ததினால் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் ஒவ்வாக்கருத்து பிரமிக்கத்தக்கது. சாஸ்திரியாருடைய சுவிசேஷ பிரபல்லிய சகாயத்திற்காக, மிஷனரிமார் மாதச்சம்பளம் கொடுத்து வந்தார்கள். ஜாதிபேதத்தினாற் பிரிவினை ஏற்பட்டபொழுது இவ

---

* Sivaji was the son of Serfojee.

ருக்கு சம்பளம் நிறுத்தப்பட்டு வறுமையினால் சஞ்சலப் பட்டபொழுது இக்கீர்த்தனையை யுண்டுபண்ணினார். இதிலே தன்னுடைய சொந்த துயரத்தை வெளிப்படுத்தி எல்லோரும் தன்னைக் கைநெகிழ விட்டதாகவும், இயேசு திருப்பாலனே துணை என்றும் கடவுளுக்கும் தனக்கும் பிரதிவாதமாக அநேக வழக்குகளைக் கூறிக்கொண்டு பாடி, தனக்கு ஆத்ம சமாதானத்தை சம்பாதித்துக் கொண்டார் என்ற விஷயத்தை துலாம்பரமாக பாடு வோர் அறியலாம். தற்காலத்தில் இக்கீர்த்தனையின் மூலக்கருத்தை மறைபொருளாக்கி அதை விகார ரூபப் படுத்தி துஷ்டியில் பாடுகிறார்கள். பிரேத அடக்கத் திற்கு உரிய கீர்த்தனையாய் ஜனங்கள் இதை ஒப்புக் கொண்டது விகற்பமாகக் காணப்படுகிறது. மரித்தவர் இப்பாட்டை பாடிக்கொண்டு தன்னைத் தந்தவருடன் வாதாடிக்கொண்டு போகிற பாவனையாயிருக்கிறது. சாஸ்திரியார் தனது மனநோவை கவிவாயிலாய் வெளி யிட்டு, ஜாதிக்கலகத்தினால் தனக்கு நேரிட்ட கஷ்ட நஷ்டங்கள் சரபோஜி மன்னன் அளித்த நன்கொடை யினால் நிவிர்த்திபெற்றதற்கு நன்றிகூறி கடவுளுடன் ஒப்புரவாகி பிரலாபித்திருக்கும் கீர்த்தனை சவக்ஷேமத் திற்கு உபயோகிப்பார்கள் என்று கனவிலும் நினைத் திருக்கமாட்டார். நம்முடைய் தர்க்க விஷயத்திற்கு இக்கீர்த்தனை தற்காலபிரயோகத்தினால் அடைந்த தப்பித மான லக்ஷணம் இடைஞ்சலாக விருக்கின்றது. ஒரு கவி பக்தா இவ்வண்ணம் அழாக்குறைவாய் மனங்கசிந்து புலம்பி சரணங்களை உண்டுபண்ண காரணமாக விருந்த ஜாதிக்கலாபம் எத்தகையதாயிருந்திருக்கலாம் என்பதை வாசிப்போர் உணரற்பாலது. மிஷனரிமார்களின் விரோ

தத்தினுல் சாஸ்திரியார் ஹிந்து ராஜாக்களின் உதவியை நாடவேண்டியதானது.

17-ம் செபமாலையிலும் இந்த ஜாதி வித்தியாசத்தினுல் ஏற்பட்ட கலாதியை குறிப்பிட்டிருக்கிறுர்:

6. வல்லமை யிலையோஎங்கள்
வறுமைகண் டறிந்திலாயோ
அல்லது மனதில்லாயோ
அடியர்மேல் அன்பிலாயோ
கல்லறைக் கிடமுமற்றுக்
காட்டினுக் ககற்றப்பட்டோம்
இல்லையோ இரக்கமையா
எம்மையா ளேசுநாதா!

10. சங்கைபோர்ந் திலங்குதஞ்சைச்
சுவார்ச்சையர் சபைகள்நாங்கள்
மங்கியே துயரத்தாலே
வாடினேம் இரக்கங் காணேந்
தங்களைத் தங்கள் வீட்டைத்
தங்கள் பிள்ளைகளை யன்றி
எங்களை நினைப்பாரில்லை
எம்மையா ளேசு நாதா.

6-ம் அடியினுல், 'ஜாதிபாராட்டும் கிறிஸ்தவ கக்ஷியின் பிரேதங்களுக்கு சமாதிதோட்டத்தில் இடங்கிடையாது' என்ற கட்டளையும் பிறப்பித்திருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. அதிகமாய் பிரலாபித்து இந்த செபமாலையை பாடியிருக்கிறுர்.

வருஷங்கள் செல்லச் செல்ல, தஞ்சாவூர் கோவிலில் ஜாதிக்கிறிஸ்தவர்கள் வலங்கை சபையாருடன் கலந்துட்காரவும் நற்கருணைச் சடங்கை ஏகோபித்த சங்கமாய்

ஆசரிக்கவும் கற்பிக்கப்பட்டு சமாதானமாய் வசித்து வந்தார்கள். சாஸ்திரியாரும் பிடிவாதம் நீங்கி ஒரு வாறு இந்த சம்யோகத்திற்கு கீழ்ப்பட்டிருந்தார். ஆனால் வாதிகளோ வழக்குத்தொடர்ச்சியை விடாமல் 1848-ம் வருஷம் ஓர் கற்பனையை 'புண்டுபண்ணி அதற்கு அங்கீகாரம் ஏற்படுத்த பெருமுயற்சி எடுத்தார்கள். இதினால் சாஸ்திரியாருக்கிருந்த சமாதானம் கலைந்து மறுபடியும் ஜாதிபாராட்டும் கிறிஸ்தவர்கள் குழப்பத்தி லுட்படலானார். இதன் விவகாரங்களை சாஸ்திரியாரின் பூர்வ சாதனங்களிலுள்ள (Archives) ஓர் கைப்பிரதி யினால் அறியலானேன். அதன் வக்கணை நாமதேய மாவது:

"Refutation against the Minute on Caste." இங்கி லீஷில் எழுதப்பட்டிருக்கிறது.

அத்தியக்ஷர் ஸ்பென்ஸர் (Spencer) 1847-ம் வருஷம் அசௌக்கியத்தினால் இங்கிலாந்துக்கு சென்றபின் வேலையை ராஜிநாமா செய்ய நேரிட்டது. அத்தியக்ஷர் டிஅல்டெரி அவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டு சென்ன பட்டணத்தில் வந்து இறங்கினது 1850-ம் வருஷம். அத் தியக்ஷர் ஸ்தானம் காலியாயிருந்த சமயத்தில் 82 பாதிரி மார்கள் (clergymen) சென்னபட்டணத்தில் மகாநாடு கூடி ஜாதியைக் கிறிஸ்தவ சபைகளினின்று நிர்மூலமாக் கும்படி ஓர் minute அல்லது சட்டக்குறிப்பை ஏற் படுத்தி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர பெரும் பிர யாசை யெடுத்தார்கள். இதின் பொருளடக்கத்தை இங்கே சுருக்கமாய் எடுத்துச் சொல்லுகிறேன்:

"கிறிஸ்துமார்க்கத்தைத் தழுவ விரும்புகிற உயர்ந்த ஜாதி ஹிந்து முதலாவது, தனக்கு ஜாதியவசியமில்லை

யென்று சர்வஜனக்கூட்டத்திற்குமுன் உறுதிமொழி கொடுக்கவேண்டும். இரண்டாவது, அதற்கு அடையாளமாகவும் அத்தாக்ஷியாகவும் ஆதிதிராவிடர் சமைத்த உணவை உட்கொள்ளவேணும். அல்லாவிடில் அவனுக்கு ஞானஸ்நானம் அளித்து சபையில் சேர்க்கக்கூடாது" என்பதே. இந்த சட்டத்தை அநுசரிக்கவேண்டுமென்று ராஜதானியில் சேவைபுரிந்து வந்த சகல ஆங்கிலேய பாதிரிமார்களுக்கும் நாட்டு பாதிரிமார்களுக்கும் தகவல் கிடைத்தபின் பற்பல ஆபாசங்கள் தலையைக் காட்டின. உதாரணமாக:—

தஞ்சாவூரைச் சேர்ந்த வல்லத்திற்கு சமீபத்தில் அரைமுண்டன்பட்டி என்ற கிராமத்தில் Rev. Reigle ஆதீனத்தில் ஓர் கொல்லன் இரண்டு வருஷ காலமாக கிறிஸ்துமார்க்க ஞானோபதேசம் போதிக்கப்பட்டு வந்தான். அவன் ஞானஸ்நானம் பெற விரும்பினபொழுது, Reigle ஐயர், "நீ உன் குடுமியை நீக்கி, தலையை க்ஷவரம் செய்து மொட்டையாக்கிக்கொண்டாலொழிய, உனக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியாது" என மறுத்து விட்டாராம். ஆனால் கொல்லனுக்கு கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவ பேரவா விருந்தபடியால், அவர் பிடிவாதமாய் சாதித்த முறைக்குக் கீழ்ப்பட்டானும். அப்படியிருந்தும், "நீ ஜாதிக்கட்டை விட்டு உன்னை நீக்கிக் கொண்டு அதற்கு ரூபகாரமாக ஆதிதிராவிடன் சமைத்த சமையலை சாப்பிட்டாலொழிய உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கமாட்டேன்" என்று தீர்மானமாய் சொல்லி விட்டாராம். "ஐயா, நான் உங்கள் கட்டளை பிரகாரம் தலையை க்ஷவரம் செய்து மொட்டையாக்கிக்கொண்டேன். ஆனால் ஆதிதிராவிடன் சமையலை உட்கொள்ள வெறுப்பா

யிருக்கிறது'' என்று சொல்லி, வீட்டுக்குத் திரும்பி, சில நாட்களுக்குள்ளே ஞானஸ்நானம் பெருமலே மரித்துப்போனும். இவ்வாறு Reigle ஐயர் கொல்லனுடைய ஆத்ம ரக்ஷிப்பை இழக்கலானர்.

தற்காலத்து கிறிஸ்தவர்களுக்கு மேற்கூறிய சம்பவம் நகைப்புக்குக் காரணமாகும். சென்ற நூறு வருஷங்களுக்குள் பற்பல காரணங்களால் உண்டாயிருக்கும் ஜனசார சீர்திருத்தங்கள் அநேகம். 82 பாதிரிமார்கள் ஏற்படுத்தின சட்டம் ஜனங்களுடைய நாகரீக பருவத்திற்கு முந்தினது (premature). அத்தியக்ஷரின் அனுமதி பெருமல் பலவந்தஞ்செய்யப்பட்டதினுல் அநீதமானது. சாஸ்திரியார் தஞ்சாவூரின் சபைக்கு பிரமுகராக நின்று எழுதியனுப்பின விண்ணப்ப பத்திரத்திற்கு என்ன பதில் கிடைத்ததென்று தெரியவில்லை.

தற்காலத்தில், திராட்சரசத்தை பொது பாத்திரத்திலிருந்து அருந்துவது ஆரோக்கியக்கேடு வென்று சில சபைகளில் தனிக்கண்ணுடிக் கோப்பைகளை (wine-glass) வழங்குகிறுர்கள். மற்றுஞ் சில சபைகளில் மேசைக் கரண்டியால் முகர்ந்து ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கொடுக்கிறுர்கள். இதர சபைகளில் பாதிரியார் ஒரு கைகுட்டையால் எச்சல்பட்ட பாகத்தைத் துடைத்துக் கொள்ளுகிறுர். தேகஆரோக்கிய விதிகளைக் கைக்கொள்ளுவோர் பொது பாத்திரத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கிறிஸ்துநாதர் தாம் தெரிந்தெடுத்த பன்னிரண்டு சிஷ்யர்களுக்கு பொது பாத்திரத்தை உபயோகித்தாரேயொழிய ஒருநூறு இருநூறு கொண்ட சங்கங்களுக்கு பிரயோகிக்கவில்லை. குஷ்டரோகிகளும் தற்காலத்தில் கலந்து நற்கருணை வாங்கலாமே! குஷ்டரோகம் ஆரம்பத்

தில் குறிகளால் அறிந்துகொள்ளக்கூடாத வியாதி. ஆனால் ஆரம்பத்தில்தான் அது தொற்று நோய். இது காரணங்கள் பற்றி நம் சபைகளில் பொது பாத்திர உபயோகத்தை நிறுத்துவது நலம். மேற்கூறிய விஷயம் ஜாதிபேத தர்க்கத்திற்குரியதல்லவென்றாலும், நற்கருணை ஆராதனையில் ஜாதி அனுஷ்டானத்தை பாதிரிமார் பொருத்தினது ஒவ்வாக் கருத்து என்ற உண்மையை நாம் விளங்கிக்கொள்ள ஏதுகரமாக விருக்கின்றது. தேக ஆரோக்கிய விதிகளைக் கற்பிக்கவாவது, ஜாதி வித்தியாசத்தைத் தொலைக்கவாவது, கிறிஸ்துநாதர் இச்சடங்கை ஸ்தாபிக்கவில்லை. தன்னுடைய ஞாபகத்திற்காகவும், ஒவ்வொருவருடைய பாவ நிவிர்த்திக்காகவும் இதைச் செய்யுங்கள் என்று கற்பித்தார். பாதிரிமார் ஓர் பக்கத்திலும், தேகஆரோக்கிய சாஸ்திரிமார் மற்றொரு பக்கத்திலும் ஒவ்வாக் கருத்துகளை இணைத்துவிட்டார்கள். வாசிப்போர் சாஸ்திரியாருடைய நிலை சரியோ அல்லவோ என்பதைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"சாஸ்திரியாரின் வாக்கு ஒன்று, செய்கை மற்றொன்று" என அபிப்பிராயப்படுவதற்கு ஏற்றதாக இவர் ஞானத் தச்சநாடகத்தில்:

"சாதியேதுகாண் அதிலொரு
சைவமேதுகாண்"

என்ற பாடலை இயற்றியிருக்கிறார். இதில் 32 சரணங்கள் அடங்கியிருக்கின்றன. ஹிந்துமார்க்கத்தில் இருக்கும் ஆபாசங்களைமாத்திரம் திரட்டி ஆகடியமாக வெழுதியிருக்கிறார். உதாரணமாக:

15. உத்திரகோசை மங்கைச் சிவனும்
உகந்து மகாமீனைப் பிடித்து
மத்தமாகவே பரத்தி மங்களேஸ்
பரியைமணஞ் செய்திருந்ததில்லையோ சாதி

16. விந்தையாகவே பரவை நாச்சியார்
சுந்தரமூர்த்திக் கிணங்கவேண்டியே
தந்திரம் பண்ணியாரூர் வீதியிற்
சங்கரன் தூது நடந்ததில்லையோ சாதி

18. ஆய்ப்பாடி யினிலிடைச்சிகள் பதி
னுயிரம் பெண்களைக் கற்பழித்துத்
தீட்பாய் விஷ்ணு துலுக்க நாச்சியைச்
சேர்ந்துகொண்டது சீரங்கஞ் சொல்லுமே சாதி

21. தொட்டியை பொம்மியை வெள்ளையம்மாளென்ற
சுயமறத்தியை சோரம் பண்ணின
மட்டில்லாத துஷ்டத்தனத்து
மதுரைவீரன் சுக்கிலியனல்லவோ சாதி

இந்தப் பாடலை பாடினவர் ஓர் வீரமார்த்தாண்டன் அல்லது வீரசூரன் என்றே நாம் மதிக்கற்பாலது. இவரைத் தரங்கம்பாடியில் இந்துக்கள் கொலைசெய்ய வெத்தனித்தது ஆச்சரியமல்லவே — அத்தியாயம் 8 பக்கங்கள் 77, 78 பார்க்க.

மேலும் அதே நூலிலேயே:

"குலங்களேது தான் அதினுட
நலங்களேது தான்"

என்ற பாட்டில் ஜாதிகளின் ஒற்றுமைக்கு நயமாக 19 சரணங்களை உண்டாக்கியிருக்கிருர். ஆனுல் நாம் முன் கூறிய பிரகாரம் ஜாதிவேற்றுமை நிக்ரகம் ஆத்ம

ஈடேற்றத்துக்கடுத்த விஷயமல்ல. சம்பிரதாயமாக சாஸ்திரியாரைப்போல கவிகள் உண்டுபண்ணலாம். ஜனசாரத்தை மாற்றவேண்டுமானால் கூட வசிக்கும்-கூட்டாளரான ஹிந்து ஜனங்களின் அநுமதியும் உடன்கலந்த முயற்சியும் அவசியம். கிறிஸ்துமார்க்க பிரபல்லியத்தையே வித்தையாகக் கையாடவந்த மிஷனரிமார்கள் நல்ல ஜாதி ஹிந்துக்களுக்குள் சங். C. F. சுவார்ச்சு ஐயரைப்போல் ஊடாடி அவர்களில் சிலரையாவது கிறிஸ்துவைக் கண்டடைய எத்தனிக்காமல், அக்காலத்தில் தஞ்சாவூரிலிருந்த சொற்பமான வேளாள கிறிஸ்தவ குடும்பங்களை ஆதிதிராவிட கிறிஸ்தவர்களோடு கலக்க வேண்டுமென்று பிரயாசித்தது அற்ப சிந்தையாகக் காணப்படுகின்றது. ஜனசாரத்தை சீர்திருத்த இவர்கள் அனுப்பப்படவில்லையே. பல்லாயிர வருஷங்களாக இந்தியாவில் வேரூன்றி வாழ்ந்துகொண்டிருக்கும் ஜாதி வேற்றுமைகளை நேற்று வந்த ஐரோப்பிய குருக்கள் அழிக்க சாத்தியப்படாது என்று கூறுவது மிகையாகாது. ஹிந்துஜாதிவேற்றுமையின் அடிப்படை பிறப்பு: ஒரு ஜாதியில் பிறந்தவன் மற்றொரு ஜாதிக்குத் தன்னை மாற்றிக்கொள்வது அசாத்தியம். உதாரணமாக: தச்சாசாரிகுலத்தில் பிறந்தவன் அக்குலத்தில் ஏற்கனவே சஞ்சரிக்கும் பந்துக்களோடு வசித்து ஊடாடி, ஜாதிக்குரிமையான கைத்தொழிலைக் கற்று, அதன் மூலமாய்க் காலங்கழித்து, ஜாதிக்குள்ளேயே மணம்புரிந்து, குடும்ப நிர்வாகம் வகுத்து, தனக்குக் கடவுள் வரையறுத்த ஜீவிய காலத்தை நிறைவேற்ற வேண்டுமேயொழிய, அவன் தன்னுடைய ஜாதியாரை எதிர்த்து, பிராமணனாகத் தன்னைப் பாவித்துக்கொள்ள முடியாது. ஹிந்துக்கள் தங்களுக்குள்ளேயே வெளிச்சம் உதித்து, "இந்த ஜனசாரம்

நமக்கு வேண்டாம். இதனால் அடைந்த பலன் போதும்" என நிர்ணயித்து இதை ஒழித்தாலொழிய ஜாதிகள் நம் தேசத்தை விட்டு நீங்குதலரிது.

ஜாதிக்கட்டுக்கு விரோதமாய் மிஷனரிமார்கள் செய்த யுத்தம் ஜாதிக்கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக மாத்திரமல்ல, ஜாதிபேதத்தை அஸ்திபாரமாகக்கொண்ட ஹிந்து மார்க்கத்தினுடனும் என்று அறியற்பாலது. ஜாதிக்கட்டு தொலையவேண்டுமானால், ஹிந்துக்களுக்குள்ளும் இது அழியவேண்டும். பொது ஜனாசாரங்களை மாற்றலரிது. தற்காலத்திலும், நானா ஜாதியாரும் நற்கருணை ஆராதனையில் கலந்து திராட்சரசத்தை பருகினாலும் ஜாதி வேற்றுமை குறைவுபடவில்லை. இதை இன்னும் திருநெல்வேலி சபைகளில் பார்க்கலாம். கிறிஸ்தவ நாடார் ஜாதியில் கிளைசாதிகளும் உண்டு. இவர்கள் இதர ஜாதியாருடன் விவாக சம்பந்தஞ்செய்ய விருப்பமில்லாதவர்கள்.

இறுதியில், நான் அறிந்துகொண்ட விஷயம் என்னவென்றால், மார்க்கங்களுக்கும் ஜனாசாரங்களுக்கும் சம்பந்தமில்லை. கிறிஸ்தவர்களுக்குள் காணப்படும் ஜாதி வித்தியாசத்தை விலக்க முயற்சி வேண்டியதில்லை. ஹிந்து ஜனங்களுக்குள் இருக்கும் ஜாதிப் பகுதிகள் நாளடைவில் ஒழியும்பொழுது, அவைகளுக்கு சமமாயுள்ள பகுதிகள் கிறிஸ்தவ சபைகளிலொழியும். உடன் ஜாதி விவாக சம்பந்தம் (Inter-caste marriage) தவிர, மார்க்கங்களையொட்டிய ஒரு சடங்காசாரமும் ஜாதிகளை அழிக்க முடியாது. உடன் விவாக சம்பந்தங்கள் நிறைவேறும்படி மிஷனரிமார் கட்டளை பிறப்பிக்க அவர்களுக்கு அதிகாரமில்லை. தற்காலத்தில் உயர்ந்து முன்னேற்றமடைந்த அபிப்பிராயங்களைக்கொண்டு சாஸ்திரியாரை குற்றவாளியென்று தீர்ப்பது நியாயமன்று.

---

# அத்தியாயம் 14

## உபகதைகள்.

1. சரபோஜி மகாராஜா வேதநாயக சாஸ்திரியார் பேரில்கொண்ட நல்லபிமானத்தினாலும், அன்பினாலும், "சொற்ப நிலம் மானியமாக (endowment) உமக்கு விடுகிறேன். அதை வைத்துக்கொண்டு நீர் எப்போதும் சுகமாய் ஜீவித்து உமது ஊழியத்தை தடையில்லாமல் நடத்திவரலாம்" என்று ஓர் சமயத்தில் சொல்லியறிவித்தாராம்.

அதற்கு சாஸ்திரியார், "மகாராஜாவே! தாங்கள் கொடுப்பது சந்தோஷமாயிருந்தாலும், அதனால் வரும் தீது அனந்தம்:

சாப்பாட்டிற்காக நிலமிருப்பதால் கர்த்தருடைய ஜெபத்தில் ஆண்டவர் கற்பித்தபடி "அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்" என்று தினம் ஜெபிக்கிறது நின்று, கர்த்தருடைய உதவியில்லாமலே நாம் தின்று புசித்து சுகமாயிருக்கலாமென்கிற எண்ணம் உண்டாகி ஆண்டவரை மறந்துவிடுவோம்.

இந்த நிலமிருந்தால், பிள்ளைகள் பிற்காலத்தில் ஒருவரோடொருவர் சண்டைபோட்டு வியாஜ்ஜியம்பண்ணி சமாதானக்குறைவும் பிரிவினையும் உண்டாகி ஆண்டவரைத் துதிக்கிற ஊழியம் நின்றுபோம். கர்த்தருக்கு மகிமையாக நான் வெகு பிரயாசப்பட்டு உண்டாக்கிய பாடல்கள் வீணாய்ப்போகும்.

பணமிருப்பதினால் சகல ஏராளமான பாவங்களையும் செய்து ஆத்மசரீர சுகத்தையும் கெடுத்து, நம்மை

யுண்டாக்கி ஆதரித்து நடத்திவருகிற ஆண்டவருக்கு துரோகஞ்செய்து பொல்லாதவர்களாவோம். ஆகையால் மகாராஜாவே! தயவுசெய்து நிலம் வேண்டாம். உம்முடைய தயவு இருந்தால் போதும்'' என்று மறுத்து விட்டாராம்.

2: ஒரு நாள் சரபோஜி மகாராஜா சாஸ்திரியாரை ''நீங்கள் வேதங்கேட்டவர்களா? அல்லது வேதங்கெட்டவர்களா?'' என்று சக்கந்தமாக வினவினர்.

''வேதங் கேட்டது மெய்தான். ஆனால் அதின்படி நடவாமலும் உலகத்தில் நராவதாரமாக மானிடரைக் காப்பாற்றி இரக்ஷிக்க வந்த இயேசுநாத சுவாமியை முழுவதும் நம்பாமலும் இன்னும் உலகத்தை சார்ந்திருப்பதால் வேதங் கெட்டவர்களென்றும் சொல்லலாம்!'' என்று சம்பிரதாயமாய் விடை பகர்ந்தாராம் சாஸ்திரியார்.

3. C. F. சுவார்ச்சு ஐயருக்கு தஞ்சாவூர் துளசி மகாராஜாவின் பிரீதி யிருந்ததுபோல் சாஸ்திரியாருக்கு சரபோஜி ராஜாவின் கடாக்ஷம் இருந்திருக்கிறது. திருஷ்டாந்தமாக: எல்லோரும் மகாராஜாவை கொலுவீற்றிருக்கும் மண்டபத்தில் காணும்போது தரையில் வீழ்ந்து சாஷ்டாங்கம் செய்வதுண்டு. ஆனால் சாஸ்திரியார் மகாராஜாவின் அதிகாரத்துக் குட்பட்டும் அவ்வண்ணம் மரியாதை செலுத்தவில்லை. இது ராஜ சபையிலுள்ளவர்களுக்கு கோபம் உண்டாக்கினது. சாஸ்திரியார் அவரை மதிக்கவில்லை யென்றதுபோல் ராஜாவுக்கு அறிவித்தபோது, சரபோஜி மன்னன், ''சாஸ்திரியார் என்னை ஆசீர்வதிக்கிறவரானபடியால் சாஷ்டாங்க தெண்டனிட அவசியமில்லை'' என நியாயம் கூறினராம்.

4. வேதநாயக சாஸ்திரியார் கப்பல் பாட்டு, பெத்த லேம் குறவஞ்சி முதலிய நூல்களை ராஜ சமுகத்தில் அரங் கேற்றியதால் சரபோஜி மன்னன் இவரிடம்: "உமது கவி களில் சொற்சுவை, பொருட்சுவை, கருத்துக்கள், அந்தி, சந்தி, தாளம் எல்லாம் சரிவரக் காணப்படுகிறது. நான் புவிராயன், நீரோ கவிராயன்" என்று புகழ்ந்து பேசி னாராம்.

5. ஒருநாள் வெகு நேரம் பரமநிஷ்டையிலிருந்து கொண்டு கவி உண்டுபண்ணுவதிலிருந்தபின், சாஸ்திரி யார் வழக்கப்படி தன் பொடிமட்டையை எடுத்து தட்டிப் பார்க்க, அதில் பொடியில்லாதது கண்டு விசனித்து, "இப்போது நான் சுரைக்கியமாக 'இவருக் குச் சரிசொல்ல இணையொன்றுமில்லை' என தேவ மகத்து வத்தை திருப்புகழாய்ப் பாடியிருக்க, எனக்குப் பொடிக் குக்கூட வழியில்லையா?" என்று மனம் வருந்தினதைக் கேட்ட ஞானதீப சாஸ்திரியம்மாள், "நீங்கள் புட்டா ரத்தி பறைச்சியையும், கல்லையும், மண்ணையும் பேச்சு மூச்சற்றவைகளையும் தெய்வமென்று நம்பி கும்பிட்டு வந்த உங்களை மெய்யான தெய்வத்தை வழிபடவும், அவர் நேசகுமாரன் இயேசுகிறிஸ்துவினால் இரக்ஷிக்கப் பட்டு சத்தியத்தின் அறிவுக்கு வரவும் இந்தப் பெரிய ஊழியத்திற்கு அழைத்து மேன்மைப்படுத்தியிருக்கிற ஆண்டவருக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்கவும் உடனே சாஸ்திரியார் தன் வீட்டின் முற்றத்தில் விழுந்து புரண்டு "நான் பாவி, நான் பாவி" என்று கதறினார் களாம். எல்லோரும் கூடிவந்து பார்க்க, தன் குற்றத்தை அறிக்கையிட்டு ஜெபித்தார்களாம். அன்று இரவே கள்ளிக்கோட்டையிலிருந்த சிரஸ்தார் தேவசிகாமணி

பிள்ளை என்ற சிநேகிதர், தான் கட்டின வீட்டுப்பிர திஷ்டைக்காகப் பாட்டுக் கட்டி ஆசீர்வதித்து எழுதி னதை நினைத்து நன்றியறிதலான காணிக்கையாக அனுப்பின ரூ. 200 வந்து சேர்ந்ததாம். அக்காலத்தில் இருப்புப்பாதை யில்லாமையால் ஒரு மாதத்திற்கு முன்னே அனுப்பப்பட்ட தொகை சாஸ்திரியாரின் தரித்திர நிலைமையை அன்று நீக்கி அவர் ஆறுதலடைய ஏதுகரமாயிருந்ததை வியப்புற்று யாவரும் கடவுளுக்கு மகிமையை செலுத்தினார்களாம்.

6. சாஸ்திரியார் ஒரு கனவானையும் தனவானையும் துத்தியம் செய்வதில்லை, புகழ்ந்து பாடுவதுமில்லை. வாக் குபசாரமாய் கவி யுண்டுபண்ணுவதுமில்லை.

> "மனுவேலர் திருநாம மிகழாதே, சாகும்
> மனுடர் தமை மகிழ்ந்து புகழாதே" என்றும்
> "நரஸ் துதி பாடாதனுக்கிரகித்த
> ஞானஜீவப் பெருமானே"

என்றும் கீர்த்தனை பாடி யிருக்கிறார்.

ஆனால்,

> "சீருயருந்தவீது மைந்தா! ஆடீரூஞ்சல்
> சீயோனின் திருமகளோ டாடீரூஞ்சல்!"

என்று அந்தமாக முடித்திருக்கும் 27-ம் ஜெபமாலையான "திருவிளையாட்டூஞ்சலின்" செய்யுள்களை ஓர் கிறிஸ்தவர் தாவீதுபிள்ளை குமாரனின் கலியாணத்தில் ஊஞ்சல் பாட்டாக பாடினதினால், உடனே சாஸ்திரியாருக்கும், அவர் பாடகர்களுக்கும் தொண்டை கட்டிக்கொண்டது மன்றி, சாஸ்திரியாருக்கு புத்தி மாறி திகில்களும், பயங் களும் சொர்ப்பனங்களுமுண்டாகி தன் வீட்டை நீங்கி சுவார்ச்சு ஐயர் கட்டின வீட்டிலே க்ஷேம நிலத்திற்கு

அருகாமையில் குடியிருக்க நேரிட்டது. இச்சுகக்கேட்டுக்கு பரிகாரமாக, "சிலுவைத் தியானம்" என்ற 28-ம் ஜெப மாலையை உண்டாக்க பூரண சுகம் கிடைத்து தன்னகத்திற்கு சாஸ்திரியார் திரும்பினாராம். இதன் மற்று விவரங்களை 28-ம் ஜெப மாலையின் அடிக்குறிப்பை வாசித்து அறியலாம்.

7. அருளப்பன் தாவீது ஐயர் (1804–1865). இவருடைய பெற்றோர் திருநெல்வேலியில் பஞ்சமா யிருந்த பொழுது பிழைக்கத் தஞ்சாவூரில் குடியேறினார்கள். சுமார் 9 வயதிலிருந்து சாஸ்திரியார் வீட்டில் வளர்ந்து கிறிஸ்து மார்க்க பக்தியில் பயிற்சி பெற்றார். தகப்பனார் தம் மரணப் படுக்கையில் பையனை சாஸ்திரியாரிடம் ஒப்புவித்தார். வளர்ந்து வாலிபனானதும், பந்துக்கள் திருநெல்வேலியிலிருந்து 1821-ம் வருஷம் விவாகத்திற்கு முயற்சி யெடுக்கும்பொருட்டு அருளப்பனை அழைக்க வந்தார்கள். சாஸ்திரியார், "நீ தேவ ஊழியக்காரனாவாய்" என்று வாழ்த்தி வழியனுப்பினார். அருளப்பன் தாவீது 43 வருஷமாய்த் திருநெல்வேலி ஜில்லாவில் கிறிஸ்தவ சபைகளுக்குக் குருவாக உத்தியோகம் வகுத்து நற்சேவை புரிந்து தேவ ஊழியத்தை நிறைவேற்றி 1865-ம் வருஷம் தூத்துக்குடியில் மரித்தார். இச்சிறந்த ஜீவியத்தின் விவரத்தை பௌவர் சாஸ்திரியார் இயற்றிய நூலில் (1) வேண்டுவோர் வாசித்து அறியலாம்.

இத்திருஷ்டாந்தத்தினால் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் என்னவென்றால்: அருளப்பன் தாவீது ஐயர் புருஷ பருவத்தில் அடைந்த புகழுக்கு அடிப்படை இவர் சாஸ்திரியாரிடம் இளமையில் பெற்ற கிறிஸ்து மார்க்க போதனைப்பியாசம். மேலும் சாஸ்திரியார் ஓர் ஆசிர

மத்தை நடத்தி, அதிலே தெரிந்தெடுத்த பையன்களையும் வாலிபர்களையும் கிறிஸ்து மார்க்க போதனையில் பயிற்றுவித்து அவர்கள் மூலமாக கிறிஸ்து மார்க்க பிரபல்லியம் மென்மேலும் வளர ஏதுகரமான ஊழியம் செய்துவந்தார் என்பதுமே.

8. ஒரு தமிழ்ச் சங்கமாக சில ஹிந்துக்கள் ஒன்று கூடி "கிறிஸ்து மதக் கண்டனம்" என்ற ஒரு நிருபம் எழுதி, அதில் இயேசுநாதரை 'கழுதை வாகனன்' என்று அழைத்து, 'மாதிரிக்கு ஒரு பாதிரி பூண்டில்லாமல் வேரறுத்துவிடுவோம்" என்று அச்சங் காட்டி அதிதூஷணையா யெழுதி அதன் பிரதிகளை மிஷனரிமார்களுக்கெல்லாம் அனுப்பினார்கள். மிஷனரிமாரும் குருக்களுங்கூடி ஆலோசித்து அந்நிருபத்தை வேதநாயக சாஸ்திரியாருக்கு அனுப்பி விடை பகரும்படி வேண்டிக் கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி "நேச நிருபம்" என்ற பத்திரிகையை உண்டுபண்ணி அனுப்பினார்கள். இதில் ஹிந்துக்களுக்கு நியாயம் சொன்னதுமன்றி, ரோமானித்தாரோடும் மகம்மதியரோடும் சாஸ்திரியார் தர்க்கித்த விவரம் கண்டிருக்கிறது. மிஷனரிமார் பத்திரிகையை அச்சிட்டு பிரதிகளை சுற்று விளம்பரம் செய்தும், விற்றும் கிறிஸ்து மார்க்கத்திற்கு கௌரவத்தை சம்பாதிக்க உபகாரணமாகவிருந்தது.

9. G. U. போப் ஐயரின் நண்பன் வேதநாயக உபதேசியாருக்குத் திடீரென்று பேதி யுபத்திரங்கண்டு கை கால் குளிர்ந்துபோயிற்று. ஐயர் போய் சில புத்திமதிகளைச் சொல்லி, மரணத்துக் காயத்தப்படுவென எச்சரித்தார். அப்போது உபதேசியார் "தகப்பனை அழைப்பியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். "தகப்பனூர்,

யார்?" என்று போப் ஐயர் வினவ, "வேதநாயக சாஸ்திரியார்" என்றாராம்.

சாஸ்திரியாருக்கு தகவல் வந்தபொழுது அவர் போய் உபதேசியாருடைய பரிதாபமான நிலைமையை அறிந்து, கையைப் பிடித்துப் பார்த்து தாது விழுந்து போயிருக்கிறதை வெளியிட்டார்கள். உபதேசியார் தனக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொண்டதின்பேரில்* சாஸ்திரியார் உருக்கமாய் ஆண்டவரிடம் ஜெபித்தபின், உட்கார்ந்து, ஜெபத்தின் பலனை அறியும்பொருட்டு மறுபடி தாதைப் பார்த்தார்கள். "தாது எழும்பி யடிக்கிறது, இனி மரண பயம் வேண்டியதில்லை, கர்த்தருமக்குத் தவணை கொடுத்திருக்கிறார், கர்த்தருடைய ஊழியத்தில் தரித்திரும்" என ஆறுதல்படுத்தி தன் கிரகத்துக்குத் திரும்பினார். உபதேசியார் முற்றிலும் சுகம் பெற்றார்.

10. தன் சீஷர்கள், பாடகர்கள் முதலியோருடன் சுற்றுப் பிரயாணஞ்செய்து கிறிஸ்து மார்க்கத்தை விஸ்தரித்து சதுர்பிரசங்கம் செய்வதுண்டு. ஒரு கிராமத்தில் தாகமடைந்ததினால், அங்கேயுள்ள முக்கியஸ்தர் ஒருவர் வீட்டில் தாகத்திற்கு ஜலம் கேட்டாராம். கிறிஸ்தவரானபடியினால் கொடுக்க முடியாதென்று அறிவித்தார்களாம். மனம் நொந்து அவர் திரும்பினவுடன் அந்தத் தனவான் வீட்டு பசு மாடுகள் கட்டியிருந்த கொட்டகை தீப்பற்றி யெரிந்ததாம்.

எல்லோரும் ஒரு தேவதாசனை அவமதித்ததினால் தான் என்று உணர்ந்துகொண்டு, அவரை மறுபடியும்

---

* Evidently, the local Christians believed in Divine Healing at the hands of Vethanayaga Sastriar.

அழைத்து மரியாதை செலுத்தி செம்பில் மோர் கொடுத்தார்களாம். அதை அருந்தி "என் மனம் குளிர்ந்தது போல் இந்த நெருப்பும் குளிர்ந்துபோகட்டும்" என்று அவர் மொழிந்தவுடன், தீயும் தானே அணைந்துபோயிற்று என்று ஓர் உபகதையுண்டு.

11. ஒரு சுற்றுப் பிரயாணத்தில், ஓர் ஹிந்து சத்திரத்தில் இராத் தங்க நேரிட்டது. 'ஹிந்து யாத்திரிகருக்கு மாத்திரம் சாப்பாடு உண்டு, கிறிஸ்தவர்களுக்கில்லை' என்று சொன்னதினால், சாஸ்திரியாரும் பாடகர்களும் லங்கணமாய் படுத்துக்கொண்டார்களாம். அச்சமயத்தில் சத்திரத்திற்குரிய தர்மகர்த்தா போஜனஞ் செய்ய உட்கார்ந்தபோது அவருடைய வலது கை வழங்காமற் போயிற்று. இது என்ன காரணத்தினாலென்றறிய வீட்டார் வைத்தியர்களையும், ஜோசியர்களையும் (கோடங்கி) அழைத்து விசாரித்தார்களாம். ஒரு கோடங்கி "யாரோ ஒரு தேவ பக்தன் சத்திரத்தில் இறங்கியிருக்கிறார். அவருக்கு நல்மரியாதை செய்யாததினால் இப்படி ஆபத்து வந்திருக்கிறது" என்று அறிவிக்க, உடனே ஆட்களை யனுப்பி சாஸ்திரியாருக்கும் பாடகர்களுக்கும் நல்மரியாதை செய்து விருந்து கொடுக்க அவருடைய க்கை முன்போல் வழங்கினதாம்.

12. சாஸ்திரியாருக்கு கூடுகளில் பக்ஷி வளர்க்கிற சுபாவம் இஷ்டமாயிருந்ததில்லை. குருவி விற்கும் குரவன் குருவிகளை விற்கத் தன்னிடம் கொண்டுவந்தால், மொத்தமாய்க் குருவிகளை விலை பேசி குரவனுடைய கூட்டைத் திறந்து, குருவிகளையெல்லாம் பறந்துபோகும்படி செய்வாராம். "அவைகளின் சந்தோஷத்தைக் கெடுத்து சிறையில் வைப்பது நிஷ்டூரம். குருவிகள் கத்திப் பாடு

வது கடவுளுக்கு மகிமை! நமக்கும் இன்பம் பயக்கின்றதல்லவா?" என்று முகாந்தரம் சொல்லுவாராம்.

13. சாஸ்திரியாருக்கும் அவரது இரண்டாவது மனைவி மிக்கேல் அம்மாளுக்கும் ஐக்கியமில்லாததினால் அந்த அம்மாள் திருநெல்வேலியிலிருக்கும் தகப்பன் வீட்டிற்குப் போய் வெகு நாள் திரும்பாத முகாந்தரத்தால், தன் கடிதத்தில் பின்வருமாறு எழுதினாராம்:

"எண்ணறவே கற்று எழுத்தறவே வாசித்தும்
பெண் புத்தி பின் புத்தியே!"

அதற்கு அந்த அம்மாளுடைய பதிலில்

"கால் பல உள்ள அட்டை கடுந்தூரம் போகமாட்டா!
நூல் பல கற்ற மாந்தர், தமக்கு நூல் அறியமாட்டார்!"

என்று விகடமாய் எழுதினார்களாம்.

14. தஞ்சாவூரிலேயே தன் வீட்டில் ஒரு நாள் இராச் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் குடும்பத்தார் பாடகர்கள் முதலியவர்களை பட்டினியாய் படுக்கைக்குப் போகச் சொல்லிவிட்டார். இரவு பத்து மணிக்கு வெண்கலப் பாத்திர சத்தமுடன் ஒரு வண்டி வீட்டின்முன் வந்து நின்றதாம். கதவை ஒரு ஆள் தட்டினதினால் திறந்து பார்த்ததில், அயல் ஊரில் ஓர் கலியாண வீட்டிலிருந்து சாஸ்திரியார் வீட்டாருக்கு ஒருவேளை சாப்பாடு கொண்டுவந்திருக்கிறதாகத் தெரிவித்தானாம். சாஸ்திரியார் எல்லோரையும் எழுப்பி ஜெபம் செய்து சாப்பிட்டதாகப் பாரம்பரியம் உண்டு.

15. சாஸ்திரியார் பரமநிஷ்டையில் நேரத்தை செலவிடுவது வழக்கம். இரவில் தேவாவியின் ஏவுதல் வருவதுண்டு. என் பந்துவான அன்னம்மாளுக்கு "சிக்கிமுக்

கிக்கல்''* போட்டு நெருப்பு பொறியுண்டாக்கி குத்து விளக்கேற்றும் வேலையை நியமித்திருந்தாராம். எந்தச் சாமம் ஆனாலும் ஞான அருட்சி யுண்டானவுடனே, "'அன்னம்மாள்'' என்று கூப்பிடுவாராம். உடனே அவர்கள் குத்துவிளக்கேற்றிக் கொடுக்க, எழுதும் குமஸ்தாக்கள் அவர் சொன்ன பிரகாரம் எழுதுவார்களாம்.

இவ்வாறு உன்னத ஆவியால் பிடிகொண்டு நூல்களை இயற்றுவிப்பது ஐரோப்பியக் கவி சக்கரவர்த்திகளிடமும் காணப்படும். திருஷ்டாந்தமாக: இரண்டு நேத்திரங்களும் அகாலமாய் இருளடைந்த பிறகு மில்டோன் (Milton) ஆகிய ஆங்கிலேய கவி "பரதீசை யிழந்த விதம்'' என்ற காவியத்தை உண்டாக்கும்பொழுது, அவருக்கும் இரவிலேதான் வல்லமை புறப்பட்டதாகவும், அச்சமயங்களில் தன்னுடைய பெண் மக்களை யெழுப்பி, சொல்ல அவர்கள் எழுதினதாகவும் அவருடைய சரித்திரத்தில் வாசிக்கிறோம்.

முற்றிற்று

---

* இரண்டு கூழாங்கற்களை உறைத்துவருகிற நெருப்புப் பொறியில் பஞ்சைக் காண்பித்தால், அது பற்றி எரியும்போது குத்துவிளக்குத் திரியில் கொளுத்துவார்கள். அக்காலத்தில் நெருப்பு பெட்டி கிடையாது. சாஸ்திரியாரின் கடைசி காலத்தில் அபூர்வமாய் நெருப்புப் பெட்டி செய்துவந்த 12 குச்சிகள் 4 அணுவுக்கு விற்றதை வாங்கி வீட்டாருக்குக் காண்பித்து மணி அடித்து ஜெபம்பண்ணி ஆண்டவருக்குத் துதி செலுத்தினாராம்.

## உடன் கலந்து வாசித்த புஸ்தகங்கள்

1. 1879—"கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம்." வேத சாஸ்திரியாகிய என்ரி பவரைய ரால் (Dr. Henry Bower) இயற்றப்பட்டது.

2. 1899—"தஞ்சாவூர் சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியார் சரித்திரம்." குமாரன் V. நோவா ஞானதிக்க சாஸ்திரியாரால் தெரிந்தெடுக்கப்பட்ட சுருக்கமான சரிதை.

3. 1906—"தரங்கை மிசியோன் சரித்திரம் (1706–1906)." ஞா. சாமுவேல் ஐயர் இயற்றியது.

4. 1906—"Hindu Mãnners, Customs and Ceremonies" by the Abbe J. A. Dubois. Translated from French by H. K. Beauchamp, C. I. E.

5 1921—"Schwartz of Tanjore" by Jesse Page, F.R.G.S.

6. 1921—"The Life and Work of Henry Martyn" by Butler. Published by C. L. S., Madras.

7. 1921—"William Carey" by Murdoch. Published by C. L. S., Madras.

8 1923—"The Centenary History of the C. M. S. in Tinnevelly" by Paul Appasamy, M.A., LL.B. (Cantab), Bar-at-Law.

9. 1927—"Biography of Thiagaraja" by M. S. Ramaswami Aiyer.

10. 1927—"H. A. Krishna Pillai" by Amy Carmichael. Published by C. L. S., Madras.

11. 1928—"Rajah Ram Mohan Roy" by Macnicol. Published by C. L. S., Madras.

12. 1931—"சுவிசேஷ வுத்தரன் ஞானப்பாட்டுகள்." 1774-ம் வருஷம் பெப்ரிசியூஸ் ஐயரால் சர்மானிய பாஷையி லிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

13. 1932—"Selections from Tukaram". Edited by Dr. W. S. Deming.

14. 1932—"இரக்ஷணிய சரிதம்". ஸ்ரீ H. A. கிருஷ்ண பிள்ளை இயற்றியது. புதுக்கோட்டை ஸ்ரீ P. S. கடம்பவன சுந்தரநாயனார் அவர்களெழுதிய பொருள் விளக்க உரையும்.

15. 1932—"Tune Book to Tamil Christian Lyrics." Revised in Western Staff Notation by G. D. Eleazer, St. Paul's School, Vepery and Tamil Sangam Notation by Rev. L. I. Stephen of Erode. Published by C. L. S., Madras.

16. 1935—"The Tamil Bible". Translated by Fabricius. Current Edition.

17. 1935—"சென்னை அத்தியட்சாதீனத்தின் சதாப்த சரிதம் (1835-1935)". Rao Sahib S. K. தேவசிகாமணி, B.A., L.T., இயற்றியது.

18. 1937—"ஆசிரம பாமாலை". Dr. J. சவரிராயன் அவர்களால் திரட்டப்பட்ட ஓர் கலம்பகம். கிறிஸ்து குல ஆசிரம பிரசுரம் (நான்காம் பதிப்பு).

19. 1937—"Tamil Christian Lyrics". Published by the Religious Tract and Book Society. Fifth Edition.

20. 1938—"Sri Ramakrishna Paramahamsa". Motherland Series. No. 18.

21. 1938—"திருக்குற்றாலக் குறவஞ்சி". திரிகூடராசப்பன் கவி ராயர் இயற்றியது. மூன்றாம் பதிப்பு.

22. 1909—"தமிழ்க் கிறிஸ்தவர்கள் வீடுகளில் செய்யவேண்டிய குடும்ப ஜெப முறைமை". இது சென்னை High Court Advocate, Sri Satya Joseph, M.A., M.L., அவர்களால் இயற்றப்பட்டது.

23. 1934—"இரக்ஷணிய கீர்த்தனைகள்". இது இராயபுரம் தென் இந்தியா ஐக்கிய சபையின் போதகரான S. பரமானந்தம் ஐயரால் இயற்றப்பட்டது.